மகாமகோபாத்தியாய

# டாக்டர் உ.வே. சாமிநாதையர் திருஉருவச்சிலைத் திறப்பு விழா

## சிறப்பு மலர் - 1996 - 97



தமிழ்த்தாத்தா

மகாமகோபாத்தியாய

**டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்**

பெசன்ட் நகர், சென்னை - 600 090.




★ தொடர்ந்து சுத்திகரிப்புத்திறன் உயர்த்துதல், உற்பத்திப் பொருட்களை அதிகமாக்குதல், மற்றும் செயல்பாட்டில் நீடிக்கும் தலைசிறந்த சாதனை. ★ ஒரு தாய் ஆலை - சென்னைக்கருகே மணலியில் உள்ள பெட்ரோகெமிக்கல் ஆலைகளுக்கு. ★ ஒரு பன்னிட நிறுவனம் - நாகப்பட்டிணம் அருகில் பனங்குடியில் காவிரிப்படுகை சுத்திகரிப்பு ஆலையை நிறுவியதன் மூலம். ★ ஒரு முதன்மை நிறுவனம் - எரிசக்தி சேமிப்பு, தொழில்நுட்பம், நலம்பேணும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச்சூழல் ஆகிய துறைகளில். ★ ஒரு முன்மாதிரி நிறுவனம் - தொழில் உறவு காரணமாக ஒரு மணிநேர உற்பத்தி கூட தடைபட்டதில்லை. ★ இந்திய மக்களின் பேராதரவு - இந்த பெட்ரோ நட்சத்திரத்தின் ப்ரீமியப் பங்கு வெளியீடு ஒதுக்கீட்டைக்காட்டிலும் 38 மடங்கு அதிகமாக முதலீடு கிட்டியது.

எம்.ஆர்.எல்-ன் எதிர்காலத் திட்டங்கள்

★ உற்பத்தித்திறன் பெருக்கம் மற்றும் புதிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டங்கள்.
★ துறைமுகம் சார்ந்த டெர்மினல் மற்றும் தொட்டி வசதிகள். ★ மின் உற்பத்தி.
★ பெட்ரோகெமிக்கல் தயாரிப்புத் திட்டங்கள்.
★ பெட்ரோலியம் மற்றும் பெட்ரோகெமிக்கல் வர்த்தகம்.

MRL

மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட்
552, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018
சாதனை நட்சத்திரம்

PETRO STAR

மகாமகோபாத்தியாய

# டாக்டர் உ.வே. சாமிநாதையர் திருஉருவச்சிலைத் திறப்பு விழா

## சிறப்பு மலர் - 1996 - 97

மகாமகோபாத்தியாய

**டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்**

பெசன்ட் நகர், சென்னை - 600 090.



திரு. **R.** வெங்கட்ராமன்
(முன்னாள் குடியரசுத் தலைவர்)
(தலைவர் கலாக்ஷேத்திரா பௌண்டேஷன்)



திருமதி. ருக்மிணி அருண்டேல்
(நிறுவனர். கலாக்ஷேத்திரா)



திரு. அருண்டேல்



திரு. **K. சங்கரமேனன்**
(இயக்குநர். கலாக்ஷேத்திரா பௌண்டேஷன்)



திரு. S. கல்யாணசுந்தரையர்
(தமிழ்த்தாத்தா மகனார்)



திரு. **R. விசுவநாதையர்**

(முன்னாள் நூலகப் பாதுகாவலர்)



**திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்**

**தமிழ்த் தாத்தா அவர்களின் பேரர்**

Phone: 4936789

'POTHIGAI'
Greenways Road,
Madras-600 028

# R. VENKATARAMAN

**FORMER PRESIDENT OF INDIA**

## அணிந்துரை

ஔவைப் பிராட்டியாருக்குப் பின் தமிழ் வளர்த்த பெருமை தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் அவர்களையே சாரும் என்று கல்கி அவர்கள் எழுதியது மிகப் பொருத்தமானது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய தமிழ் நாகரிகம், பண்பாடு, கலை, கலாசாரம் அனைத்தும் சங்கத் தமிழ் நூல்களிலிருந்து பெற்றதனால் நம் அறிவு விரிவடைந்துள்ளது. காகிதமும், அச்சுக்கூடங்களும் இல்லாத காலத்து இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளில் பொறிக்கப்பட்டவை யாவும் சிதறுண்டும், அழிந்தும் போயின. ஐயர் அவர்கள் தோன்றிய காலத்தில் ஆங்கிலம் அரசு பீடத்திலும், தமிழ் ஊழியன் நிலையிலும் இருந்தது. நம் நாட்டு மொழி, கலை, கணிதம், வான நூல், மருத்துவம் அனைத்தும் இழிவாகப்பழிக்கப்பட்ட நிலை. அச்சூழ்நிலையில் ஐயர் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் தமிழ் வளர்ப்புத் தொண்டுக்கே அற்பணித்துக் கொண்டார் எனின் அன்னார் ஒரு சாதாரணப் பிறவியல்ல.ஓர் மாமுனிவர் என்றே கொள்ள வேண்டும்.

ஐயர் அவர்கள் சங்க கால இலக்கியத்துக்குப் புத்துயிர் அளிக்கும் அரும் பணியைக் கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது, சிரமேற்கொண்டு, பழங்காலச் சுவடிகளைப் பெற அவர் தேடி, அலைந்ததற்கு அளவில்லை. சுவடிகளின் அருமை அறியாதவர்கள் அவற்றை அலட்சியமாக ஆற்றில் விட்டவரும், குப்பையில் கொட்டியவர்களும், அல்லது பூர்வீகச் சொத்து என்று பூஜை செய்தவர்களும் பலர். ஐயர் அவர்கள் இச்சுவடிகளை வருந்திக் கேட்டும் விலை கொடுத்தும் வாங்கிச் சேகரித்தார். சுவடிகள் கொடுப்பதாகப் பணம் பெற்று அவரை ஏமாற்றியவரும் உண்டு. கிடைத்த சுவடிகளை நுணுகி ஆராய்ந்து, பல பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பிற மொழி வல்லுனர்களைக் கலந்து ஆலோசித்த பின்னரே ஐயர் அவர்கள் வெளியிட்டார். அவரது வாழ்நாளில் பதிப்பித்த நூல்களும், எழுதிய நூல்களும் சிறப்பு மலரில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஐயர் அவர்கள் மறைவுக்குப் பிறகு அவர்கள் திருப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டுமெனக் கருதி அன்னார் புதல்வர் கல்யாண சுந்தரையர் அவர்கள் எவ்வித கைமாறையும் எதிர்பாராது ஐயர் அவர்கள் சேகரித்த செல்வத்தைப் பிரம்மஞான சபையின் தூணாகவும், தன்னலமற்ற சேவைக்கு எடுத்துக்காட்டாகவும், கலை வளர்ச்சியின் சிற்பியாகவும், கலாக்ஷேத்திரத்தின் தலைவராகவும் துலங்கிய திருமதி ருக்மணி தேவியாரிடம் ஒப்படைத்தார். ருக்மணி தேவி அவர்கள் வேண்டிய பொருள் உதவிகள் செய்து பின்னர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் நூல் நிலையம் என்ற நிறுவனத்தை அமைத்தார்கள். இந்நிலையம் தொடக்கத்தில் ஒரு டிரஸ்டாகவும், பின்னர் 1964-இல் ஒரு ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொஸைட்டியாகவும் செவ்வனே செயல்பட்டு வருவது பெரு மகிழ்ச்சிக்குரியது. 939 சுவடிகளுடன் தொடங்கிய இந்நிலையத்தில் ''இன்று அச்சிட்ட நூல்களின் எண்ணிக்கை 21,623 - ஓலைச்சுவடிகள் 2,203.'' இவை யாவும் பண்டிதர்களுக்கும், படித்து இன்புறுவாருக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஈடு இணையிலாச் செல்வம்.

வான்மீகி பிறந்து வாழ்ந்ததாகக் கூறப்படும் திருவான்மியூரில் அமைந்துள்ள இந்நிலையம் வான்மீகியின் அழியாப் புகழை அடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் சிலை, நூல் நிலையத்தில் அமைய இருப்பது போற்றற்குரியது. நூல்நிலையத்தைப் பயன்படுத்துவோர் ஐயர் அவர்களின் ஆசியைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

**''பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்**
**காலமெலாம் புலவோர் வாயில்**
**துதியறிவாய், அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்,**
**இறப்பின்றித் துலங்கு வாயே''**

என உரைத்தார், பாரதியார். புலவர் வாக்குப் பொய்க்கா வண்ணம் காப்பது நமது கடமையாகும்.

ஆர். வெங்கட்ராமன்

நாள் : 08-01-1997

**(ஆர். வெங்கட்ராமன்)**

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள்: 15-1-97

# வாழ்த்துச் செய்தி

''பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய்! அவர் நெஞ்சில் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே!''

-என்று கவி பாரதி பாட்டில் போற்றிய பைந்தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் அவர்கள், பண்டைத் தமிழக மக்களின் மாண்புகளை இன்று பாரறியப் பறைசாற்றி நிற்கின்ற பத்துப்பாட்டு நூல்களையும், பதிற்றுப்பத்து, புறநானூறு, ஐங்குறுநூறு, பரிபாடல் ஆகிய நான்கு எட்டுத் தொகை நூல்களையும், சேர இளவல் யாத்த சிலப்பதிகாரத்துடன் சீவக சிந்தாமணி, மணிமேகலை ஆகிய செந்தமிழ்க் காப்பியங்களையும் இன்னபிற இலக்கிய இணக்கணப் பனுவல்களையும் தேடிப்பிடித்துக் கறையான்களிடமிருந்து காப்பாற்றி, ஓலைச் சுவடிகளிலிருந்து உருமாற்றி உரைவகுத்து அச்சு நூல்களாக அவற்றை ஆக்கித் தந்த அளப்பரும் பணிகளை ஆற்றியமையால்தான் இன்று நாம் அந்நூல்களையெல்லாம் காண முடிகிறது; தமிழர்தம் பண்பாட்டு மரபுகளைக் கண்டுகளிக்க முடிகிறது. தமிழ்க்கவி இன்பத்தைச் சுவைக்க முடிகிறது.

தமிழுலகுக்கு அந்த மாமேதை ஆற்றியுள்ள மகத்தான பணிகளை நினைவு கூர்தல் பொருட்டுத் திருவான்மியூரில் அப்பெருமகனாரின் திருப்பெயரில் இயங்கிவரும் நூலக வாயிலின் முகப்பில் அவருக்குச் சிலை வடிக்கும் செய்தி கேட்டுச் சிந்தை மிக மகிழ்கிறேன்.

சீரிய இத்திருப்பணியில் தமிழ்மக்களும் பங்குபெறும் வகையில்தான் தமிழக அரசின் சார்பில் ரூபாய் ஐம்பது ஆயிரம் நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சிலைத் திறப்பு விழாவும், மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் சிறப்புடன் நிகழ உளமார வாழ்த்துகிறேன்.

(மு. கருணாநிதி)

**க. அன்பழகன்** எம்.ஏ..
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள்: 30-12-96

# வாழ்த்துச் செய்தி

சங்கத் தமிழ் இலக்கியங்களும் பழந்தமிழ் ஏடுகளும் சுவடி வடிவத்திலிருந்து அச்சியற்றப்பட்ட நூல் வடிவம் காணச் செய்யும் அரும்பெரும் பணியில் அறுபது ஆண்டுகளாகத் தம்மை ஒப்படைத்துக் கொண்டு, அந்த நூல்களில் பலவற்றிற்கு வரலாற்றுக் குறிப்பும்-குறிப்புரையும் வரைந்து வழங்கிய சீரிய தொண்டினால், செயற்கரிய செய்த பெரியாராக அனைவராலும் போற்றப்படுபவர், தமிழ்த்தாத்தா என்று கல்கியினால் சிறப்பித்து அழைக்கப்பட்ட டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களாகும். அவர்களது பெயரால் விளங்கும் நூல்நிலைய வளாகத்தில் அவர்களது திருவுருவச்சிலை திறந்து வைக்கப்படுவது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகும். தமிழ்மொழியின் மாண்புகளை உலகோர் உணர்ந்திட இன்றியமையாத இலக்கியக் கருவூலம் காலத்தால் அழிந்திடாமல் காத்து நிலைபெறச் செய்த உ.வே. சாமிநாதையர் அவரிகளின் புகழும் எந்நாளும் நிலைபெறுவதாகும்.

அன்பன்,
க. அன்பழகன்

உ

Phone : (STD 04112) - 22115

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

**ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள்**

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

1, சாலை தெரு, காஞ்சிபுரம் - 631 502.

முகாம் :

தேதி 9-12-96

ஸ்ரீமடத்தின் [illegible]
"[illegible]" என்ற [illegible]
[illegible] உ.வே. சாமிநாதையர் [illegible]
[illegible]
[illegible]. அதனைக் [illegible]
[illegible].

இவ்வரிய [illegible] "தமிழ்த்தாத்தா" [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அறிந்து மகிழ்கிறோம்.

எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி.

உ

சிவ சிவ

கயிலைமாமுனிவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்.

திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)

தேதி : 1-11-1996

# ஆசிச் செய்தி

*தமிழகம் பெருமைப்படக்கூடிய நிறுவனங்களுள் மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூல் நிலையமும் ஒன்றாகும்.*

*திருமதி. ருக்மணிதேவி அவர்கள் அதனை வளர்க்கும் பாங்கும், தமிழ்த்தாத்தாவின் மரபினர்கள் இந்நிறுவனத்தின்பால் செலுத்தும் பேரார்வமும் இவற்றின் அடிப்படையில் இங்குப் பணிபுரிவோர் கொள்ளும் உற்சாகமும் திண்ணிய செயற்பாடும் மிக்க மகிழ்ச்சியைத் தருவனவாகும்.*

*தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருத்தமான உறுதியான தமிழ்ப்பணிகள் உலகுள்ளளவும் நிலைக்கும் என்பதைப் போலவே இந்நூலகத்தின் அனைத்துப் பணிகளும் அமைய வேண்டும் என வாழ்த்துகிறோம்.*

*நூலக விழாமலர் சிறப்பதாகுக எனவும், இந்த நன் முயற்சியில் ஈடுற்ற அனைவர்க்கும் எல்லா நலன்களும் வளன்களும் இயைவதாகுக எனவும் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.*

*சுபம்.*

***சிவ சிவ***

*செ./*

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ லஸ்ரீ சிவப்பிரகாச பண்டாரசந்நிதி
அவர்கள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை - 609 803
(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள்: 26.11.1996

''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க''

# ''வாழ்த்துரை''

சென்னை பெசன்ட் நகரில் அமைந்து விளங்கும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வளாகத்தில் அவர்களது திரு உருவச்சிலை திறந்து வைக்கப் பெறுவதும்; அதுபோழ்து சிறப்பு மலர் வெளியிடப் பெறுவதும் தெரிந்து மகிழ்கிறோம்.

டாக்டர் ஐயரவர்கள் தங்கள் இளமைப்பருவம் முதல் இறுதிக்காலம் வரை நமது ஆதீனத்தொடு மிக நெருங்கிய தொடர்பு உடையவர்கள் என்பதைத் தமிழுலகு நன்கறியும். ஆதீன அருளாதரவுகளோடு ஆதீன மகாவித்துவான் பிள்ளையவர்களிடமும் மேலகரம் சுப்பிரமணிய தேசிக மகாசந்நிதானம் அவர்களிடமும் தமிழ்நூல்கள் பயின்று ஆதீன வித்துவானாகவும் அரசு கல்லூரிகளில் பேராசிரியராகவும் புகழ் சிறக்க விளங்கியவர்கள். பழந்தமிழ்ச் சுவடிகள் உள்ள இடங்களுக்கெல்லாம் சென்று அவற்றைப் பெற்று, மறைந்துவிடும் நிலையிலிருந்த பல நூல்களைப் பதிப்புநெறிக்கு ஒரெடுத்துக்காட்டாக அழகுறப் பதிப்பித்துத் தமிழன்னையின் தனிப்பெரும் அழகினை உலகு அறியச் செய்தவர்கள். போதகாசிரியர், நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் எனத் தங்கள் தனித்திறனைப் புலப்படுத்தியதோடு யாவரிடத்தும் இனிது பழகும் மனிதாபிமானம், செய்ந்நன்றிமறவாச் சீரிய பண்பு எனும் உயர் நலன்களைக் கொண்டு விளங்கித் தமிழர்தம் உள்ளங்களிலெல்லாம் என்றும் நீங்கா இடம் பெற்றவர்கள்.

இத்தகு பெருமைகளுக்குரிய டாக்டர் ஐயரவர்கள் அரிதின் தேடிச் சேகரித்த தமிழ்ச் சுவடிகள், பயன்படுத்திய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், பதிப்பித்த நூல்கள் முதலாயின கோயில் கொண்டுள்ள நூலக வளாகத்தில் அவர்களது திரு உருவச்சிலை, தங்கள் பணிகளின் சிறப்பால் தமிழக ஆளுமைச் சீர்மையை உலகறியச் செய்து மகிழும் நமது அன்பிற்கும் பாராட்டிற்கும் உரிய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.ஆர். வெங்கட்ராமன் அவர்களால் திறந்துவைக்கப் பெறுவது மிகவும் பொருத்தம் உடையதாகும்.

டாக்டர் ஐயரவர்களின் திருஉருவச்சிலை திறப்புவிழா சிறப்பாக நடைபெறவும் விழாமலர் ஐயரவர்களின் தமிழ்ப் பணிகளின் தனிப்பெருந்தன்மையினைத் தெரிவிக்கும் அன்பர்களின் அரிய படைப்புக்களைத் தாங்கித் தமிழ்மணம் கமழ மலர்ந்து இன்பம் பெருக்கவும் அருள நம் வழிபடுமூர்த்தி **அருள்தரு ஞானமா நடராசப் பெருமான்** திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

# நூல்நிலை நிர்வாகக் குழு அங்கத்தினர்கள்



திரு. அ.மு. பரமசிவானந்தம்
தலைவர்



திரு. L. ராமநாதன்
கௌரவப் பொருளாளர்



திரு. சு. பாலசாரநாதன்
நூலகப் பாதுகாவலர்



திரு. S. ஸ்ரீநிவாசன்
அங்கத்தினர்



திரு. T.R. ராமநாதன்
அங்கத்தினர்

# நூல்நிலை நிர்வாகக் குழு அங்கத்தினர்கள்



டாக்டர். இரா. நாகசாமி
அங்கத்தினர்



திரு. S. வெங்கடகிருஷ்ணன்
அங்கத்தினர்



திருமதி. ஆனந்தி ராமச்சந்திரன்
அங்கத்தினர்



திருமதி. ராஜேஸ்வரி நடராஜன்
அங்கத்தினர்



திருமதி. கீதா சேஷாத்திரி
அங்கத்தினர்

# விழாக் குழு உறுப்பினர்கள்



திரு. கே. சங்கரமேனன்
தலைவர்



திரு. அ. பரமசிவானந்தம்
தலைவர்



திரு. L. ராமநாதன்
அங்கத்தினர்



திரு. சு. பாலசாரநாதன்
அங்கத்தினர்



திரு. R. நடராஜன்
அங்கத்தினர்



திரு. R. கிருஷ்ணமூர்த்தி
அங்கத்தினர்

# விழாக் குழு உறுப்பினர்கள்



திரு. குமரி அனந்தன்
அங்கத்தினர்



திரு. A. ஜகந்நாதன்
அங்கத்தினர்



திரு. T.V. ராமநாதன்
அங்கத்தினர்



திரு. S. வெங்கடகிருஷ்ணன்
அங்கத்தினர்



திரு. மு. ஸ்ரீநிவாசன்
அங்கத்தினர்



திரு. R. அறிவழகன்
ஸ்தபதி

# நூலக பணியாளர்கள்



திரு. K. பாஸ்கர்
நூலகர்



திரு. K.M. நடராஜன்
தட்டச்சர்



திரு. S. சாய்ராமன்
உடனாளர்



திரு. K. பொன்னுவேலு
அலுவலர்-1.



திரு. M. மணி
அலுவலர்-2

# ஆராய்ச்சித் துறைப் பிரிவினர்



திருமதி. R. புவனேஸ்வரி
இளநிலை உதவியாளர்-1



செல்வி V. இந்துமதி
இளநிலை உதவியாளர்-2



திரு. சு. பாலசாரநாதன்
பாதுகாவலர், ஆராய்ச்சித்துறை



திரு. K. கிருஷ்ணன்
நூலக பைண்டர்



திருமதி. கன்னிகா
துப்புரவுப் பணியாளர்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. பதிப்பாளர் குறிப்பு | |
| 2. முன்னுரை | |
| 3. நூல்நிலைய வரலாறு | |
| 4. தமிழ்த் தாத்தா | திரு. A. ஜகந்நாதன் |
| 5. தமிழ்த் தாத்தாவின் நற்பண்புகள் | பானுமதி சேதுராமன் |
| 6. தமிழ்த் தாத்தாவும் காஞ்சி ஸ்ரீமடமும் | ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் |
| 7. தமிழ்த் தாத்தா | |
| 8. சுவடி கண்ட ஜோதி | அ. வைத்தியநாதன் |
| 9. டாக்டர் ஐயரவர்கள் பாடல்கள் | |
| 10. உ.வே. சாமிநாத ஐயர் | நாமக்கல் கவிஞர் பாடல்கள் |
| 11. மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியவர்கள் | |
| 12. ஏடுதேடி நடந்த ஏந்தலின் அடிச்சுவட்டில் | டாக்டர் எஸ். கண்ணன் |
| 13. மகாமகோபாத்தியாய: டாக்டர் உ.வே. சாமிநாதையர் | எஸ். வையாபுரிப் பிள்ளை |
| 14. தமிழின் தண்ணிழல் | கல்கி |
| 15. இதற்குத்தானா ஐம்பது ரூபாய் | |
| 16. ஐயரவர்களின் கைப்பட்ட கம்பராமாயணம் | கி.வா.ஜ. |
| 17. திருவிளையாடல் வசனம் | கி.வா.ஜ. |
| 18. மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் | விவேக பாநு |
| 19. தந்தையாரின் அந்திய காலம் | எஸ். கல்யாணசுந்தரையர் (பாரதமணி) |
| 20. தமிழ்த் தாத்தாவுடன் ஒருநாள் | (குமரி மலர்) ஏ.கே. செட்டியார் - 1935 |
| 21. பத்திரிகைகளைப் பற்றிய அபிப்ராயங்கள் | |
| 22. ஸ்ரீ ஜகத்குரு திவ்யசரித்திரம் | ஐயரவர்களைப் பற்றி ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுடைய கட்டுரை |
| 23. தமிழ்த் தாத்தாவும் மகாகவி ரவீந்திரரும் | த.நா. சேனாபதி (இளந்தமிழன் - 1990) |
| 24. கலாநிதியின் நூற்பதிப்பு முறை | ச.கு. கணபதி ஐயர் |
| 25. இமயமும் பொதியிலும் | கி.வா.ஜ. |
| 26. ஐயரவர்கள் சேர்த்த அருங்கலைப் பொக்கிஷம் | ரஸிக ரஞ்சன் |
| 27. தமிழ்க் கோயில் | கல்கி (2-4-1967) |
| 28. தமிழ்த்தேனடை | ஐயரவர்கள் |
| 29. புலவராற்றுப்படை | கல்விக்கடல் S.K. கம்பராமன் |
| 30. தாத்தா தாத்தா தமிழ்த் தாத்தா | பவானிதாசன் |
| 1. Homage to a Titan | S. Srinivasan |
| 2. The Mahamohopadyaya | M. Srinivasan |
| 3. Dr. Swaminatha Iyer | Francis Moroad M.Litt |
| 4. Dr. U.V.S. Iyer Library Chairman 1-06-97 | T.V. Viswanatha Iyer |
| 5. U.V.S. Iyer Library: Link in the Chain of Tamil History | The Hindu (5-5-196) |
| 6. Mahamahopadhyaya V. Swaminathier | Everymans Review (August 1919) |

ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களும் எழுதிய நூல்களும்

நூல் நிலைய வெளியீடுகள்

1943-1995 ஆண்டுவரை சுவடிகளிலிருந்தும் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தும் பதிப்பிக்கப்பட்ட நூல் நிலைய வெளியீடுகள்

நூலகத்திற்கு வருகை தந்தவர்களின் அபிப்பிராயங்கள்

**Visitors Opinions.**

# பதிப்புரை

டாக்டர் ஐயரவர்கள் தமிழின் பண்டைக்காலப் பெருமையை நன்கு உணர்ந்தவர்கள். பழைய நூல்களை ஆராயும்போதும், *பழம்புலவர்களின் உன்னதமான உணர்ச்சிகளை அவர்களுடைய கவிதையினால்* அறிந்து இன்புறும்போதும், ''அவர்கள் எல்லாம் எப்படி இருந்தார்களோ! அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களோடு வாழும் பேறு நமக்கு இல்லையே!'' என்று மனம் உருகுவதுண்டு.

ஐயரவர்கள் எந்தப் பிரசங்கம் செய்தாலும், பிரசங்கம் நடக்கும் ஊர், இடம், சபை இவற்றைப் பற்றிய சமற்காரமான வார்த்தைகள் இல்லாமல் ஆரம்பிக்கமாட்டார்கள். எந்தச் சொற்பொழிவிலும் பழமையான செய்தியும், சமற்காரமும் முதலில் இருக்கும்.

ஐயரவர்கள் ஒருமொழியை அதன் இனிமைக்காகப் படிப்பது வேறு; தாய்மொழி என்ற நினைவினால் கற்பது நம்கடமை என்றுணர்ந்து கற்பதுவேறு. நாம் தமிழர்களாதலின் தமிழைக் கற்பது நமது கடமை என்று பல சொற்பொழிவுகளில் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். தமிழைக் கற்பது மிகவும் எளிது என்றும் கூறியுள்ளார்கள்.

ஐயரவர்கள் *தமிழின் பெருமையைச் சொல்லும்போது சங்க நூல்களால் அறிந்த செய்திகளைச்* சுருக்கமாகத் தெரிவிப்பார்கள். பழங்காலத்து அரசர்கள், புலவர்களை அழைத்துப் பாதுகாத்து நூல்களை இயற்றச் செய்தனர் என்று குறிப்பிடுகின்றார்கள்.

ஐயரவர்கள் பழம் தமிழ்ச் சுவடிகளைத் தேடி அலைந்த காலத்தில் புனலாலும், கனலாலும் தமிழ் நூல்கள் அழிந்த கதைகள் பல கேட்டு மனம் புண்ணாகி வருந்தியிருக்கின்றார்கள் 'என் சரித்திரத்தில்' சில இடங்களில் குறிப்பிடுகின்றார்கள். எவ்வளவு நூல்கள் பிரதி செய்யப்படாமல் அழிந்து ஒழிந்தன. 'தமிழிடை அன்பு வைத்திருந்தும் நூல்களை பிரதி செய்யாமல் இராமபாணப் பூச்சிக்கு இரையாகக் கொடுத்துவிட்டார்களே என்று மனம் வருந்துகின்றார்கள்.

பிரதி செய்தவர்களாலும், நூல் கற்பவர்களாலும், பாடம் சொல்பவர்களாலும், நூல் இயற்றுகின்றவர்களாலும் பதிப்பிப்பவர்களாலும் தமிழ் வாழ்கின்றது. அவர்களே தமிழைப் பாலனம் செய்த மேலவர். இவ்வளவு வகையிலும் ஐயரவர்கள் தமிழைக் காப்பாற்றி வந்தார்கள். சொல்லிய வண்ணம் செய்யும் ஆற்றல் அவர்கள்பால் இருந்தது.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த டாக்டர் ஐயரவர்கள் பெயரால் மிகச் சிறந்த முறையில் ஒரு நூல்நிலையம் பெசன்ட் நகரில் திருமதி ருக்மிணிதேவி அவர்களால் நிறுவப்பட்டு இலங்கிக் கொண்டிருக்கிறது. நூல்நிலையத்தின் நுழைவாயிலில் அன்னாருடைய வெண்கலத் திருஉருவச்சிலை அமைய இருக்கின்றது.

திருவுருவச்சிலை திறப்புவிழாவின் போது ஒருமலர் ஒன்று வெளியிட எண்ணி, நூல்நிலையத் தலைவராக இருந்து அண்மையில் காலஞ்சென்ற திரு. சங்கரமேனன் அவர்களிடம் சொன்னபோது மிகவும் அன்புகூர்ந்து மலர் ஒன்று தயாரிக்க உற்சாகப்படுத்தினார்கள். ஆனால் பலகாரணங்களால் அவர்கள் காலத்தில் திருவுருவத் திறப்புவிழாவும் மலர் வெளியீட்டு விழாவும் நடைபெறவில்லை. அதை நினைக்கும்போது சொல்லொணா மனவருத்தம் எனக்கு ஏற்படுகின்றது.

இம்மலரில் ஐயரவர்களைப்பற்றிச் சான்றோர்கள் எழுதிய கட்டுரைகளும், ஐயரவர்களுடைய பொன் மொழிகளும் அலங்கரிக்கின்றன. டாக்டர் ஐயரவர்கள் திருவுருவச்சிலை அமைக்க அன்புகூர்ந்து பொருள் உதவி செய்த நன்கொடையாளர்களுக்கும் திருவுருவச்சிலையை முன்னிட்டு வெளிவரும் இம்மலருக்குக் கட்டுரை வழங்கிய சான்றோர்களுக்கும் நூல்நிலையம் நன்றி செலுத்துகின்றது.

இம்மலருக்கு ஒப்பற்ற முன்னுரை வழங்கிய நூலகத் தலைவர் திரு. அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக்கு அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவுருவச்சிலை அமைக்கவும், நன்முறையில் மலரை வெளியிடவும் ஊக்குவித்த நூல்நிலையப் பொருளாளர் திரு. எல். இராமநாதன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி.

இம்மலருக்கு அன்புகூர்ந்து விளம்பரம் வாங்கிக் கொடுத்த கல்கத்தா எம். ஸ்ரீநிவாசன் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றும் விளம்பரங்கள் கொடுத்து ஆதரித்த விளம்பரதாரர்களுக்கும் நன்றி.

திருவுருவச்சிலையை நன்கு அமைத்துக் கொடுத்த ஸ்தபதி திரு. அறிவழகன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி.

இம்மலர் நன்கு வெளிவர உதவி செய்த நூலகப் பணியாளர்களுக்கும் நன்றி.

இம்மலரை நன்முறையில் அமைத்துக் கொடுத்த ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் உரிமையாளர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
**வித்துவான். சு. பாலசாரநாதன்**
ஆராய்ச்சித்துறை
டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர்-90.

# முன்னுரை

இன்று தமிழன் தன் பழம் பெருமையையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பாரறியப் புகழ்ந்து பேசுவதற்கு அடிப்படைக் காரணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதி வைத்த சங்க இலக்கியங்களும் அவற்றை ஒட்டி எழுந்த காப்பியங்களுமேயாம். ஆம்! இவற்றையெல்லாம் - ஏடுகளாக எங்கெங்கோ இருந்தவற்றையெல்லாம் - அலைந்து தேடி, பல இடங்களில் இருந்தவற்றைப் பற்றிக் கொணர்ந்து, துருவித் துருவி ஆய்ந்து உணர்ந்து, நன்கு வடித்து அவற்றை அச்சேற்றி உலகுக்குத் தந்தவரே டாக்டர். உ.வே.சாமிநாத ஐயரவர்கள். அவர்கள் தம்மை மறந்து, தமிழே தன் வாழ்வென நினைத்துச் சங்க நூல்களை ஆய்ந்து அவற்றிற்குக் குறிப்புரை முதலியன இட்டு, கற்றாரும் கல்லாரும் உணரும் வகையில் உலகுக்குத் தந்த உத்தமராவர். இப்பெருமானார் இன்றைக்கு ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் 28-4-1942ல் இறைநிலையுற்றார். 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று மணிவாசகர் இறைவன் தனக்கு அருட்காட்சி தந்ததைப் பாடிப் பரவுகின்றார் ஆம்! அதே கழுக்குன்றின் கண்ணுதல், ஐயர் அவர்களுக்கு அருட்காட்சி தந்ததோடு அவர்தம் அடியிலேயும் அணைத்துப் பேரின்பப் பெருவாழ்வினையும் அளித்தார். அக்காலத்தில் நான் காஞ்சியில் 'தமிழ்க்கலை' என்ற திங்கள் இதழினை நடத்தி வந்தேன். அதில் ஐயரவர்கள் மறைந்ததும் அவர் பெருமை, சிறப்பு, தமிழ்த்தொண்டு, தாயுள்ளம் பற்றி விளக்கி எழுதியுள்ளேன்.

ஐயர் அவர்களோடு நான் இளமைக் காலத்தில் நெருங்கிப் பழகியவன். பலமுறை திருவல்லிக்கேணியில் அவர்தம் வீட்டிற்குச் சென்று அவர் வாழ்த்தினைப் பெற்று வந்திருக்கிறேன். 1942ல் போர்க் காரணமாகச் சென்னையை விட்டுப் புறம் போந்த நிலையில், அவர் திருக்கழுக்குன்றத்தில் தங்கி இருந்தபோதும் ஒருமுறை சென்று கண்டு மகிழ்ந்துள்ளேன். அவ்வப்போது அவர்கள் என்னைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கூறிய அறிவுரைகள் இன்றும் என் கண்முன் நிழலிடுகின்றன ஆம்! இத்தகைய நல்லவர் - தமிழ் நலம் காத்த தக்கவர் - தனக்கென வாழாத் தமிழ்க்கென வாழ்ந்த தாத்தாவின் புகழ் என்றும் உலகில் நிலைக்க வழி இல்லையா என எண்ணினேன். என் எண்ணம் நிறைவேறும் வகையில் 5-7-1943லேயே (நான் பிறந்த நாள்) ஐயர் அவர்கள் மறைந்த ஓராண்டு கழிந்த உடனேயே அவர்தம் பெயரால் இந்த நூல் நிலையம் நிறுவப் பெற்றமை அறிந்து அன்று நான் மிகவும் மகிழ்ந்து, இதற்கு மூலகாரணமாக உள்ள அனைவரையும் வாழ்த்தி வணங்கினேன்.

இன்று ஐம்பது ஆண்டுகள் கழித்து, நூல்நிலையம் பெசன்ட் நகர் வளாகத்தில் தனக்கெனப் பெற்ற தனி இடத்தில், நூல்நிலையக் கட்டிடத்துக்கு எதிரில்-வாயிலில் ஐயர் அவர்தம் உருவச்சிலையினைத் திறந்து வைக்கும் சிறப்பு விழா நடைபெறுகின்றது அதற்கென இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த மலரும் வெளிவருகின்றது. இந்த நூல் நிலையத்துடன் நான் தொடக்க நாளிலிருந்தே தொடர்பு உடையவன் எனினும் இந்த ஆண்டிலேயே மறைந்த அருள்புரியும் மறைத்திரு. ஐயர் அவர்தம் அருள்வாழ்த்தோடு நூல் நிலையம் போற்றும் அவர்தம் நல்ல தொண்டர்கள் என்னை இதன் தலைவனாகவே இருக்கப் பணிந்தார்கள். அதன் வழியே இந்த முன்னுரையினையும் நான் எழுதக் கடமைப்பட்டவனாகின்றேன். ஐயரவர் தம் அருள் நெறியினைப் போற்றி வணங்குகின்றேன்.

இம்மலர் மணம் செம்மை வாய்ந்தது; மனத்துக்குகந்தது, தொட்டுப் பயில்பவர்க்குத் தூய்மை அளிப்பது, உற்றார்க்கும் மற்றார்க்கும் ஐயர்தம் புகழ்காட்டி, நூல்நிலையத்தினையும் காட்டி நன்மை தருவது இதன் தொடக்க நிலையிலேயே நல்லவர்தம் படங்களெல்லாம் அமைகின்றது. அடுத்து நூல்நிலைய வரலாறு நன்கு தெளிவாக விளக்கமாக எழுதப் பெற்றுள்ளது.

அவ்வரலாற்றின் தொடக்கத்திலே ஐயர் அவர்தம் பண்புகளும் பெருமையும் பிற தொண்டுகளும் சுட்டிக் காட்டப் பெறுகின்றன. பின் நூல் நிலையம் தொடங்கிய நாள் தொட்டு வளர்ந்த வளர்ச்சியினையும், இதில் சேர்க்கப் பெற்ற நூல்கள், ஓலைச் சுவடிகள் பற்றியும், இதற்கு உறுதுணையாய் இருந்தவர் பற்றியும் அது பதிவு செய்யப்பெற்று திருமதி ருக்மிணி தேவியார் தலைமையில் அமைந்த கலாக்ஷேத்திரத்தில் கால்கொண்டமைப் பற்றியும், பின் அமைந்த அந்தவளாக எல்லையிலேயே 1967ல் சொந்தக் கட்டடம் அமைத்து அதில் பணி தொடங்கிய பான்மையினையும் தொடர்ந்து ஆற்றும் பணிகளையும் நன்கு விளக்கியுள்ளனர்.

தொடர்ந்து ஐயர் அவர்கள் வரலாறு, அவர்தம் பண்புகள், வாழ்வு நெறி பற்றி அவர்தம் குடும்பத்தினரும் (கொள்ளுப்பேத்தி உட்பட) அவர்தம் நேர்முக மாணவர்களும் பிறரும் எழுதிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கடைசியில் ஐயர் அவர்களைப் பற்றியும் நூல்நிலையம் பற்றியும் சில ஆங்கிலக் கட்டுரைகளும் அடங்கியுள்ளன. பின் ஐயரவர்கள் எழுதிய நூல்கள், பதிப்பித்த நூல்கள், நூல்நிலைய வெளியீடுகள் போன்றவற்றைப் பற்றிய குறிப்பும் உள்ளது. எனவே இந்த மலர் ஐயர்தம் வாழ்வினையும் நூல்நிலைய வாழ்வினையும் நன்கு படம் பிடித்துக் காட்டும் ஒரு பெரிய வாழ்வுக் கண்ணாடி எனலாம். இத்தகைய அரிய முயற்சியில் ஐயர்தம் இளமைக்காலம் தொட்டு இன்றுவரை நிகழ்ந்த அனைத்தையும் கண்டு தெளிந்து, காட்டி எழுத்தில் வடித்துள்ள இதன் ஆசிரியர்களை எப்படிப் பாராட்டுவது என அறியாது நிற்கின்றேன்.

இம்மலர் யாவராலும் என்றும் கட்டிக்காக்க வேண்டிய கருவூலம். இதனைக் கண்டு ஐயர் தம் பெயராலேயோ - வேறு வகையிலோ - பலப்பல நூலகங்கள் அமைய வேண்டும் என்பது என் அவா. தமிழர்கள் - தரணி முழுவதும் அங்கங்கே வாழும் தமிழர்கள் ஒருமுறை இந்த நூலகத்தையும் ஓலை ஏடுகளையும் பிறவற்றையும் கண்டு, இதன் வளர்ச்சிக்கு உதவி செய்வதோடு, தத்தம் ஊரிலும் இத்தகைய நூல் நிலையங்களும் அமைக்கவேண்டும் எனக்கேட்டுக் கொள்ளுகிறேன். இம்மலர் வெளிவர உறுதுணையாகி நின்ற அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும்.

நூல்நிலையம் மேலும் மேலும் தழைத்து உயர்ந்து உலக நலன் காண்பதாக. மத்திய மாநில அரசுகள் முன் நல் உதவி நல்கியமை போன்று, மேலும் மேலும் உதவி இதை நாட்டுப் பெருநூலகங்களுள் ஒன்றாகக் கண்டு போற்றிப் புரக்கக் கடமைப்பட்டுள்ளன. மீண்டும் இதன் வளங்காணும் அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

1-8-1996
வள்ளியம்மாள் கல்வி அறம்
தமிழ்க்கலை இல்லம்,
சென்னை - 600 030.

பணிவுள்ள,
**அ.மு. பரமசிவானந்தம்.**

# நூல்நிலைய வரலாறு

### 1. திரு ஐயரவர்களின் தமிழ்த் தொண்டு:

தமிழ்த் தாத்தா என்று உலகம் பேசும் பெருமை பெற்ற திரு ஐயரவர்கள் 19.2.1855 அன்று தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் என்ற சிற்றூரில் சங்கீத வித்துவானாகிய ஸ்ரீ வேங்கட சுப்பையருக்கும் ஸ்ரீமதி சரசுவதி அம்மாளுக்கும் புதல்வராகத் தோன்றினார்கள். அவர்களிடம் தமிழார்வம் இயற்கையாகவே இளமை முதற்கொண்டே அமைந்திருந்தது. அக்காலத்தில் அவர் தம் ஊருக்கு அண்மையில் வாழ்ந்து வந்த சான்றோர்களிடம் பயின்று இலக்கணம், இலக்கியம் போன்ற நூல்களில் அடிப்படைத் தேர்ச்சியும், கவியியற்றும் ஆற்றலும் ஓரளவு பெற்றிருந்தார்.

அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் பெருங் கவிஞராகவும், சிறந்த புலவராகவும் திகழ்ந்த மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தம் 15ஆம் பிராயத்தில் (ஏப்ரல், 1871) மாணவராகச் சேர்ந்து, அவருடைய நிழல் போல் அவரைப் பிரியாமல் 1.2.1876 வரை கல்வி பயின்று வந்தார். அச்சில ஆண்டுகளில் அந்நாளில் தமிழுலகம் அறிந்திருந்த எல்லா நூல்களையும் தாம் கற்றதோடு, அவற்றின் நுட்பங்களை அறிந்து, மாணவர்கட்குப் போதிக்கும் திறமையும் பெற்றுத் திகழ்ந்தார். 16-2-1880இல் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ் கற்பிக்கும் பணி அவர்பால் ஒப்படைக்கப் பெற்றது. அந்த ஆண்டிலேயே சேலம் உயர்திரு இராமசாமி முதலியார் என்ற சான்றோர் ஒருவரின் உதவியால் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான 'சீவக சிந்தாமணி' என்ற நூலின் மூலமும் அதற்கு நச்சினார்க்கினியரால் இயற்றப் பெற்ற உரையும் அடங்கிய ஏட்டுச்சுவடி ஒன்றை அவர் காண நேர்ந்தது. சீவக சிந்தாமணி சைன சமயத்தைச் சார்ந்த நூல். அதனை அவர் படிக்கத் தொடங்கியபோது, அதுவரையில் அவர் கண்டும் கேட்டும் அறிந்திராத பல செய்திகளும், இலக்கியச் சுவையும் அதில் காணப்பெற்றன. அதில் உள்ள சைன சமயக் கருத்துக்களை அறிந்துகொள்ள அவர் பலர்பால் சென்று கேட்க வேண்டி நேர்ந்தது. அந்நூலின் உரையினின்று முன் கேட்டறியாத பல பழைய நூல்களின் பெயர்கள் தெரிய வந்தன. இவ்வளவு அருமைகளை உடைய அந்த நூலை முற்றும் ஆராய்ந்து அச்சிற் பதிப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் தமிழரின் நல்லூழால் அவருள்ளத்தில் தோன்றியது. அதன் மூல பாடங்களின் இயல்பான உருவத்தை அறிய அவர் அந்நூலின் வேறு பிரதிகளை நாடிப் பல ஊர்களுக்கும் பழம்பெரும் புலவர்களின் இல்லங்களுக்கும் சென்று ஆராய்ந்தார். பல ஏடுகளைத் தொகுத்து ஒப்புநோக்கிப் பாடபேதங்களை ஆராய்ந்தார். இம்முயற்சியில் ஏழாண்டுகள் அவர்கள் உழைத்து 1887ல் அதனை வெளியிட்டார்.

சிந்தாமணி வெளியிட மேற்கொண்ட முயற்சி அவருடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றி விட்டது. பல்லாண்டுகளாக மறைந்தும் மறந்தும் போன பல பழம் பெரும் நூல்களைக் கண்டெடுத்து மேல் நாட்டாரும் பாராட்டும் முறையிலும், தமிழ்ப் புலமை உடையார் வியக்கும் முறையிலும், மாணவர்கள் எளிதில் பயனடையும் வகையிலும் பதிப்பித்து வெளியிடும் பணியை அவர் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார். அவருடைய ஒப்பற்ற தொண்டின் பயனாகத் தமிழன்னையின் அழகுத் திருவுருவம் தமிழ் மக்களுக்குப் புலனாயிற்று. தமிழ்த்தாய் இழந்த சிலம்பை மீண்டும் பெற்றாள். மேகலையைப் புனைந்தாள். சிந்தாமணியைச் சூடினாள். சங்க நூல்கள் என்னும் தங்க அணிகள் மீண்டும் அவள் திருமேனியை அழகு செய்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்த தமிழர் பண்பாட்டையும், அறிவையும், வாழ்வியலையும், வரலாற்றையும், பிறவற்றையும், தமிழ் மக்களேயன்றி உலகத்துப் பேரறிஞர்களும் அறிந்து கொள்ளுவதற்கு ஏற்ற வ்ழி உண்டாயிற்று. பல பேரறிஞர்கள் தமிழர் வாழ்வோடு தொடர்புடைய பலவற்றையும் ஆராயத் தொடங்கினர். உலக மொழிகளுள் தமிழ் மொழி பெற்றுள்ள பழமையும், செப்பமும், திட்பமும், நுட்பமும் புலனாயின.

இவ்வாறு பல சிறந்த நூல்களை அவர்கள் ஆராய்ந்து, வெளியிடப் பல நூற்றுக்கணக்கான ஓலைச் சுவடிகளையும், பிற பிரதிகளையும் தொகுத்தார்கள். தாமே பெற்று ஆளமுடியாமல் பிறர்பால் இருந்த அரிய நூல்கள் பலவற்றைப் படி செய்து வைத்துக் கொண்டனர்.

இவ்வாறு தாம் தொகுத்து வைத்த சுவடிகளைத் துருவி ஆராய்ந்து பதிப்பிக்கத் தொடங்கியபோது அந்த அந்தச் சொல்பொருள் ஆகியவற்றின் அகராதிகளை முயன்று சித்தம் செய்தார். ஒரு நூல் ஆராய்ச்சிக்கு முற்காலத்தும், அக்காலத்தும், பிற்காலத்தும் எழுந்த நூல்களோடு அதனை ஒப்பு நோக்குவது இன்றியமையாதது. ஆதலின் தேவாரம் முதலிய பிற நூல்களுக்கும் சொற்பொருளகராதி சித்தம் செய்து வைத்துக் கொண்டார். அப்பால் நூலை ஆராய்ந்து,பொருளைத் தெளிந்து பதிப்பித்தார். அவருடைய பதிப்புக்களில் ஒவ்வொரு நூலிலும் முகம்போல் முன்னுரை இருக்கும். தொடர்ந்து ஆசிரியர் வரலாறு, நூலைப் பற்றிய தனி ஆராய்ச்சி இருக்கும். அவற்றைப் படித்தால் நூலின் உள்ளுறை

இன்னது என்று தெளிவாகும். பின்பு நூல் இருக்கும். அதன் பகுதிகளுக்குரிய விளக்கங்களும், ஒப்புமைப் பகுதிகளும், இலக்கணச் செய்திகளும் அடிக் குறிப்புக்களாக இருக்கும். நூலின் இறுதியில் அரும்பதம் முதலியவற்றின் அகராதி இருக்கும். நூல் முழுவதும் படிக்காமலே இன்ன பொருளைப் பற்றிய செய்திகள் இங்கே இங்கே உள்ளன என்று இந்த அகராதியினால் எளிதில் தெரிந்து கொள்ள லாம். இதனால் மாணாக்கர்களும், ஆராய்ச்சியாளர்களும் பெரும் பயன் பெறுகிறார்கள். உழைப்பு இல்லாமலேயே பல ஆராய்ச்சி நூல்கள் எழுத இத்தகைய அகராதிகள் கருவிகளாகப் பயன்படுகின்றன.

இவ்வாறு ஈடும் எடுப்பும் இல்லாத சிறந்த வகையில் தமிழுக்குப் பணிபுரிந்து வந்த அவர்கள் தம் 88ஆம் ஆண்டில் 1942ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி திருக்கழுக்குன்றத்தில் இறைவன் திருவடியை அடைந்தார்கள்.

### 2. நூல் நிலையத்தின் தோற்றம்:

தமிழன்னையின் அரும் புதல்வர் தம் புகழுடம்பை நிறுத்தி மறைந்ததை அறிந்த தமிழ் கூறும் நல்லுலகம் ஆழ்ந்த வருத்தமடைந்தது. அவர் அரிதில் தொகுத்து வைத்திருந்த இலக்கியச் செல்வம் வீண்போகாமல் எந்நாளும் தமிழுலகுக்குப் பயன்படவும், அவர் இயற்றி வந்த அரும்பணிகள் அவர் சென்ற முறையிலேயே தொடர்ந்து நடைபெறவும், அவர் புகழ் என்றென்றும் ஒளியுடன் விளங்கவும் ஏற்ற முறையில் அவர் பெயரால் ஒரு நினைவு நிறுவனம் அமைக்க வேண்டுமென்று அவருடைய அரும் புதல்வர் திரு.சா. கலியாணசுந்தரையர் அவர்கள் எண்ணலாயினர்.

அச்சமயத்தில், அடையாற்றில் பிரம்மஞான சபையின் சிறந்த உறுப்பினர்களுள் ஒருவரும், கலாக்ஷேத்திரம் என்ற கலைக்கூடத்தை நிறுவி நுண்கலைகளை உலகறிய வளர்த்து வந்த திருமதி ருக்மிணி தேவியார் அவர்கள் திரு. கலியாணசுந்தரையரின் கவலைகளைத் தீர்த்து, அவர் எண்ணத்திற்கு உருவமளிக்க முன்வந்தார்கள். அவ்வாறு தேவியார் அவர்கள் தம் விருப்பத்தை நிறைவேற்ற முன்வந்தமையை நன்றியறிவுடன் ஏற்று, திரு. கலியாண சுந்தரையர் தம் தந்தையார் தொகுத்து வைத்திருந்த ஏடுகளை எந்தக் கைம்மாறையும் கருதாமல் திருமதி ருக்மிணி தேவியாரிடம் அன்பளிப்பாக அளித்தார். அவற்றைக் கொண்டு 'மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்' என்ற பெயருடன் இது தோன்றியது. அடையாற்றுப் பிரம்மஞான சபையின் தலைமை அலுவலகத்தில், அச்சபையாரால் அன்புடன் கொடுக்கப்பெற்ற ஒரு பெரிய அறையில் இது திருமதி ருக்மிணி தேவியார் அவர்களின் முயற்சியால் 5.7.1943 அன்று நிறுவப்பெற்றது. அதனைப் பல சான்றோர்களின் முன்னிலையில் சென்னை, உயர்நீதிபதி என். சந்திரசேகர ஐயர் அவர்கள் திறந்து வைத்தார். பிரம்ம ஞான சபைத் தலைவரும் அருங்கலை விநோதரும் ஆன டாக்டர் ஜி.எஸ்.அருண்டேல் அவர்கள் இம் முயற்சிக்கு மனமார்ந்த ஆசிகளை அருளினார்.

### 3. நிலையத்தின் நோக்கங்கள்:

இங்குள்ள நூல்களைக் கொண்டு தமிழ்ப் பண்பாடு, வரலாறு, மொழி, இலக்கியம், சமயம் ஆகியவற்றை அறிந்து கொள்ள வழி வகுத்தல்.

2. பழந்தமிழ் நூல்களையும், பிற்காலத்து நூல்களையும் ஆராய்வது, ஒப்பு நோக்குவது, பிறமொழியாளருக்கும் பயன்படும் வகையில் மொழிபெயர்ப்பு செய்யத் துணை புரிவது ஆகிய தொண்டைத் தானே செய்து, பிறரையும் செய்ய ஊக்குவித்தல்.

3. தமிழ்மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, வெளிவராத நூல்களை வெளியிடுதல், வெளிவந்திருந்தாலும் பின்னும் திருத்தம் பெறப் பதிப்பித்து ஆராய்ச்சி வகைகளைச் சேர்த்து நூல்களை வெளியிடல்.

4. ஆராய்ச்சிக்குக் கருவியாக ஐயரவர்கள் சேகரித்து உள்ள குறிப்புக்களை ஒழுங்குபடுத்திப் புதிய நூல்களை வெளியிடுதல்.

5. தேவாரம், புலவர் வரலாறுகள், தனிப் பாடல்கள், தல வரலாறுகள் ஆகிய துறைகளில் தொகுத்தவற்றைப் பயன்படுத்தி வெளியிடுதல்.

### 4. தொடக்க நிலை:

நூல்நிலையம் 939 ஓலைச் சுவடிகளைக் கொண்டு நிறுவப் பெற்றது. நூல்நிலையத்தின் ஆயுள் அத்யக்ஷகராக திருமதி ருக்மிணி தேவியாரும், பொருளாளராக டாக்டர் ஜி.சீனிவாச மூர்த்தி அவர்களும், கௌரவ அமைச்சராக, திரு சா. கலியாணசுந்தரையரும், ஆலோசனைக் குழுவினராக மேலே குறித்த மூவர்களோடு திரு கே.சங்கரமேனன், திரு ஆர். விசுவநாதையர், திரு கே.ராமச்சந்திர சர்மா, வித்துவான் திரு ச.கு. கணபதி ஐயர் ஆகியவர்கள் இருக்க, இது நடைபெற்று வந்தது. அப்போது இந் நிலையத்திற்கு வேண்டிய பொருளுதவி திருமதி ருக்மிணி தேவியாரே வழங்கி வந்தனர்.

முன் சொன்னபடி நூலகம் அடையாறு, பிரம்மஞானசபையின் அலுவலகத்தின் ஓரறையில் நடைபெற்றது. அலுவலகம் நடப்பதற்குரிய கருவிகள் பிரம்மஞான சபையாரால் இரவலாக அளிக்கப் பெற்றன.

அலுவலாளர்: 1. நூலகர், 1 பண்டிதர், 1 உதவியாளர் (பாதி நாளுக்கு மட்டும்) ஆக மூவராவர்.

**5. சுவடிகளின் பாதுகாப்பும் அவற்றின் தொகையும் வளர்ச்சியும்:**

நூல்நிலையம் சுவடிகளின் பாதுகாப்பையும், மிகப் பழமையானவற்றைக் காகிதத்தில் பெயர்த்து எழுதுவதையும், அந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வதையும், நூல்களை வெளியிடுவதையும் இன்றியமையாத பணிகளாக மேற்கொண்டுள்ளது.

1946இல் சுவடிகளின் பெயர்களையும், அவற்றின் உள்ளுறை முதலிய செய்திகளையும் அகர வரிசையில் குறித்துத் தொகுத்து நூல் வடிவில் ஓர் அட்டவணை 88 பக்கங்களில் வெளியிட்டது. பின்பு, சுவடிகளின் விரிவான விளக்கம் அடங்கிய பட்டியல் நூல் (Descriptive catalogue) ஆங்கிலத்திலும் தமிழிலும் நான்கு பாகங்களாக அச்சிட்டுப் பிரசுரிக்கப் பெற்றது.

பகுதி, விளக்கம் பெற்ற நூல்கள்

I 1 to 440

II 441 to 1132

III 1133 to 1826

IV 1827 to 2326

V. கையெழுத்துப் பிரதிகள்

VI. வடமொழி நூல்கள், தமிழ்நூல்கள்

நூல்களை ஆராய்வதற்கும், புதிய பதிப்புக்களை வெளியிடுவதற்கும், நிலையத்திற்கு வருகிறவர்கள் படிப்பதற்கும் பயன்படும்படி அச்சிட்ட நூல்கள் அடங்கிய ஒரு பகுதி 524 நூல்களைக் கொண்டு 1951 ஜூன் மாதம் திறக்கப் பெற்றது. இன்று அப்பகுதியில் உள்ள அச்சிட்ட நூல்களின் எண்ணிக்கை 6101. இவற்றுள் பெரும்பாலானவை அறிஞர் பலர் தாம் தொகுத்து வைத்திருந்து அளித்தவை. அவற்றுள் பல இப்பொழுது வெளியே கிடைக்காதவை. ஆகவே நூல் நிலையத்தின் இப்பகுதி ஆராய்ச்சி செய்வார்க்கும், படித்து இன்புறுவார்க்கும் உதவியாக விளங்குகிறது. இன்றைய அச்சிட்ட நூல்களின் எண்ணிக்கை 21623, ஓலைச்சுவடிகள் 2203.

**6. சுவடிகளின் தனிச்சிறப்பு:**

உலகில் அச்சில் வழங்கும் பல நூல்களுக்கும் கூட நல்ல பாடங்கள் தேட இவற்றில் வகையுண்டு. அன்றியும் பல பழைய நூல்களுக்கு உரைகளும் இங்குக் கிடைக்கின்றன. தலபுராணங்கள், கோயிலை ஒட்டிய பிரபந்தங்கள், சைவசாத்திரங்கள், தோத்திரங்கள் முதலியன இன்னும் அச்சில் வராமல் உள்ளன. ஒரு பெரும்புலவர் தாமேதேடி ஆராய்ந்து சேகரித்து வைத்துள்ள பழைய தமிழ்ச் சுவடிகளை ஒருங்கே பெற்றிருப்பது இந்நூலகத்தின் தனிப்பெருமை.

**7. ஆட்சி:**

மேலே குறித்தபடி திரு கலியாணசுந்தரையர் அன்பளிப்பாகக் கொடுத்த சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும், ஐயரவர்கள் குறிப்புக்களையும் கொண்டு திருமதி ருக்மிணி தேவியார் தம் பொறுப்பில் உள்ள நிலையமாக இதனை நிர்வகித்து வந்தார்கள். அவர்களே ஆயுள் அத்யக்ஷகராகவும், அடையாற்று நூல்நிலைய இயக்குநரான டாக்டர் திரு சீனிவாசமூர்த்தி பொருளாளராகவும், திரு கலியாணசுந்தரையர் கௌரவ அமைச்சராகவும் அமர்ந்து நூல்நிலைய நிர்வாகத்தை நடத்தி வந்தனர். அவர்களுக்கு உதவியாகப் புலவர்கள் அடங்கிய ஓர் ஆலோசனைக் குழுவும் பணியாற்றி வந்தது. திரு சீனிவாசமூர்த்தி அவர்களும், அவருக்குப் பின்னர் திரு கலியாணசுந்தரையர் அவர்களும் புகழுடம்பை எய்தினார்கள்.

**8. டிரஸ்டு (பொறுப்புக் குழு):**

22.3.57 அன்று அத்யக்ஷகர் அவர்கள் 11 உறுப்பினர் கொண்ட ஒரு டிரஸ்டு குழுவுக்கு மாற்றி அதனைப் பதிவும் செய்தனர்.

பிறகு இந்தக் குழுவினர் சொஸைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் No.XXI ஆப் 1860 என்ற சட்டத்தின் கீழ் (S.No.7 of 1964 எண்ணாக) 17-1-64 அன்று பதிவு செய்து பின்வரும் 11 உறுப்பினர் கொண்ட பொதுக்குழுவினை நிறுவி விதிகள் முதலியவற்றை வகுத்தனர்.

**உறுப்பினர்களின் பெயர்கள்**

1. திருமதி ருக்மிணி தேவியார் அவர்கள் (ஆயுள் அத்யக்ஷகர்)
2. டாக்டர் சி.பி.இராமசாமி ஐயர் அவர்கள் (உறுப்பினர்)
3. திரு கரு.முத்து.தியாகராச செட்டியார் அவர்கள் (உறுப்பினர்)
4. திரு என்.ஸ்ரீராம் அவர்கள் (உறுப்பினர்)
5. திரு கே.சங்கரமேனன் அவர்கள் (நிதியாளர்)
6. திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் (உறுப்பினர்)
7. திரு கி.வா.ஜகந்நாதன் அவர்கள் (உறுப்பினர்)
8. திரு க.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் (உறுப்பினர்)

9. திரு பேராசிரியர் கே.சாமிநாதன் அவர்கள் (உறுப்பினர்)
10. திரு வி.கே.இராமசாமி முதலியார் அவர்கள் (உறுப்பினர்)
11. திரு ரா.விசுவநாதன் அவர்கள் (கௌரவ அமைச்சர்)

இன்று இக்குழுவின் உறுப்பினர் எண் 30.

பொதுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்று, நடைமுதல் ஆண்டில் ஆட்சிக் குழுவினராக அமைந்து, நூலகத்தின் ஆட்சியை மேற்கொண்ட உறுப்பினர்கள் பின்வருபவர்கள் ஆவார்கள்.

1. திரு டி.வி.விசுவநாதையர் அவர்கள் (தலைவர்)
2. திருமதி ருக்மிணி தேவியார் அவர்கள் (அத்யக்ஷகர்)
3. திரு கே.சங்கரமேனன் அவர்கள்
4. திரு கி.வா.ஜகந்நாதன் அவர்கள்
5. திரு க.சுப்பிரமணிய ஐயர் அவர்கள்
6. திரு டி.எம்.கண்ணபிரான் அவர்கள் (நிதியாளர்)
7. திரு ரா.விசுவநாதன் அவர்கள் (கௌரவ அமைச்சர்)

**இன்றைய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:**

1. திரு. K. சங்கரமேனன் (தலைவர்)
2. திரு. L. ராமநாதன் (கௌரவப் பொருளாளர்)
3. திரு. S. பாலசாரநாதன் (பாதுகாவலர்)
4. திரு. T.V. ராமநாதன் (உறுப்பினர்)
5. திரு. S. ஸ்ரீனிவாச ஐயர் (உறுப்பினர்)
6. டாக்டர் R. நாகசாமி (உறுப்பினர்)
7. திரு. S. வெங்கடகிருஷ்ணன் (உறுப்பினர்)
8. திருமதி. ஆனந்தி ராமச்சந்திரன் (உறுப்பினர்)
9. திருமதி. கோமதி விஸ்வநாதன் (உறுப்பினர்)
10. திருமதி. ராஜேஸ்வரி நடராஜன் (உறுப்பினர்)

நூல் நிலையத்தின் அலுவலகம் பாதுகாவலரின் மேற்பார்வையில் அமைந்துள்ளது. அவருக்கு உதவியாக நூலகர் 1, பண்டிதர் 1, தட்டெழுத்தாளர் (கணக்கர்) 1, உதவியாளர் 1, பணியாளர் 2 ஆகிய ஆறுபேர் பணியாற்றி வருகின்றனர் இவ்வலுவலகத்திற்கு ஊதியம் தமிழ் நாட்டரசியலார் மானியமாக அளித்து வருகின்றனர். அவர்களுக்கு இந்நிலையம் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

### 9. கட்டிடம் முதலியன:

5-7-1943 முதல் 7-5-1962 வரை ஏறக்குறைய 20 ஆண்டுகளாக இந்நூல்நிலையம் அடையாறு பிரம்மஞான சபையார் அன்புடன் அனுமதித்த கட்டிடங்களில் தன் அலுவல்களை நடத்தி வந்தது. அதன்பின் திருவான்மியூருக்கு மாற்றப்பட்டது முதல் கலாக்ஷேத்திரக் கட்டிடத்தின் ஒரு பகுதியிலும், பின்னர் ருக்மிணி விகார் என்ற இல்லத்திலும் இருந்து தன் அலுவல்களைக் கவனித்து வந்தது. பிறகு 26.12.1961இல் டெல்லியில் உள்ள விஞ்ஞானப் பண்பாட்டுத்துறை அமைச்சகத் துறைக்கு நூல்நிலையத்திற்காக ஒரு சொந்தக் கட்டிடம் வேண்டும் என்றும், அதன் மதிப்பு ஏறக்குறைய ரூ.$1^1/_2$ லட்சம் ஆகும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டதன் விளைவாக அவர்களுடைய No.F 24-65 C 3 தேதி 23.1.62 உத்தரவில் அந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கு ஆகும் செலவில் பாதி மத்திய அரசும் மான்யமாக அளிக்கலாம் என்ற உத்தரவு பிறந்தது. சென்னை அரசும் தன்னுடைய ஆணை ஒன்றினால் (G.O.Ms.No.759 Edn.3-4-62) அந்தத் தொகையில் ரூ.27,500/- Adhoc மான்ய முன்பணமாக வழங்கினார்கள்.

3-12-62இல் சென்னைக் கல்வியமைச்சராக இருந்த மாண்புமிகு திரு எம்.பக்தவத்சலம் அவர்கள் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி அருளினார்கள். அரசு அளித்த மான்யங்களைக் கொண்டும், அன்பர்கள் அளித்த நன்கொடைகளைக் கொண்டும் 1967 தொடக்கத்தில் கட்டட வேலை முடிவு பெற்றது. 5.2.1967இல் கிருகப் பிரவேசமும், 22.4.1967இல் கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு.நெடுஞ்செழியன் அவர்களால் கட்டிடத் திறப்பு விழாவும் நிகழ்ந்தன. அன்று முதல் நூல்நிலையம் தனக்கு உரிமையான கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இந்நிலையத்தில் உபயோகத்திற்காக அமைந்துள்ள பலவகைக் கருவிகள் முதலியவற்றின் மதிப்பு (Furnitures etc) 31.3.69 தேதி ரூ.4183 கணக்குப்படி மைக்ரோபிலிம்களின் மதிப்பு ரூ.3281. யுனெஸ்கோ 20-12-68ஆம் தேதி நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக அளித்த ரீடர் என்ற கருவியின் விலை ரூ.3773 விற்பனைக்குரிய அச்சுப் புத்தகங்களின் மதிப்பு ரூ.93,967-19 பை. இவையே நூல் நிலையத்திற்கு உரிய சொத்துக்கள்.

### 10. செல்வநிலை:

நூல் நிலையத்தின் நிர்வாகம், நூல்களின் வெளியீடுகள் ஆகியவற்றின் செலவுகளைத் தொடக்கத்திலிருந்து, இதன் உரிமையாளரும் அத்யக்ஷகருமான திருமதி ருக்மிணி தேவியார் அவர்களே வழங்கி வந்தார்கள். பிறகு, சென்னை அரசு 1954 முதல் நிலைய அலுவலாளர்களுக்குச் செலவாகும் தொகை, எழுதுபொருள் முதலிய செலவுகளுக்காக ஆண்டுதோறும் உதவி மான்யம் அன்புடன் அளித்து வருகிறார்கள்.

**தணிக்கைகள்:** ஆண்டுதோறும் நூல்நிலையத்தின் கணக்குகள் தகுதிபெற்ற தணிக்கையாளரால் சோதிக்கப் பெறுகிறது. அரசாங்கக் கணக்குப் பரிசோதகரின் தணிக்கையும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

**ஆண்டு விழாக்கள்:**

ஸ்ரீ ஐயரவர்களின் நினைவு விழா ஆண்டுதோறும் கொண்டாடப் பெற்று வருகிறது.

திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பிறந்தநாள் விழாவும் தனியே கொண்டாடப் பெற்றும், அந்நாட்களில் அவர்கள் இயற்றிய நூல்களுள் ஏதேனும் ஒன்று வெளியிடப் பெற்றும் வந்தன. அந்நினைவுநாள் நூல்நிலையத்தின் ஆண்டுவிழாவோடு இணைக்கப்பெற்று நிகழ்ந்து வருகிறது. இவ்வாறு இந்நிலையத்தின் மூலமாய் வெளிவந்துள்ள திரு பிள்ளையவர்களின் நூல்கள் அகிலாண்டநாயகி மாலை, சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பவை ஆகும். இவ்விழாக்களில் தலைவர்களாகவும், சொற்பொழிவாளர்களாகவும் கலந்துகொண்ட சான்றோர்களின் பெயர்களைக் கொண்ட அட்டவணை பிற்சேர்வாக அமைக்கப் பெற்றுள்ளது.

**12. ஐயரவர்களின் நூறாவது ஆண்டுவிழா:**

1956 ஆண்டு பிப்ரவரி மாதம் 18, 19, 20ஆம் தேதிகளில் ஸ்ரீ ஐயர் அவர்களின் நூறாவதாண்டு விழா சென்னையிலும், தமிழ் நாடெங்கணும், தமிழ் பரவியுள்ள பல பிற இடங்களிலும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இந்நூல் நிலையத்தின் சார்பில், சென்னை, கல்வி, நிதி அமைச்சர் கனம் சி.சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகவும், ஸ்ரீ வ.சோ.தியாகராஜ முதலியார் அவர்கள், ஸ்ரீ கி.வா.ஜகந்நாதன் அவர்கள் ஆகிய இருவரை அமைச்சர்களாகவும் கொண்ட ஒரு செயற்குழு இவ்விழாவைச் சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடிற்று. 18.2.55 அன்று அடையாறு, பிரம்ம ஞான சபையில் கனம் முதலமைச்சர் திரு கே.காமராஜ் அவர்களால் ஸ்ரீ ஐயரவர்கள் சம்பந்தமான அரிய பொருள்களமைந்த ஒரு பொருட்காட்சி திறக்கப்பட்டது. பேராசிரியர் திரு மு.வரதராசனார் தமிழ் ஆராய்ச்சி என்னும் பொருள்பற்றிப் பேருரை ஒன்று நிகழ்த்தினார்கள். கண்காட்சி அமைப்பதற்குப் பேருதவி புரிந்தவர்கள் ஸ்ரீ ஐயரவர்களுடைய பேரனார் ஸ்ரீ க சுப்பிரமணிய ஐயர் அவர்களும், வாகீச கலாநிதி ஸ்ரீ கி.வா.ஜகந்நாதன் அவர்களுமாவர். நகரிலுள்ள பல்லோர்க்கும் பயன்படும்படியாக அக்காட்சி 3 நாட்கள் திறந்திருந்தது வந்து கண்டு களித்தவர்களுள் மேன்மை தங்கிய சென்னைக் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களும், கனம் ஸ்ரீ இராசகோபாலாசாரியார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். 19-2-55 அன்று ஸ்ரீ ஐயரவர்களின் மாணவர் மாநாடு ஒன்று மயிலை பி.எஸ் ஹைஸ்கூலில் தர்மரக்ஷாமணி ஸ்ரீ கே.பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. பதின்மருக்கதிகமான ஐயரவர்களின் தமிழ் மாணவர்கள் அவர்களுடைய தமிழ்த் தொண்டினைப் பற்றிப் பேருரை நிகழ்த்தினார்கள். 20-2-55 அன்று சென்னை ராஜாஜி ஹாலில் மேன்மை தங்கிய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடந்தேறியது. தலைவர் டாக்டர் அருண்டேல் அவர்களின் படத்தைத் திறந்து வைத்து ஸ்ரீ ஐயரவர்களின் தொண்டினைப் பற்றி மிகவும் பாராட்டி, ஸ்ரீ ஐயரவர்களின் நினைவுச் சின்னமாக இந்நூல் நிலையம் செய்துவரும் தொண்டினைச் சிறப்பித்து அதற்கு வாழ்த்துக் கூறினார். ஸ்ரீ ஐயரவர்களின் நெருங்கின நண்பரும் சிறந்த தமிழறிஞருமான வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் படத்தைப் பேராசிரியர் திரு ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் திறந்து வைத்தார்கள். பேராசிரியர் திரு தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தமிழ் வளர்ச்சி என்னும் பொருள் பற்றியும் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் ஸ்ரீ ஐயரவர்களால் தமிழ் அடைந்த பெருமைகளைப் பற்றியும் மிகப் பாராட்டிப் பேசினார்கள். இவ்வாறு இந்நூறாவதாண்டு நிறைவுவிழா செவ்வனே நடைபெறுவதற்குப் பேருதவி புரிந்த பல சான்றோர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இந் நூல்நிலையம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

1991-92: 1992-1993 இவ்விரு ஆண்டுகளிலும், சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் உள்ள டாக்டர் ஐயரவர்கள் திருவுருவச் சிலைக்கு திரைப்பட இயக்குநர் திரு. **A. ஜகந்நாதன்** அவர்கள் ஐயரவர்கள் பிறந்தநாளில் மாலை அணிவித்துச் சிறப்பாக நடத்தினார்கள். அவருடைய தீவிர முயற்சியின் பயனாகத் தமிழக அரசு இப்பணியை ஏற்று 1993-1994; 1994-1995 ஆண்டுகளாக மாலை அணிவித்துப் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி வருகின்றது.

**13. நூல் நிலையத்தில் உள்ள உபகாரிகள் சிலரின் திருவுருவப் படங்கள்:**

1. டாக்டர் ஸ்ரீமத் ஐயரவர்கள்
2. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள்
3. திருமதி ருக்மிணி தேவியார் அவர்கள்
4. திரிசிரபுரம் மகாவித்துவான் திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்
5. ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
6. டாக்டர் அருண்டேல் அவர்கள்
7. வித்துவான் ஸ்ரீ தியாகராச செட்டியார் அவர்கள்
8. திரு கலியாண சுந்தரையர் அவர்கள்
9. டாக்டர் சி பி இராமசாமி ஐயர் அவர்கள்
10. திரு. கே.சங்கரமேனன் அவர்கள்
11. திரு. ஆர். விசுவநாதையரவர்கள்

பிக்ஷாண்டார் கோயில், இராஜகோபாலப்பிள்ளை அவர்கள் T.V. விசுவநாதையர் அவர்கள் ஹா.கி. வாலம் கிருஷ்ணசாமி அவர்கள்.

### 14. கண்காட்சிகள்:

ஐயரவர்களது வாழ்க்கை வரலாற்றையும், ஆராய்ச்சி முறைகளையும், பதிப்பிக்கும் முறைகளையும், அவருக்கு வந்த விருதுகள், கடிதங்கள் முதலியவற்றையும் பொதுமக்கள் காணும் வகையில் சில சமயங்களில் கண்காட்சிகள் அமைக்கப் பெற்றன.

1. 9-3-58 அன்று உயர்திரு கரு.முத்து.தியாகராச செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 15ஆவது ஆண்டு நிறைவுவிழா.

2. கலாக்ஷேத்திரத்தில் 27-12-60 முதல் 15 நாட்களுக்குத் திறந்து வைக்கப்பெற்ற ஒரு கண்காட்சி. இது கலாக்ஷேத்திரத்தின் வெள்ளிவிழாவை ஒட்டி நடந்தது. டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

3. எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் நடந்த தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் நிகழ்த்திய கண்காட்சியில் இந்நூல் நிலையம் பங்கு எடுத்துக் கொண்டது.

4. உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி 1.1.68 முதல் 12.1.68 வரை நடந்த கண்காட்சி பலவகையில் சிறப்புடையதாக அமைந்தது. அதன் திறப்பாளர் திரு நல்.முருகேச முதலியார் அவர்கள். தலைமை வகித்தவர் திரு நா.மகாலிங்கம் அவர்கள்.

### 15. நூல் வெளியீடுகள்:

மேலே சொன்ன குறிக்கோளுக்குரிய வேலைகள் நூல்நிலையத்தின் தொடக்கம் முதல் இடையறாமல் நடந்து கொண்டு வருகின்றன. ஐயரவர்கள் தம் வாழ்நாளில் பல நூல்களைப் பதிப்பித்தார்களேனும் வேறு பல நூல்களை மேலும் பதிப்பிக்க வேண்டும் என்ற விருப்பத்தால், அந்த முயற்சிக்குரிய பல முன்னேற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள் பாடபேதங்கள், ஒப்புமைகள், குறிப்புக்கள், உரைக்குறிப்புக்கள், சொல்லாராய்ச்சி, இலக்கண மேற்கோள், பொருட் குறிப்புக்கள், உரைகளில் மேற்கோளாக வந்த பகுதிகள் முதலியவற்றைப் பலவிடங்களில் குறித்து வைத்துள்ளார்கள். இவற்றைத் துணையாகக் கொண்டு இங்குள்ள சுவடிகளையும் ஒப்புநோக்கி இயன்றவரையில் ஐயரவர்கள் மேற்கொண்ட பதிப்பு முறையை அடியொற்றி 133 நூல்கள் இங்கிருந்து பிரசுரமாயிருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து பதிப்பிக்க உதவிய அன்பர்கள் பலரும் சிறந்த தமிழறிஞர்களும் ஸ்ரீ ஐயரவர்களிடம் நெருங்கிப் பழகி அவர்களுடைய பதிப்பு முறைகளை நன்கு அறிந்தவர்களுமான சான்றோர்களாவர். அவர்களின் உதவிக்கு நூல்நிலையம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

## ஏட்டுப் பிரதிகளின் அலங்கோலம்

**(புறநானூறு - முதற்பதிப்பின் முகவுரை)**

*உரையில்லாத மூலங்கள் எழுத்துஞ் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி, இவற்றுள் சில பாடல்களின் முன் திணை எழுதப்படாமலும், சிலவற்றின் பின் பாடினோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின் பின் இருவர் பெயருமே சிதைந்தும், சிலபாடல்கள் இரண்டிடத்து எழுதப்பட்டு இரண்டு எண்களை ஏற்றும், வேறு வேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டு பாடல்கள் ஒருங்கு எழுதப்பட்டு ஓரெண்ணை ஏற்றும், சில முதற் பாகங்கள் குறைந்தும், சில இடைப்பாகம் குறைந்தும், சில கடைப்பாகம் குறைந்தும், சில முற்றுமின்றியும், ஒரு பாடல்களின் அடிகளுள் ஒன்றும் சிலவும் வேறு பாடல்களின் அடிகளோடு கலந்தும், ஓரடியே ஒரு பாட்டுள் சிலவிடத்து வரப் பெற்றும், பொருளுண்மை காணாத வண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. இவற்றைப் பரிசோதித்து வருகையில், இந்நூலிலிருந்து வேறு நூல்களினுடைய பழைய உரைகளின் இடையிடையே உரையாசிரியர்களால் பூர்த்தியாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்த உதாரணங்கள், சிற்சில பாடல்களிலுள்ள வழுக்களை நீக்கிச் செவ்வை செய்து கொண்டு பொருளுண்மை காணுதற்கும், சிற்சில பாடல்களில் குறைந்த பாகங்களை நிரப்பிக் கொள்ளுதற்கும், பிறழந்து கிடக்கும் சில பாடல்களை ஒழுங்குபடுத்தி வரையறை செய்து கொள்ளுதற்கும் பெருந்துணையாக இருந்தன.*

**-ஐயரவர்கள்**

## கைம்மாறு என்னே

*நாடகத்தமிழுக்கு நாற்புறத்திலும் தடைகள் அமைக்கப் பட்டமையின் அஃது அழிநிலையடையத் தலைப்பட்டது. பண்டிதராயினார் கடிந்து நாடகத் தமிழைக் கைவிடவே, அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தினளவிலே நிற்கின்றது. அக்காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், கூத்தநூல் என்ற நாடகத் தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப் போய் ஒளித்தன? 'சிலப்பதிகாரம்' என்னும் நாடகக் காப்பியம் மட்டிலே தப்பித் தவறி வெளியேறி விட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டித சிகாமணி சாமிநாதையர்க்குத் தமிழ் உலகம் செய்யக் கடவ கைம்மாறு என்னே!*

**-வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்**
**(பரிதிமாற் கலைஞர்)**

## டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத் தொடக்கத்தில் இருந்த பொதுக்குழு உறுப்பினர்கள்

1. திருமதி ருக்மிணி தேவி
2. திரு டி.வி.விசுவநாதையர்
3. திரு கரு.முத்து.தியாகராச செட்டியார்
4. திரு என்.ஸ்ரீராம்
5. திரு கே.சங்கரமேனன்
6. திரு எஸ்.சச்சிதானந்தம் பிள்ளை
7. திரு என்.கோபால ஐயர்
8. திரு ராஜா ஸர்.முத்தையா செட்டியார்
9. திரு தர்மரக்ஷர்மணி கே.பாலசுப்பிரமணிய ஐயர்
10. திரு ஜி.முத்துசாமி பிள்ளை
11. திரு நல்.முருகேச முதலியார்
12. திரு வி.பி.வி.ராஜன்
13. திரு டி.எஸ்.நாகசுவாமி ஐயர்
14. திரு என்.சுப்பிரமணிய ஐயர்
15. திரு ஆலாலசுந்தரம் செட்டியார்
16. திரு ஏ.எம்.பரமசிவானந்தம்
17. திருமதி சௌந்தரம் கைலாசம்
18. திரு அனந்தநாராயண ஐயர்
19. திருமதி ஆனந்தி ராமச்சந்திரன்
20. திரு ஸி.டி.நரசிம்மன்
21. பேராசிரியர் திரு எம்.வரதராசனார்
22. திரு கி.வா.ஜகந்நாதன்
23. திரு கே.சுப்பிரமணிய ஐயர்
24. திரு ஆர்.விசுவநாதையர்
25. திரு நீ.கந்தசாமி பிள்ளை
26. திரு கே.சுப்பிரமணியம்
27. திரு நா.மகாலிங்கம்
28. திரு டி.எம்.கண்ணபிரான்

## நூல்நிலையத் தற்காலப் பொதுக்குழு உறுப்பினர்கள்

1. திரு. கே. சங்கரமேனன் (தலைவர்)
2. திரு. ரா. திருமலை
3. திரு. த.வி. மெய்கண்டார்
4. திரு. எல். ராமநாதன் (கௌரவப் பொருளாளர்)
5. திரு. த.வி. ராமநாதன்
6. திரு. ரா. நடராஜன்
7 திரு சு. கிருஷ்ண சந்த் சோர்டியா
8. திரு. சி.ரா. பட்டாபிராமன்
9. திரு. அ.மு. பரமசிவானந்தம்
10 திரு. சு. ஸ்ரீனிவாச ஐயர்
11. திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி
12. திரு. ரா. ராதாகிருஷ்ணன்
13. திரு. அ. வைத்தியநாத ஐயர்
14. திருமதி. சாரதா நடராஜன்
15. திரு. சு. வெங்கடகிருஷ்ணன்
16. திரு. த. துரைராஜன்
17. வித்வான். வி. சிவசுப்ரமணியம்
18. திரு. வி.ந. ஆறுமுக முதலியார்
19 திரு. அ.ஜகந்நாதன்
20. திரு. மு. சண்முகம் பிள்ளை
21. திரு. சு. பாலசாரநாதன்
22. திருமதி. ஆனந்தி ராமச்சந்திரன்
23. டாக்டர் ரா. நாகசாமி
24. திரு. சு. பாலசுப்ரமணியம்
25. திரு. குழ கதிரேசன்
26. திருமதி. ராஜேஸ்வரி நடராஜன்
27. திருமதி. கோமதி விஸ்வநாதன்
28. திரு. வி. சங்கரன்
29. திரு. எஸ். குகன்
30. டாக்டர். ம.அ.ம. ராமசுவாமி

## விழாக்களில் தலைமை தாங்கிய பெரியோர்கள் 1943 - 1995

1. திருவாளர் நீதிபதி என்.சந்திரசேகர ஐயர் அவர்கள்
2. திருவாளர் டி.ஸி.சீனிவாச ஐயங்காரவர்கள்
3. திருவாளர் திவான் பகதூர் டி.எம்.நாராயணசாமி பிள்ளை அவர்கள்
4. திருவாளர் நீதிபதி ஸி.என்.குப்புசாமி ஐயரவர்கள்
5. திருவாளர் எம்.பக்தவத்சலம் அவர்கள்
6. திருவாளர் நீ.கந்தசாமிப் பிள்ளையவர்கள்
7. திருவாளர் நீதிபதி ஏ.எஸ்.பி.ஐயரவர்கள்
8. திருவாளர் பேராசிரியர் கே.சாமிநாதன் அவர்கள்
9. திருவாளர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்கள்
10. திருவாளர் தலைமை நீதிபதி பி.வி.ராஜமன்னார் அவர்கள்
11. திருவாளர் ராஜா சர்.எம்.ஏ.முத்தையா செட்டியார் அவர்கள்
12. திருவாளர் ஸி.சுப்பிரமணியம் அவர்கள்
13. திருவாளர் ஸ்ரீ பிரகாசா (நூற்றாண்டு விழா) அவர்கள்
14. திருவாளர் கே.சந்தானம் அவர்கள்
15. திருவாளர் ஸர்.சி.பி.இராமசாமி ஐயரவர்கள்
16. திருவாளர் கரு.முத்து.தியாகராச செட்டியார் அவர்கள்
17. திருவாளர் ஏ. உத்தண்டராம பிள்ளை அவர்கள்
18. திருவாளர் கு.காமராஜ் அவர்கள்
19. திருவாளர் ஜஸ்டிஸ் எஸ்.கணபதியா பிள்ளை அவர்கள்
20. திருவாளர் ஜி.வேங்கடாசலபதி நாயுடு அவர்கள்
21. திருவாளர் ஸ்ரீமத் ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகிப் சத்ரபதி அவர்கள்
22. திருவாளர் ஸ்ரீலஸ்ரீ வித்வான் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள்
23. திருவாளர் தர்ம ரக்ஷாமணி கி.பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள்
24. திருவாளர் நீதிபதி பா.சா. கைலாசம் அவர்கள்
25. திருவாளர் வித்துவான் தண்டபாணி தேசிகர் அவர்கள்
26. திருவாளர் கே.சந்திரசேகரன் அவர்கள்
27. திருவாளர் நீதிபதி எம்.எம்.இஸ்மாயில் அவர்கள்
28. அமைச்சர் திரு. ஆர் எம். வீரப்பன் அவர்கள்
29. நிதி அமைச்சர் திரு. ஆர். நெடுஞ்செழியன் அவர்கள்

## உரை நிகழ்த்தியோர்
### *1943 - 95*

1. திருவாளர் நீதிபதி சீனிவாச ஐயங்கார் அவர்கள்
2. திருமதி ஆர்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்கள்
3. திருவாளர் பேராசிரியர் அ.சக்கரவர்த்தி நயினார் அவர்கள்
4. திருவாளர் டாக்டர் டி.எஸ்.திருமூர்த்தி அவர்கள்
5. திருவாளர் பி.ஸ்ரீ.ஆசார்யா அவர்கள்
6. திருவாளர் ராவ்பகதூர் கே.கோதண்டபாணி பிள்ளை அவர்கள்
7. திருவாளர் எஸ்.இராமஸ்வாமி நாயுடு அவர்கள்
8. திருவாளர் டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள்
9. திருமதி ஆர்.எஸ்.சுவர்ணாம்பாள் அவர்கள்
10. திருவாளர் ஜனாப்தாவுத்ஷா ஸாஹிப் பகதூர் அவர்கள்
11. திருவாளர் ஜனாப் எம்.எச்.நயினார் சாஹிப் அவர்கள்
12. திருவாளர் ஜனாப் மின்னா நூருத்தீன் ஸாகிப் பகதூர் அவர்கள்
13. திருவாளர் பேராசிரியர் மா.இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள்
14. திருவாளர் கே.ஆர்.அப்பளாச்சாரியார் அவர்கள்
15. திருவாளர் எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள்
16. திருவாளர் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள்
17. திருவாளர் எஸ்.சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்
18. திருவாளர் வி.எஸ்.தியாகராஜ முதலியார் அவர்கள்
19. திருவாளர் வித்துவான் தண்டபாணி தேசிகர் அவர்கள்
20. திருவாளர் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் அவர்கள்
21. திருவாளர் டாக்டர் மொ.அ.துரை அரங்கனார் அவர்கள்
22. திருவாளர் டாக்டர் ஏ.ஸி.செட்டியார் அவர்கள்
23. திருவாளர் சா.கணேசன் அவர்கள்
24. திருவாளர் ம.பொ.சிவஞான கிராமணி அவர்கள்
25. திருவாளர் பி.என்.அப்புஸ்வாமி ஐயர் அவர்கள்
26. திருவாளர் ச.சிவகுமாரன் அவர்கள்
27. திருவாளர் டாக்டர் சி.பி.இராமசாமி ஐயர் அவர்கள்
28. திருவாளர் டாக்டர் கே.எம்.ஜார்ஜ் அவர்கள்
29. திருவாளர் கி.வா ஜகந்நாதன் அவர்கள்
30. திருவாளர் நா.சுப்பிரமணியம் அவர்கள்
31. திருவாளர் பேராசிரியர் ஏ.எம்.பரமசிவானந்தம் அவர்கள்
32. திருவாளர் பேராசிரியர் குமரவேல் அவர்கள்
33. திருவாளர் பேராசிரியர் இராமகிருஷ்ணன் அவர்கள்
34. திருவாளர் பேராசிரியர் ஆர்.ஆர்.சுந்தரனார் அவர்கள்
35. திருவாளர் பேராசிரியர் கா.பெருமாள் அவர்கள்
36. திருவாளர் பேராசிரியர் கு.ஜகந்நாதாசாரியார் அவர்கள்

## எதிர்காலத் திட்டம்:

1943 ஆண்டு முதல் இன்றுவரை உள்ள காலத்தில் டாக்டர் ஐயரவர்கள் தமிழுலகில் தோன்றித் தமிழன்னைக்குப் புரிந்து வந்த மாபெரும் தொண்டுகளைப் பாதுகாக்கும் முறையில் இந்நூல் நிலையம் தன்னாலான பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது. அவர் தொகுத்த அரிய சுவடிகளை இராமபாணப் பூச்சிகளுக்கு இரையாகாமல் பாதுகாத்தும். அவர் பதிப்பிப்பதற்காக ஆராய்ந்து வைத்துள்ள நூல்களைப் பதிப்பித்துத் தமிழ் உலகத்திற்கு அளிக்கவும் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றது. ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்களில் உள்ள அருஞ்சொற்களைத் தொகுத்து விரிவான தமிழ் அகராதி ஒன்று வெளியிட முயற்சி செய்து வருகின்றது. போதிய பொருளாதாரம் இல்லாமையால் ஆமைவேகத்தில் செய்யவேண்டியுள்ளது.

நூல் நிலையத்தில் 2403 ஓலைச் சுவடிகளும், கிட்டத்தட்ட 700 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. சுவடிகளின் விளக்கமும், கையெழுத்துப் பிரதிகளின் விளக்கமும் ஆறுதொகுதிகளில் வெளியிடப் பெற்றுள்ளன. 21623 நூல்கள் நூல்நிலையத்தில் உள்ளன. அவற்றில் பழைய பதிப்புக்களும், புதிய பதிப்புக்களும் உள்ளன. 272 ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் மைக்ரோபிலிம் செய்யப்பட்டுள்ளன. ஐயரவர்களுக்கு வந்த கடிதங்களும் பிற குறிப்புகளும் 24 தொகுதிகளில் பிரதி செய்யப்பட்டுள்ளன. ஐயரவர்கள் தொகுத்து வைத்துள்ளவற்றில் இருந்து இன்றுவரை 133 நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றில் ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களின் மறுபதிப்புக்களும் அடங்கும்.

இந்நூல் நிலையத்திலுள்ள கருப்பொருள்கள் பலவகையான ஆராய்ச்சியாளர்களுக்கும் வெளியீடுகளுக்கும் பயன்படத்தக்கவை. ஐயரவர்கள் பலகாலமாகக் கண்டும் கேட்டும் ஆராய்ந்தும் அனுபவித்தும் எழுதிய அரிய குறிப்புக்களும், தொகுத்த சுவடிகளும் படி எடுக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அவை பெரிய தங்கச் சுரங்கத்தைப் போன்றவை. அவற்றின் துணையால் தமிழ்மொழிக்கும், தமிழ் வரலாற்றுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழ்ச் சமயத்துக்கும் பயனளிக்கும் பல அரிய பெரிய செயல்களைச் செய்யலாம்.

ஐயரவர்களுக்குச் சைவத்திருமுறைகளில் மிக்க ஈடுபாடு உண்டு. அதனால் திருமுறைகளைப் பல கோணங்களில் ஆராய்ந்து பலவகைக் குறிப்புக்களை எழுதிவைத்திருக்கிறார்கள். தலங்கள் பண்கள், வழக்குகள் ஆகமக் கருத்துகள் முதலிய பல துறைகளில் அவை இருக்கின்றன. அவற்றை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு மேலும் அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சி முறைகளையும், நவீன முறைகளையும் மேற்கொண்டு முதல் ஏழு திருமுறைகளை உரைப்பகுதி, ஆராய்ச்சிப்பகுதி, பாடபேதம், அகராதி முதலிய அங்கங்களுடன் பதிப்பிக்க வேண்டும் என்ற முயற்சியை இந்நூல் நிலையம்

மேற்கொண்டுள்ளது. இப்பணி நன்கு நிறைவேறி னால் ஐயரவர்களுடைய ஆன்மா சாந்தி அடையும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இப்பணி நன்குநிறைவேற கிட்டத்தட்ட ஐந்து லட்சம் ரூபாய் வேண்டும் மத்திய அரசும், மாநில அரசும், செல்வந்தர்களும் பொருளுதவி செய்யவேண்டும் என்று நூல் நிலையம் கேட்டுக் கொள்கின்றது.

1981 ஆண்டு ஜனவரித் திங்கள் மதுரையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் நூல்நிலையச் சார்பாக ஆராய்ச்சித்துறை இயக்குநராக இருந்த திரு கி.வா. ஜகந்நாதன் அவர்கள் பங்கு கொண்டார் கள் காமராசர் பல்கலைக்கழகத்தில் நடந்த புத்தகக் கண்காட்சியில் நூல்நிலைய வெளியீடுகள் வைக்கப் பட்டன. நூல்நிலையத்திலுள்ள அரிய சுவடிகள் பொது நூலகருக்கும், தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநருக்கும் அனுப்பப் பெற்று அவை மாநாட் டினை ஒட்டி நடந்த கண்காட்சியில் உரிய இடங்க ளில் வைக்கப்பெற்றுப் பலருடைய பாராட்டுதல்க ளையும் பெற்றன. டாக்டர் ஐயரவர்களின் உருவச் சிலை மாநாட்டினையொட்டி தமிழ்நாடு அரசாங்கத் தாரால் மதுரை மாநகரில் தக்க இடத்தில் திறக்கப் பட்டது. மாநாட்டினை ஒட்டி The Story of My life என்ற நூல் வெளியிடப்பெற்றது. தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனமும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும், நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று மாநாட்டினையொட்டி வெளியிட்டன. மாநாட்டி னையொட்டி வெளிவந்த நூல்கள். (1) சங்கர மூர்த்திக்கோவை, (2) திருவேங்கடநாதன் வண்டு விடுதூது. (3) கீழ்வேளூர் உலா, (4) குறவஞ்சி, (5) தந்திவனப்புராணம், (6) பிரபந்ததீபம், (7) குவலயானந்தம், (8) நூற்றெட்டுதிருப்பதிஅந் தாதி, (9) பிரபந்தத்திரட்டு, (10) பணவிடுதூது. கையெழுத்துப் பிரதிகளின் விளக்கம் 5-ஆம் பாகம் 1977-லும், சுவடிகளின் விளக்கம் ஆறாம்பாகம் 1977-லும் மத்திய அரசாங்க மான்யத் தொகை கொண்டு வெளியிடப்பெற்றன. மைக்ரோபிலிம் செய்யப்பட்ட ஏட்டுச் சுவடிகளின் எண்ணிக்கை 156. கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை 73. நன்கொடையின் மூலம் வெளியிடப்பட்ட நூல்கள் பத்துப்பாட்டு: - இந்நூலைப் பதிப்பிக்க தேவி கல்வி அறநிலையத் தலைவர் திரு. அழ.சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் ரூ.5000/- நன்கொ டையாகக் கொடுத்தார்கள்.

வாட்போக்கிக் கலம்பகம் வெளியிட ஸ்ரீமேல் மூகம் பன்னிரண்டார் காலசந்திக் கட்டளையினர் நிதியுதவி அளித்தனர்.

கயற்கண்ணிமாலை, திருமயிலையமக அந்தாதி, குலசையுலா ப்திப்பிக்க மயிலை ஆரியமத சபையி னர் உதவி செய்தனர்.

The Story of my life; The story of udayana இவ்விரண்டு நூல்களும் மத்திய அரசாங்க மான்யத் தைக் கொண்டு வெளியிடப்பெற்றன.

திருக்குறள் (Sanskrit) மத்தியஅரசாங்க நிதி உதவியில் வெளியிடப் பெற்றது.

மகாபாரதச் சுருக்கம் பத்து தொகுதிகள், நற் றிணை, அகநானூறு, காஞ்சிப்புராணம், சீவலமா றன்கதை, சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ், குமாரலிங்கர் குறவஞ்சி, தனிப்பாடல்கள், திருத்த லங்கள் வரலாறு, குருபரம்பரா சர்வார்த்தசார பூஷணம், வடமலைநிகண்டு, அகராதி நிகண்டு, வாகட அகராதி முதலிய நூல்கள் மத்திய அரசு அளித்த மான்யத்தொகை உதவியுடன் பதிப்பிக்கப் பெற்றன.

நூல்நிலையத்தில் அச்சில் வராத தமிழ்நூல் அறி முகம் 24-6-79ல் தொடங்கப் பெற்று 31-8-80 வரை நடைபெற்றது. 15 நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன பல தமிழ் அறிஞர்களால்.

**P.** கிருஷ்ணசாமி அவர்கள் வாலம் அம்மையார் பெயரில் ரூபாய் 24000/= என்டோமெண்ட் செய் துள்ளார்.

அத்யக்ஷகர் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அவர்கள் நன்கொடையாக அளித்த மூலதனத்தின் வருவாயில் 1-9-80 முதல் பதிப்புத்துறை ஆராய்ச்சித்துறை இயங்கி வருகிறது.

ஐயரவர்கள் குறித்து வைத்துள்ள பலவிஷயங்க ளையும், அவருக்கு வந்த கடிதங்களையும் பிரதி செய்து 26 நோட்புத்தகங்களாக, தமிழ்க் கருவூலம் என்ற பெயரில் வைத்திருக்கின்றோம். அவற்றிற்கு அகரவரிசைப் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது. நூல்நிலையத்திலுள்ள கலைமகள், செந்தமிழ், கலா நிலையம் போன்ற பத்திரிகைகளுக்கும் அகர வரி சைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் நிலையத்திலுள்ள எல்லாவற்றையும் பயன்படுத்தி வெளியிட பல லட்சக்கணக்கான ரூபாய் வேண்டும். ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்கள் அனைத்தையும் வெளியிட்டுத் தமிழ் உல கிற்கு அளிக்கவேண்டும் என்ற திட்டத்துடன் நூல்நி லையம் பணி ஆற்றிவருகின்றது. ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்களைக் கொண்டு ஒப்பற்ற ''தமிழ் அகராதி'' ஒன்று வெளியிட நூல்நிலையம் முயற்சி எடுத்து பணியாற்றி வருகின்றது.

1994-ல் தஞ்சையில் நடந்த உலகத்தமிழ் மாநாட் டில் நூல்நிலையம் பங்கு ஏற்றது. தமிழ் வளர்ச்சிக் துறை நன்னூல் மயிலை நாதர் உரை, கலைசைக் கோவை, திருச்சிற்றம்பலக் கோவையார் (மணக் குடவர் உரை) என்ற மூன்று நூல்களை வெளியிடப் பொருளுதவி செய்தது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கருவூலம் நம் தமிழகத்தில் இருப்பது தமிழ் மக்கள் செய்த தவப்பேறாகும். இந்நூல்நிலைய வளர்ச்சிக்கு அகில உலகமும் ஆக்கம் தந்து ஊக்குவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நூல்நிலையப்பணிவளர எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

# "தமிழ்த் தாத்தா"

**A. ஜகந்நாதன் B.A.,**
திரைப்பட இயக்குநர்

''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்று மனித குலத்திற்கு இலக்கணம் வகுத்தவர் தொல் காப்பியா.

**''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்''**

என்று தமிழ்மறை எழுதிய திருவள்ளுவப் பெருந் தகை கூறியிருக்கிறார்.

**''திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்குடை போன்றிவ் அங்கண் உலகளித்த லான்''**

என்று வெண்மதிக்கு வணக்கம் தெரிவித்தார் இளங் கோவடிகள்.

இந்தக் கவிஞர் பெருமக்களைத் தொடர்ந்து,

**''மூவா முதலா உலகம்''**

என்று சீவக சிந்தாமணியிலே திருத்தக்கத் தேவரும்,

**''உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்''**

என்று கம்பராமாயணத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்ப ரும்,

**''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்''**

என்று பெரிய புராணத்திலே சேக்கிழார் பெருமா னும், கூறியிருக்கின்றார்கள்.

''உலகம்'' எனும் சொல்லை, வழிவழியாகத் தலைமுறை தலைமுறையாகக் கையாண்டிருக்கிறார் கள். ஏன்? எதற்காக?

உலகம் உய்ய வேண்டுமென்பதற்காக உலகத்தார் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக, ஆயிரக்க ணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, உலகத்தைப் பற்றிச் சிந்தித்து எழுதியவர்கள் தமிழ்க் கவிஞர்கள் மட்டும்தான், ஆமாம்! உலகத்திலேயே தமிழ்க் கவிஞர்கள் மட்டும்தான் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

மனிதன் என்று சிந்திக்கத் தொடங்கினானோ, அன்றுமுதல் இந்தச் சிந்தனைகள் வெவ்வேறு வடிவங்க ளாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. சுய சிந்தனையா கத் துவங்கி, சமுதாயச் சிந்தனையாக வளர்ந்து, உலகச் சிந்தனையாக மலர்ந்து ஒளி வீசியது. அப்படி மலர்ந்த சிந்தனையை எப்படிச் சேமித்து வைப்பது? அப்படிச்சேமித்த சிந்தனையை வருங் கால வழித்தோன்றல்களுக்கு எப்படி வாரி வழங்கு வது? - என்ற கேள்விக் கணைகள் எழுந்த போதுதான், பனை ஓலைச் சுவடி பதிலாகக் கிடைத்தது.

அந்த ஓலைச் சுவடிகளிலே தன் எண்ண ஓவியங் களை எழுதி வடித்தான் அன்றைய 'தமிழன்'. பனை ஓலைகளிலே சிந்தனைக் கருவூலங்களைத் தேக்கி வைக்கலாம் என்று எந்தத் தமிழன் கண்டு பிடித் தானோ, அந்தத் தமிழன்தான் இந்த உலகத்தில் தோன்றிய முதல் அறிஞன் என்பது என் கருத்து.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய கவி ஞரான தொல்காப்பியர் முதலாக, கடந்த நூற்றாண் டிலே காலமான தமிழ்க்கடல் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஈறாக, எத்தனையோ கவிஞர் பெருமக்கள் தமிழிலே எண்ணற்ற நூல் களை எழுதியிருக்கிறார்கள். அத்தனையும் ஓலைச் சுவடிகளில்தான் எழுதப்பட்டன.

அந்த ஓலைச் சுவடிகளைத் தேடித்தேடி - ஊர் ஊராக - கிராமம் கிராமமாக - சுட்டெரிக்கும் வெய்யிலிலும் - சுடுமணற் பரப்பிலும் - அலைந்து திரிந்து, அங்கமெல்லாம் நோக அல்லும் பகலும் பாடுபட்டு, செந்தமிழ்த் தாயின் கருவூலங்களைச் செல்லரித்துப் போகாமல் காப்பாற்றினான் ஒரு ஒப்பற்ற மனிதன். பனை ஓலைகளிலே இருந்த அந்தப் பைந்தமிழ்க் காவியங்களை - பொலிவுறும் புத்தகங்களாக மாற்றி, நம் கைகளிலே நர்த்தனமாட விட்ட அந்த உத்தமன்தான் 'தமிழ்த் தாத்தா' டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள்.

தஞ்சை மாவட்டத்திலே சூரியமூலை என்னும் சிற்றூரிலே, கி.பி.1855ம் ஆண்டு, பிப்ரவரித் திங் கள், 19ம் நாள் சாமிநாதன் பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் வேங்கட சுப்பிரமணிய ஐயர். ஆனால் அப்பெயர் மருவி, வேங்கட சுப்பையர் என்றே அழைக்கப்பட்டார்.

ஐயிரு திங்கள் சுமந்து பெற்ற தாயார் பெயர் சரஸ்வதி. மானிடப் பிறவியான சரஸ்வதி என்னும் மங்கை நல்லாளுக்கு மகனாகப் பிறந்தாலும், பிற்கா லத்தில் அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை எண்ணும்போது, கலைத்தாய் சரஸ்வதிதான் அந்த மகானை - மகனாக ஈன்றுபுறந் தந்தாளோ என்று எண்ணி எண்ணி மகிழத் தோன்றுகிறது.

தாயின் ஊரான சூரிய மூலையில் பிறந்தாலும், தந்தையின் ஊரான உத்தமதானபுரத்தில்தான்

வளர்ந்தார். அதனால்தான் அவர் பிற்காலத்தில் உ.வே.சாமிநாதய்யர் என்று அழைக்கப்பட்டார்

சின்னஞ் சிறுவனான சாமிநாதன், ஆரம்பத்தில் அரியிலூர்ச் சடகோப ஐயங்காரிடமும், அதைய டுத்து, செங்கணம் சின்னப் பண்ணை விருத்தாசல ரெட்டியாரிடமும் - தமிழ் இலக்கண இலக்கியங்க ளைக் கற்றார்.

பதினான்காம் வயதிலேயே மாளாபுரம் என்னும் ஊரைச் சேர்ந்த மதுராம்பிகா என்ற மங்கையை மணந்தார். அப்போது மணமகளின் வயது எட்டு.

'ஓதற் பிரிவு' என்று பழந்தமிழ் இலக்கியங்க ளிலே கூறியதற்கொப்ப, சாமிநாதன் மனைவியைப் பிரிந்து, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் மாணவனாகச் சேர்ந்தார். அவரிடம் இவர் ஆறு ஆண்டுகள்தான் பைந்தமிழைப் பயின் றார். ஆனால் அந்த ஆறு ஆண்டுகளிலேயே, சாமிநாதனின் உள்ளத்திலே - உடலிலே - சிந்தை யிலே - செங்குருதியிலே கூடச் செந்தமிழை ஊட்டி வளர்த்தார் -

**முத்தமிழ் வித்தகன் என்றும்**
**தமிழ்க் கடல் என்றும்**
**கலியுகக் காளமேகம் என்றும்**

போற்றிப் புகழப்பட்டவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

இந்த நுண்மாண் நுழைபுலம் படைத்த ஆசிரியப் பெருந்தகை, இறைவனின் பொன்னடி சேர்ந்தபின், மாணவராக இருந்த சாமிநாதன், திருவாவடுதுறை மடத்திலே ஆசிரியராகப் பதவி பெற்றார்.

அப்போது, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மற்றொரு மாணவரான தியாகராச செட்டியார், கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூ ரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந் தார் அவருடைய பணிக்காலம் முடிந்து ஓய்வூதி யம் பெறவேண்டிய தருணம் வந்தது. தமக்குப் பதிலாகத் தக்கதோர் ஆசிரியரை நியமிக்க வேண் டுமே என்ற கடப்பாடு காரணமாக, தியாகராச செட்டியார் திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதா னம் சுப்ரமணிய தேசிகர் அவர்களைச் சந்தித்து, ஒரு பொய் சொல்லி - ஆம் -

**''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கு மெனின்''.**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக் கேற்ப, தம் தாய்க்குத் திதி என்று ஒரு பொய் சொல்லி, மடத்திலிருந்து சாமிநாதனை அழைத்துச் சென்று, கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் பதவியில் அமர்த்தினார்.

அப்போதுதான்

**''பொழுது விடிந்ததுஎன் உள்ளமென் கமலம் பூத்தது பொன்னொளி பொங்கியது எங்கும்''.**

என்று வள்ளலார் பாடிய வரிகளைத் தமிழ்த் தாயே பாடியது போன்ற நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

சேலம் ராமசாமி முதலியார் என்ற பெருமகனார் கும்பகோணத்தில் நீதிபதியாக இருந்தார். அந்தச் செல்வச் சீமானைச் ச[illegible]விக் கோமானைத் திருவாவ டுதுறை ம[illegible]த்தின் [illegible]ர்பாகத் தமிழாசிரியர் சாமிநா தையர் சந்தித்[illegible].

தமிழாசிரியர் கற்ற நூல்களையெல்லாம் கேட்ட றிந்தார் நீதிபதி. இறுதியில் இந்தத் தமிழாசிரியர் கேட்டறியாத நூல் ஒன்றின் ஓலைச் சுவடியை அவரிடம் கொடுத்தார் அந்த நீதிபதி - அதுதான் ஜீவக சிந்தாமணி.

திருத்தக்கத் தேவர் எழுதிய அந்த நூல் ஒரு சமண நூல். சைவ மடத்திலே பெரும் பொழுதைக் கழித்த சாமிநாதஐயருக்கு, சமணமத நூலைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்றாலும், தெரிந்து கொள் வதற்காக ஓயாது பாடுபட்டார்.

மூச்சடக்கிக் கடலில் மூழ்கி எழுந்தால்தானே முத்து கிடைக்கும். அதனால் அவர் சமண மதத் தைச் சார்ந்த சந்திரநாக[illegible] செட்டியாரையும், அவ ரது உறவினரான தரணி செட்டியாரின் தமக்கையா ரையும் சந்தித்து, சிந்தாமணியில் தோன்றிய சந்தே கங்களுக்கெல்லாம் விளக்கம் கேட்டறிந்தார்.

பல நூல்களைக் கற்றறிந்த பெரும் புலவராக இருந்தும், அவர் கேள்வி கேட்ட பாங்கறிந்து, அவருக்குப் 'பவ்ய ஜீவன்' என்னும் பட்டத்தை வழங்கினார் தமக்கையார்.

தமிழ்ப் பேராசிரியர் சாமிநாதையர், தம் வாழ் நாளில் பெற்ற முதற்பட்டம் 'பவ்ய ஜீவன்' என்பது தான்.

''ஜீவக சிந்தாமணி'' நூலைப் படித்துப் பொருள் கூறினார் பவ்ய ஜீவன் சாமிநாதையர். அதுகேட்டு மகிழ்ந்த நீதிபதி ராமசாமி முதலியார்.

''இந்த நூலை நீங்களே அச்சிட்டு, தமிழ்த் தாயின் திருவடிகளிலே புத்தகமாக அர்ப்பணியுங்கள்''; என்று அன்புடன் கூறி, அதற்கான பொருளுதவியும் செய்தார்.

1887ம் ஆண்டு, ஜீவக சிந்தாமணி நூல் தமிழ் கூறு நல்லுலகமெல்லாம் புத்தகமாகப் பவனி வந் தது. எங்கேயோ உறங்கிக் கொண்டிருந்த ஒரு நூல், இப்போது எல்லாருடைய கரங்களிலும் சிந்து பாடிக் கொண்டிருந்தது. படித்த புலவர் பெருமக்களெல்

லாம் தமிழ்ப் பேராசிரியர் உ.வே.சாமிநாதையர் அவர்களை வானளாவப் புகழ்ந்தார்கள்.

''தமிழ் மொழியிலே ஐம்பெருங் காப்பியங்கள் உண்டு, அவைகளிலே ஜீவக சிந்தாமணியும் ஒன்று'' என்பது அப்போதுதான் அனைவருக்கும் தெரிந்தது.

''ஏனைய காப்பியங்களையும் தேடி கண்டுபிடிப் பேன். ஓலைச் சுவடிகளாக எங்கெங்கோ ஒளிந்து கொண்டிருக்கும் அந்தக் காப்பியங்களைத் - தமிழ்த் தாயின் கருவூலங்களை - புலவர் பெருமக்கள் உருவாக்கிய பெட்டகங்களை - எப்பாடுபட்டாவது கண்டுபிடித்து, அச்சேற்றி, புத்தகங்களாக மாற்றி, தமிழத் தாயின் காலடிகளிலே காணிக்கையாக்கு வேன்'' என்று வீர சபதம் எடுத்தார் குடந்தை நகரத்துக் கும்ப முனி.

ஜீவக சிந்தாமணியின் உரையாசிரியர் நச்சினார்க் கினியர் - எண்ணற்ற தமிழ்ப் புலவர்களின் எழுத் தோவியங்களையெல்லாம் தம் சிந்தையெனும் சிறையிலே பூட்டி வைத்த பெரும்புலவர் நச்சினார்க் கினியர் - முன்னோராகிய முதுபெருங் கவிஞர்கள் உரைத்த மூதுரைகளை எல்லாம், தம் மனம் எனும் கோட்டையில் போட்டுக் கட்டிக் காத்தவர் நச்சி னார்க்கினியர்,

**'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியன்'**

என்னும் புகழுரையைப் பெற்றவர்.

அந்த நச்சினார்க்கினியர் என்னும் நாமகள் பெற்ற அருந்தவப் புதல்வர், ஜீவக சிந்தாமணிக்கு உரை எழுதும்போது, ஆங்காங்கே ''என்றார் பிற ரும்'' என்று குறிப்பிட்டிருந்தார். நூலாசிரியர் திருத்தக்கத் தேவரின் கருத்துக்களைப் போன்று, பிற நூல்களில் பிறபுலவர்கள் கருத்துத் தெரிவித்த தைத்தான் ''என்றார் பிறரும்'' என நச்சினார்க்கினி யர் சுட்டிக் காட்டினார்.

''என்றார் பிறரும்'' என்னும் இரு வார்த்தைகள் தான் உத்தமதான புரத்துச் செம்மலின் இரு கண்கள் வழியாகப் புகுந்து, அவருடைய மனம், சிந்தை என்னும் இரு புலன்களைத் தட்டி எழுப்பின.

**அந்தப் பிறர் யார்?**
**அவர்கள் எழுதிய நூல்கள் யாவை?**

என்று ஓயாத கேள்விக் கணைகளைத் தொடுத் தன. அதன் விளைவாக - அப்போதே புறப்பட்டார் திருநெல்வேலிச் சீமைக்கு. ஆழ்வார் திருநகரி என்னும் ஊருக்குச் சென்று, அங்கே இலட்சுமணக் கவிராயர் என்னும் பெருந்தகையாளரைச் சந்தித்துப் ''பத்துப்பாட்டு'' என்னும் நூலைத் தேடி வந்திருப்ப தாகக் கூறினார்.

அவரது இல்லத்தில் எத்தனையோ ஓலைச் சுவடி கள் இருந்தன. அத்தனையும் தேடிப் பார்த்தார் ஆனால் ''பத்துப்பாட்டு'' மட்டும் அகப்படவே யில்லை.

அப்போது இலட்சுமணக் கவிராயர், ''என் வேலைக்காரன் சில ஓலைச் சுவடிகளை எடுத்துப் போய் என் மாமனாரிடம் கொடுத்துவிட்டான் ஒருவேளை நீங்கள் தேடிவந்த நூல் அவரிடம் இருக்கலாம்'' என்றார்.

''வாருங்கள் போய்த் தேடுவோம்''

''நான் அங்கே வர இயலாது''

''ஏன்?''

''என் மாமனார் வீட்டு வாசற்படியை மிதிப்ப தில்லை என்று நான் சத்தியம் செய்திருக்கிறேன்.''

''அப்படியானால் நான் மட்டும் போய்ப் பார்க்கி றேன்.''

''வேண்டாம்''

''ஏன்?''

''தமிழறிஞர்களை மதிக்கத் தெரியாதவர் அவர் - உங்களை அவமானப்படுத்தி விடுவார்.''

''இதற்கு வேறு வழி''

''இன்னும் ஒரு நாள் பொறுங்கள்''

உ.வே.சா. மிக்க சோர்வோடு ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். இரவு நேரம் - நிலா வெளிச்சம் - அப்போது இலட்சுமணக் கவிராயர் - மேல்துண்டில் எதையோ சுற்றி எடுத் துக்கொண்டு ஓடோடி வருகிறார்.

அருகே வந்ததும், கவிராயர் மேல்துண்டை விரித்தார். உள்ளே இருந்தது ஓலைச் சுவடிக் கட்டு.

அந்த ஓலைச் சுவடிக்கட்டை நீட்டி, ''நீங்கள் தேடிவந்த நூல் இதுதானா பாருங்கள்'' என்றார் கவிராயர்.

ஓலைச் சுவடிகளை வாங்கியதும், விளக்கு வெளிச்சத்தைக்கூட நாடிப் போகாமல், நிலா வெளிச்சத்திலேயே பிரித்துப் பார்க்கிறார் சாமிநா தய்யர்.

நக்கீரர் எழுதிய 'திருமுருகாற்றுப்படை முதலில் இருக்கிறது. தொடர்ந்து பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை இருக் கின்றன. பிறகு பார்க்கிறார். 'முல்லைப்பாட்டு' மேலே பார்க்கிறார் நிலா - கைகளிலே பார்க்கிறார் முல்லைப்பாட்டு - உடனே -

''நிலவில் மலர்ந்த முல்லையோ'' என்று ஆடுகிறார் - பாடுகிறார் லட்சுமணக் கவிராயரை அப்படியே கட்டியணைத்து,

''இந்த ஓலைச் சுவடிகள் எப்படிக் கிடைத்தன?'' என்று கேட்கிறார்.

''என் மாமனார் வீட்டில் போய்த் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தேன்'' என்று பதிலளித்தார் கவிராயர்.

''நீங்கள்தான் அவர் வீட்டு வாசற்படியை மிதிப்பதில்லை என்று சத்தியம் செய்திருப்பதாகக் கூறினீர்களே?''

''ஆமாம் சத்தியம் செய்தது உண்மைதான் - ஆனால் தமிழுக்காக நான் என் மானத்தை விற்றுவிட்டேன்.''

அதுகேட்டுச் சிலைபோல் நின்றார் சாமிநாதய்யர். செய்வதறியாது, பேசுவதறியாது கண்ணீரை நன்றிக் கடனாகச் செலுத்திவிட்டு, ஓலைச் சுவடிகளுடன் ஊர் திரும்பினார்.

1889 ஆண்டு ''பத்துப் பாட்டு'' நூல் அச்சிட்டு வெளியாகியது. படித்தவர்கள் எல்லாம் திகைத்தார்கள் - மகிழ்ச்சியால் திளைத்தார்கள்.

ஏன்?

''தமிழ்நாட்டின் சரித்திரம் கிடைத்தது -

பத்துப் பாட்டு நூல் மூலமாக -

பதிப்பித்த உ.வே.சாமிநாதய்யருக்குப் பாராட்டுக்கள்'' என்று பத்திரிகைகள் பாராட்டி மகிழ்ந்தன.

அந்தப் பத்துப் பாட்டிலே ஒரு பாட்டு ''பட்டினப் பாலை'' கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர் பெருந்தகை எழுதியது. பட்டினப்பாலையின் மூலமாகப் பழந்தமிழ் மக்கள் ரோமானியர்களுடனும், அராபியர்களுடனும் கப்பல் வாணிகம் நடத்தினார்கள். காவிரிப் பூம்பட்டினம் என்னும் துறைமுக வாயிலாக என்ற செய்தி அன்றுதான் அனைவருக்கும் தெரிந்தது. தமிழ்த் திருநாடே திருவிழாக் கோலம் பூண்டது.

ராவ் பகதூர் சின்னசாமிப் பிள்ளை என்னும் பாலக்காட்டுப் பெருமகனார் இந்து நாளிதழில் - THE HINDU

''HISTORIC ACHIEVEMENT BY U.V. SWAMINATHA IYER''

என்று புகழாரம் சூட்டினார்.

கண்டுபிடித்தது என்னவோ ஒரு ஓலைச் சுவடி தான் -

அச்சிட்டது என்னவோ ஒரு புத்தகம் தான் -

ஆனால் - அந்த ஒரேயொரு ஓலைச்சுவடி -

பண்டைத் தமிழகத்தின் -

வரலாற்றை - வாணிபத்தை -

பண்பாட்டை - பைந்தமிழர் நாகரிகத்தை -

அரசர் பெருமையை - அங்காடிச் சிறப்பை

புலவர் திறனை - பரிசில் முறையை

எல்லாம் பறை சாற்றின.

பத்துப்பாட்டு நூலைத் தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழர்கள் மட்டும்தானா படித்து மகிழ்ந்தார்கள் - இந்தப் பாரே படித்து மகிழ்ந்தது.

பிரான்சு நாட்டுத் தலைநகரான பாரிஸ் நகரில் வாழ்ந்த ஜூலியன் வின்ஸன் -

இங்கிலாந்து நாட்டுத் தலைநகரான லண்டன் மாநகரில் வாழ்ந்த லார்டு போப் போன்ற மேல் நாட்டு மேதைகளும் படித்து உ.வே.சாமிநாதய்யருக்குப் பாராட்டுக். கடிதங்கள் எழுதினார்கள்.

பத்துப் பாட்டுக்குக் கடல் கடந்து வந்த பாராட்டுரைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று, கொழும்பு நகரக் கோமான் குமாரசாமி முதலியார் எழுதியது

''பத்துப்பாட்டு நூலை அச்சிட்டதுபோல இளங் கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் என்னும் காவியத்தையும் தேடிக் கண்டுபிடித்து அச்சிடுங்கள். அதற்காகும் செலவை நானே அனுப்பி வைக்கிறேன்.

இப்படி எழுதியிருந்தார் குமாரசாமி முதலியார் அப்போது சிலப்பதிகாரம் என்ற பெயர்கூட நாட்டு மக்களுக்குத் தெரியாது. தெரிந்த சிலரோ அதைச் 'சிறப்பதிகாரம்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஆறுமுக மங்கலம் என்றும், பெருங்குளம் என்றும், செங்கோல் மடம் என்றும் எங்கெங்கோ சிலப்பதிகாரத்தைத் தேடியலைந்தார் சாமிநாதச் செம்மல். இறுதியில் குன்றக்குடி மடத்திலே சிலப்பதிகாரம் ''மூலம்'' மட்டும் கிடைத்தது. அதுகண்டு மகிழ்ந்த அவர், 'இது எங்கே கிடைத்தது?' என்று கேட்டார். ''முதலைப்பட்டி'' என்னும் கிராமத்தில் என்றார் ஒருவர்.

'முதலைப்பட்டி' என்ற பெயரில் ஒரு கிராமம் இருக்கிறதா என்று ஆய்வு நடத்தியபோதுதான் அது 'மிதிலைப்பட்டி' என்று தெரியவந்தது அவருக்கு. உடனே வாயுவேகம், மனோவேகம் என்று சொல்வதுபோல அத்தனை வேகமாக அந்தக் கிராமத்தை அடைந்தார்.

அங்கே -

தமிழைத் தம் உயிரினும் மேலாகக் கருதி - தமிழ்ச் சுவடிகளைத் தம் உடமையிலும் மேலாகக் கருதிப் போற்றிப் பாதுகாத்த அழகிய சிற்றம்பலக்

கவிராயர் என்னும் புலவர் பெருமானைச் சாமிநாதையர் சந்தித்தார்.

பத்துப் பாட்டைப் பதிப்பித்தவர் என்றறிந்ததும் ஐயரவர்களை அப்படியே ஆரத்தழுவி வரவேற்றார் கவிராயர்.

இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் என்னும் ஒப்பற்ற காவியத்தின் ஓலைச் சுவடிகளை அவரிடம் ஒப்படைத்தார் அழகிய சிற்றம்பலக் கவிராயர்.

ஓலைச் சுவடிகளைப் பிரித்துப் பார்த்தார் - அந்த ஓயாத நடையுடையான், அவ்வளவுதான் - அப்படியே உள்ளம் மலர்ந்தது, உடல் சிலிர்த்தது - உவகை வெள்ளம் அவரது ஒவ்வொரு உயிர் அணுவிலும் ஓடியது. ஏன்?

அந்த ஓலைச் சுவடிகளிலே இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் இருந்தது. அத்துடன் அந்தச் செந்தமிழ்க் காப்பியத்துக்கு 'அடியார்க்கு நல்லார்' எழுதிய உரையும் இருந்தது. பூ கேட்கப் போனதுக்குப் பொன் கிடைத்தது போலிருந்தது அந்தப் பெருமகனுக்கு.

உடனே சிலப்பதிகாரத்தைப் படிமம் எடுக்கத் துவங்கினார். உண்ணாமல் உறங்காமல் - கண்கள் சோராமல் - கையும் சளையாமல் - இரவென்றும் பகலென்றும் பாராது, ஓயாது உழைத்தார். தம் கணவன் இரவு முழுக்கக் கண்விழித்து எழுதுவதைக் கண்ட மனைவி மதுரா, எரியும் குத்துவிளக்குக்கு. என்ன எண்ணெய் ஊற்றினார் தெரியுமா? - விளக்கெண்ணெய் - ஏன்? - தம் கண்போன்ற கணவரின் கண்களுக்குக் கொஞ்சமாவது குளிர்ச்சி கிடைக்கட்டுமே என்பதற்காக.

1892-ம் ஆண்டு -

பூமிதனில் யாங்கணும் பிறந்திராத பெரும் புலவரான இளங்கோவடிகள் யாத்தருளிய சிலப்பதிகாரம் புத்தக வடிவில் வெளியாகியது.

தமிழ் ஆசிரியர்கள் -
தமிழ் அறிஞர்கள் -
பத்திரிகைக்காரர்கள் -
பணக்காரர்கள் -
சட்டத்தைக் காக்கும் நீதிபதிகள் -

சரித்திரத்தை நிர்ணயிக்கும் பேராசிரியர்கள் -

அத்தனை பேரும் படித்தார்கள் - பரவசம் அடைந்தார்கள். அவர்கள் அளித்த பாராட்டு மடல் இதோ.

''கண்டறியாதன கண்டோம்''
''முத்தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்களின் வரலாற்றைக் காட்டும் காலக் கண்ணாடி''

''இசைத் தமிழுக்கு இலக்கணம் வகுத்த இலக்கியம்'' ''சாமிநாதய்யர் கண்டெடுத்த தமிழ்ப் புதையல்''

இப்படி எத்தனையோ பாராட்டுக்கள்.

இந்தத் தமிழ் மண்ணைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்தில் மக்கள் இப்படி வாழ்ந்தார்கள். பண்ணும் திறமுமாக இசை இப்படி இருந்தது சைவமும், சமணமுமாக மதம் இப்படி இருந்தது. மாணிக்கப் பரலும், முத்துப் பரலுமாகச் சிலம்பு இப்படி இருந்தது. என்றெல்லாம் பழந்தமிழ் நாட்டைப் படம் பிடித்துக் காட்டியிருந்தார் - இளங்கோவடிகள்

சாமிநாதய்யர் காப்பாற்றியது சிலப்பதிகாரத்தை மட்டுமல்ல அதை எழுதிய் இளங்கோவடிகளை மட்டுமல்ல -

முத்தமிழை - முத்தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்களையே - காப்பாற்றினார் என்றுதான் சொல்ல வேண்டும்.

1894 ஆண்டு -

தமிழ் நாட்டிலே ஒரு இலக்கியப் புரட்சி ஏற்பட்டது. இன்னும் சொல்லப் போனால் ஒரு புதிய விழிப்புணர்ச்சி, மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று கூடச் சொல்லலாம். அந்த ஆண்டில் அப்படி என்ன சிறப்புறு செயல் நடந்தது? வேறொன்றுமில்லை - புறநானூறு வெளிவந்தது.

''புறநானூறு'' படித்த புலவர் பெருமக்கள், வள்ளல் அதியமானைக் கண்ட ஔவை போல அகமும் முகமும் மலர்ந்தார்கள் - காரணம்.

தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் யார்? - யார்?
அவர்கள் புகழ் பாடிய புலவர்கள் யார்? - யார்?
அவர்கள் பாடிய பாட்டு என்ன? - பொருள் என்ன?

எல்லாம் தெரிந்தன.

கடந்த காலத் தமிழகத்தை நம் கண்முன்னே நிகழ்காலத் தமிழகமாக நிறுத்திக் காட்டிய நூல் புறநானூறுதான். அந்தப் புறநானூறு நூலையும் தேடிக் கண்டுபிடித்து, அச்சிட்டு வெளியிட்டவர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் தான்.

அதைத் தொடர்ந்து எத்தனையோ நூல்கள் - குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் மணிமேகலை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் - இன்னும் கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ், அந்தாதி, தூது வரிசையிலே அடுக்கிக் கொண்டே போகலாம்.

தள்ளாத வயதில் - உடல் தளர்ந்த போதும், உள்ளம் தளராமல், அவர் பதிப்பித்த நூல் குறுந்

தொகை - மனிதனுடைய இளமைக் காலத்திலே, காதல் அரும்பாகி, மொட்டாகி, மலராகி, மணம் பரப்பும் விதம் பற்றிக் கூறும் நூல் குறுந்தொகை, அந்த நூலை அவர் தம் எண்பத்திரண்டாவது வயதில் - அதாவது ஆண்டவனைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் எழ முடியாத வயதில், - ஆய்ந்து, தோய்ந்து, அச்சிட்டு வெளியிட்டார் எனறால் எதற்காக? - தமிழுக்காக - தமிழைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே கொள்கைக்காக - கோட்பாட்டுக்காக.

''இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''.

''தமிழ்விடு தூது'' நூலிலே உள்ள இந்த இரண்டு **வரிகள்** தான் அவர் இதயத்தை விட்டு நீங்காத **இரண்டு வைர வரிகள்.**

வாழ்க்கை முழுவதையும் தமிழுக்காக அர்ப்ப ணித்த அந்த மாசில்லா மாணிக்கத்துக்கு அப்போ தைய ஆங்கில அரசு 1906ம் ஆண்டு ''மகாமகோ பாத்தியாய'' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

**அதுகண்டு மகிழ்ந்த மகாகவி பாரதியார்,**

''அந்நியர்கள் தமிழ்ச்செவ்வி அறியாதார் இன் றெம்மை ஆள்வோ ரேனும்,
பன்னியசீர் மகாமகோ பாத்தியா யப்பதவி பரி வின் ஈந்து,
பொன்னிலவு குடந்தை நகர்ச் சாமிநாதன் தனக் குப் புகழ் செய்வாரேல்

முன்இவன் அப்பாண்டியர்நாள் இருந்திருப்பின் இவன் பெருமை மொழிய லாமோ?''

என்று புகழ் பாடிப் பெருமைக்குப் பெருமை சேர்த்தார்.

1917ல் காசி பாரத தர்ம மகாமண்டலத்தார் ''திராவிட வித்யாபூஷணம்'' என்ற பட்டத்தையும்;

1925ல் காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச் சாரியார் அவர்கள் ''தாக்ஷிணாத்திய கலாநிதி'' என்ற பட்டத்தையும் வழங்கினார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக 1932ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு ''டாக்டர்'' பட்டம் வழங்கியது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத் தில் ஆங்கிலம் தெரியாத ஒருவருக்கு ''டாக்டர்'' பட்டம் வழங்கப்பட்டது. அதுதான் முதன்முறை - அதுதான் இறுதிமுறையும் கூட.

1935ம் ஆண்டு, டாக்டர் உ.வே.சாமிநாதய்ய ருக்கு எண்பதாவது ஆண்டு நிறைவு விழா சென் னையில் - பல்கலைக் கழக மண்டபத்தில் கொண்டா டப்பட்டது. விழாவுக்குத் தலைமை வகித்தவர் ஸர்.முகம்மது உஸ்மான் என்ற முஸ்லீம் பிரமுகர் ஐயர் அவர்களின் சதாபிஷேக விழாவுக்குத் தலைமை வகித்தவர் ஒரு முஸ்லீம். விந்தையாக இருக்கிறதல்லவா? ஏறக்குறைய அறுபது ஆண்டுக ளுக்கு முன்பே அவர் ஜாதி, மத, இன பேதங்க ளைக் கடந்து வாழ்ந்திருக்கிறார். அவருடைய ஒரே ஜாதி - ஒரே மதம் - ஒரே இனம் - ஒரே சிந்தனை தமிழ் ஒன்றுதான்.

அந்த விழா நேரத்திலேதான் அவரை அன்புடன் ''தமிழ்த்தாத்தா'' என்று அழைத்தார்கள். அழைத் தது ஆனந்தவிகடனில். அழைத்தவர் அதன் அப் போதைய ஆசிரியர் திரு.கல்கி கிருஷ்ணமூர்த்தி. அன்று முதல் இன்றுவரை டாக்டர் உ.வே சாமிநா தய்யர் அவர்கள்தான் ''தமிழ்த்தாத்தா'' இனி என் றுமே அவர்தான் ''தமிழ்த்தாத்தா''.

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி மூன்று நூல்களையும் ஒன்று திரட்டி, ''பன்னிரு திருமுறை கள்'' என்ற ஒரு புதிய நூலாக வெளியிட்டார் செங்கல்வராயப் பிள்ளை. அந்த நூலின் பிரதியைத் தமிழ்த்தாத்தாவிடம் கொடுத்தார்.

நூலைப் படித்துப் பார்த்த தமிழ்த்தாத்தா, செங்கல் வராயப் பிள்ளையின் கைகளை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். வயதிற் குறைந்தவ ரான செங்கல்வராயப் பிள்ளை, அதுகண்டு பதறி, ''என்ன காரியம் செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''முருகனுடைய பெருமைகளை ஆராய்ந்த கைக ளாயிற்றே. அதனால் - அந்தக் கைகளை என் கண்களில் ஒற்றிக் கொண்டேன்'' என்று கூறினார் தமிழ்த்தாத்தா.

சற்று நேரத்தில் விடைபெற்ற செங்கல்வராயப் பிள்ளை, நாலடி முன்னே சென்று திரும்பி, நெடுஞ் சாண்கிடையாகப் படுத்து, தமிழ்த்தாத்தாவின் கால் களைத் தம் கண்களால் ஒற்றிக் கொண்டார்.

''பிள்ளைவாள் - என்ன காரியம் செய்கிறீர்கள்'' என்று தமிழ்த்தாத்தா கேட்டார்.

''தங்கள் கால்களை என் கண்களால் ஒற்றிக் கொள்கிறேன்'' என்றார் பிள்ளை.

''கால்களை யாராவது கண்களால் ஒற்றிக் கொள் வார்களா?'' என்று தமிழ்த்தாத்தா கேட்டார்.

''சங்க கால இலக்கியங்களைத் தேடித்தேடி அலைந்த கால்களாயிற்றே'' என்ற கண்ணீர் மல்கக் கூறினார் பிள்ளை.

அந்த ஓயாத நடையுடையானும் ஓய்வு கொள் ளும் காலம் வந்தது.

1942-ம் ஆண்டு 2-வது உலக மகா யுத்தம் நடந்தபோது சென்னை கடற்கரையருகே ஒரு

குண்டு விழுந்தது. ஊரெங்கும் பதட்டநிலை - மாலையில் கதிரவன் மறைந்துவிட்டால், விளக்கொளி கிடையாது - எங்கும் இருட்டுநிலை.

அப்போது தமிழ்த்தாத்தா அவர்களைச் சென்னைக்கருகேயுள்ள திருக்கழுக்குன்றத்திலே திருவாவடுதுறை மடத்துக்குச் சொந்தமான கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே கூற்றுவன் என்னும் கொடியவன் நோய் வடிவிலே அவர் உடலிலே புகுந்தான்.

அந்த நேரத்திலும், ''பிறவா வரம் தருவாய் இறைவா'' என்று கேட்கவில்லை அவர். ''இறைவா - இன்னொரு ஜென்மம் கொடு'' என்று வேண்டினார். ஏன்? -

வாழ்க்கை முழுவதையும் தமிழுக்காக அர்ப்பணித்த அவருக்கு அந்தத் தமிழைப் பற்றி ஒரு தணியாத ஏக்கம் - ஒரு தீராத துயரம் நெஞ்சை வருடிக் கொண்டேயிருந்தது. அது என்ன?

அந்த அந்திக் காலத்திலே, தமிழ்த் தாத்தாவுடன் இருந்த வேணுகோபால் அவர்கள் மூலமாக நான் அறிந்த - அவரது இறுதிப் பிரார்த்தனை இதுதான்.

''இறைவா'' இன்னொரு ஜென்மம் கொடு -

அதுவும் இந்தத் தமிழ் மண்ணிலேயே -

தமிழனாகவே பிறக்கும் பாக்கியத்தைக் கொடு.

தமிழ்த்தாயின் ஐம்பெருங் காப்பியங்களில் ஜீவக சிந்தாமணி - சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய மூன்று காப்பியங்களை நான் இந்த ஜன்மத்திலே கண்டுபிடித்து அச்சேற்றி விட்டேன். ஆனால் - வளையாபதி, குண்டலகேசி என்னும் இரு காப்பியங்களை என்னால் இந்த ஜன்மம் முழுவதும் தேடியும் எங்கும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இன்னும் ஒரேயொரு ஜன்மம் கொடு - அந்த ஜன்மத்தில் நான் எப்பாடுபட்டாவது, வளையாபதி, குண்டலகேசி என்னும் அந்த இரு காப்பியங்களையும் தேடிக் கண்டுபிடித்து அச்சேற்றி, அழகு தமிழன்னையின் கரங்களிலும் காதுகளிலும் அணிவிக்கிறேன். இந்த ஒரேயொரு பணிக்காக - இன்னும் ஒரேயொரு ஜென்மம் கொடு இறைவா'' என்று வேண்டிக் கொண்டே, அந்த வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள்.

1942-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள் தமிழ்த்தாத்தா மறைந்தார் என்ற செய்தி கேட்டதும், தமிழகமே கண்ணீர் சிந்தியது - கதறித் துடித்தது.

''எந்த நூற்றாண்டிலோ வாழ்ந்த எண்ணற்ற தமிழ்க் கவிஞர்களுக்கெல்லாம் சாகாவரம் கொடுத்த சாமிநாதா - உன் உடல் சாய்ந்தாலும், உன் சரித்திரம் சாகாது'' என்று அழுது புலம்பினார், கொழும்பு நகரக் குமாரசாமி முதலியார்.

**''மூச்செல்லாம் தமிழ் வளர்க்கும் மூச்சே வாங்கி முற்றும் அவள் திருப்பணிக்கே மூச்சை விட்டான்''**

என்று இரங்கற்பா பாடினார் நாமக்கல் கவிஞர்.

**''எவ்வேடு தேடி நீ ஏகினையோ**
**எவ்வூரில் எப்பதியில்**
**எவ்வேடு தேடி நீ ஏகினையோ''**

என்று கண்ணீர் மல்கக் கசிந்துருகினார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

இறந்த பிறகு இரங்கற்பா பாடிய கவிஞர்கள் எத்தனையோ பேர். ஆனால் தமிழ்த் தாத்தா உயிரோடிருக்கும்போதே ''உனக்கு மரணமே இல்லை'' என்று மார்தட்டிச் சொன்னவர் மகாகவி பாரதியார்.

**''பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்**
**காலமெல்லாம் புலவோர் வாயின்**
**துதியறிவாய்; அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்;**
**இறப்பின்றித் துலங்குவாயே.''**

என்பது பாரதியாரின் பாட்டு.

''இறப்பின்றித் துலங்குவாயே' என்று அந்தச் செந்நாப்புலவன் சொன்னதால்தான் - தமிழ்த்தாத்தா இறந்து ஐம்பத்துமூன்று ஆண்டுகள் ஆனபின்னும், இன்னும் நாம் அவர் புகழ் பாடிக் கொண்டிருக்கிறோம் - இனிமேலும் அவர் புகழ் பாடுவோம்.

தமிழ் மண்ணிருக்கும் வரை -

தமிழ் மக்கள் இருக்கும் வரை -

தமிழ் மொழி இருக்கும் வரை -

தமிழ்த் தாத்தாவும் இருப்பார்.

வணக்கம்.

**பிரதிகளின் இயல்பு**

*பழைய பிரதிகளுள் பல இனி வழுப்பட வேண்டும் என்பதற்கு இடமில்லாமல் பிழை பொதிந்து அநேக வருடங்களாகத் தம்மை படிப்போரும், படிப்பிப்போரும் இல்லை என்பதையும், நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக் கொண்ட சில புண்ணியசாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றொடொன்று ஒவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருள் தொடர்பின்றிக் கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்.*

*-(சிலப்பதிகார முகவுரை)*

# தமிழ்த் தாத்தாவின் நற்பண்புகள்

***பானுமதி சேதுராமன்***
**(தமிழ்த் தாத்தாவின் கொள்ளுப்பேத்தி)**

தமிழ்த் தாத்தாவின் வரலாறு என்பதே பக்தி கலந்த சங்கீதத்தின் வரலாறும்,தமிழ் மொழியின் வரலாறுமே என்றால், அது மிகையில்லை. அவர் வரலாற்றை எவ்வளவு முறை படித்தாலும் புதிய தாகவும், சுவைகள் பல நிறைந்தவனாகவும் காணப் படுகிறது.

சங்கீதத்தின் மீதுள்ள ஈடுபாடும், சிவபக்தியும், அவர் குழவிப் பருவத்திலிருந்தே வளர்ந்து வந்த செம்மையான குணங்கள். அவரது மேன்மையான குணங்களுக்கு ஆணிவேராக அமைந்ததே அவரது நாதோபாசனையும், பக்தியுமே என்பது எனது தாழ்மையான எண்ணம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களைப் போற்றி வணங்கி வாழ்ந்து வந்த பெரியவர் என்பது இவரது சரிதத்தைப் படிக்கும்போது நமக்குப் புல னாகிறது.

எத்தனையோ சரஸ்வதிகள் எத்தனையோ பிள் ளைகளைப் பெறுகிறார்கள். ஆனால் இவர் உண்மை யிலேயே கலைமகளாம் சரஸ்வதி பெற்ற பிள்ளை என்பது யாவரும் அறிந்ததே.

இவர் தமது தந்தை வேங்கடசுப்பையர் மீதுள்ள பக்தியும் பாசமும் பல இடங்களில் தெளிவாகப் புலப்படுத்துகிறார். தமது தந்தையின் சங்கீதப் புலமையையும், அவர் இராமாயணம் முதலியவற் றைப் பிரசங்கம் செய்து பொருளீட்டி, குடும்பத்தை நிருவகித்து வந்தார் என்பதைக் குறிப்பிடுகிறார். ''எப்போதும் சிவபக்தி பண்ணிக் கொண்டிரு'' என்ற தமது தந்தையின் உபதேசத்தை அவர்தம் வாழ்நாள் இறுதிவரை கடைப்பிடித்து வந்தார். அவரிடம் எனக்கிருந்த பயபக்தி அதிகரித்ததே ஒழியக் குறையவில்லை என்று அவரே ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

அவரது சரித்திரத்தில் பாதிக்கு மேல் இடம் பிடித்துக் கொண்டிருப்பவர் அவரது குரு வித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றியே ஆகும்.

அவர் இளமையில் தனது ஆசிரியர்கள் ஒவ்வொ ருவரையும் குறிப்பிட்டு, அவர்களிடம் தான் கற்ற நூல்களையும் குறிப்பிட்டிருக்கிறார். அவரது முதல் ஆசிரியர் நாராயண ஐயர், அரியலூர் சடகோப ஐயங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள். ரெட்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்க அவரது குலதெய்வம் மீது ''நீலி இரட்டை மணி மாலை'' என்ற நூலை இயற்றிக் கொடுத்துள்ளார். அவ்வாசிரியர் அந்நூ லைத் தினமும் பாராயணம் செய்து வந்தாராம். திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களி டம் அன்னார் வைத்திருந்த பக்தியும், அன்பும் சொல்லில் வடிக்க இயலாதது. குருவின் பெயரை அவர் எந்த இடத்திலும் குறிப்பிட்டது கிடையாது. தனது ஆசிரியரின் சரித்திரத்தை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ்த் தாத்தாவின் கூற்றுப்படி ஐயா (ஆசிரியர்) அவர்களும் சிஷ்யரிடத்தில் வைத்திருந்த அன்பையும், பரஸ்பரம் அவர்களுக்கி ருந்த அன்பைப் பார்க்கும்பொழுது குருவும் சிஷ்ய ரும் கொடுத்து வைத்தவர்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தாத்தாவிற்கு ஓவியம் வரைவதிலும் திறமை இருக்கிறது என்பதை, சித்திரக் கவிதைகளுக்குத் தானே படம் வரைவார் என்று கூறுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

தனது வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு செயலிலும் கூர்ந்து கவனித்து, அதை மனதில் இருத்திக் கொண்டு, அவற்றைப் பிறரிடம் பகிர்ந்து கொள் ளும் போது சுவைபடவும், பொருள்படவும் கூறுவ தில் மிகவும் சமர்த்தர் என்பது அவரது சரித்திரத்தில் பல இடங்களில் பளிச்சென விளங்குகின்றன. (தம் ஆசிரியர் சங்கீதம் என்று கூறாமல் இசை என்று கூறுவது)

குறிப்பறிந்து பிறர் மனம் சந்தோஷப்பட வேண் டும் என்பதற்காகவும் நடந்து கொண்டதை அன்னா ரின் ஆசிரியரே அவரை நேரில் பாராட்டியிருக்கி றார்.

தனது இளமைக் காலத்தில் தனக்கேற்பட்ட வறுமை நிலையையும், பிறரிடம் தாம் பெற்றுக் கொண்ட உதவிகளையும், ஆசிரியர்களிடம் இள மைப் பருவத்தே வாங்கிய தண்டனைகளையும் கூறிக் கொள்வதற்கு அவர் சிறிதும் தயங்கவில்லை.

இயற்கை அழகையும், கலைகளையும் ரசிக்கும் கலாரசிகர். தக்க சமயங்களில் அவர் தனது அந்தண சமயத்திற்குரிய சாஸ்திர சம்பிரதாயங்களையும் சொல்லத் தயங்கவில்லை. இக்காலத்தில்

எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு விஷயம்.

இளமையிலேயே அவருக்குச் சமைக்கவும் தெரியும் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் கிராமத்தில் வேலி கட்டுதல் வாய்க்கால் வெட்டுதல் போன்ற வேலைகளிலும் உதவியிருக்கிறார். பெரியவர்களுக்குப் பணிவிடை செய்வதில் இன்பம் காண்பவர்.

இளமைப் பருவத்திலிருந்தே தைரியம் இருப்பினும் பரம குருவாகிய திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் குரு அருகே அமர்ந்திருக்க தைரியத்தைச் சற்று இழந்து விடுவதாக அவரே குறிப்பிடுகிறார்.

''சங்கீதம் எங்கள் பரம்பரைச் சொத்து'' என்று பெருமையுடன் கூறிக் கொள்கிறார். திருவாவடுதுறை மடத்தில் எல்லோரும் அவர் சங்கீதத்தையும், தமிழ்ப் புலமையையும், பிள்ளை அவர்கள் குருவாக அமைந்ததையும், குறித்துப் பாராட்டும்போது நாணித் தலை கவிழ்கிறார்.

புதுப்புது நூல்களைப் பெறும்போது எத்தனை பணம் கிடைத்தாலும் எனக்கு இத்துணை சந்தோஷம் வராது என்று கூறிக் கொள்கிறார்.

திருவாவடுதுறை பஞ்சநதம் பிள்ளையிடத்தும், பட்டீசுரம் ஆறுமுகத்தா பிள்ளையிடத்தும் அடக்கிக் கொள்ள முடியாத அளவிற்குக் கோபம் வந்தபொழுதும் அவர்களது அதிகாரங்களைப் பிள்ளையவர்களின் சொல்லினால் கட்டுப்படுத்திக் கொள்கிறார்.

நண்பர் சவேரி நாத பிள்ளையின் பிரிவு அவரை வருத்துகிறது. பலநாட்கள் கழித்து அவரைப் பார்க்கும்போது அவருக்குண்டான மகிழ்ச்சியை எழுதி உணர்த்த முடியாதென்கிறார்.

தியாகராச செட்டியார் தனக்கு வேலை வாங்கிக் கொடுத்து உதவியவர் என்ற காரணத்தால், தம் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டு அவர் நினைவாகச் சென்னையில் திருவட்டீஸ்வரன் பேட்டையிலுள்ள அவரது வீட்டிற்குத் ''தியாகராஜ விலாசம்'' என்ற பெயரை இட்டிருக்கின்ற பாங்கு அவர் நன்றியறிதலைக் காட்டுகிறது.

எதையும் ஆழமாகவும், திருத்தமாகவும், செம்மையாகவும், விரிவாகவும் செய்ய வேண்டுமென்பது அவர் பதிப்பித்த புத்தகங்களைப் படித்தாலே அறிந்து கொள்ளலாம்.

ஏடு தேடி அலையும்போது அவரது விடா முயற்சியும், பொறுமையும் தமிழ் நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பதிலுள்ள ஆர்வமும் நன்றாகவே தெரிகின்றன.

நகைச்சுவை உணர்வுடன் பேசுவதில் வல்லவர் என்பது அவருடன் பழகியவர்கள் எழுதிய கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது. (- கி.வா.ஜ. என் ஆசிரியப் பிரான்)

தன்னை நாடி உதவி கேட்டு வந்தவர்களுக்குத் தன்னால் முடிந்தவரை உதவியிருக்கிறார் என்பதும் பலர் கூற்றிலிருந்து அறிய முடிகிறது.

குடும்பக் கவலையே இல்லாமல் தமிழ் ஒன்றையே தனது மூச்சாக வாழ்ந்து காட்டியவர் அப்பெரியார்.

நல்ல சீடராக மட்டும் இல்லாது, நல்ல ஆசிரியராகவும் வாழ்ந்து காட்டிய பெரியார், தனது மாணாக்கர்களைத் தம் இருப்பிடத்திலேயே வைத்துக் கொண்டு அவர்களுக்கு நல்ல நிலைமையையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் அவர் தவறவில்லை என்ற கூற்றை இவரது மாணாக்கர் அமரர் திரு கி.வா.ஜ. ''என் ஆசிரியப் பிரான்'' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

திருவாவடுதுறை மடத்திலிருந்தும், பல அன்பர்களிடமிருந்தும் தாம் பெற்ற உதவிகளை ஆங்காங்கு மறக்காமல் நன்றியுடன் குறிப்பிடுகிறார்..

விருந்தோம்பல் செய்வதில் மிகவும் விருப்பமுடையவர் என்பதை என் தாய் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

தனது ஆபரணங்களை எல்லாம் இழந்து, பொலிவிழந்த தமிழ்த் தாய்க்கு, ஆபரணங்களைத் தேடிக் கண்டெடுத்துச் செப்பனிட்டு, மெருகூட்டி, பொலிவூட்டிய பூரணத் தமிழ்த் தாயின் தரிசனத்தைக் கண்ட நம் தாத்தாவின் குணங்களை நாம் என்றென்றும் மறவாமல் நம் வாழ்விலும் எந்தக் கஷ்டம் வந்த போதிலும் நிமிர்ந்து நிற்கப் பழகிக் கொள்ள வேண்டுமென்பது என் அவா.

★ ★ ★

## தமிழ்த் தாத்தாவின் பொன்மொழிகள்

***இளமையில் எனக்கு ஒரு தக்க ஆசிரியரைத் தேடித் தந்ததும் பின்பு தமிழ்ச் சுவடிகளே கதியாகக் கிடந்த எனக்கு லௌகிகத் தொல்லை அணுவளவேனும் இல்லாமற் பாதுகாத்ததும் சிவபக்தியின் மகிமையைத் தம்முடைய நடையினால் வெளிப்படுத்தியதுமாகிய என் தந்தையாரின் அரிய செயல்களை நான் மறக்கவே முடியாது.***

**- என் சரித்திரம் ப-27**

தமிழில் அதிகப் பழக்கம் அதற்கு உபகாரப்படும் வகையில் சங்கீதமும் இருப்பதையே நான் விரும்பினேன். சடகோபையங்காரிடம் என்று நான் மாணாக்க

னாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த்தாயின் அருட் பரப்பிற் புகுந்தவனானேன்.

**- என் சரித்திரம்**

எனது ஏழாம் பிராயத்திலே அவர் (சடகோபையங்கார்) சிறிது சிறிதாக ஊட்டிய தமிழமுதத்தின் சுவை இன்றும் எனக்கு மறக்கவில்லை.

**- என் சரித்திரம் -ப.77**

சங்கீத முயற்சியைக் கைவிட்டுத் தமிழே துணையாக இருந்த எனக்கு அக்காலத்தில் சங்கீதத் தொடர்பு அற்றுப் போனது ஒரு குறைவாகத் தோன்றவில்லை. என் கவனத்தை இரண்டு திசைகளிற் பகிர்ந்து செலுத்தாமல் ஒரே திக்கில் செலுத்தியது நல்லதுதான் என்ற எண்ணம் வரவர உறுதியாயிற்று.

**- என் சரித்திரம் -ப.196**

திருநெல்வேலி மேலைவீதியில் உள்ள கவிராஜ ஈசுவர மூர்த்திப் பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. 'தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ?' என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச்சுவடிகளை அடுக்கடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக் கட்டி வைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை, பூச்சி இல்லை, ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை. தமிழ்த் தெய்வத்தின் கோயில் என்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்.

**- என் சரித்திரம் -ப.637**

தமிழ்த் தாயின் திருவடித் தொண்டில் நான் செய்யும் பிழைகளை நாளடைவில் திருத்திக் கொள்ளலாம். அந்தத் தொண்டை மதியாமல் சிற்றறிவினாகிய என்னை மாத்திரம் இலக்காக்கி எய்யும் வசையம்புகளை நான் என்றும் பொருட்படுத்தவேயில்லை. தென்றலும் சந்தனமும் பிறந்த இடத்திலே வளர்ந்த தமிழ் மென்மையும் இனிமையும் உடையது. அந்தச் செந்தமிழ்த் தெய்வத் திருப்பணியே வாழ்க்கை நோக்கமாக உடைய என்பால் உலகியலில் வந்து மோதும் வெவ்விய அலைகள் எல்லாம் அத்தெய்வத்தின் மெல்லருளால் சிறிதளவும் துன்பத்தை உண்டாக்குவதில்லை.

**- என் சரித்திரம் - ப.657**

மிதிலைப்பட்டி என்னும் ஊரை நான் எந்தக் காலத்தும் மறக்க முடியாது. மணிமேகலையின் முகவுரையில் '★★★ இவற்றுள் மிகப் பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்தும் மற்றப் பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போன பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும் கோப்புச் சிதைந்து அழகு கெட்டு மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவள் அணிந்து கொள்ளும் வண்ணம் செப்பஞ் செய்து கொடுத்ததும் மிதிலைப் பட்டிப் பிரதியே என்று எழுதியுள்ளேன். தமிழ்நாட்டில் எவ்வளவோ புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன; சிவஸ்தலங்களும் விஷ்ணுஸ்தலங்களும் சுப்பிரமணிய ஸ்தலங்களும் பல உள்ளன. அவற்றைப் போல் தமிழ்த்தெய்வம் கோயில் கொண்டுள்ள ஸ்தலங்களில் ஒன்றாகவே மிதிலைப்பட்டியை நான் கருதியிருக்கிறேன்.

**- நான் கண்டதும் கேட்டதும்.**
('பரம்பரைக் குணம்')

## முதல் அரும்பு

*சிந்தாமணியே என்னுடைய தமிழ் நூற்பதிப்பில் முதல் அரும்பு. வழக்கொழிந்த பழம் தமிழ் நூல்களை அறிவதற்கும் ஆராய்வதற்கும் அச்சிடுவதற்கும் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி ஊக்கமூட்டியவை அந்த நூலும் அதன் உரையுமே. தமிழ்த் தொண்டினால் இன்பம் உண்டு என்னும் உண்மையை எனக்கு முதன் முதலில் வெளிப்படுத்தியது அந்த நூலே. முதல் முயற்சியிலே அடையும் சிரமங்கள் அளவிறந்தன. சிந்தாமணியைப் போன்ற நூல்கள் தமிழ்நாட்டில் வழங்காத அக்காலத்தில் அதன் நடையே ஒரு தனிப்பாஷை போல் இருந்தது. அதன் உரையோ பின்னும் புதியதாகவே தோன்றியது. அதில் உள்ள விஷயங்களோ ஜைன சமயத்தைச் சார்ந்தவை, சைவம், அத்வைதம், வைணவம் என்னும் மூன்று சமயக் கருத்துக்களே தமிழ்நாட்டில் அதிகமாக வழங்கின. ஜைன சமயத்தைப் பற்றி அறிந்தவர்களையோ, கூறும் தமிழ்நூல்களையோ காண்பது அரிதாக இருந்தது. அன்றியும் திருவாவடுதுறை ஆதீனமாகிய சைவ மடத்தில் படித்த எனக்குப் புறச்சமயமாகிய ஜைனத்தைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு ஏது?*

**-ஐயரவர்கள்**

# தமிழ்த் தாத்தாவும் காஞ்சி ஸ்ரீமடமும்

***(ஜகத்குரு ஸ்ரீசந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்)***

***(கல்கி தீபாவளி மலர் 1984)***

ஸ்ரீவைஷ்ணவர்களில் பெரியவர்களாக இருக்கப் பட்டவர்களின் பேருக்கு முன்னால் ''உ.வே.'' என்று போடுவார்கள். இது ''உபயவேதாந்த'' என்ற வார்த்தைகளின் சுருக்கமாகும். ஸ்ரீராமானுஜ ஸம்ப்ர தாயத்தில் தமிழுக்கும் ஏற்றம் கொடுத்து, ரிஷிகள் ஸம்ஸ்கிருதத்தில் கொடுத்துள்ள வேதாந்த சாஸ்தி ரத்தைப் போலவே ஆழ்வார்கள் ''வேதம் தமிழ் செய்து'' கொடுத்திருக்கும் திவ்யப் பிரபந்தத்திலும் அந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் நல்ல தேர்ச்சி பெற வேண்டுமென்று வைத்திருக்கிறது. ''உபயம்'' என் றால் இரண்டு, இரட்டையைக் குறிப்பது. ரிஷி ப்ரபந்தம், ஆழ்வார் ப்ரபந்தம் என்ற இரண்டு பாஷைகளில் உள்ள வேதாந்தத்திலும் நல்ல ஞானம் பெற்றவர்கள் என்ற அர்த்தத்தில் தங்களுடைய பெரியவர்களுக்கு ''உபய வேதாந்த'' என்று மரியா தையாக அடைமொழி போடுகிறார்கள். அதன் அப்ரிவியேஷன்தான் ''உ.வே.''

இம்மாதிரி ஸ்ரீ சங்கர ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்மார்த்தர் (ஐயர்)களிலும் உபய வேதாந்தியாக இருக்கிற ஒரே ஒருவர்தான் உ.வே. ஸ்வாமிநாதை யர் என்று யாராவது நினைத்தால் அது தப்பு. ஸ்வாமிநாதையருக்குத் தமிழ் ஒன்றுதான் பேச்சு, மூச்சு, நினைப்பு எல்லாம். ரிஷி ப்ரபந்தத்தில் அவருக்கு ஈடுபாடு இல்லை. தமிழிலும் கூட அந்தப் பாஷைக்காகவே பொதுப்படையான அதன் இலக்கியத்துக்காகவே இதயத்தைக் கொடுத்தவரே தவிர ஆழ்வார் ப்ரபந்தத்தில் தனிப்பட்ட பிடிமா னம் கொண்டவர் இல்லை. பக்தி என்று வரும்போ தும் பரம சாம்பவராகவே (சிவபக்தராகவே) இருந் தார். ஆனபடியால் வைஷ்ணவர்கள் சொல்லும் உ.வே. பட்டம் இவருக்குக் கிடைப்பதற்கு நியாய மில்லை. பின்னே என்ன ''உ.வே. என்றால், அவை இவருடைய இன்ஷியல்கள்தாம். அவர் பிறந்த ஊர் உத்தமதானபுரம். அவருடைய பிதா வேங்கடசுப் பையர்.

இவரைக் கொஞ்சம் நிஜமாகவே உபய வேதாந் தம் ஆக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. இப்ப டிச் சொல்வதால் இவரை அத்யயனம் பண்ண வைக்கணும். ஆழ்வார் பாசுரங்கள் ஓத வைக்கணும் என்று ஆசைப்பட்டதாக அர்த்தமில்லை. தமிழுக் கென்று சிறப்பாக இருக்கிற மரபு, அதையும் தழுவுவதாகத் தேசம் பூராவுக்கும் பொதுவாக ஸம்ஸ்கிருதத்தை முக்கியமான கருவியாகக் கொண்டு உருவாகியிருக்கும் சமயாசார அனுஷ்டா னங்கள் ஆகிய இரண்டிலுமே ஆழ்ந்த அபிமான மும் இரண்டிலுமே ஓரளவு அறிவும் இருப்பதுதான் நான் ஆசைப்படும் உபய வேதாந்தம். ஸகல தமிழ் ஜனங்கள் விஷயமாகவும் எனக்கு இந்த ஆசை உண்டு. 'புலவர் உலகத்திலே அஸாதாரணமான யோக்யதாம்சமும், மதிப்பும் பெற்ற உ.வே.ஸ்வாமி நாதையர் போல் உள்ளவர்கள் நல்ல தெய்வபக்தியு டன் இருப்பதோடு நின்று விடாமல் ஸநாதன ஸமயாசார ஸம்ப்ரதாயத்தை ஏதோ மேலெழுந்தவா ரியாகப் பின்பற்றுவதுடன் நின்றுவிடாமல், கெட்டி யாக அதில் பிடிமானம் கொள்ள வேண்டும். அதற்குப் புனர்ஜீவனம் ஊட்டிய ஆசார்யாளிடம் பக்தி வைக்க வேண்டும். இப்படிச் செய்தால் அது தமிழறிஞர் உலகத்துக்கே உதாரணமாயும் வழிகாட் டியாயும் இருக்கும்' என்று எனக்கு ஆசை. ஏனென் றால் எப்படி ஆதியில் தமிழ் உலகம் முழுவதும் ஒரு பாட்டியைப் பின் தொடர்ந்து போயிற்றோ ஔவைப் பாட்டியைத்தான் சொல்லுகிறேன்; அப் படி இந்த நூற்றாண்டில் தமிழில் புலவர் உலகம் ஒருவர் பின்னால் போயிற்று என்றால் அது ''தமிழ்த்தாத்தா'' என்றே போற்றப்பட்ட ஸ்வாமிநா தையரைத் தான்.

அன்றைக்குத் தமிழ்பாட்டி ஔவைக்குப் பின்னா லும், இன்றைக்குத் தமிழ்த்தாத்தா ஸ்வாமிநாதைய ருக்குப் பின்னாலும் தமிழ் உலகம் போயிற்று என்றாலும் அவர்கள் தங்களுடைய பணியிலே காட்டிய 'ஸ்பீடை' யாரும் பின்பற்ற முடியாது! இரண்டு பேருமே அப்படிச் சுறுசுறுப்பாக, நின்ற இடத்தில் நிற்காமல் ஓடி ஓடித் தங்கள் ஜன்மப் பணியைச் செய்தவர்கள்.

எப்படியாவது தமிழ்ப் பெரியார்களுக்கெல்லாம் மடத்திலே ஒரு ஸம்பந்தம் ஏற்படுத்திப் பார்ப்பதில் எனக்கு ஒரு திருப்தி. ஏனென்றால் நம்மடம் என்றால் அங்கே ஸம்ஸ்க்ருதத்துக்குத்தான் எல்லா முக்யமும் என்றே நினைக்கிறார்கள். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் 'உபயவேதாந்தம்' என்று ஸம்ஸ்கி ருதம் தமிழ் இரண்டையும் போஷிக்கிறாற்போல, இந்த ஸ்மார்த்த மடத்தில் இல்லையே என்று நினைக்கிறார்கள். ஆனாலும் நம்முடைய மடத்துக் குத் தமிழ் ஸம்பந்தமும் இல்லாமல் போய்விட வில்லை. அந்தந்தக் காலத்தில் இருந்து வந்திருக்கிற ஆசார்யர்களிடம் தமிழ்ப்புலவர்கள் தங்கள் புலமை

யைத் தெரிவித்துக் காட்டி, ப்ரஸாதம் பெற்றுப் போயிருக்கிறார்கள். ஸ்வாமிநாதையரே சொல்லியிருக்கிறார் - அவருடைய இளவயஸிலே அவருக்குப் பதினெட்டு இருபது வயசு இருக்கிறபோது அதாவது இந்த நூற்றாண்டு பிறப்பதற்கு இருபது இருபத்தைந்து வருஷம் முந்திகூட அவர் நம்முடைய மடத்துக்கு வந்திருக்கிறார். மடத்துப் பண்டிதர்கள் அவருடைய பிரஸங்கங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அப்போது ஆசார்யர்களாக இருந்த இளையாத்தங்குடி பெரியவாளிடம் அவர் ஆசிர்வாதம் பெற்றிருக்கிறார்.

தமிழ், ஸம்ஸ்கிருதம் இரண்டும் பேதப்பட்டு நிற்க ஆரம்பித்தது முக்கியமாக இந்த நூற்றாண்டில் தான். இதை எப்படியாவது ஆதியில் இருந்த மாதிரி ஐக்கியப்படுத்தி விடவேண்டும் என்பதுதான் எனக்கு எப்போதும் நோக்கம். அதனால் ஸம்ஸ்கிருதப் பண்டிதர்களைப் போலவே தமிழ் வித்வான்களையும் ஸ்ரீமடத்தில் ஆதரித்து ஸம்மானிக்க ஆரம்பித்தது. இந்த ரீதியிலேதான் ஸ்வாமிநாதையரையும் மடத்தின் பக்கம் வரப்பண்ணி அதன்மூலம் தமிழ் உலகத்துக்கு வைதிக ஆசாரங்களில் அபிமானம் வளர்வதற்கு ஸகாயம் செய்ய நினைத்தது.

தமிழ்ப்பாட்டி தானே ஒரிஜனலாகப் பாடியவள். பாட்டினால் தர்மபோதனை பண்ணின்வள். தமிழ்த் தாத்தா முக்யமாக ஆராய்ச்சியாளர்தான். ஏற்கனவே இருந்த நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தவர். அரைகுறையாய்க் கிடைத்த பல நூல்களை முழுதாகக் கண்டுபிடித்துப் பூர்ண ரூபத்தில் கொடுத்திருக்கிறார். மூலம் அடியோடு மறைந்தேபோய் எங்கேயோ மேற்கோள்கில் பிரஸ்தாபிக்கப்பட்டதால் மட்டும் துளித்துளி தெரிந்த நூல்களையும் தேடு தேடு என்று தேடிப்போய், கண்டுபிடித்துப் பிரகாசிக்கச் செய்திருக்கிறார். எங்கேயாவது ஒரு அபூர்வமான சுவடி இருக்கிறது என்று கேள்விப்பட்டுவிட்டால் போதும் உடனே எப்பாடுபட்டாவது எத்தனை அலைச்சல் அலைந்தாவது, யாரானாலும் அவரிடம் கெஞ்சி மன்றாடியாவது அதைப் பெற்றுவிடுவார். இப்படி அவரால் புத்துயிர் பெற்ற தமிழ்நூல்கள் ஏராளம். அவருடைய பதிப்புக்களிலெல்லாம் இருக்கிற விசேஷம் என்னவென்றால் பல பிரதிகளை ஒப்பிட்டுப் பாட பேதங்கள் கொடுத்திருக்கும். விளக்க வேண்டிய விஷயங்களுக்கெல்லாம் 'விசேடக்குறிப்பு' என்று கொடுத்திருப்பார்; பழைய உரைகளில் த்மக்குப் புரியாத மேற்கோள்களைத் தனியாக, 'விளங்கா மேற்கோள் அகராதி' என்று கொடுத்திருப்பார். ஒரு ரிஸர்ச் - ஸ்டடிக்கு இருக்க வேண்டிய அத்தனை அம்சங்களும் அவற்றில் சிறப்பாக இருக்கும்.

ஆனால் தமிழ்ப் பாட்டியைப் போல் இந்தத் தாத்தாவுக்குப் போதனைக்காக ஏற்பட்ட ஒன்றாக பாஷை இல்லை. பாஷைக்காகவே பாஷை என்று பணிசெய்தார். அதனால் வைதிக தர்மத்துக்கு வேறான சமண சமயத்தை ஸமயம் நேர்ந்தபோதெல்லாம் வலியுறுத்தும் 'ஜீவக சிந்தாமணி' போன்ற நூல்களைக்கூடப் பதிப்பித்திருக்கிறார். நம்முடைய தமிழின் உயர்ந்த இலக்கிய பாரம்பரியம் தெரிவதற்கு அவருடைய இந்தத் தொண்டு நிரம்ப உபகாரம் செய்துதான் இருக்கிறது. அதனால் அவர் செய்த ஆராய்ச்சிப் பணிகளைக் கவனித்து அவ்வப்போது அவரைப் பாராட்டி ஊக்கி, அவரை மடத்தின் பக்கம் நெருங்கிவரப் பண்ணினேன்.

அவர் பெரிசாகத் தமிழ் ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார் என்றால் நானும் ஏதோ கொஞ்சம் இந்த விஷயத்திலே என் சாமர்த்தியத்தைக் காட்டியிருக்கிறேன். இதிலே ஒன்று, இரண்டு அவர் வருகிறபொழுது அவிழ்த்து' விடுவேன் அவருக்கு உச்சி குளிர்ந்துவிடும். ஸம்ஸ்கிருதத்துக்கு என்றே ஏற்பட்ட மடம் என்று நினைக்கப்படும் ஒன்றில் அவருக்கு ஏற்பட்ட சந்தோஷம் வளர்ந்து வளர்ந்தது. நம்முடைய மடத்தில் நல்ல அபிமானமும் பகவத்பாதாளிடம் பக்தியுமாக உறுதிப்பட்டன. காலக்ரமத்தில் நமக்குத் தப்பாமல் வ்யாஸ பூஜா காணிக்கை அனுப்ப ஆரம்பித்து விட்டார். நான் ஆசைப்பட்டபடி நம் தர்மாசாரங்களில் அவருக்கு நல்ல பற்று ஏற்பட்டுவிட்டது.

நம் மடத்துக்கு நீண்ட காலமாகவே தமிழ்ப் புலவர்கள் தொடர்பு உண்டு என்று நான் ஸாக்ஷி காட்டிய ஒரு விஷயம் அவருடைய ஆராய்ச்சிக்கும் ஒத்தாசை பண்ணியதால் ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்து விட்டார்.

அதென்னன விஷயம்?

''தஞ்சை வாணன் கோவை'' என்று கேள்விப்பட்டிருக்கலாம். 'கோவை'' என்பது தொண்ணூற்றாறு ப்ரபந்த வகைகளில் ஒன்று. தஞ்சை வாணன் கோவை என்பது தஞ்சையில் இருந்த வாணன் என்ற வள்ளலைப் பற்றிய அகப்பொருள் நூலாகும்.

இந்தத் தஞ்சை வாணனைப் பற்றி ஸ்வாமிநாதையர் ஒரு ஆராய்ச்சி செய்திருந்தார். அதாவது அவன் ஆட்சி நடத்திய தஞ்சை சோழ தேசத்தில் உள்ள தஞ்சாவூர் இல்லையென்றும், பாண்டிய நாட்டிலுள்ள தஞ்சாக்கூர்தான் என்றும் பல காரணங்கள் காட்டி அவர் முடிவு செய்திருந்தார்.

மதுரையிலிருந்து மான்மதுரை போகும் ரயில்வே லைனில் திருப்பாச்சத்தி என்று ஒரு ஸ்டேஷன் இருக்கிறது. அதற்கு ஒருமைல் தெற்கே போனால் வருவது இந்தத் தஞ்சாக்கூர்.

''தஞ்சாக்கூர்தான் வாணன் ஊர் என்பதற்கு ஆதரவாய் நம்மிடமும் ஒரு சாக்ஷி தருகிறது'' என்று அவரிடம் நான் சொன்னவுடன் அவருக்கு ரொம்பவும் ஆவலும் ஆனந்தமும் உண்டாகிவிட்டன.

மடத்தின் அறுபத்து மூன்றாவது ஆசார்யாளான (நான்காவது) மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (1783-ல்) பீடமேறிச் சில மாஸங்களில் சிவகங்கை ராஜா விஜய ரகுநாத பெரிய உடையார் மடத்துக்கு ஒரு கிராமத்தை அர்ப்பணம் பண்ணியிருக்கிறார். அந்தத் தான சாஸனம் மடத்தில் இருக்கிறது. அந்தக் கிராமம் இந்தத் தஞ்சக்கூரைத் தொட்டுக்கொண்டு அதன் தெற்குப் பாகத்தில் இருக்கிறது. அதன் பெயர் புலவச்சேரி.

''புலவர் சேரி'' என்பதுதான் புலவச்சேரி என்றாகியிருக்கிறது. அநேக புலவர்கள் வாழ்ந்த, அல்லது அடிக்கடி வந்து தங்கியிருந்த இடமாக இது இருந்திருக்க வேண்டும் என்பது என் ஊகம். நீங்கள் தஞ்சாக்கூர்தான் புலவர்களைக் கொண்டாடிய வாணனின் ஊர் என்று காட்டியிருப்பதாகத் தெரிந்தவுடன் நான் ஊகித்த விஷயம் நிச்சயப்பட்டே விட்டது. அவனுடைய காலத்தில் எப்போது பார்த்தாலும் மொய்த்துக் கொண்டிருந்த புலவர்கள் தங்கியிருந்ததால்தான் இந்தக் கிராமத்துக்குப் புலவர்சேரி என்ற பேர் ஏற்பட்டிருக்கிறது என்று புரிந்து கொண்டேன்'' என்று சொன்னேன்.

இதைக் கேட்ட ஐயர், பழைய சுவடி ஒன்றைக் கண்டுபிடித்தால் எப்படிப் பரவசம் அடைவாரோ அப்படிக் களிக்கூத்தாடினார்!

அநேகமாக எல்லாரும் சோழ தேசத் தஞ்சை என்று நினைத்ததைப் பாண்டிய நாட்டு ஊர் என்று காட்டிய மாதிரியே இன்னொரு ஊர் விஷயமாகவும் அவர் ஆராய்ச்சி பண்ணி முடிவு வெளியிட்டிருக்கிறார்.

சைவர்களுடைய 'பாடல் பெற்ற ஸ்தலங்களில் முதலிடம் பெற்றுள்ள சிதம்பரத்தை வைஷ்ணவர்களும் தங்களுடைய நூற்றெட்டுத் 'திவ்ய தேசங்களில்' ஒன்றான தில்லைநகர் திருச்சித்ரகூடம் என்கிறார்கள். பரமேச்வரன் நடராஜாவாக ஏக ஆட்டம் போடும் அந்த க்ஷேத்திரத்திலே அந்த ஆலயத்திலேயே மஹா மாயாவியான மஹாவிஷ்ணு கோவிந்தராஜா என்ற பெயரில் ஒரே தூக்கமாகத் தூங்கிக் கொண்டே ஜகத்ரக்ஷணம் பண்ணுகிறார்! இந்த ஸந்நிதிதான் திருமங்கையாழ்வாரும் குலசேகரப் பெருமாளும் மங்களாசாஸனம் செய்துள்ள தில்லைச் சித்ரகூடம் என்கிறார்கள்.

ஆனால் ஸ்வாமிநாதையருக்கோ இந்தத் திவ்ய தேசம் சிதம்பரம் இல்லை என்று அபிப்ராயம். சித்ரகூடம் என்பது பெயரானால் அதிலுள்ள மூர்த்தி ராமசந்த்ர மூர்த்தியாகத்தானே இருக்கணும்? பேர் சித்ரகூடம் பெருமாள் கோவிந்தராஜா என்றால் பொருத்தமே இல்லையே என்று அவருக்கு யோசனை.

ஐயரவர்களின் கவனத்தில் பதிந்த இன்னொரு விஷயம், சித்ரகூடத்தைப் பாடியுள்ள குலசேகரர் தம்முடைய பெருமாள் திருமொழியின் அந்தப் பாசுரத்தில் முழுக்க ராமாயண ஸம்பவங்களையே சொல்லிக் கொண்டு போவதாகும். ஆனபடியால் ராமரை மூலவராகக் கொண்ட ராமக்ஷேத்திரமாகிய வேறேதோ தில்லைச் சித்ரகூடத்தைத்தான் சிதம்பரமாக நினைக்கும் வழக்கம் வந்து விட்டதா என்று ஐயரவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்.

குலசேகரர் ராமனையே இஷ்டமூர்த்தியாக உபாசித்தவர். எனவே இவர் பாடிய திருக்கண்ணபுரம் போன்ற ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்களில் எல்லாம் ராமாயண ஸம்பந்தம் இல்லாமல் இருக்காது. ஆகையால் கோவிந்தராஜாவையும் அவர் ராமராகப் பாடியிருப்பதில் ஆராய்ச்சிக்கான விஷயம் என்ன இருக்கிறது என்று கேட்கலாம்.

ஆனால் ஸ்வாமிநாதையர் அபிப்ராயப்படி திருக்கண்ணபுரத்தில் பாடிய மாதிரி பொதுப்படையாக இல்லாமல் சித்ரகூடத்தில் பாடியபோது, தில்லை நகர் திருச்சித்ரகூடந்தன்னுள் திறல் விளங்கு மாருதியோ டமர்ந்தான் தன்னை என்கிறாற்போல, இது ராமனின் மூர்த்தி இருக்கும் ஸந்நிதிதான் என்று திட்டமாகக் குறிப்பிட்டே காட்டியிருக்கிறது.

இவருடைய அபிப்ராயத்தை உறுதிப்படுத்தும் ஒரு விஷயம் கேள்விப்பட்டார். 'தில்லை வளாகம்' என்று சிதம்பரத்தின் பேர் கொண்டதாக, தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப் பூண்டி தாலுகாவில் உள்ள கிராமத்தில் நூறுவருஷம் முந்தி ஸீதா-லக்ஷ்மண-ஹநுமத் ஸமேத ராமசந்த்ர மூர்த்தி விக்ரஹமும், சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜ மூர்த்தி விக்ரஹமும் பூமிக்கு அடியிலிருந்து கண்டெடுக்கப் பட்டதாகக் கேள்விப்பட்டார். இவரும் உடனே உண்மையைக் கண்டெடுக்க ஆராய்ச்சியால் தோண்டினார். முடிவாக இந்தத் தில்லை வளாகம் தான் திருச்சித்ரகூடம் என்ற திவ்யதேசம் என்று தீர்மானம் பண்ணினார். ''உபய வேதாந்தி''யாய் இல்லாவிட்டாலும் ''உபய''த்தில் ஒன்றான திவ்ய ப்ரபந்த பெருமாள் திருமொழியில் இவர் செலுத்திய ஈடுபாடு பலன் அளித்துவிட்டது.

ஐயரவர்களின் ஆராய்ச்சிக்கு அப்புறம் தில்லை வளாகம் ரொம்பப் பிரசித்தி பெற்றுவிட்டது.

''கம்பரைக் கம்பநாடர், கம்பநாட்டாழ்வார் என்கிறார்கள். இதிலிருந்தே அவர் சோணாட்டில் உள்ள

தேரழுந்தூரில் வந்து தங்கியவர்தான். அவருடைய சொந்தச் சீமை சோணாடாக இல்லாத கம்பநாடு என்று ஆகிறது. முன்னூல்களைப் பார்த்தால் 'கம்ப நாடன்' என்பது காஞ்சீபுரத்தில் கோயில் கொண்டி ருக்கும் ஏகம்பநாதனின் பெயராகவே தெரிகிறது. ஏகம்பன் என்பது கம்பன் என்று ஆகலாம். அல்லது கம்பா நதி பாய்வதால் காஞ்சி மண்டலத்திற்குக் கம்பநாடு என்று பெயர் ஏற்பட்டதாகக் கொள்ள லாம். இப்படி இன்னொரு சீமையில் இருந்து இவர் சோணாட்டுக்குப் போய் வாசம் செய்ய ஆரம்பித்தி ருந்தால்தான் இவர் புதிதாகப் போன சீமைக்காரர். இவரை இன்ன நாட்டுக்காரர் என்று சொல்லிக் 'கம்ப நாடர்' என்று பெயர் வைக்க இடம் ஏற்படும்' என்பது இந்தத் தமிழ்த் தாத்தாவின் கருத்து.

## குறிப்பு

(ஐயரவர்களுக்குத் திவ்யப் ப்ரபந்தத்தில் ஈடுபா டில்லை என்று ஸ்ரீசந்த்ரசேகரேந்திர சரஸ்வதி சுவா மிகள் கூறியுள்ளார். ஆயினும் ஐயரவர்கள் தாம் பதிப்பித்த குறுந்தொகை முதலிய நூல்களில் திவ்யப் ப்ரபந்தப் பாசுரங்களைத் தக்க செய்யுட்களில் மேற் கோள் காட்டியிருக்கிறார்; திவ்ய ப்ரபந்த உரைப் பகுதிகளையும் மேற்கோள் காட்டியிருக்கிறார். தாம் எழுதிய தேவார அரும்பத அகராதித் தொகுதிகளில் திவ்யப் ப்ரபந்தப் பாசுரப் பகுதிகளை ஒப்புமை காட்டியிருக்கிறார். திவ்யப் பிரபந்தத்தில் உள்ள அருஞ்சொற்களைத் தொகுத்து அகர வரிசைப்படுத் தித் 'திவ்யப் ப்ரபந்த அருஞ்சொல் அகராதி' எழுதி யிருக்கின்றார்; இந்நூல் நூல்நிலைய வெளியீடாக பதிப்பிக்கப் பெற்றுள்ளது.)

## ஒளிர்தலும் ஒளித்தலும்

*உண்மையை உணர்ந்து பாராட்டி ஊக்கமளித்து அன்பு செய்யும் பெருந்தகையினருக்கு முன்பு கல்வியறிவு தானே ஒளிவிடும். எதையும் கண்டித்து அடக்கும் தகைமையாளருக்கு முன் மிக்க கல்வியறிவு கூட இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளித்துக் கொள்ளும்.*

**-ஐயரவர்கள்**

## சுவடிப்பற்று

*தமிழ் ஆராய்ச்சியில் நான் ஈடுபட்ட பிறகு தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடுவது என் வாழ்க்கையில் ஒரு முக்கியமான வேலையாகி விட்டது. அச்சிட்ட புத்தகமோ, அச்சிடாததோ எதுவானாலும் சுவடியின் உருவத்திலே காணும் பொழுது ஏதோ தெய்வத்தின் உருவத்தைக் காண்பது போலவே நான் எண்ணுவது வழக்கம். சுவடிகளைத் தேடி அவை இருக்குமிடம் சென்று மூலை முடுக்குகளில் கிடைக்கும் அவற்றைத் தொகுத்து ஆராய்வதில் என் உள்ளம் ஒரு தனி இன்பத்தை அடையும் என் உடலில் முதுமைப் பருவத்தின் தளர்ச்சி ஏறிக் கொண்டே வந்தாலும் என் உள்ளத்தில் மட்டும் ஏட்டுச் சுவடிகளிலுள்ள பற்று இறங்கவே இல்லை. சில வருஷங்களுக்கு முன் வரையில் ஒவ்வொரு வருஷமும் எங்கேனும் சென்று ஏட்டுச் சுவடிகள் தேடி வருவதை முறையாகவே செய்து வந்தேன். எனக்கு அதுவே தீர்த்த யாத்திரையாகவும் தல யாத்திரையாகவும் உள்ளது.*

**-தமிழ்த்தாத்தா**

## தமிழ்க்கவிதை

*பண்டைக் காலத்துப் புலவர்களின் கவிதை இயற்கைத் தாயின் மடியில் தவழ்ந்து, தெய்வீகக் காதலிலும் அறம் திறம்பா வீரத்திலும் விளையாடி, சமரஸ நிலையில் வீற்றிருக்கின்றது. கவிஞர்களுடைய சிருஷ்டிகளில் அருவிகள் இடையறாத சங்கீதத்தோடு வீழ்வதும், அதில் மகளிர் துளைந்து விளையாடி இன்புற்று மலர்களைப் பறித்து பாறையிலே குவித்து அழகு பார்ப்பதும், நாயகன் ஒருவன் வேட்டையாடிக் கொண்டு வருவதும், அவன் அம்மகளிர் கூட்டத்திலுள்ள நாயகி ஒருத்தியைக் காண்பதும், இருவர் கண்களாகிய மடைவழியாகப் பாய்ந்த அன்பு வெள்ளத்தில் இருவருள்ளமும் கலந்து கரைவதுமாகிய நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம்.*

**-தமிழ்த்தாத்தா**

# தமிழ்த் தாத்தா

தமிழில் என்னதான் இருக்கிறது? என்று கிண்டலும் கேலியுமாகத் தமிழ் நாட்டில் பிறந்தவர்களே சவால் விடுத்துக் கேட்ட காலம் ஒன்று இருந்தது. சுதேச மொழி, பண்பாடு ஆகியவற்றை வெறுத்து ஒதுக்கி, மேநாட்டு மோகத்தில் மிதந்த மேதாவிகள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அப்பொழுது பிழைப்புக்கு வழிதேட, வகையற்றதாயிருந்தது தாய்மொழி. ஆகவே, அரியாசனத்தில் ஆட்சி செலுத்த வேண்டிய கன்னித்தமிழ், அலட்சியம் செய்யப்பட்டு மூலையில் முடங்கிக் கிடந்தது.

இப்பேர்ப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் தோன்றினார் சாமிநாத ஐயரவர்கள். வாழ வழி வகுக்கும் கல்வியில் நாட்டம் செல்லவில்லை அவருக்கு தமிழின் தீஞ்சுவை ஆகர்ஷித்தது. அடிமைப் படுத்திக் கொண்டது. அன்னையின் அருளால் பக்குவமடைந்து பூரணத்துவமும் பெற்றார். அன்று முதல் அன்னையின் பணியே அவரது மூச்சுக் காற்றாயிருந்தது. 'தமிழ்த் தாத்தா' என்ற சிறப்புப் பெயர் அவரைத் தேடி வந்தது. 'தமிழில், இவ்வளவு இருக்கிறதா?' என்று மூக்கின் மேல் விரல் வைத்துத் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் கேட்கும் நிலை ஏற்பட்டது.

ஐயரவர்களின் சேவை, புதைந்த பொக்கிஷங்களை வெளிக் கொணருவதோடு நிற்கவில்லை. தாம் கண்டறிந்து சுவைத்ததைப் பிறர் படித்துப் பிடித்துக் கொள்ள வழிகாட்டிய முதல்வர் அவர். செல்லரித்துப்போன அரிய நூல்களில் பலவற்றைச் சீர்படுத்தி, இடைச் செருகல்களை நீக்கி, பல்வகைக் குறிப்புக்கள் கொடுத்துப் பதிப்பித்தார்.

ஐயரவர்கள் தவம் பெற்ற தவமாவர். தளராத உழைப்பாளர். அதோடு சிறந்த ஒழுக்கமுடையவர். இத்தகைய நற்பண்புகள் தாம் அவனியில் யாருக்குமில்லாத பெருமதிப்பை அவருக்கு நல்கின.

எச்சாதி, எச்சமயம், எக்கொள்கை உடையோரேனும், 'ஐயரவர்கள் இல்லையேல் தமிழ் இல்லை' என்ற கூற்றை மறுதளிக்காமல் ஒப்புக்கொள்ளவே செய்வர். அப்பெரியார் நமக்கு அளித்த இலக்கியச் செல்வங்களையெல்லாம் பயின்று, தமிழை மேன் மேலும் வளப்படுதத தமிழக மாந்தர்கள் அனைவரும் உறுதி கொள்வாராக!

## புலவர் புகழ்

*உடலை வளர்த்தற்குரிய பலவகையான பொருள்களை வழங்கும் அறங்களினும் உள்ளத்தின் உணர்வு வளர்ச்சிக்குக் காரணமான கல்வியை வழங்கும் வள்ளன்மை சிறந்ததாக ஆன்றோர்களால் எக்காலத்தும் மதிக்கப்படுகின்றது. ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமையும் பயன்தருதலால் அதனை வழங்கும் பெரியோர்கள் உலகில் உயர்ந்தவர்களாகவும் பேருபகாரிகளாகவும் எண்ணப் படுகின்றனர். அவர்கள் செய்த பேரறத்தின் பயனாகவே கலைவளம் சிறந்து விளங்குகின்றது. மக்களுடைய மன உணர்வைப் பண்படுத்தும் அப்பெரியோர்கள் செய்த அருஞ் செயல்களும் இயற்றிய நூல்களும் எல்லோராலும் போற்றப்பட்டு வருவது யாவரும் அறிந்ததேயாகும். காலதேச வர்த்தமானங்கள் எங்ஙனம் மாறினும் அத்தகைய புலவர்களுடைய புகழ் குன்றாமல் ஒரே நிலைமையில் நிலவி வருகின்றது. சிலருடைய புகழ் வளர்ச்சியுற்றும் வருகின்றது.*

**-ஐயரவர்கள்**

## கலைமகள் திருவருள்

*கல்வி கற்பார் யாவரும் கலைமகளின் திருவருளைப் பெற வேண்டும். நம் நாட்டிற் சிறந்த கவிஞர்களாகப் போற்றப் பெறும் காளிதாசர், கம்பர், ஒட்டக்கூத்தர், குமரகுருபரர் முதலியோர் கலைமகளுடைய திருவருள் நோக்கத்தைப் பெற்றவர்களே. கம்பர் சரசுவதியந்தாதி பாடியிருக்கிறார். ஒட்டக்கூத்தர் கூத்தனூர் என்னும் ஊரில் திருக்கோயில் கொண்டுள்ள கலைமகளை வழிபட்டுப் புலமை வாய்ந்தனர். குமரகுருபரரோ சகலகலாவல்லி மாலை பாடி ஹிந்துஸ்தானி பாஷையை அறிந்து கொண்டார். பரம சைவராகிய அவர் மனங் கரைந்து கலைமகளைத் துதித்துள்ளார். 'கண்கண்ட தெய்வம்' என்று பாராட்டுகின்றார். அதனால் கலைமகள் சமயங் கடந்த தெய்வம்' என்று அறிகிறோம். பௌத்தர்களும் சைனர்களுங்கூட க்லைமகளை வணங்கிவந்தனர்.*

**ஐயரவர்கள்**

# சுவடி கண்ட ஜோதி

அ. வைத்தியநாதன்

(சுதேசமித்திரனில் 1955ல் வெளிவந்தது)

'சுவடி என்றால் என்ன? என்று கேட்கும் இளைஞர்கள் இன்று பலர் இருப்பர். அந்தச் சுவடிகளே பழங்காலத் தமிழகத்தின் பெருமையையும், தமிழ் மொழியின் வளமையையும் எடுத்துக் காட்டிய ஜோதியாய்த் திகழ்ந்தன என்பதையும், ஓர் ஒப்பற்ற உத்தமர் பட்ட பாட்டாலேயே அந்த ஒளி என்றும் அவியா ஒளியாய் உலகத்தவர் காணும்படி திகழ்கின்றது என்பதையும் அறிவாராயின் சுவடியைப் பற்றி அறிவதில் ஆர்வம் கொள்வர். ஆனால் இன்று அந்த ஒளியை அளித்த சுவடியைக் காண்பதிலும் அந்தச் சுவடியின் ஜோதியை அமரஜோதியாக்கின விளக்கினைப் பற்றி அறிய வேண்டுவது மிகவும் அவசியம் என்பதினும் கடமை என்பதே பொருத்தமாகும்.

இற்றைக்கு நூறு ஆண்டுகட்கு முந்திய 1885-ம் ஆண்டில் இருந்த நம் தமிழகத்தை மனக்கண்ணால் பார்ப்போம். அன்று நம்முள் எவரும் இல்லை. அன்றைய தமிழகமும் தமிழும் இன்றுபோல் இல்லை. தமிழின் தொன்மையையும் வளப்பத்தையும் தமிழரின் நாகரிகத்தையும் பண்பாடுகளையும் பற்றி இன்று நாம் அறிந்திருக்கும் அளவு அக்காலத்தினர் அறியுவில்லை. அறிய முயலவும் இல்லை. அவற்றை அறிவிக்கும் ஏட்டுச் சுவடிகளைத் தொட்டுக்கூடப் பாராமல் இருந்தவர் பலர்; முன்னோர் தந்த ஏடு என்று மூடிவைத்துத் தூப தீபம் காட்டி அலமாரியுள்ளே எவர் கண்ணிலும் படாமல் அடக்கப்படுத்தி வைத்தவர் சிலர். 'இந்தச் சுவடிகளெல்லாம் அனாவசியமாக இடத்தை அடைத்துக் கொண்டு, எலியும், கறையானும் வாழ வசதி செய்து வீட்டைப் பாழாக்குகின்றனவே' என்று வருந்தி அனைத்தையும் கட்டி ஆற்று வெள்ளத்திலே விட்டு ஆத்ம சாந்தியடைந்த மேதாவிகள் சிலர். ஆற்று வெள்ளத்தில் விட்டால் தவறி எவர் கையிலாவது சிக்கிவிடும் என்று கருதியோ என்னவோ அக்கினியை வளர்த்துப் பின் அந்த ஏடுகளை நெய்யிலே தோய்த்துத் தோய்த்து அந்த அக்னியில் ஆகுதி செய்துவிட்டு ஆகம சாஸ்திரங்களில் சொன்னபடி அந்தச் சுவடிகளுக்குச் சம்ஸ்காரம் செய்துவிட்டதாகக் கருதி மகிழ்ந்தவர் சிலர். இப்படிப்பட்டவர்களையெல்லாம் தேடித் தேடிச் சென்று அவர்களிடமிருந்த எஞ்சிய சுவடிகளைக் கெஞ்சியோ, பொருள் கொடுத்தோ, பலமுறை நடந்து அலைந்தோ, பட்டினி கிடந்தோ வாங்கிவந்து மாசைத் துடைத்து, வழுக்களைக் களைந்து, இரவு பகல் ஓயாமல் உழைத்து உருவாக்கி, அச்சுவாகன மேற்றி எல்லோருடைய கையிலும் இலங்கும்படி செய்து பண்டைத் தமிழின் உண்மையான ஒளியை ஏற்றி வைத்த ஜோதியெனத் திகழ்ந்தவர் மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர். ஐயரவர்கள் என்பதை உலகமறியும்.

ஐயரவர்கள் உழைப்பினால் பத்துப்பாட்டு வெளிவந்தது. எட்டுத்தொகையினுள் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன புத்துயிர் பெற்றன. ஐம்பெருங் காப்பியங்களுள் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன வெளிவந்தன. இந்த நூல்களே இன்று தமிழ் மொழியில் பல நூற்றுக்கணக்கான ஆராயச்சி நூல்கள் தோன்றக் காரணமாயின; தமிழையும், தமிழரையும், தமிழகத்தையும் பற்றி வாயாரப் பேசிப் பேசி மகிழவும், உலகிலே தொன்மையும், பல்லோர் போற்றி மெச்சும் பண்பாடும் நம் தமிழகத்திற்கு இருப்பதுபோல் வேறு எந்நாட்டவர்க்கும் இல்லை என்று மார்தட்டிப் பேசவும் வாயளித்தன. பெருங்கதை அவர்களால் வெளியிடப்பெற்றுப் பெருமை எய்தியது இன்னும் இலக்கண நூல்கள், பலவகைப் பிரபந்தங்கள் வெளியாயின. உரைநடையில் பல பெரியோர் சரித்திரங்கள், தம் வாழ்க்கையில் நேர்ந்த பல ரஸமான நிகழ்ச்சிகள் முதலியன அவர்களால் எழுதப்பட்டன. ஒவ்வொரு நூலும் தமிழுக்கு மேலும் மேலும் பெருமையையும் புகழையும் தேடித் தருவதாயிற்று.

தேவருலகத்திலுள்ள சிந்தாமணி கேட்டவற்றையெல்லாம் கொடுக்கும் என்பர். கும்பகோணத்தில் ஜில்லா முன்சீபாயிருந்த சேலம் ராமசாமி முதலியாரவர்கள் ஐயரவர்களிடம் கொடுத்த சிந்தாமணிப் பிரதி உண்மையிலேயே எத்தனையோ அருமையான தமிழ் நூல்களை அடுத்தடுத்து வெளிவரச் செய்தது. ஐயரவர்கள் கையில் அந்தச் சிந்தாமணி கடிதப் பிரதி வந்திராவிடில் தமிழ் மொழியின் தலையெழுத்து எப்படி எப்படி மாறிப் போயிருக்குமோ நாமறியோம். சுவடியைப் பார்த்துச் சரியான பாடத்தைக் கண்டுபிடித்துப் போடுவதில் எவ்வளவு சிரமம் உண்டு என்பதைச் சுவடியைப் பிரித்துப் படித்துப் பார்த்தவர்களே அறிவர். தற்காலத்தில் சுவடி வடிவத்திலிருந்து அச்சுப் புத்தக வடிவமாயிருக்கும் சில பதிப்புக்களைப் பார்ப்பதனாலும் அதனை உணரலாம். ஐயரவர்களே ஏட்டுச் சுவடியைப் படிப்பதிலுள்ள சிரமங்களைத் தாம் எழுதிய சுயசரிதத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள்.

''பலவகையில் முயன்று தேடியதில் சிந்தாமணிப் பிரதிகள் 23 கிடைத்தன. அவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கலானேன். பார்க்கப் பார்க்க, பல விஷயங்கள் தெளிவாயின. ஆனால்

பாடபேதக் கடலுக்குக் கரை காணவே முடிய வில்லை. மனம் போன போக்கிலே எழுதிய கனவான்களால் விளைந்த விபரீதம் எவ்வளவோ ஏட்டில் உண்டு.''

''இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள் ளியே இராது. 'ர'கரத்தறிகும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. 'சரபம்' 'சாப'மாகத் தோன்றும். சாபம் சரபமாகத் தோன்றும். ஓரிடத்தில் சரடு என்று வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்றே பலகாலம் எண்ணியிருந்தேன். தரனென்பதைத் தானென்று நினைத்தேன்.''

''இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் பேதந் தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள் பல. உரை இது, மூலம் இது, மேற்கோள் இது என்ற வேறுபாடு தெரியாமல் முட்டுப்பட்ட சந்தர்ப்பங்கள் பல.''

இப்படியெல்லாம் தமிழுக்காகவே இடர்ப்பட்டு, ஆயுள் முழுவதும் தமிழையே சுவாசமாகவும் கொண்டு அணையும் தருவாயிலிருந்து சங்ககாலத் தமிழ் நூல்களாகிய தீபங்களுக்குத் தம் உழைப்பா கிய எண்ணெயை ஊற்றி, தம் ஆயுளாகிய திரியை யும் இட்டு அணையாச் சுடராக விளங்கி ஒளிரும் படி செய்தார்கள். ஐயரவர்கள். அவர்கள் ஏற்றிய சங்கால இலக்கிய அறிவொளி தமிழகத்திலுள்ள பல்வேறு உள்ளங்களிலும் புகுந்து பல ஆராய்ச்சி நூல்களை எழுதத் தூண்டியது. எங்கும் தமிழ், தமிழ்க் காவியங்கள், தமிழகம், தமிழர் பண்பாடு, வீரம், கொடை, தியாகம் போன்றவற்றை இடைவி டாதபடி பேசச் செய்தது. சிலருள்ளங்களில் தமிழ் வெறியைக்கூட மூட்டிவிட்டுப் பிற மொழியிலுள்ள நல்ல விஷயங்களையும் காணவொட்டாதபடி செய் கிறது என்றும் சொல்லலாம். எனவே தமிழ் மொழி யைப் பேசுவோர் அனைவரின் உள்ளத்திலும் தமிழுணர்ச்சியையும், தமிழர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதத்தையும் ஏற்படச் செய்தவர் ஐயரவர்களே. தமிழுள்ளளவும், சங்க நூல்கள் உள்ளளவும் ஐயரவர்கள் பெயரும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ ஐயரவர்கள் நற்குணக் குன்று. அவர்கள் தமிழையும், தமிழுக்காக உழைத்தலையுமின்றி வேறு எதனையும் மனதிற் கொள்ளார். வைகறை தொடங்கி இரவு பத்து மணி வரை தமிழ்த் தாய்க்கே தொண்டு செய்தவர். தம்மை நாடித் தமிழ்த் தேன் சுவையை நுகர வந்திருப்போரையும் அந்தத் தமிழ்த் திருப்பணியிலே ஈடுபடச் செய்வர். அவர்கள் முன்னிலையில் ஏதேனும் படித்தலோ, ஏடு ஒப்பிட் டுப் பார்த்தலோ நூற்குறிப்புக்கள் எடுத்தலோ போன்ற காரியங்களே நடைபெறும். அங்கு எவ்வித வீண் பேச்சுக்கும் இடமே இராது. சோம்பலே உருவென வருவோரும் ஐயரவர்களோடு சில நாட்கள் இருப்பாராயின் ஒரு கணமும் வீணாக்காத உழைப்பாளியாக மாறி விடுவர்.

ஐயரவர்களது கூரிய ஆயுதம் ஞாபக சக்தி என்பது. அது அவர்களது இறுதிக்காலம் வரை மழுங்கவே இல்லை. சில குறிப்புக்களைச் சொல்லி எழுதச்செய்து ஓரிடத்தில் வைக்கச் சொல்வார். சில நாட்களில் அவ்வாறு எழுதிவைத்ததை நாங்கள் மறந்துவிடுவோம். இரண்டு மாதங்களோ மூன்று மாதங்களோ கடந்ததும் 'அன்று எழுதிய குறிப்புக் களை எடுத்துவாரும்' என்பார். வைத்த இடம் நினைவில் வராமல் எல்லாக் குறிப்புக்களையும் புரட்டுவோம். அது கண்டு அவர்கள் இன்ன இடத்தில் வைத்தீரே என்று சொல்லி இடத்தையும் சுட்டிக் காட்டுவார். இது அடிக்கடி நிகழக்கூடிய சாதாரண நிகழ்ச்சி.

ஐயரவர்கள், எவரையும் ஒருமையில் விளித்து அழைக்க மாட்டார். 'நீர்' என்றே சொல் மரியாதை கொடுத்துப் பேசுவார்கள். தம் காரியங்களைத் தாமே செய்ய வேண்டும் என்ற உறுதியான கொள்கை அவர்களுக்குண்டு. தள்ளாடத் தள்ளாட வேனும் தம் காரியங்களைத் தாமே நிறைவேற்றிக் கொள்வாரேயன்றி பிறர் செய்ய விடமாட்டார்கள்; செய்வதாகச் சொல்லி வலிந்து ஏற்றுக் கொள்வதாயி ருந்தாலும் சம்மதிக்க மாட்டார்கள்.

இன்னும் அவர்களுடைய நெறி தவறாநிலை, இரக்க சிந்தனை, எளியவர்க்கு உபகாரியாம் தன்மை, தமக்கு நன்றி செய்தவர்களை எண்ணும் போது உள்ளம் உருகிச் சிரமேற் கைகவித்துக் கண்ணீர் பெருக்கும் இயல்பு, பிறர் செய்த தீமை களை அறவே மறந்து விடுதல் போன்ற நற்பண்பு களை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளாக, நான் அவர்கள் அடிநிழலில் தங்கிய இரண்டாண்டு காலத் தில் கண்டவை பல உண்டு.

ஐயரவர்கள் தமிழ்நாடு செய்த தவப்பயனாகத் தோன்றியவர்; மாசு படிந்து மறைந்து கொண்டிருந்த தமிழ் மொழியைப் புத்துயிர்ப் பெறச் செய்தவர். எத்தனையோ ஆண்டுகள் உழைத்தாலும் நிறை வேற்ற முடியாத காரியங்களைச் சில ஆண்டுகளி லேயே செய்து முடித்த உத்தமர். எனவே சங்ககா லத் தமிழ் நூற்சுவடிகளை ஐயரவர்கள் கண்டெடுத் துத் தம் அறிவுச் சுடரால் ஒளியுடையன வாக்கிச் ***சுவடி கண்ட ஜோதியானார்கள்.*** அந்த நூற்சுவடிக ளும் ஐயரவர்களாகிய ஜோதியை நாம் அடைந்தால் தான் ஒளி பெற முடியுமென்று அறிந்து அவர்கள் கையை அடைந்ததனாலும் அவர்கள் சுவடி கண்ட ஜோதியானார்கள். இந்த ஜோதி தமிழகத்தில் என் றும் மங்கா ஒளியாய்த் திகழும் என்பதில் ஐய மில்லை; அங்ஙனம் ஒளிரும்படி செய்வதும் தமிழ் மக்களது கடமையாகும்.

# இராமநாதபுரம் சமஸ்தானம் மகாராஜராஜ ஸ்ரீ மாட்சிமை தங்கிய ஸ்ரீராஜராஜேஸ்வர சேதுபதி மகாராஜா அவர்கள் தேகவியோகமடைந்தபோது பாடிய சரமகவிகள்.

### (செந்தமிழ் 26-ம் தொகுதி)

மகாமகோபாத்தியாய:
பிரம்மஸ்ரீ டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் பாடியவை.

*ஒப்பொன்று மிலதாகி யுயர்செல்வத் தவர்க்குளவாந்*
*தப்பொன்று மிலனாகித் தனையடுத்த வறிஞர்களுக்*
*கெய்ப்பொன்று மிலதாச்செ யிராசரா சப்பெயர்கொள்*
*துப்பொன்று மரசுபுவி துறந்ததுயர் சொலற்பாற்றோ.* (1)

*காட்சியினாற் பவந்தொலைக்குங் கவின்சேது நாட்டினர*
*சாட்சியன்சீர்ப் பாற்கரவே ளருந்தவத்தா லுதித்தபெரு*
*மாட்சியுறு புகழ்ராச ராசமகி பாலவிசைப்*
*பூட்சியைநன் றெனமதித்தோ பூதவுடல் நீத்தனையே.* (2)

*பொதுநோக்கந் தவிர்தியெனப் புகழ்க்கபிலன் சொலக்கேட்டே*
*யதுநோக்கு + மலையனிவ னாமென்றே யிருந்தவெமைச்*
*செதுநோக்க ரிடைநிறுவிச் சேர்ந்தனைபொன் னுலகென்னோ*
*முதுநோக்க முறுராச ராசேச மொழிகுவையே.* (3)

*காகமெலாங் குயிலாகக் காண்கலியி னிவிண்ணம்*
*போகல்புரிந் தனையடுத்தோர் புன்கணுற லறிந்திலையே*
*பாகமொரு பெண்ணுடைய பரம்பொருளை நினைந்துருகும்*
*ஏகமுறு மனமுடைய விராசரா சேந்திரனே.* (4)

*பன்னுறுசெந் தமிழ்ச்சுவையைப் பகர்ந்துமகிழ் வித்திடுநீ*
*துன்னுறுவின் ணகஞ்செலினச் சுவையினையான் கேட்பதெவன்*
*மன்னுறுமச் சுவையினையான் வகுத்துரைக்கு மிடம்யாதோ*
*என்னுறுகண் தீர்த்தளித்த விராசரா சேந்திரனே.* (5)

*என்னதுய ருளத்தினிடை யிருந்திடினு நினைக்கண்டா*
*லன்னதுவிண் டகலமிக வகமகிழ்வ மினியெங்க*
*ளின்னலினை யறிபவரா ரிராசரா சேந்திரனே*
*பன்னரிய விசைக்கனியே பார்வேந்தர் நாயகமே.* (6)

*விருப்பமகன் றவர்களுமே விரும்புறநீ வீற்றிருந்திட்*
*டுருப்பமறத் தமிழ்விருந்தை யூட்டிடுதல் மறப்புறுமோ*
*திருப்புகழா தியவற்றைத் திப்பியநல் லிசையுடன்சொற்*
*றிருப்புளமுங் குழைவிக்கு மிராசரா சேந்திரனே.* (7)

*தங்குவளக் கைலையிடஞ் சார்ந்தனையோ செங்கரத்திற்*
*சங்குடைய செங்கணவன் றனதுலகு சார்ந்தனையோ*
*கொங்குமிகு கடம்பணியுங் குகனுலகு சார்ந்தனையோ*
*எங்குநடந் தனைநவிறி யிராசரா சேந்திரனே.* (8)

*பால்வேண்டும் பழம்வேண்டும் பணம்வேண்டும் பலவுடுப்பு*
*மேல்வேண்டும் கோல்வேண்டும் விரைசகட மிகவேண்டும்*
*★ ஆல்வேண்டு மெனலன்றி யரசேநின் போற்றமிழ்த்தொன்*
*னூல்வேண்டு மெனவன்பி னுவலபவரைக் கண்டிலமே.* (9)

*கரையில்புகழ் மிகுசேது காவலவ னொருசிறிதும்*
*புரையில்குண முறுராச ராசபுர வலன்றனையித்*
*தரையிலிருந் தகற்றிடச்செய் தறுகண்மை யுடைக்கலியின்*
*வரையில்பெருங் கொடுமையினி மாறவரு ளிறையவனே.* (10)

*அளிமேவு மரசேநீ யாற்றுதவத் தாலுதித்த*
*நளிமேவு குணநாக நாதனெனுங் குலக்கொழுந்திற்*
*கொளிமேவு நினதரசை யுதவியருளொழித்திடுநின்*
*களிமேவு விறலதனைக் கடலுலகு புகழ்ந்திடுமே.* (11)

---

★ ஆல்-ஹால் (Hall)

# உ.வே.சாமிநாத ஐயர்

- நாமக்கல் கவிஞர் பாடல்கள்

பேச்செல்லாம் தமிழ்மொழியின் பெருமை பேசிப்
பெற்றதெல்லாம் தமிழ்த்தாயின் பெற்றி யென்று
மூச்செல்லாம் தமிழ்வளர்க்கும் மூச்சே வாங்கி
முற்றும் அவள் திருப்பணிக்கே மூச்சை விட்டான்
தீச்சொல்லும் சினம் அறியாச் செம்மை காத்தோன்
திகழ்சாமி நாதஐயன் சிறப்பை எல்லாம்
வாய்ச்சொல்லால் புகழ்ந்துவிடப் போகாதுண்மை;
மனமாரத் தமிழ்நாட்டார் வணங்கத் தக்கோன்.

அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந்தலைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடித் தேடிச்
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கிச்
சோர்வறியா துழைத்தஒரு சாமிநாதன்
இல்லையெனில் அவன் பதித்த தமிழ்நூலெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்திடாதே.

சாதிகுலம் பிறப்புகளாற் பெருமை யில்லை;
சமரசமாம் சன்மார்க்க உணர்ச்சி யோடே
ஓதிஉணர்ந் தொழுக்கமுள்ளோர் உயர்ந்தோர் என்னும்
உண்மைக்கோர் இலக்கியமாய் உலகம் போற்ற
ஜோதிமிகும் கவிமழைபோல் பொழிமீ னாட்சி
சுந்தரனாம் தன்குருவைத் தொழுது வாழ்த்தி
வேதியருள் நெறிபிசகாச் சாமிநாதன்
விரித்துரைக்கும் சரித்திரமே விளங்கி நிற்கும்.

மால்கொடுத்த பிறமொழிகள் மோகத் தாலே
மக்களெல்லாம் பெற்றவளை மறந்தார் ஞானப்
பால் கொடுத்த தமிழ்த் தாயார் மிகவும் நொந்து
பலமிழந்து நிலைதளர்ந்த பான்மைபார்த்துக்
கோல்கொடுத்து மீட்டுமவள் கோயில் சேர்த்துக்
குற்றமற்ற திருப்பணிகள் பலவும் செய்து
நூல்கொடுத்த பெருமைபல தேடித் தந்த
நோன்பிழைத்த தமிழ்த்தவசி சாமி நாதன்.

# மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணியவர்கள்

*(கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ வே.சாமிநாதையர் அவர்கள் மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணியவர்கள் பேரிற் பாடிய பின்வரும் கவிகள் 1902 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி சனிக்கிழமையன்று ஹிந்துப் பத்திரிகையில் வெளி வந்தவை.)*

### விருத்தம்

சீர்பூத்த தண்ணளியில் திகழ்பூத்த
இல்லறத்தில் திகந்தம் எட்டும்
பேர்பூத்த கற்பினில்இப் பார்பூத்த
செங்கோலில் பிராணன் என்ன
ஏர்பூத்த பிறஉயிரை எண்ணலில்நேர்
இன்றிஉல கினிதின் ஆண்ட
கார்பூத்த விக்டோரியா அவர்களைநாம்
இழந்ததுயர் நவிலொ ணாதே.

கலைமகளே இவர்என்றும் புகழ்மகளே
இவர்என்றும் கமலம் மேய
அலைமகளே இவர்என்றும் சிலைமகளே
இவர்என்றும் அரிய யாவும்
நிலைமகளே இவர்என்றும் அறிவுடையோர்
நிகழ்த்துகுண நிலயம் ஆகித்
தலைமகளாய் உலகாண்ட இவர்பிரிந்த
பெருந்துயரம் சாற்றல் பாற்றோ.

ஆட்சிபுரி வோர்சூழ்வார் கண்ணாகக்
கொள்களன ஆன்றோர் செப்பும்
மாட்சிஉரைக் கிலக்கியமாய் இவ்வையம்
அனைத்தினையும் வறிஞன் ஓம்பும்
காட்சிநலத் தொருசெய்யின் காத்தாண்ட
இவர்பெருஞ்சீர் கழறு தற்குப்
பூட்சியுடை அறிஞர்களும் மனம்துணியார்
எனின்யாமோ புகல்வ மன்னோ.

### வேறு

பண்கூடும் ஆழிமன்னர் பார்அளித்தாய் என்பதனை
எண்கூடும் நூல்கள் இசைத்திடவே கேட்டறிந்தோம்
திண்கூடும் கற்புடைய சீமாட்டி யார்இவர்பால்
கண்கூடாக் கண்டோம் கரைகூடா வாழ்வடைந்தே.

அரசிஇவர் பால்எவர்க்கும் பயன்கருதி
அன்புபத்தி ஆதி எல்லாம்
விரசிவளர் கின்றனஎன் றுரைசெய்தார்
முனம்ஒருவர் விளங்கும் வேந்தர்
வரசிகர மணிஇவர்பால் நமக்கியல்பா
அவைமேன்மேல் வளர்ச்சி உற்றுப்
பரசிநிதம் களித்துவக்கும் படிவிளங்கு
மேல்இவர்தம் பான்மை என்னே.

எத்தேயத் தினர்பாலும் எம்மதத்தோர்
பாலும்எந்த இயல்போர் பாலும்
ஒத்தேஅன் பமைந்திந்த உலகாண்ட
இவர்மற்றோர் உலகில்அன்பு
வைத்தேகி னார்எனினும் இவர் குணங்கள்
அனைத்துமரீஇ வளர்ந்தோர் ஆய
முத்தேய்ந்த ஒருசார்வ பௌமரின்நம்
குறைகளெலா முருக்கு வாமால்.

செறிந்தோங்கு முத்திநெறி தனைஉணர்ந்து
நால்வேத சிரத்தின் சீரைப்
பிறிந்தோங்கு பலதீவி னரும்இந்த
நாட்டினர்போல் பெரிதும்பேணி
அறிந்தோங்கும் படிபுரிந்த தால்இவர்தம்
அரசாட்சி யான தைந்தை
எறிந்தோங்கு முனிவரர்தம் செயல்சபலம்
உறச்செய்த தென்பர் மன்னோ.

### கட்டளைக் கலித்துறை

இலங்கும் நல் வேந்தர் இயல்பிற்கும்
தாயர் இயல்பினுக்கும்
துலங்கும் உதாரணம் ஈங்கிவர்
சீர்என்றும் தொல்புவிக்குக்
கலங்குதல் தீர்த்த இவரும்
கணவரும் காதலித்த
அலங்குறு தாம்பத் தியம்வே
றெனவும் அறைகுவரே.

### வெண்பா

என்னே கருணை இருந்தவா தெய்வத்திற்கு
அன்னே எனும்இவர்நீங் கப்பொழுதின் - முன்னே
பரசார் இவருடைய பண்பகள்சான் றோரை
அரசாகச் செய்துதவ லால்.

**விவேகசிந்தாமணி தொகுதி 9**

# மகாமகோபாத்தியாய: டாக்டர் சாமிநாதையர்
## (19-2-1855 - 28-4-1942)

*திருவல்லிக்கேணி ஹிந்து இளைஞர் சங்கத்தினர் டாக்டர் சாமிநாதையரவர்களுடைய திருவுருவப் படத்தையும் பாரதியாருடைய திருவுருவப் படத்தையும் 1942-ன் இறுதியில் தங்கள் சங்கத்தில் அமைத்த விழாவில் சென்னை ஸர்வ கலாசாலைத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் (1936-1946) எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் பேசிய குறிப்பினின்று எழுதியது.*

### தொண்டின் பெருமை

தமிழன்னையின் இளமைப் பருவத்தே அவள் புனைந்தருளிய சிறந்த பொற்பணிகள் பலவற்றைத் துருவித் தேடிக் கண்டு அவற்றை மாசு நீக்கி மீண்டும் அழகுறுத்தி அவள் தெய்வத் திருமேனி யில் அணிவித்து மகிழ்ந்த தமிழ்ச் செல்வர் யாவர்? தமிழ்ப் புலமைக்கு உரையாணியாக விளங்கும் தமிழ்ப் பெருந்தகையார் யாவர்? தமிழ்க்கல்வி புதியதோர் மேம்பாடுற்று எவரும் போற்றத்தக்க நிலையிலே தற்காலத்து நிலவுவதற்குக் காரணமா யுள்ள அருந்தமிழ்ப் பேராசிரியர் யாவர்? தமிழ் மக்கள் தங்களுடைய புராதன நாகரிகத்தையும், தொன்மை பெருமை முதலியவற்றையும் நன்கு உணர்ந்து களிப்புறும் வண்ணம் செய்வித்த தமிழ் மகனார் யாவர்?

இச்செயற்கரிய செயல்களையெல்லாம் செய்த பெரியார் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்களே ஆவர்.

டாக்டர் சாமிநாதையரவர்கள் நம்மிடை நின்று மறைந்து சில மாதங்கள் ஆயின. அவர்கள் குடும் பத்தினர் வடித்த கண்ணீர்த் துளிகள், அவர்கள் உறவு முறையினர் சிலகாலம் அடைந்த அருந்துய ரம், அவர்கள் நண்பர்களுடைய சிலகாலத் துக்கம், அவர்களைத் தெரிந்தவர்களின் மனத்துயரம், அங் கங்கே தமிழ்க் கழகங்களில் நிறைவேற்றப்பட்ட அநுதாபத் தீர்மானங்கள், பத்திரிகைகளில் கறுப்புக் கோடுகளில் அடைத்த துக்கச் செய்தி. இவற்றோடு அவர்களைக் குறித்த ஞாபகம் மறைந்துவிடக் கூடியதா? அன்று ஒருவேளை அவர்களுடைய திருவுருவப் படத்தை அங்கங்கே அமைத்துப் போற்றினால், அவர்களைப் பற்றிய நினைவு அத் தனை எளிதில் மாய்ந்து விடாது. எனவே இச்செயல் மிகவும் பாராட்டத் தக்கதே.

ஐயரவர்கள் பண்டைத் தமிழிலக்கியத்தின் பிரதி நிதி. தற்காலத் தமிழிலக்கியத்தின் பிரதிநிதி பாரதி யார். இவ் இருவரும் திருவல்லிக்கேணியோடு தொடர்புடையவர்கள். பாரதியார் சென்னை மாகா ணத்தின் தென்கோடியில் உள்ள திருநெல்வேலி யைச் சார்ந்தவர்கள்; ஐயரவர்கள் இந்த மாகாணத் தின் வடபகுதியில் உள்ளவர்கள். பாரதியார் நம் தமிழன்னையின் உக்ரமூர்த்தமாக உள்ளவர்; ஐயர வர்கள் நம் அன்னையின் சாந்தமூர்த்தமாக உள்ள வர்கள். பாரதியாரின் சொற்கள், தேசபக்தியும் தமிழ்ப் பற்றும் கொழுந்து விட்டெரியுமாறு, கேட் போரின் மனத்திலே அளவற்ற பக்திக் கனலை அள்ளியெறிந்து அம்மனத்தைப் பற்றி எரியச் செய்கின்றன; ஐயரவர்களின் சொற்கள் ஆழ்ந்த தமிழறிவினால் பரிபக்குவமெய்திக் குளிர்ந்த நில வொளியை வீசுகின்றன. பாரதியார் வாழ்க்கைப் போராட்டத்தில் துன்புற்று நைந்து வருந்தியவர்; ஐயரவர்கள் இவ்வகைப் போராட்டத்தால் துன்பு றாது வாழ்ந்தமை நமது பாக்கியமே. பாரதியார் பெருங்கவிஞர்; ஐயரவர்கள் பெரும்புலவர்; இவ் விரு பெருந்தகைமையாளரின் திருவுருவங்களும் நமது இளைஞர்கள் எப்பொழுதும் தியானித்து வரத்தக்கன. இவ்விருவரது வாழ்க்கைகளும் நம் நாட்டு இளைஞர்களுக்குப் பயன்படக் கூடிய பல உபதேசங்களைத் தரவல்லன.

ஐயரவர்கள் காலத்தில் சிறந்த வித்துவான்கள் பலர் புகழ்பெருக வாழ்ந்தனர். உதாரணமாக ராவ் பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை, ரா.ராகவை யங்கார், திரு.நாராயண ஐயங்கார், வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார், நாகை.வேதாசலம் பிள்ளை (மறைமலை அடிகள்), சுன்னாகம் அ.குமாரசுவா மிப் பிள்ளை முதலிய பெரும்புலவர்கள் பெருஞ்சி றப்புற்று விளங்கியது இவர்கள் காலமேயாகும். ஆராய்ச்சியிற் சிறந்த கனகசபைப் பிள்ளையவர்க ளும், ஆராய்ச்சியிலும் கவித்துவத்திலும் சிறந்து விளங்கிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும் இவர்கள் காலத்தினரேயாவர். இப்பெரும் புலவர் தொகுதிக்கு இப்போது பிரதிநிதியாக வாழ்ந்திருப்ப வர்கள் ரா.ராகவையங்கார் அவர்களும் மறைமலை அடிகளுமே. இப்பெருமக்களிடையே சிறந்தோங்கி யவர்கள் ஐயரவர்கள். இத்தனை பெரியோர்களுக்கி டையிற் சிறந்து வாழ்வதென்றால் ஐயரவர்களு டைய தனிப்பெருமை எவ்வளவாக உள்ளதென ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

ஐயரவர்கள் சுமார் 60 ஆண்டுகளாகத் தமி ழையே சிந்தித்து வந்தார்கள். தமிழ்நூல்களையே ஓதி வந்தார்கள்; தமிழ் நூல்களையே போதித்து

வந்தார்கள்; தமிழ் நூல் ஆராய்ச்சிகளையே செய்து வந்தார்கள்; தமிழ் நூல்களையே பதிப்பித்து வந்தார்கள்; தமிழ் நூல்களையே தேடிப் பெற்றுத் தொகுத்து வந்தார்கள். இவர்கள் இல்லத்தைத் தமிழ்த் தெய்வத்தின் திருக்கோயில் என்றுதான் சொல்ல வேண்டும்.

எத்தனை அரிய நூல்களை இவர்கள் அழகுற, கல்வியாளர்கள் மெச்சும்படி நல்ல முறையிற் பதிப்பித்துத் தந்திருக்கிறார்கள். பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, ஐம்பெருங்காப்பியங்களிற் கிடைப்பன: இவையெல்லாம் ஐயரவர்கள் நமக்குத் தந்த பண்டைத் தமிழ்க் கருவூலங்கள். பதிப்புப் பேராசிரியர் என்ற அருமைப் பெயர்க்கு இவர்களே தக்கவர்கள்.

இவர்கள் பதிப்புக்களால் தமிழன்னையின் நல்லணிகள் மாசு நீக்கப்பட்டு அவள் திருமேனியில் அணியப்பட்டன. தமிழரசர்கள் சரித்திரம், தமிழ்ப் புலவர் சரித்திரம், தமிழ்நாட்டுச் சரித்திரம் இவைகள் எல்லாவற்றிலும் பல அம்சங்கள் தெரிய வந்தன. இவைகளை முற்றும் பரிசோதனை செய்தால், தமிழுக்குரிய புராதன சரித்திரக் குறிப்புக்கள் இன்னும் பல புலப்படும் என்பது உறுதி.

**இவர்கள் தேடித் தொகுத்து வைத்திருக்கும் அரிய நூல்களைத்** திருந்திய முறையில் பதிப்பிடுவதானால், சிறந்த தமிழறிஞர்களுக்குப் பல தலைமுறைக் காலம் உளங்கூர்ந்த வேலை இருந்து கொண்டே இருக்கும். ஐயரவர்கள் முயற்சியெடுத்துத் தொகுத்து வைக்காமற் போனால், நமது பழந்தமிழ்க் கருவூலங்களில் பலவற்றை நாம் இழந்துபோக நேரிட்டிருக்கும். நமது நல்வினைப் பயனாகத்தான் ஐயரவர்கள் தோன்றினார்கள்.

தமிழிலக்கிய சரிதத்தின் காலப் பகுப்பில் ஐயரவர்கள் தொண்டு புரிந்துவந்த சுமார் 50 ஆண்டுகளையும் 'சாமிநாதையர் காலம்' என்றுதான் பிற்காலத்தில் வரும் தமிழ்ச்சரித ஆசிரியர்கள் கூறுவார்கள்.

**தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதில்லார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று.**

### வாழ்க்கையும் மதிப்பும்

தமிழ் மொழியின் விளக்கு என்று சொல்லத் தகுந்த டாக்டர் உ.வே.சாமிநாதையர் நம்மிடையே நின்று மறைந்து இப்பொழுது ஆறு ஆண்டுகள் ஆகின்றன. இவர் செய்துவந்த தமிழ்த்தொண்டு ஒருவாறாக இவருடைய புத்திரராகிய கலியாணசுந்தரம் ஐயரால் தொடர்ந்து செய்யப்பட்டு வருவது தமிழ்மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியது. மூவருலா முதலிய ஒருசில நூல்கள் சாமிநாதையர் இருக்கும்பொழுதே பதிப்பிடுவதற்குத் தக்கவாறு எழுதி வைக்கப்பட்டிருந்தன. இவைகளை அச்சில் வெளிப்படுத்தியதோடு சிந்தாமணி முதலிய சில நூல்கள் மீண்டும் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன. ஐயரவர்கள் தேடித் தொகுத்த நூல்களில் பெரும்பாலான நூல்கள் அடையாற்றில் உள்ள கலாக்ஷேத்திரத்தில் இவர்கள் பெயரால் அமைந்த ஒரு நூல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இக்கலாக்ஷேத்திரத்தின் தலைவியாராகிய ருக்மணி தேவியார் இந்நூல்களை வெளியிடுவதில் மிக்க ஊக்கம் காட்டி வருகிறார்கள். மேலும் ஐயர் பரிசோதித்து எழுதி வைத்துள்ள கம்பராமாயணம் குறிப்புரையுடன் வெளிவருவதற்குச் சென்னை ஸர்வகலாசாலையாரும் சைவ மடாதிபதிகளும் பொருள் உதவி செய்திருக்கின்றார்கள்.

இதுவுமன்றி ஐயரவர்களது மாணாக்கர்களாலும் பிற அன்பர்களாலும் இவர்களுடைய உருவச்சிலையொன்று சென்னை அரசாங்கக் கல்லூரியின் முகப்பில் 6.3.1948ல் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் தம் இதயத்தில் நிலைபெற்று ஐயரவர்கள் வீற்றிருப்பதற்கு அறிகுறியாக இவ்வுருவச்சிலை விளங்குகிறது. இங்ஙனமாக இவர்கள் மேற்கண்ட தொண்டு இப்பொழுது நடைபெற்று வருவதோடு இவர்கள் புகழும் நம் தமிழ் மக்களால் மிக்க நன்றியுடன் போற்றப்பட்டு வருகிறது.

ஐயரவர்கள் ஜனனத்திலேயே அதிர்ஷ்டம் உள்ளவர் என்று சொல்லப்படுகிறது. இவர் பிறந்த வருஷத்தில் அரியலூரில் இவர் குடும்பத்தினர்க்கு ஒரு வீடு ஏற்பட்டது என்றும், அது இவருடைய அதிர்ஷ்டத்தின் பலன் என்றும், இவர் தாயார் கூறினாராம். இவர் பிறந்த ஊரின் பக்கத்தில் இருந்த ஒரு சந்நியாசி 'ஆனந்த வருஷத்தில் இங்கே ஒரு அதிசயம் நடக்கப் போகிறது' என்று சொன்னாராம். அந்த அதிசயம் இவர் தாயார் பிறந்ததுதான் என்று ஐயர் கருதினாராம். வேறோர் நிகழ்ச்சியையும் இங்கே குறிப்பிடலாம். தமிழுலகத்தில் பெயர் சிறந்து விளங்கிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, வி.கனகசபைப் பிள்ளை என்ற இவ்விருவரும் பிறந்த வருஷத்திலேயே (1855) ஐயர் பிறந்துள்ளார். இவைகளெல்லாம் காகதாலிய நியாயமாக அமைந்தனவே என்றாலும் உண்மையிலேயே ஐயரவர்கள் அதிர்ஷ்டசாலி என்பது வேறுசில நிகழ்ச்சிகளால் நமக்கு விளங்குகிறது.

முதலாவது நிகழ்ச்சிக்கு ஐயர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சிஷ்யராக அமைந்தது. இதற்கு முன்பு சங்கீதப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். மகாவித்துவானது சிஷ்யர் ஆனதற்கு

அப்புறம்தான் ஐயரவர்களுடைய வாழ்க்கை தமி ழுக்கென வரைந்து வகுக்கப் பட்டதாயிற்று. எளி தில் அகப்படாத சிறந்த தமிழ் நூல்களை முறையே பாடம் கேட்டால், தமிழறிவு உரம் பெறுதற்குத் தக்க உபாயமாகும். நூல்களைப் பிழையின்றி பிரதி செய்வதும் தமிழறிவு வரையறுத்த தன்மை எய்தி உறுதிபெறச் செய்கின்றது. பிறர்க்குப் பாடம் சொல் லுவதும் கல்வியை வளம் பெறச் செய்வதோடு நினைத்த மாத்திரையில் பயன்படவும் அக்கல் வியை ஆக்குகிறது. அன்றியும் பொதுஅறிவையும் மிகுவித்து, மக்கள் உளப்பாங்கை எளிதில் உணர்ந்து கொள்ளும்படியாகவும் செய்கிறது. இவ் வகை அனுகூலங்களால் எல்லாம் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்குச் சிஷ்யரான காரணத்தால்தான் ஐயர வர்களுக்குக் கிடைத்தன. அன்றியும் தமிழ்க்கல்வி முதலியவற்றில் சிறந்தவர்களையும் தமிழ்மீது அன்புள்ள பல பெரியார்களையும், பிற அறிஞர்க ளையும் சந்தித்து உரையாடும் பேறும் ஐயரவர்க ளுக்கு வாய்க்க இப்பொழுதுதான் இடம் உண்டா யிற்று. சில சமயங்களில் ஐயரவர்களிடத்தில் கேள்வி கேட்பதும் அதற்கு இவர் தக்க விடை கூறுவதும் நிகழ்ந்தன. ஐயரவர்கள் தமது செய்யுள் இயற்றும் திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்க ளும் அடிக்கடி நேர்ந்தன. இவையெல்லாம் இவரது ஆற்றலைப் பலவழிகளில் அபிவிருத்தி செய்தன. ஆகவே பிற்காலத்தில் ஐயரவர்கள் செய்துவந்த தமிழ்த்தொண்டுக்கு இவரைப் பக்குவப்படுத்திய பள்ளிச்சாலை என்று இந்தக் குரு சிஷ்ய கூட்டுற வைச் சொல்லலாம். தமது குருவை எவ்வாறு பாராட்டினார் என்பது,

**''பலகாலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாஸகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சிய ளிக்கும் அத்தெய்வம் போல அவர் (மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்) வந்தார்.''**

என்று இவர் கூறுவதனால் (என் சரித்திரம், அத்-27) விளங்கும். ஐயரவர்களது 17வது வயதில் 1871-ல் இவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அடுத்து, 1876-ல் தம் பேராசிரியர் சிவபதம் அடையும்வரை அவரிடம் கல்வி கற்று வந்தார்.

பின்னர், திருவாவடுதுறைச் சந்நிதானமாக அப் பொழுது விளங்கிய மேலகரம் சுப்பிரமணிய தேசிக ரவர்கள் ஐயரவர்களுக்கு அபயம் அளித்துப் பாடம் போதித்தனர். ஐயரவர்களும் பல மாணவர்க்குப் பாடஞ் சொல்லி வந்தனர். இத்திருவாவடுதுறை வாழ்வை இரண்டாவது பெருநிழ்ச்சி என்று கூற லாம்.

இவரது கல்வி மிகவும் விளக்கம் அடைந்தது. தேசிகர் தாம் செல்லும் இடங்களுக்கெல்லாம் இவ ரையும் உடன் அழைத்துச் சென்று இவருடைய கல்வி கேள்வி அறிவாற்றலைப் பலரும் அறியும்படி செய்தனர். இவரது அரிய புலமை பண்டித சமூகத் திற் கொண்டாடப்படுதற்கு இத்தேசிகர் காரணமாய் இருந்தனர்.

இதுவரையும் இவரது வாழ்வு ஆதீனத்துக்குள் அடங்கியிருந்தது. பலபல நன்மைகள் இதனால் இவருக்கு விளைந்த போதிலும், இவ்வாறே இவரது ஆயுள் கழிந்திருக்குமாயின் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் என்ற பதவியை விளக்கமுறச் செய்திருக்கலாம். பாழ் அடைந்த கோயில்கள் உள்ள பல ஊர்களுக்கு யமகம், திரிபு, சித்திரக்கவி கள் முதலியன செறிந்த புராணங்கள் பல இயற்றியி ருக்கலாம். பல சிறந்த பிரபந்தங்கள் பாடியிருக்க லாம். தமது ஆதீனத்தின் சிறப்பைக் குறித்தும், கும்பாபிஷேகம் முதலிய பெருநிகழ்ச்சிகளைக் குறித்தும் பல பாடல்கள் இயற்றியிருக்கலாம். சைவசித்தாந்த சாஸ்திரங்களை மிகவும் நன்றாக ஓதி உணர்ந்திருக்கலாம். இந்நெறிகளிலே சென்று சாதா ரண வாழ்வு வாழ்ந்து முடிந்திருக்கலாம். ஆனால் இவ்வாறு பயனற்று ஒழியாதபடி ஸ்ரீமீனாட்சி சுந்த ரம் பிள்ளையவர்களின் முதல் மாணவராகிய சி.தியாகராஜ செட்டியார் 1880-ல், தாம் தமிழ்க் கல்வி பயிற்றி வந்த கும்பகோணம் அரசாங்கக் கலாசாலையில் தமது ஸ்தானத்தில் ஐயரை அமர்த்தி னார். தற்கால அறிவிற் சிறந்த பேராசிரியர்கள் கோபாலராவ், ஆர்.வி.ஸ்ரீநிவாஸையர் முதலியவர் களோடு உறவாடும் நிலைமை ஐயரவர்களுக்கு ஏற்பட்டது. மேலும் தற்கால மனப்பான்மை வாய்ந்த மாணாக்கர்களோடும் இவருடைய வாழ்வு நெருங்கிய தொடர்புடையதாயிற்று. இதனால் இவ ரது மனம் விரிவடையத் தொடங்கிற்று. சென்னை வாசமும் பிற்காலப் பெருவாழ்வும் பிற புகழ்களும் உண்டாவதற்கு, கும்பகோணம் கலாசாலையில் தமி ழாசிரியராக இருந்ததே காரணமாயிற்று. இதனை ஐயரவர்களது வாழ்க்கைச் சரித்திரத்தில் மூன்றாவது பெரு நிகழ்ச்சி என்று கூறலாம்.

ஐயரவர்கள் கலாசாலையில் தமிழ் பயிற்றுவிக் கும் திறம் கலாசாலை ஆசிரியர்களுக்கே அன்றிப் பிற அறிஞர்களுக்கும் தெரிய வந்தது. இவ் அறிஞர்களுள் ஒருவர் கும்பகோணத்தில் முனிசீப் பாக இருந்த சேலம் இராமசாமி முதலியார்; முதலியார் ஒருமுறை ஐயரவர்களைச் சந்தித்துத் தம்மிடம் இருந்த சீவகசிந்தாமணிப் பிரதி ஒன்றைக் கொடுத்து அதில் சில செய்யுட்களைத் தமக்கு நன்கு விளக்க வேண்டும் என்று விரும்பினார். ஐயரவர்

கள் அப்பொழுதுதான் முதன் முதலில் சீவகசிந்தாம ணியைப் பார்க்க நேர்ந்தது. அதனை முறைப்பட வாசித்துப் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்று விரும்பினார். அப்பொழுது முதலியார் ஐயரவர்கள் அதனைப் பதிப்பிடுவதாயின் அதற்கு வேண்டும் பொருள் உதவியைச் செய்வதாகவும் கூறி ஊக்கினார். ஐயரவர்களது உண்மைத் தமிழ்த் தொண்டும் இவரது பிறவியின் பயனும் அன்றுதான் தொடங்குவதாயிற்று. ஆகவே இராமசாமி முதலி யார் சிந்தாமணிப் பிரதியைப் பதிப்பிக்கும்படியா கக் கொடுத்தது ஐயரவர்களது வாழ்க்கையில் நான் காவது பெருநிகழ்ச்சி என்று கூறலாம். இதன் பின்புதான் பண்டை நூல்களை முறையாக ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டும் என்ற கருத்து உண்டாயிற்று.

ஐயரவர்களது வாழ்வில் ஐந்தாவது பெருநிகழ்ச்சி பூண்டி-அரங்கநாத முதலியாரோடு இவருக்கு ஏற் பட்ட நட்பு. முதலியார் பேரறிஞர்; கணிதப் பேராசிரியர்; தமிழ்ப் பெருஞ்செல்வர்; கச்சிக் கலம்பகம் இயற்றிய தமிழ்க் கவிஞர்; தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் பெரிதும் போற்றிவந்தவர். இப்பேராசிரியர் (1844-1893) ஐயரவர்களது கல்வி கேள்விகளையும், அரிய புலமைத் திறத்தையும் தமிழ் நூல்கள் பற்றி இடைவிடாது செய்துவந்த ஆராய்ச்சியையும் மிகவும் வியந்து அன்புகொண்டு வேண்டுங்காலங்களில் வேண்டும் உதவிகள் செய்து வந்தனர். அன்றியும் சென்னையில் உள்ள பல பிரமுகர்களிடமும் அறிமுகப்படுத்தி ஐயரவர்களது புகழ் விளங்குவதற்குக் காரணமாய் இருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக இவருடைய கல்விநலம் நிரம்பிய இன்னுரைகள் ஐயரவர்களுக்குப் பெரிதும் ஊக்கமளித்துப் பதிப்பு முதலிய முயற்சிகளில் மனவெழுச்சி உண்டாகும்படி செய்தன. இவர் அளித்துள்ள ஊக்கமும் உதவிகளும் பாராட்டுக்க ளும் இல்லாமற் போனால் ஐயரவர்கள் மழைமுகம் காணாப் பயிர் போல வாடியிருப்பர்.

பலபேருடைய பாராட்டுக்களை நான் அடைந் தேன். இவ்வளவுக்கும் காரணம் அரங்கநாத முதலி யார் என்பால் வைத்துள்ள அன்பே என்பதை நினைக்கும்போது முதலியாருடைய கம்பீரமான குணத்தில் என் உள்ளம் மூழ்கி உருகும். (நல்லு ரைக்கோவை, பக்கம்-132) என்று ஐயர் அவர்கள் தாமே கூறியுள்ளார்.

இத்தனை பெருநிகழ்ச்சிகளும் இவரிடம் ஓர் உயிராசையை முளைக்கச் செய்து, அவ்ஆசையை வளர்த்து, அதனை நிறைவேற்றி இவரது பிறவி யைப் பயன்நிரம்பியதாக்கின என்பது உண்மை. ஆனால் இந்நிகழ்ச்சிகள் அனுகூலச் சூழ்நிலைகள் என்றே கொள்ளத் தக்கன இவைகளைப் பயன்ப டுத்தியது ஸத்து நிறைந்துள்ள நன்னிலம் என்பதை எண்ணி நாம் மகிழ வேண்டும்.

... தன்னைத் தலையாகச் செய்வானும் தான் என்றனர் ஒரு மூதறிஞர். ஐயரவர்களது இடைய றாத கல்வியும், இடையீடில்லாத ஆராய்ச்சியும் சலிப்பறியாத ஊக்கமும்தான் இவருடைய பெரு மைக்கு முக்கிய காரணம் என்பது நாம் மனங் கொள்ளுதற்குரியது.

சீவகசிந்தாமணி ஒரு ஜைன காவியம். முதன் முதலாகச் சீரிய முறையில் இவர் பரிசோதித்து அச்சிடுவதற்கு இந்த ஜைன காவியம் கிடைத்தது ஒரு பெரிய நன்மையாக முடிந்தது. மதச்சார்பு பற்றி நூல்கள் மீது விருப்பு வெறுப்பு இல்லாதபடி இலக்கியச் சிறப்பு ஒன்றையே கருதி, தமிழ் இலக்கியத் தொண்டு புரிய வேண்டும் என்ற மனப்பான்மையானது ஐயரவர்களுக்கு உண்டா யிற்று. சமயத்தொண்டு வேறு, இலக்கியத் தொண்டு வேறு என்ற பாகுபாட்டை இவர் மிக நன்றாக உணரும்படி நேர்ந்தது. ஆறுமுக நாவலர் சமயத் தொண்டில் ஈடுபட்டுச் சமயநூல்களையே அச்சில் வெளியிட்டு வந்தனர். நாவலர் பதிப்புக்கள் சிறந்த னவாய் இருந்தாலும் அவை சமயக் கல்விக்கு மாத்திரம் பயன்பட்டு அமைந்து நின்றன. இங்ங னமே வேறுசில பதிப்பாளர்கள் வைஷ்ணவ சமயத் தொண்டும் இன்னும் சிலர் ஜைன சமயத் தொண்டும் புரிந்து வந்தனர். இம்மனப்பான்மை இலக்கிய உணர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் முரணாக நிற்பது. பஞ்ச காவியங்களுள் ஒன்றாகிய குண்டலகேசி இன்று நமக்கு அகப்படாமல் அழிந்துபோனது மேற்சொல்லிய குறுகிய மனப்பான்மையினால்தான். இக்காவியம் பௌத்த மதத்தின் சார்பாக உள்ளது. இதற்கு மறுப்பாக எழுந்ததுதான் நீலகேசி. எவ்வ ளவு பெரிய இலக்கியத்தை நாம் இன்று இழந்துவிட் டோம் என்பது இந்நூல் பற்றி அங்கங்கே கிடைக் கும் சில குறிப்புக்களால் அறியலாகும். இலக்கிய நெறியில் உழைத்து வருபவர்களுக்கு இலக்கிய நயம் அறியும் மனப்பான்மை ஒன்றுதான் இருத்தல் வேண்டும். சிந்தாமணியின் தமிழ்ச் சுவையும், அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய அரிய உரையும் இவ்விரண்டினாலும் வெளிப்படுகின்ற அகன்ற பெருங்கல்வியும் ஐயரவர்களுக்கு மிக விரிந்த ஓர் மனப்பான்மையை உண்டு பண்ணின. தமிழ்நாட்டில் முற்காலத்தில் வழங்கிவந்த பௌத்த, ஜைன சாஸ் திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவும், அவ்வச் சமயங்களைச் சார்ந்த நூல்களுக்கு அவரவர் கொள்கைகளைக் கொண்டே உரை விளக்கம் செய்தல் வேண்டும் என்ற முறை நேர்மையும் ஐயரவர்களுக்கு விளைந்தன. 'அறு நால்வராய்ப்புகழ்' என்று ஏலாதியில் வருகின்ற தொடருக்கு, அது ஜைனதீர்த்தங்கரர்களை உணர்த் துகிறது என்பதைத் தெரிந்து கொள்ளாதபடி சைவச் சார்பாய் எழுதி வெளியிட்ட உரையையும் பார்த் துள்ளோம். ஐயரவர்கள் தாமே குறிப்பிட்டிருக்கிற படி, பஞ்ச நமஸ்காரம் என்ற ஜைனமதச் சங்கேதத்

தொடரை உணர்ந்து கொள்ளாமல் அதனைப் பஞ்சாட்சரம் என்று கருதிப் பிரதி செய்வோர் பிழைபட எழுதி வைத்துள்ளதும் தெரிந்துள்ளோம். (என் சரித்திரம் பக்.137) இவைபோன்ற பிழைகளெல்லாம் தமிழ்நாட்டில் வைதிக சமயங்களே அன்றிப் பிற சமயங்களும் இருந்தன என்ற உணர்ச்சியே அற்றுவிட்டதனால் தோன்றின.

இனி ஐயரவர்களது பதிப்பு முறையைக் குறித்துச் சில சொல்ல வேண்டுவது அவசியம். இவர்க்கு முன்பெல்லாம் நூல்களைப் பதிப்பிடும் தொழிலில் ஈடுபட்ட தமிழ் அறிஞர்களிற் பெரும்பாலோர் தமக்குக் கிடைத்த இரண்டொரு பிரதிகளை வைத்துக் கொண்டு அவற்றில் உள்ள கரலிகித வழுஉக்களைக் களைந்து திருத்தியும் புதுக்கியும் நூல்களை அச்சிடுதல் வழக்கமாய் இருந்தது. ஆனால் ஐயரவர்கள் இந்த முறையைப் பின்பற்றவில்லை. பல பிரதேசங்களில் இருந்தும் பல பிரதிகளை முயன்று தேடிப் பெற்றுத் தொகுத்து வைத்துக் கொள்வது இவர் முதலாவது செய்த வேலை.

பின்னர், இவற்றுள் ஒரு பிரதியைக் கடிதத்தில் பெயர்த்தெழுதி மற்றைப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பாட பேதங்களைக் குறித்துக் கொள்வார். இவ்வாறு குறித்துக் கொண்டபின் நூலைப் பலமுறை வாசித்துப் பொருளையும் தெரிந்துகொள்ள முயல்வார். இதற்குப்பின், இந்நூற்பொருள் பற்றி எழுந்த பிற நூல்களையும் கற்றுப் பொருள் விளக்கம் செய்ய முற்படுவர். பின்னும் தெரியாதன உளவாயின், வடமொழி, தென்மொழி நூல்களிலே வல்லவர்களையும் நூல் எந்தச் சமயத்திற்கு உரியதோ அந்தச் சமய சாஸ்திரங்களில் வல்லவர்களையும் அடுத்து விசாரித்துப் பொருள் தெரிந்து கொள்வர். விளக்கத்திற்கு உரிய அனைத்தையும் முறைப்படக் குறித்துக் கொண்டு அச்சிடுவதே தக்க முறை எனக் கருதி, அவ்வாறு செய்து வந்தனர். ஒவ்வொரு நூலையும் இவ்வாறு செய்து முடித்தற்கு பல ஆண்டுகள் சென்றன என்பதில் வியப்பில்லை. ஐயரவர்கள் தமக்கு இருந்த சௌகரியத்திற்குத் தக்கபடி மெல்லச் சாவதானத்துடன் ஆராய்ந்து வெளியிடுவதே வழக்கமாய் இருந்தது. ஒருமுறை சேது சமஸ்தான மகாவித்வானும் தமிழ் ஆராய்ச்சியிலும் தமிழ்க் கல்வியினும் மிகச்சிறந்து விளங்கியவரும் தமிழ்ப் பேராசிரியர்களுள் உரிய மதிப்பிற்கு உரியவருமான ஸ்ரீ ரா.ராகவையங்கார் 'தமிழ் நூல்களை நன்றாகப் பதிப்பிடுதற்கெனப் பிறந்தவர் சாமிநாதையரே என்று என் நண்பர்கள் சிலரும் நானும் ஒருங்கிருந்த சமயத்துக் கூறினர். இது முற்றும் உண்மையாகும்.

எவ்வளவோ நுணுகி ஆராய்ந்து, எவ்வளவோ விசாரித்துணர்ந்து, எத்தனையோ பிரதிகளை ஒப்பு நோக்கி, எவ்வளவோ காலம் முயன்று நன்கு உழைத்து ஐயரவர்கள் சீவகசிந்தாமணியைப் பதிப்பித்தனர். என்றாலும் அதில் பல பிழைகள் உள்ளன என்று யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள அறிஞர்கள் ஆராய்ந்து சிறு கண்டன நூல்களை வெளியிட்டனர். இங்கே குறித்த கண்டனப் பிரசுரங்களும் ஐயரவர்களுக்கு நன்மையாகவே முடிந்தன. தாம் நூற் பரிசோதனை செய்தது போதாது என்பதை நன்கு உணர்ந்தனர். இன்னும் மிக நுட்பமாக ஆராய வேண்டும் என்பதைக் கண்டனர். இப்பிரசுரங்களில் தமக்குச் சரியெனத் தோன்றியவற்றைத் தமது பிற்பதிப்புக்களில் உடன்பட்டுக் கொள்ளலாயினர்.

கண்டனப் பிரசுரங்கள் இவரிடத்தில் என்னவகையான மனநிலையை உண்டுபண்ணின? முதன் முதலில் கண்டன உரைக்கு மறுப்பு எழுத வேண்டும் என்று எண்ணுதல் முற்றும் இயற்கையோடு ஒத்ததேயாம். ஐயரவர்களும் மறுப்பு எழுதினார். ஆனால் அதனை அச்சில் வெளியிடுவதற்குமுன் மீண்டும் பரியாலோசனை செய்தனர். அப்பொழுது தமக்கு உற்ற நண்பர்களிடத்தில் இவர் கலந்து கொண்டனர். பின்னர் அம்மறுப்பை வெளியிடாதபடி நிறுத்திக் கொண்டனர். ஒன்றிரண்டு கண்டன உரைகளுக்கு இவ்வாறு செய்தார். பின்னர் கண்டனப் பிரசுரங்களைப் பார்வையிட்டு வேண்டியவற்றைக் குறித்துக் கொள்வாரே அன்றி, மறுப்பு எழுதும் கருத்தினையே விட்டுவிட்டனர். இம்மனப்பான்மை ஐயரவர்களுக்கு அடக்கத்தையும் மனவலிமையையும் சாந்தியையும் கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, தமது அரிய காலம் வீண் முயற்சிகளால் பயன்இன்றிக் கழியாதவாறு, நல்ல முயற்சிகளிலே, தாம் மேற்கொண்ட தொண்டிலே செலவாகுமாறு செய்தது.

இவரது அரும்பெரும் தொண்டுகளுக்கு இணையாக எதைச் சொல்ல முடியும்? தமிழ் நூற் பதிப்புக்களில் நாம் நம்பிக்கையாகக் கொள்ளத் கூடிய பதிப்புக்கள் இவருடைய பதிப்புக்களே. இவர் ஒன்று எழுதி வைத்தால் அது பெரும்பாலும் தவறாக மாட்டாது. எனவே எப்பொழுதும் நம்மால் கொள்ளத்தக்கது. இவருடைய ஆழ்ந்த கல்வியும், தெளிந்த தமிழறிவும், பரந்த உலகியல் உணர்ச்சியும் இவற்றைத் தமிழ்மக்களுக்கு நூல் வாயிலாகப் பயன்படுத்தும் சீரிய முறையும் நம்மால் என்றென்றும் போற்றத் தக்கன.

ஐயரவர்கள் தாம் ஆராய்ந்த பிரதிகளிற் கண்டால் அல்லது, தாமாக ஒரு திருத்தமும் செய்வது வழக்கமில்லை. இவ்வாறு கூறிய அளவில் பண்டை இலக்கியங்களையும் உரைகளையும் பிரதியில் உள்ளவாறே சிறிதும் மாறுதல் இன்றி இவர் நமக்குத்

தந்துள்ளார் என்று நினைப்பது தவறு. மாற்றிதான் இருக்கிறார்; ஆனால் இம்மாறுதல்கள் பெரும்பாலும் விளக்கத்திற்கு வேண்டிச் செய்தனவே. உதாரணமாகச் சீவக சிந்தாமணியில், 'பண்ணுலாங்கிளவி' (1481) என்பது முதல் கலைத்தொகை (1489) என்பது ஈறாக ஒன்பது செய்யுளும் ஒரு தொடராகும் என்று பிரதிகளிற் காணப்படுகிறது. ஐயரவர்கள் பதிப்பிலும் 'ஒன்பதும் ஒரு தொடர் என்ற குறிப்புக் காணப்படுகிறது. இதற்கு ஏற்ப இவ்ஒன்பது *செய்யுளும் தொடர்ச்சியாகவே பிரதிகளிற்* கொடுக்கப்பட்டுள்ளன; உரைகளும் ஒருசேர இவற்றின் *பின்னர் எழுதப்பட்டுள்ளன. இம்முறையை* மாற்றி ஐயரவர்கள் ஒவ்வொரு செய்யுளையும் *அதன் உரையையும் தனித்தனியே தம்முடைய* பதிப்பில் கொடுத்துள்ளார்.

ஐயரவர்கள் முயற்சி யாரே எனினும் ஒருவரால் தாமாகவே செய்து முடிக்கக் கூடும் அளவினதன்று. பலவகையிலும் உதவி செய்யத்தக்க வித்துவான்கள் வேண்டியதாய் இருந்தது. இவ்வகை உதவியும் இவருக்கு நிரம்பக் கிடைத்திருந்தது என்பதை நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளலாம். இங்ஙனம் உதவியர் பெயர்களுள் ஒருசில தமிழ் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுவனவாகும். சிலர்[2] சிற்சில நூல்கள் வெளியிடும்பொழுது அவற்றிற்கு மாத்திரம் உதவி புரிந்து வந்தனர். வேறுசிலர்[3] ஐயரவர்கள் செய்துவந்த பற்பல வெளியீட்டு முயற்சிகளிலும் நெடுங்காலம் உடன்இருந்து உதவியுள்ளார்கள்.

ஐயரவர்களது அருமைத் தம்பியாராகிய வே.சுந்தரேச ஐயரும் இப்பெரும் தொண்டில் உடனிருந்து பெரிதும் உழைத்து வந்தனர். வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரும் சிலகாலம் ஐயரவர்களுக்கு உதவியாய் இருந்ததுண்டு. உடனிருந்து உதவியவர்கள் பொருட்டு மாத நிவேதனமாக ரூபாய் ஐம்பது சேதுபதிகள் கொடுத்து வந்ததும் நாம் நன்றியுடன் பாராட்டத்தக்கது. முன் குறித்தவர்களது உதவியே அன்றி, வடமொழி நூற்பொருள், சிலாசாஸனம், பிறசமயப் பொருள்கள் முதலியவற்றைக் குறித்துத் தக்க பெரியோர்களிடம் ஐயரவர்கள் விசாரணை செய்து பயன்பெற்றிருக்கின்றனர். இவர்களுள்ளே ராவ்பகதூர் வி.வெங்கையா, து.கோபிநாதராவ், வி.கனகசபைப் பிள்ளை, பெருவாழ்ந்தான் மகாமகோபாத்தியாய ரங்காச்சாரியார், ஈச்சம்பாடி சதாவதானம் ஸ்ரீநிவாஸாச்சாரியார், *மகாவித்து*வான் ரா.ராகவையங்கார் முதலிய பெரியோர்களைக் குறிப்பிடலாம்.

*இவர்களெல்லாம்* நூற்பரிசோதனைக்கு உதவியவர்கள். நூல்களைப் பிரதி செய்து கொடுத்தோர்களுள் கிருஷ்ணசாமி நாயுடு என்பவரைத் தனிப்படக் கூறுதல் வேண்டும். நூற்பிரதிகளைக் கொடுத்து உதவியவர்களுடைய ஞாபகம் தமிழ் மக்களால் என்றும் போற்றத் தக்கது. இவர்கள் திருநெல்வேலி, தூத்துக்கடி, ஆழ்வார் திருநகரி, தென்காசி, ஆறுமுகமங்கலம், மதுரை, மிழவராயனேந்தல், மிதிலைப்பட்டி, திரிசிரபுரம், வீடூர், சென்னை, சேலம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலே உள்ள பரம்பரைத் தமிழ் வித்துவான்களுடைய குடும்பத்தினர். இவர்களே அன்றி வேறு சிலரும்[4] பிரதிகள் பெற்று ஐயரவர்களுக்கு உதவியிருக்கின்றனர். நம் நாட்டிலுள்ள ஆதீனங்கள் முதலியனவும் பிரதிகள் கொடுத்து உதவியிருக்கின்றன. திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், செங்கோல் மடம், மந்தித்தோப்பு மடம், போரூர் சிதம்பர சுவாமிகள் மடம், மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலியன சிறப்பாகக் கூறத்தக்கன. மேற்குறித்த இடங்களில் *உள்ள தமிழ்* நூற் கருவூலங்களை ஐயரவர்கள் நன்றாகப் பயன்படுத்தியுள்ளார். இவர் கையில் *சங்க* நூல்கள் முதலியன கிடையாமல் போயிருந்தால் இப்பொழுது அந்நூல்கள் *சிதல்வாய்ப்பட்டுப்* பெரும்பாலும் அழிந்திருக்கும் என்பது திண்ணம். அவ்வாறு அழிந்தொழியாதபடி *பிரதிகளைப்* பாதுகாத்து, அவற்றைத் தமிழ் மக்களுக்குச் செம்மையாக்கி உதவிய *ஐயரவர்களுக்கு நாம்* என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்ஙனம் தமிழ்த்தொண்டு புரிதற்குப் பெரும் பொருள் வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். பொருள் உதவி செய்தோரும் பலர். பூண்டி அரங்கநாத முதலியார், சேலம் இராமசாமி முதலியார், சேதுபதிகள், பாண்டித்துரைத் தேவர், சிறுவயல் முத்துராமலிங்கத் தேவர், அ.இராமநாதச் *செட்டியார், கே. சுந்தரராம ஐயர்,* பெரும்பன்றியூர் பெரியசாமி முத்தைய உடையார், பா.ஐ.சின்னசாமிப் பிள்ளை, கொழும்பு பொ.குமாரசாமி முதலியார், பொ.இராமநாத முதலியார், ஸ்ரீகாந்த முதலியார், இராஜா ஸர்.அண்ணாமலை செட்டியார், ஸர் எஸ்.சுப்பிரமணிய ஐயர், T.C. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், திருச்சி பட்டாபிராம பிள்ளை முதலியவர்கள் தமிழ் *மக்களால் என்றும்* நன்றியுடன் பாராட்டுதற்குரியவர். இவர்களேயன்றி திருவாவடுதுறை ஆதீனம், செட்டிநாட்டுச் சபைகள், சென்னை ஸர்வகலாசாலை முதலியனவும் தக்கவாறு பொருள் உதவி செய்து ஐயரவர்களைப் பாராட்டியுள்ளன. இவ்வாறாக ஏற்பட்ட பொருள் உதவியால்தான் நாம் இன்று ஐயரவர்களது பதிப்பக்களைப் பெற்றுப படித்து *இன்புறுகிறோம்.*

ஐயரவர்கள் இறுதிவரை தமிழின் பொருட்டுத் தம் காலத்தை முழுதும் பயன்படுத்தி வந்தனா.

பிற்காலத்தில் பல வசன நூல்களும் ஐயரவர்களால் வெளியிடப் பெற்றுள்ளன. இவைகள் இவர் நெடுங் காலமாகத் திரட்டி வைத்துள்ள குறிப்புக்களினின் றும் எழுதப்பட்டவை. இவற்றிற் காணும் பொருள் கள் அனைத்தும் ஐயரவர்களுக்கே உரியன என்ப தில் சிறிதும் ஐயப்பாடில்லை.

ஐயரவர்களது வாழ்வு நிரம்பிய வாழ்வு. காலத் தால் நிரம்பிய வாழ்வு; கல்வியாலும் ஆராய்ச்சியா லும் நிரம்பிய வாழ்வு. பலதிறப்பட்ட பெருமையா லும் பரந்த புகழாலும் நிரம்பிய வாழ்வு. தமிழ்ப் புலமை உலகில் ஐயரவர்கள் தம் காலத்தில் தனி யாட்சி புரிந்தார் என்றே சொல்ல வேண்டும். இந்நிரம்பிய வாழ்விற்கு மேலே குறித்த சில வாய்ப்பான நிகழ்ச்சிகள் காரணமாயின என்று சிலர் கருதலாம். இக்கருத்துச் சிறியதோர் அளவில் உண் மையே அவ்வாய்ப்புக்களிற் பலவேறு சிலர்க்கும் உளவாய் இருந்தன. அவர்கள் பெயர்களையேனும் தற்காலத்தவர்கள் அறிவார்களா? அறியமாட்டார் கள். இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, தமது ஊக்கத்தாலும் சலிப்பறியாத உழைப்பினாலும் இடைவிடாத கல்வியினாலும் ஆராய்ச்சியினாலும் தமது வாழ்வை நிரம்பிய வாழ்வாக ஐயரவர்களே செய்து கொண்டனர் என்பதுதான் உண்மை. 1935-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியன்று அவரது சதாபிஷேகத் திருவிழாவைத் தமிழ்நாடு முழுதும் மகிழ்ந்து கொண்டாடியது; பொன்முடிப் பும் அளித்தது.

இந்நிரம்பிய வாழ்வினால் தமிழன்னைக்குத் தொண்டாற்றிய பெரும் பேராசிரியர் டாக்டர் சாமி நாதையர். இவருடைய பூதஉடம்பு இப்பொழுது மறைந்து விட்டது. ஆனால் இவர் புகழுடம்பு சென்னைக் கடற்கரையிலே அரசாங்கக் கல்லூரியின் முகப்பிலே, சிலை வடிவாக நின்று காட்சியளிக்கி றது. தமிழ்க்காதல் நிரம்பியமைந்த திருமேனி; தமிழ்ச் சுவடிகள் இருக்கும் இடங்கட்கெல்லாம் ஓடியோடிச் சென்ற திருவடிகள்; ஏட்டுச் சுவடிகள் பெற்று ஆனந்தாதிசயத்தால் விதிர்விதிர்க்கும் திருக் கரங்கள். தமிழின் பெருமையையும் தமிழின் தொன் மையையும் நினைத்த மாத்திரத்தில் உள்ளத்தே ஓங்கி வருகின்ற உவகையால் ஓங்கியமைந்த திருப் புயங்கள்; தமிழ் ஒளியும், தமிழ் அறிவும் ஒருங்கு விளங்குகின்ற திரு நயனங்கள்; தமிழ்த்தொண்டு என்னும் தத்வத்துறையிலே நெடுங்காலம் ஒழுகி முதிர்ந்த திருக்கோலம். இவை நமது கண்ணுக்கு விருந்தாய் அமைந்து நிற்கின்றன.

---

*தேரழுந்தூர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், மகாமகோபாத்தியாய ம.வி.இராமாநுஜாசாரியார், வை.மு.சடகோப ராமாநுஜாசாரியார், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ஏம்பல் - பொன்னுசாமிப் பிள்ளை, திருவாவடுதுறை பொன்னுசாமிச் செட்டியார், மணலூர் சொக்கலிங்கத் தம்பிரான், சிதம்பரம் சுவாமிநாத ஐயர், வே.வேங்கடராஜுலு ரெட்டியார் முதலியோர்கள்.*

*இ.வை. அனந்தராமையர், திருமானூர் கிருஷ்ணையர், கி.அருணாசல ஐயர், ம.வி.துரைசாமி ஐயர், கோ.சேஷாத்திரி ஐயர், சு.கோதண்டராமையர், வி.மு.சுப்பிரமணிய ஐயர், கி.வா. ஜகந்நாதையர் முதலியோர்கள்.*

*மயிலை அருணாசல உபாத்தியாயர், அ.சண்முகம் பிள்ளை, பரங்கிப்பேட்டை லக்ஷ்மணபிள்ளை, சுவாமிநாத பண்டிதர் முதலியோர்கள்.*

### சர்வ சிலாக்கியமான குணம்

*தமிழுக்கும் ஸம்ஸ்கிருதத்துக்கும் இடையே பாஷைப் போட்டி ஏற்படுத்தும் துர்முயற்சிகளுக்கு ஐயரவர்களின் தமிழத் தொண்டு அறைகூவி நிற்கிறது. தமிழர் இன்று தமிழின் பெருமையை உணர்ந்திருப்பது ஐயரவர்களால்தான். தாய் பாஷையை விரும்புவது நல்லது. அதைப் பொருள் அறிந்து விரும்புவது மேலும் நல்லது. ஆனால் மற்ற பாஷைகளையும் அவமதிக்காது தாய்ப்பாஷைக்குப் பணிவிடை செய்வது சர்வ சிலாக்கியமானது. டாக்டர் சுவாமிநாதையரவர்களிடம் இந்தச் சர்வசிலாக்கியமான குணம் காணப்படுகிறது.*

**-எஸ். சத்தியமூர்த்தி (ஆ.வி.)**

### இணையற்றவர்

*சென்ற ஐம்பது வருஷங்களில். இம்மாகாணத்தில் விளங்கிய பெரியார்கள் ஒவ்வொருவரையும் அநேகமாக எனக்குத் தெரியும். ஆனால் அறிவாற்றலில் சிறந்து கல்விக்காக முழு மனதுடன் பாடுபட்டதில் மகாமகோபாத்தியாயருக்கு ஈடாக வேறு யாரையும் நான் அறியேன். "அதிவேகமாய்ச் சென்று கொண்டிருக்கும் காலம் ஒருநாளும் திரும்பி வராது" என்னும் உண்மையை அவரைப்போல் நன்குணர்ந்து ஒவ்வொரு நிமிஷத்தையும் நற்பயன்படுத்தி வருபவர்களையும் நான் பார்த்ததில்லை. கலைஞர்களாகக் கருதப்படுவோர் தங்கள் தங்கள் கலைகளிடத்தில் கொள்ளக் கூடிய சிரத்தாபத்தியில் இப்பெரியாரைப் போல் சிறந்தவர் தென்னிந்தியாவில் ஏன் இந்தியாவில் கூட இல்லையென்றே அச்சமின்றிச் சொல்லலாம்.*

**-வி.வி.ஸ்ரீநிவாச ஐயங்கார் (ஆ.வி.)**

# ஏடு தேடி நடந்த ஏந்தலின் அடிச்சுவட்டில்...

**டாக்டர் எஸ். கண்ணன்,** தமிழ்த்துறை, டி.பி.ஜெயின் கல்லூரி, சென்னை-96.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்று வாழ்ந்து காட்டியவர் 'தமிழ்த் தாத்தா' டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள். அய்யர் அவர்களின் 'என் சரித்திரம்' 'நினைவு மஞ்சரி' ஆகிய புத்தகங்களைப் படித்தால், நமக்கு வாழ்க்கைக்குத் தேவையான பல செய்திகளையும், நெறிகளையும் எளிதில் பெறலாம். நான் சுவைத்த சில துளிகள், இதோ.

'உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு' என்று சொல்வார்கள். நண்பகல் உணவு அருந்தியபின் சற்றுக் கண்ணயர்தல் நம்மில் பலருக்கும் கைவந்த கலை. டாக்டர் ஐயர் அவர்கள் ஆசிரியராகப் பணி புரியுங்கால், உணவு இடைவேளைக்குப் பின் கிடைக்கும் ஒரு மணி நேரத்தையும் ஏட்டுச் சுவடிகளைப் படிப்பதற்குப் பயன்படுத்துவாராம். ஏனென்றால் அய்யர் அவர்களைப் பொறுத்தவரை சுவடிகளைப் படிப்பதுதான் 'பொழுதுபோக்கு'. ஒருமுறை டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களை ஒரு பள்ளி ஆண்டுவிழாவிற்கு அழைத்திருந்தார்கள். பள்ளிக் கட்டிடத்தின் மேல் தளத்தில் விழா நடந்தது. டாக்டர் அய்யர் அவர்களை அழைத்துச் செல்லும்போது, மாடிப்படிகளைச் சுட்டிக் காட்டி 'படி; 'படி'; 'பார்த்து'; 'படி' என்று எச்சரிக்கை செய்து கவனமாக அழைத்துச் சென்றனர். ஐயர் அவர்கள் கூட்டத்தில் பேசும்போது, ''நான் ஏதோ நிறையப் படித்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தேன். இவ்விழாவிற்கு வந்த பின்புதான் நான் இன்னும் படிக்க வேண்டிய பாடங்கள் அதிகமாக உள்ளன என்பதைத் தெரிந்து கொண்டேன். என்னை மாடிக்கு அழைத்து வந்தவர் என்னைப் பார்த்து 'படி' 'படி' 'கவனம்' என்று சொல்லி என்னை அழைத்து வந்தார். உண்மைதான்! நான் இன்னும் படிக்க வேண்டும். கற்றது கைம்மண்ணளவு தானே!'' என்று பேசினார். இந்நிகழ்ச்சி அய்யர் அவர்கள் எவ்வாறு கல்வியைக் கற்பதிலேயே தம்முடைய முழுக் கவனத்தையும் செலுத்தினார் என்பதைப் புலப்படுத்துகிறது. அய்யர் அவர்களின் அறிவுரை இக்காலச் சந்ததியினருக்கு ஒரு நல்ல படிப்பினை!

எத்தொழிலில் பணி புரிந்தாலும் நமக்குக் கிடைக்கும் விடுமுறையை நாம் மகிழ்ச்சியாகக் கழிப்போம். விடுமுறைக் காலத்தின்போது பணி தொடர்பான சிந்தனைகளே நம்மை அண்டாது. நம்மில் சிலர் பணிக்காலத்தையே ஓய்வெடுக்கும் நேரமாகப் பயன்படுத்துகிறோம். அய்யர் அவர்கள் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது தமக்குக் கிடைத்த விடுமுறை நாட்களில் பல கிராமங்களுக்கும் நடந்து சென்றோ, வண்டியில் சென்றோ ஏடுகளைத் தேடிச் செல்வாராம். வளரும் தலைமுறையினருக்கு அய்யர் அவர்கள் வாழ்ந்து காட்டிய விதம் ஓர் வழிகாட்டியன்றோ?

ஆசிரிய-மாணாக்கர் உறவுக்கும் அய்யர் அவர்களின் வாழ்க்கை ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தது. தமிழ்த் தாத்தா தம்முடைய குருவான திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், தம்முடைய குருவின் பெயரை எழுதும்போது தம்முடைய கை நடுங்குவதாகக் கூறுகிறார். தம்முடைய குருவின் மீது கொண்ட பக்தியினாலும், மரியாதையினாலும் அய்யர் அவர்கள் அவ்வாறு குறிப்பிடுகிறார். அவருடைய குருவும் அய்யரிடம் அளவிறந்த பாசத்துடன் நடந்து கொண்டார் என்று அய்யர் அவர்கள் குறிப்பிடுகிறார். மாறிவரும் இக்காலச் சூழ்நிலையில் இத்தகைய ஆசிரிய-மாணவர் அன்புப் பிணைப்பைக் காண இயலுமா?

ஏடு தேடிச் சென்றபோதும், எதிரில் வரும் மனிதருடன் பேசும்போதும் தமக்கு ஏதாவது புதிய செய்திகள் கிடைக்காதா என்று உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் வெகு கவனத்துடன் இருப்பாராம். ஒருகால் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்திற்குச் சென்றபொழுது அம்மடத்தைச் சார்ந்த மாடுகளைப் பராமரிப்பவரிடம் பேசிக் கொண்டிருந்தார். 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்ற உயர்ந்த பண்பினைக் கைக்கொண்டவர் அய்யர்.

அவர்கள் மாடு பராமரிக்கும் அன்பரிடம் பேசியதால் 'இடையன் எறிந்த மரம்' என்ற பழமொழிக்குத் தக்க விளக்கம் அன்று அவருக்குக் கிடைத்தாக தம்முடைய நினைவு மஞ்சரியில் (முதற் பாகம்-பக்.30) குறிப்பிடுகிறார். அதுபோன்றே ''செண்டு'', ''கும்மாயம்'' போன்ற தமிழ்ச் சொற்களுக்கு உரிய விளக்கங்களைத் தாம் சென்ற இடங்களில் தமக்குக் கிடைத்த விதத்தை மிகவும் இயல்பாகவும் வியப்பாகவும் விவரிக்கிறார். ''கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்'' என்பதற்கு அவருடைய வாழ்வே தக்க சான்றாகும்.

நன்றி மறவாத நற்பண்பை உடையவராகத் திகழ்ந்தவர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் என்றால் அஃது மிகையாகாது. கும்பகோணம் கல்லூரியில் அய்யர் அவர்களுக்குத் தியாகராச செட்டியார் அவர்களின் பரிந்துரையால் வேலை கிடைத்தது. சென்னையில் தாம் வாங்கிய இல்லத்திற்கு அய்யர் அவர்கள் 'தியாகராச விலாசம்' என்று நன்றியுணர்வோடு பெயரிட்டு மகிழ்ந்தார். இன்றும் அவ்வீடு சென்னை திருவல்லிக்கேணியில் திருவட்டீசுவரன் பேட்டையில் உள்ளது. அய்யர் அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் தியாகராச விலாசத்தில் குடியிருந்து வருகின்றனர்.

இத்துணைச் சீரும் சிறப்பும் பெற்றிருந்த அய்யர் அவர்கள் ஆங்கிலம் அறியாதவர். ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளவில்லையே என்று அவர் குறைப் பட்டுக் கொண்டதுமில்லை. ஏனென்றால் தமிழன்னை அவருக்குக் கொடுத்த அரியாசனத்திற்குச் சரியாசனம் வேறுண்டோ?

# தமிழின் தண்ணிழல்

**''கல்கி''**

எங்கள் ஊர் பள்ளிக்கூடத்தின் அருகில் சாலை ஓரத்தில் ஆலமரம் ஒன்று வானோங்கி வளர்ந்திருந்தது. தன் கிளைகள் நாலாபுறமும் விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பசுமையாகப் படர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்து வந்தன. வெயில் காலத்தில் மத்தியான நேரத்தில் ஆயிரக்கணக்கான பட்சிகள் அந்த ஆலமரத்தில் தங்கி விதவிதமான குரல்களில் இன்பகீதம் இசைத்துக் கொண்டிருக்கும். ஊதாச் சிவப்புநிறம் வாய்ந்த ஆலங்கனிகள் முழுசாகவும் பட்சிகளால் பாதி கொத்தித் தின்னப்பட்டவையாகவும் தரையெல்லாம் உதிர்ந்து கிடக்கும் காட்சி கண்களுக்கு விருந்தாயிருக்கும்.

மத்தியான நேரத்தில் சாலையோடு போகும் வழிப்போக்கர்கள் எவ்வளவு அவசரமான காரியமாய் இருந்தாலும் அந்த ஆலமரத்தின் குளிர்ந்த நிழலில் சிறிது நேரம் உட்காராமல் போக மாட்டார்கள். சிலர் அம்மரத்தின் அடியில் கட்டுச்சாத மூட்டையை அவிழ்த்துச் சாப்பிட்டுவிட்டுப் பக்கத்தில் இருந்த குளத்தில் தண்ணீர் குடித்துவிட்டு ஆலமரத்தடியில் சிறிது நேரம் சாவகாசமாய் படுத்து இளைப்பாறிவிட்டுச் செல்வார்கள்.

மத்தியான நேரத்துக்குப் பள்ளிக்கூடம் விட்டதோ இல்லையோ பிள்ளைகள் எல்லோரும் இந்த ஆலமரத்தடியை நாடுவோம். கொஞ்ச நேரத்துக்கு அங்கே குதிப்பும் கும்மாளமுமாய்த்தான் இருக்கும். பிள்ளைகளுடைய குதூகலமான சிரிப்பின் கலகல த்வனியானது பறவைகளின் இனிய குரலோசையுடன் கலந்து நானாதிசைகளிலும் பரவிக் குளத்துக்கு அக்கரையில் இருந்த கோவில் மண்டபத்தில் எதிரொலியை உண்டாக்கும்.

இந்த ஆலமரம் இருந்த இடமானது இப்போது வெறுமையாய் இருக்கிறது என்பதை எண்ணும் போது கண்களில் நீர் துளிர்க்கிறது. ஆம்; சில வருஷங்களுக்கு முன்னால் அடித்த பெரும் புயல் காற்றில் அந்த ஆலமரம் விழுந்துவிட்டது. லோகல் பண்டு இலாகா உத்தியோகஸ்தர்கள் அதை ஏலம் போட்டார்கள். ஏலம் எடுத்தவன் மரத்தைத் துண்டு துண்டாக வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டான். புயல் அடித்த சிறிது காலத்துக்குப் பிறகு நான் எங்கள் கிராமத்திற்குப் போனபோது, அந்த ஆலமரம் இருந்த இடத்தில் ஒரு பெரிய குழி இருப்பதைக் கண்டேன். இந்தக் காட்சி என்னை என்னவோ செய்தது. அந்த உணர்ச்சியை என்னால் விவரிக்க முடியாது.

எங்கள் கிராமத்தைப் போலவேதான் தமிழுலகும் இன்று வெறிச்சிட்டுப் போயிருக்கிறது. விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப் போல மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் நம்மைப் பிரிந்து சென்று விட்டார். திருவட்டீசுவரன் பேட்டை 'தியாகராச விலாச'த்தின் மேல்மாடியில் - தமிழ்த் தாத்தா இன்று இல்லை. விசுப் பலகையில் படுத்தவண்ணம் ஓலைச்சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை. சீடப் பிள்ளைகளிடம் எழுதுவதற்கு விஷயம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை - என்பதை நினைத்தால் நெஞ்சை என்னவோ செய்கிறது. தமிழ்த் தாத்தா போய்விட்டார்; அவருடைய ஸ்தானம் இனி எக்காலத்தில் பூர்த்தியாகப் போகிறது?

அற்பாயுளுக்குப் பெயர்போன நமது தேசத்தில் ஒரு மனிதர் 60 வயதிருந்தாலே எல்லோருக்கும் திருப்தி உண்டாகிவிடுகிறது. எழுபது வயதுக்குப் பிறகு ஒருவர் காலஞ் சென்றால் அநேகமாக யாரும் அதிருப்தி படுவதில்லை. சரியான காலத்தில் அவர் சரியான காரியத்தைச் செய்ததாகவே எண்ணுகிறார்கள்!

இன்னும் ஒரு மனுஷர் எழுபத்தைந்து வயதுக்கு மேல் இருந்துவிட்டால் அவர் அநுசிதமான காரியத்தைச் செய்ததாகவே எண்ணிவிடுகிறோம். ''மனுஷருக்கு உயிர் ரொம்ப கெட்டி!'' என்று வியப்புடன் கூறுகிறோம். அப்படிப்பட்டவர் கடைசியாக மரணம் அடையும்போது ''முதிர்ந்த வயது, ஒருமாதிரி அவர் காலம் ஆகிவிட்டது; இனிமேல் இருந்தால் அவருக்கும் கஷ்டம் - இருக்கிறவர்களுக்கும் கஷ்டந்தான்'' என்றுகூடப் பட்டவர்த்தனமாய்ப் பேசுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயரவர்கள் எண்பத்தாறு வயது பூர்த்தியாகி எண்பத்தேழாம் வயதில் காலஞ் சென்றார். ஆனாலும் நமக்கு இன்னமும் குறையாகத்தான் இருக்கிறது. ஏதோ நடக்கக் கூடாத காரியம் நடந்து விட்டதாகவே தோன்றுகிறது. பாழும் யமன் இன்னும் சிலகாலம் பொறுத்திருக்கக் கூடாதா என்று ஆத்திரப்படுகிறோம். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் அப்படிப்பட்ட தொண்டைச் செய்துவந்தார். அத்தகைய தொண்டை இதற்குமுன் யாரும் செய்ததும் இல்லை. இனிமேல் செய்யப் போவதும் இல்லை. அவருடைய மரணத்தினால் தமிழுலகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் பூர்த்தி செய்ய முடியாத நஷ்டமேயாகும்.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அநேகர் பெயரளவில் மட்டும் கேள்விப்பட்டிருந்த பழந்தமிழ்

இலக்கியங்களை அவர் கண்டுபிடித்து அச்சேற்றித் திருத்தமான உயர்ந்த பதிப்புக்களாக வெளியிட்டார். அவற்றில் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு பத்துப்பாட்டு என்னும் நூல்கள் முக்கியமானவை. இந்த நூல்களைக் கண்டு பிடித்து வெளியிடும் முயற்சியில் அவர் அடைந்த சிரமங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோவித எதிர்ப்புக்களும், எதிரிகளும் அவருக்கு ஏற்பட்டார்கள். அவருடைய எதிரிகளில் முக்கியமான எதிரி கறையான். கறையான் படைகளுடன் அவர் நடத்திய போரை ஒரு மகாகவி வர்ணிக்க வேண்டுமே தவிர சாதாரண வார்த்தைகளில் எழுத முடியாது. ரயில் பாதையில் வெகுதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஏதோ ஒரு வீட்டின் பரணில் ஒரு ஓலைச்சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் கிடக்கும் செய்தியை டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் எப்படியோ தெரிந்துகொண்டு விடுவார். அவர் மேற்படி கிராமத்தை நோக்கி விரைந்து வருவார். ரயிலோ, கட்டை வண்டியோ கால்நடையோ எதுவானாலும் அவருக்கு லட்சியமில்லை. பகல் இராத்திரி என்று பாராமல் ஓடி வருவார்.

கறையான்களும் கொஞ்சம் கொஞ்சமாக சுவரில் ஏறி, உத்திரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு முன்னேறி, நாளுக்குநாள் ஓலைச்சுவடியை நெருங்கிக் கொண்டிருக்கும். இதோ ஓலைச்சுவடி கிடக்கும் இடம் அவற்றின் பார்வைக்கு வந்துவிட்டது. ''பேஷ்! பலநாளைக்கு ஆகாரம் ஆயிற்று!'' என்று அவை கொம்மாளம் அடித்துக்கொண்டு நெருங்குகின்றன. ஓலைச்சுவடியை ருசியும் பார்த்தாகி விட்டது. நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு அவை சுறுசுறுப்பாக வேலை தொடங்குகின்றன. அப்பேர்ப்பட்ட சமயத்தில் அந்த வீட்டைத் தேடி வந்து சேர்கிறார் ஸ்ரீ உ.வே.சாமிநாதையரவர்கள். வீட்டு எஜமானைப் பார்த்து, ''ஐயா! உங்கள் வீட்டில் பழைய ஓலைச்சுவடி ஒன்று இருக்கிறதாமே?'' என்று கேட்கிறார்.

''பரண் மேலே கிடந்தது. என்னத்திற்கு கேட்கிறீர்கள்?'' என்கிறார் வீட்டுக்காரர். அவரிடம் ஸ்ரீ சாமிநாத ஐயரவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிப் பேசி, ஓலைச் சுவடியைப் பார்க்க வேண்டும் என்கிறார்.

''சாயங்காலம் பார்ப்போம்; இப்போது வயலுக்குப் போகிறேன்'' என்கிறார் வீட்டுக்காரர்.

இதற்குள் சுவரில் உள்ள கறையான் கூட்டின் மேல் ஸ்ரீ சாமிநாத ஐயரவர்களின் பார்வை விழுகிறது. ''ஐயையோ! பரண்மேல் கறையான் ஏறிக்கொண்டிருக்கிறதே! சுவடி போய்விடப் போகிறதே! உடனே பார்த்தால் தேவலை!'' என்கிறார் சாமிநாத ஐயரவர்கள். அவருடைய பதைபதைப்பை வீட்டுக்காரர் பார்த்துவிட்டு பரண்மேல் ஏணிவைத்து ஏறி ஓலைச்சுவடியை எடுத்துக் கீழே போடுகிறார். சுவடியின் ஓரங்களில் கறையான் வாய் வைத்திருக்கும் அடையாளங்கள் தெரிகின்றன.

ஸ்ரீ சாமிநாத ஐயரவர்கள் அதை அவசரமாக உதறிஎடுத்து தம் சிரமீது வைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார். பிறகு ஓலைச்சுவடியை பிரித்துப் பார்க்கின்றார். ஐயரவர்களின் கண்கள் விரிகின்றன. வியப்பினால் அல்ல; அளவிலாத ஏமாற்றத்தினால். ஏனெனில் அவர் தேடிவந்த பழந்தமிழ் நூல் ஒன்றும் அந்த ஓலைச்சுவடியில் இல்லை. சமீப காலத்தில் எழுதப்பட்ட உபயோகமற்ற ஸ்தலபுராணம் அது. ''இவ்வளவுதானா?'' என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார். இதுவும் ஒரு மூலையில் கிடக்கட்டும்; ஏதாவது பிரயோஜனப்படும்'' என்று எண்ணி ஓலைச்சுவடியை எடுத்துக்கொண்டு கிளம்புகிறார். எங்கே? இன்னொரு ஊரில் இன்னொரு வீட்டில் பரணில் கிடக்கும் இன்னொரு ஓலைச்சுவடியைத் தேடிக் கொண்டு தான்!

★ ★ ★

தமிழன்பு என்பது இந்தக் காலத்தில் தமிழ் மக்களிடையே பரந்து பரவி யிருக்கிறது. 'தமிழன்பு' பற்றி அடிக்கடி பேசுகிறோம்; எழுதுகிறோம். தமிழுக்குத் தொண்டு செய்கிறவர்களைப் பாராட்டுகிறோம். அத்தகைய பாராட்டுக் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். ஆரவாரிக்கிறார்கள்.

டாக்டர் சாமிநாதையர் அவர்கள் தமிழ்த் தொண்டு ஆரம்பித்த காலத்தில் இப்படிப்பட்ட தூண்டுதல் ஒன்றுமே கிடையாது. எங்கேயாவது அத்திப் பூத்ததுபோல் ஒரு ஜமீந்தார், ஒரு மடாதிபதி தமிழ் அபிமானம் கொண்டவராய் இருந்து தமிழ்த் தொண்டைப் பாராட்டுவார். அவரிடம் ஒடுக்கத்துடன், நல்ல சமயம் பார்த்துப் போய் நிற்க வேண்டும். மற்றபடி தமிழ்த்தொண்டுக்கு அந்நாளில் கௌரவம் கிடையாது. தமிழ்நாட்டில் தமிழ்த் தாய் ஆங்கில ராணியின் முன்னால் கைகட்டி நின்று பணிவிடை செய்த காலம். அத்தகைய காலத்தில் டாக்டர் சாமிநாதையரவர்கள் தமிழ்த்தொண்டைத் தொடங்கினார். இடைவிடாமலும் சோர்வடையாமலும் செய்து வந்தார். தமிழன்பு என்பது அவருடைய ரத்தத்திலேயே ஊறியிருக்க வேண்டும். தமிழ்ப் பணியில் ஆர்வமானது அவருடைய சதை நரம்புகளில் கலந்து மூச்சு விடுவதைப் போல இயற்கையோடு இயற்கையாகச் சேர்ந்திருக்க வேண்டும். அத்தகைய தமிழ் அன்பரைத் தமிழ்த் தொண்டரை இனி எங்கே காணப் போகிறோம்?

*With Best Compliments*
*from*

**COMBILINE INDIAN AGENCY**

BOMBAY

*With Best Compliments of*

**TAMILNADU DADHA PHARMACEUTICALS LIMITED**
(A Joint Venture with TIDCO)

| | | |
|---|---|---|
| Regd. Office | : | 260-262, Royapettah High Road<br>Madras-600 014. |
| | | Telephone : 8267815<br>Telegram : CISPLATIN, MADRAS<br>Telex : 41-7312 TDPL IN<br>Telefax : 8266441 |
| Factory | : | Dadhanagar, Madras-600 074. |
| | | Telephone : 4828524, 4828537, 4828538 & 4828539<br>Telegram : CISPLATIN, MADRAS<br>Telex : 41-26066 |
| Sales Depot | : | 10, Jeypore Nagar,<br>Madras - 600 086. |
| | | Telephone : 8270656 |

மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் பழைய தமிழ்ப் பண்டிதர்களில் பழுத்துக் கனிந்த தமிழ்ப் பண்டிதர்; நவீன இலக்கிய ஆராய்ச்சியாளர் களில் தலைச்சிறந்த ஆராய்ச்சியாளர்; நவயுகத் தமிழ் எழுத்தாளர்களில் முதன்மையான எழுத்தா ளர்.

சாதாரணமாக மனுஷ்யர்களுக்கு வயதாக ஆக, நோக்கம் குறுகிப் போவதையும், புதிய எண்ணங்க ளைக் கிரஹிக்கும் சக்தி குன்றிவிடுவதையும் பார்க் கிறோம். அதிலும் தமிழ்ப் புலவர்கள் வயது ஆக ஆகக் கறடு தட்டிய பண்டித மனப்பான்மையை அடைகிறார்கள். டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்க ளிடம் இதற்கு நேர்விரோதமான இயல்பைக் கண் டோம். வயதாக ஆக அவருடைய மனம் விசால மாகி வந்தது. தமிழ் வசன நடையில் ஏற்பட்டு வந்த மாறுதல்களை அவர் பெரிதும் ரசித்து அநுப வித்தார்! அதைவிட ஆச்சரியம் என்னவென்றால், புதிய எளிய தமிழ்நடையைத் தாமே பின்பற்றி எழுதவும் தொடங்கினார். அதில் வெற்றியும் அடைந்தார். இலக்கிய உலகத்தில் இது ஒரு பெரிய அற்புதம் என்றே கூறவேண்டும்.

சுமார் பத்து வருஷத்துக்கு முன்பு டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களை முதன் முதலாக நான் பார்த்தேன். ஒரு விசேஷ ஆண்டு மலருக்குக் கட்டுரை கேட்கும் நோக்கத்துடன் அவரிடம் சென் றேன். போகும்போது நெஞ்சு கொஞ்சம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பழந்தமிழ்ப் பண்டிதர் நம்மை எவ்விதம் நடத்துகிறாரோ என்ற பயந்தான் காரணம். காலஞ்சென்ற வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரைப் பற்றிக் கேள்விப்பட்டி ருக்கிறேன். அவரிடம் வருகிறவர்களைப் பார்த்து சாஸ்திரியார் ''நீவீர் யாண்டுப் போந்தீர்?'' என்று கேட்பாராம். தமிழ்த்தாத்தா அப்படியெல்லாம் என் னைத் திண்டாட வைக்கவில்லை. நம்மையெல்லாம் போல சாதாரண வீட்டுத் தமிழிலேயே பேசினார். நான் இன்னார் என்று தெரிவித்துக் கொண்டதும், ''டி.கே.சிதம்பரநாத முதலியார் உம்மைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்'' என்றார். எனக்கு அப்போது டி.கே.சிதம்பரநாத முதலியார் இன்னார் என்றே தெரியாது. அவர் எதற்காக என்னைப் பற்றிச் சொல்லியிருக்கப் போகிறார் என்று திகைத்தேன். என்னுடைய திகைப்பை அதிகமாக்கும்படியாகத் தமிழ்த்தாத்தா மேலும் ஒரு விஷயம் சொன்னார். அதற்குச் சிலகாலத்துக்கு முன்பு, முதல் முதல் வெளியான தமிழ் பேசும் படத்தைப் பற்றி, தமிழ்ப் பாட்டி என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியி ருந்தேன். ''தப்பிலி கப்'' என்ற கதையொன்றும் வெளியாகியிருந்தது. மேற்படி கட்டுரையையும், கதையையும் பற்றித் தமிழ்த்தாத்தா திருப்பித் திருப்பி தமது பாராட்டுதலைத் தெரிவித்தார். தாம் ரசித்த சில சில வாக்கியங்களையும் அப்படியே சொன்னார். எனக்கு இதெல்லாம் ஒருபக்கம் சந்தோ ஷமாய் இருந்தாலும் இன்னொரு பக்கம் சங்கட மாய் இருந்தது. எனவே பேச்சை மாற்றும் பொருட் டுச் சுற்றிலும் இருந்த ஓலைச்சுவடிகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். உடனே தமிழ்த்தாத்தா தமது பழைய அநுபவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித் தார். அவை மிகவும் ரஸமாய் இருந்தன. உணர்ச்சி யுடன் நகைச்சுவை பொருந்தியும் இருந்தன. அன்று அவர் சொன்னவற்றில் ஒன்று இன்னமும் எனக்கு மிகத் தெளிவாக ஞாபகம் இருக்கிறது.

மற்றவர்களைப் புத்தகம் எழுதச் சொல்லித் தம் பெயரால் வெளியிடும் மகாநுபாவர் ஒருவர் இருந் தாராம்! அவர் ஒருநாள் ஐயரவர்களைப் பார்க்க வந்தார். வந்தவர், அந்த அறையில் அடுக்கியிருந்த ஓலைச்சுவடிகளை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தா ராம். உடனே ஐயரவர்கள் ''இதோ பாரும்! நீர் என்னைப் பார்க்கத்தானே வந்ததாகச் சொன்னீர்? என்னைப் பார்க்க வந்திருந்தால், என்னைப் பார்த் துப் பேசும்; இல்லாவிட்டால் நடையைக் கட்டும். அங்கே இங்கே பார்த்து விழிக்க வேண்டாம்!'' என்றாராம்.

இம்மாதிரி எவ்வளவோ சம்பவங்கள் சொன் னார். ஒருசமயம் ரசிகரான ஒரு ஜமீந்தார் முன்னி லையில் ஸ்ரீ சாமிநாதையர் அவர்களும் இன்னொரு தமிழ்ப் பண்டிதரும் இருந்தார்களாம். ஜமீந்தார் அந்த இன்னொரு தமிழ்ப் பண்டிதரைப் பரிகாச மாய்ப் புகழ்ந்து, ''சாமிநாதையருக்கு என்ன தெரி யும்? பழைய ஓலைச்சுவடிகளைப் புரட்டிக் கொண் டிருப்பார். உம்மைப்போல் அவரால் நிமிஷத்துக்கு ஒரு பாட்டுப் பாட முடியுமா?'' என்றாராம். இந்தப் புகழ்ச்சியை அந்தப் பண்டிதர் உண்மை என்று நினைத்துத் தம்முடைய மார்பைப் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டாராம். இதை ஐயரவர்கள் சொன்னவுடனே, நான் ''தாங்கள் கூடக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னுடைய எழுத்து திற மையை ரொம்பவும் பாராட்டினீர்கள். சிறுபிள்ளை யாச்சே என்று ஊக்கப்படுத்துவதற்காகத் தாங்கள் சொன்னதையெல்லாம் நான் அப்படியே நிஜம் என்று எடுத்துக் கொள்ளலாமா?'' என்றேன். தமிழ்த்தாத்தா 'குபீர்' என்று சிரித்த சிரிப்பின் ஒலி இன்னும் என் காதில் தொனிக்கிறது.

இதையெல்லாம் விடப் பெரிய ஆச்சரியம் எனக் குக் காத்திருந்தது. ஆண்டு மலருக்குத் தமிழ்த் தாத்தாவின் கட்டுரை வந்தது. 'பரம்பரைக் குணம்'

என்னும் தலைப்புடன், உண்மையாகவே நடந்த சம்பவம் ஒன்றை, எளிய பேச்சுமுறையில் ரஸமாக எழுதியிருந்தார். பழைய காலத்துத் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் - அதிலும் பண்டிதர் உலகில் இவ்வளவு எளிய நடையில் எழுதக்கூடும், எழுதும் துணிச்சல் அவருக்கு ஏற்படும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

அதுமுதல் நான் சிலசமயம் தனியாகவும் பெரும்பாலும் டி.கே.சி.யுடனும் தமிழ்த்தாத்தாவை அடிக்கடி பார்க்கப் போவதுண்டு. அப்போதெல்லாம் அப்பெரியாரின் வாழ்க்கை அநுபவங்கள் சிலவற்றை அவருடைய வாய்மொழியாகக் கேட்க நேரிடும் கேட்கக் கேட்க அந்த அநுபவங்களை எல்லாம் அவர் புஸ்தகமாக எழுத வேண்டும் என்று ஆசை உண்டாகும். ''உங்களுடைய சுயசரித்திரத்தை நீங்கள் எழுத வேண்டும்'' என்று அடிக்கடி தெரிவித்துக் கொள்வோம். மகாத்மா ஜவஹர்லால் நேரு முதலியவர்கள் 'சுயசரிதம்' எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டுவோம். ''என்னுடைய சரித்திரத்தை நானே எழுதிக்கொள்வது என்பது பிடிக்கவில்லையே என்பார் ஐயரவர்கள். ஆனாலும் நாங்கள் விடுவதில்லை. ''அதில் ஒரு பிசகும் கிடையாது. தங்களுடைய சுயசரித்திரம் என்றால் அது தமிழ்நாட்டின் எண்பது வருஷத்துச் சரித்திரமாக அல்லவா இருக்கும்.''' என்று வற்புறுத்துவோம். எங்களுடைய வேண்டுகோளை அவருடைய அருமைப் புதல்வர் ஸ்ரீ கல்யாண சுந்தர ஐயரும், அவருடைய தலைசிறந்த சிஷ்யரான ஸ்ரீ கி.வா.ஜகந்நாதையரும் ஆதரித்தபடியால் கடைசியில் எங்கள் மனோரதம் நிறைவேறிற்று. தமிழ்த் தாத்தா எழுதச் சம்மதித்து எழுதியும் வந்தார். அது பூர்த்தியாவதற்குள் அவர் காலஞ் சென்றது தமிழ் நாட்டின் பாக்கியக் குறைவேயாகும்.

தமிழ்த் தாத்தாவை நான் பார்க்கப் போன சமயங்களில் அவரிடம் நான் கண்ட ஒரு அருமையான குணம் சிஷ்யர்களிடம் அவருக்கு இருந்த அன்புதான். அவருடைய சிஷ்யர்களில் எனக்குத் தெரிந்தவர் வித்வான் ஸ்ரீ கி.வா.ஜகந்நாதன். ''கலைமகள்'' பத்திரிகையின் துணை ஆசிரியராய் இருந்து திறம்பட நடத்தி வருகிறவரும், புதுமுறையில் சிறுகதைகள் பல எழுதியுள்ளவருமான ஸ்ரீ ஜகந்நாதன் குருவையே தெய்வமாகக் கருதும் உத்தம சிஷ்யர். அவருடைய குருபக்திக்கு ஈடாக அவரிடம் தமிழ்த்தாத்தா கொண்டிருந்த அன்பைத் தான் சொல்லலாம். நான் 'தியாகராஜ விலாசத்துக்கு'ப் போகும் சமயங்களில் ஸ்ரீ ஜகந்நாதன் அங்கு இல்லாவிட்டால் டாக்டர் சாமிநாதையரவர்கள் ''உங்கள் நண்பருக்கு சதா உங்கள் ஞாபகம் தான் அவரை இதோ அழைத்துவரச் செய்கிறேன்'' என்பார் உண்மையில் அவர் இதைச் சாக்கிட்டுத் தமது சிஷ்யரைப் பார்க்க விரும்புகிறார் என்று எனக்குத் தோன்றும். அந்திய காலத்தில் தமிழ்த்தாத்தாவின் ஆராய்ச்சி வேலைகளுக்கும் எழுத்துத் தொண்டுக்கும் உற்ற துணையாய் இருந்தவர் ஸ்ரீ ஜகந்நாதையர்.

ஐயரவர்களின் வரலாறு முழுவதையும் அவரிடம் பலமுறை கேட்டறிந்தவர் ஆகவே குரு தமது சுயசரிதத்தை விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்துச் சீடர் அவருடைய வரலாறைப் பூர்த்தி செய்வார் என்று நம்புகிறேன். (மணிமேகலைப் பதிப்புக்குப் பின்உள்ள ஐயரவர்கள் சுயசரித்திரத்தின் தொடர்ச்சியை 'என் ஆசிரியப்பிரான்' என்னும் தலைப்புப் பெயரில் ஸ்ரீ கி வா.ஜ அவர்கள் எழுதிப் பூர்த்தி செய்துள்ளார். என் ஆசிரியப்பிரான் இந்நூல் நிலையப் பதிப்பாக 1983-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளது).

எப்பேர்ப்பட்ட மகான்களையும் பெரியவர்களையும் நாக்கில் நரம்பில்லாமல் தூஷிக்கக் கூடிய புண்ணியாத்மாக்கள் நம்நாட்டில் இருக்கிறார்கள். காந்திஜியும் ராஜாஜியும் படுகிற பாட்டில் மற்றவர்கள் எல்லாம் எந்த மூலை? உ.வே.சாமிநாதையர் அப்படி என்ன பிரமாதமான தமிழ்த்தொண்டு செய்துவிட்டாரா? புத்தகம் போட்டுப் பணம் சம்பாதித்தார்!'' என்று சொல்லப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். புத்தகத் தொழிலைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் இதை நம்பவும் கூடும். எத்தனை பக்கம்? என்ன அச்சு? எந்த மாதிரி பைண்டு? என்ன காகிதம்? என்பது ஒன்றும் தெரியாமலே 'விலை ஆறு ரூபாயா? கொள்ளை! என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நமது தமிழ்த் தாத்தா புத்தகம் போட்டுப் பணம் சம்பாதித்த கதையை நான் அறிவேன். சாதரணமாய் 'ரெயினால்ட்ஸ்'' நாவல்களை மொழிபெயர்த்து வெளியிட்டவர்கள் அடைந்த லாபத்தைக்கூட அவர் அடையவில்லை. ஏனென்றால் எவ்வளவோ உழைப்பின்பேரில் அவர் பரிசோதித்து வெளியிட்ட அரிய நூல்கள் எல்லாம் மிகச் சில தமிழன்பர்களே வாங்கக் கூடியவை. ஆயிரம் பிரதிகளுக்குக் குறைந்து எந்தப் புத்தகமும் வெளியிட முடியாது. வெளியிட்டால் அசாத்திய விலை வைக்க வேண்டும். தமிழ்த் தாத்தா போட்ட புத்தகங்களோ வெளியான ஒரு வருஷத்திற்குள் சாதாரணமாக 200, 300 பிரதிகள்தான் விற்பனையாகும். அப்புறம் மாதத்துக்கொரு புத்தகம் விற்றால் பெரிய காரியம்

*With Best Compliments*
*from*

# ESSAR GLASS WORKS (P) LTD

*Manufacturers of Tubular*
*Products Made of USP*

Type I In Amber & White i.e. Ampoules, Tubular Vials, Screw Neck Vials for perfumeries and Attar & Dental cardiages from 0.50 to 25 ml capacity.

Fact : 2B/6, Developed Plot
Ambattur Ind. Estate
Madras 600 058
Ph : 65 32 10

Office : 14 Haddows Road
Madras - 600 006.
Ph : 827 9517
Fax : 825 0014

அரிய தமிழ்ப் பொக்கிஷங்கள் என்று சொல்லக் கூடிய புத்தகங்கள் விற்பனையாகாமல் ஒரு வீடு நிறையக் கிடப்பதை நான் அறிவேன். வீட்டுக்கு வாடகை வேறு கையை விட்டுக் கொடுத்து வருகி றார்கள்! மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலா நிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் உ.வே.சாமி நாதையர் அவர்கள் தமக்கு வினாத் தெரிந்த காலத்தில் இருந்து தமிழ்த்தாய்க்குச் செய்து வந்தி ருக்கும் ஒப்பற்ற தொண்டுக்கு நாம் நன்றி செலுத்த விரும்பினோமானால் அவருடைய ஞாபகத்தைப் போற்ற விரும்பினோமானால் அதற்கு மேற்படி புத்தகங்களில் சிலவற்றை வாங்கிக் கொள்வதைக் காட்டிலும் சிறந்த மார்க்கம் வேறு எதுவுமே கிடையாது.

(**'கல்கி'யின் 'பாரதி பிறந்தார்'** என்னும் நூலில் உள்ள கட்டுரை ஓர் உவமைக்காகக் 'கல்கி' அவர் கள் இக்கட்டுரையின் தலைப்புப் பெயரை 'வீழ்ந்த ஆலமரம்' என்று அமைத்திருந்தாலும், மகாகவி பாரதியின் திருவாக்கின்படி ஐயரவர்கள் தமிழ் வாழ்வறியும் காலமெல்லாம் அதன் தண்ணிழலாக நிலை பெற்றிருப்பவர்; தமிழ் என்றும் உள்ளது. (என்றும் உளதென் தமிழ் - கம்பர்) எனவே இக்கட்டுரையின் தலைப்புப் பெயரைத் தமிழின் தண்ணிழல் என்று மாற்றியுள்ளோம்.)

***என்றும் தமிழின் தண்ணிழலாக***
***இருக்கும் ஐயர் திருப்பணி வாழ்க!***

## ஐயரவர்கள்

**-சித்தாந்த தீபிகை, 21.6.1897.**

*கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ வே.சாமிநாதையர் அவர்கள் கல்லூரியில் தம் கடமையைக் கழித்த காலம் போக, எஞ்சியவற்றில் ஒவ்வொரு நிமிஷத்தையும் பனையோ லைச் சுவடிக்குவியலில் முன் இறந்துபோன பழந் தமிழ் நூல்களை ஆராய்ந்து கொண்டிருத்தலி லேயே கழித்து வருகிறார்கள். அத்தகைய பனையோலைப் பழஞ்சுவடிகளிற்றானும் வரிகள் குறைந்தும் வார்த்தைகள் பிறழ்ந்தும் செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளியில்லாச் சொற்களும், இவைகளினாலும் ஏடெழுதுவோராலும் நிகழ்ந்த சொற்குற்றம் பொருட்குற்றங்களும் தன்னகத்தில் நிறைந்து சிதிலைவாய்ப்பட்ட சுவடிகளைத் திருத்துவதிலும் அவற்றின் குற்றங்க ளைக் கண்டுபிடித்துச் செம்மை செய்வதிலும் ஐயரவர்கள் படுங் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. இத்தகைய அருஞ் செயல்களை முடிப்பதற்குரிய சிறந்த கருவிகளேனும் இருக்கின்றனவா? அந்தோ, அவையும் இல்லை. அவர்கள் காவிரிக் கரையிலுள்ள ஒரு சிறிய வீட்டின் மெத்தை மேல் தரையில் உட்கார்ந்து கொண்டு சுடுகாற்றுத் தம்மேல் எரிந்து வீசச் சிறிய மேசை யொன்றின் மேல் கடிதங்களை வைத்துக் கொண்டு எழுதுவார்கள். அவர்கள் திவ்ய தேகத்தின் மேல் எரிந்துவந்து வீசும் காற்றின் வன்மையைக் குறைக்கத்தக்க குளிர்ந்த பந்தல் அவர்கள் வீட்டு முகப்பில் இல்லை; க்ரோடன்ஸ் இல்லை; வெட்டிவேர்த் தட்டிகள் இல்லை; குளிர்காற்று வீசும் பங்கா இல்லை. இவ்வாறாகவும் இத்தகைய துன்பங்களின் நடுவில் இருந்துகொண்டே பண்டிதரவர்கள் தமிழ்ச் சுவையறிந்து அச்சுவையை எல்லாருக்கும் நுகரக் கொடுக்க வேண்டும் என்னும் பொதுநன்மையை நாடி அரிய பெரிய நூல்களை ஆராய்ந்து அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் ஐரோப்பியராய் மட்டும் இருந்தால் அந்நாடுகளில் உள்ளோர் இவருக்குச் செய்யும் மரியாதையும், நன்கு மதிப்பும் இவ்வளவு என்று எடுத்துரைக்க முடியாது. கவர்மெண்டா ரும் எத்தனையோ உயர்ந்த பட்டங்களும் உத்தியோகங்களும் கொடுத்து விடுவார்கள். நம் காருண்ய கவர்மெண்டார் தமது கல்லூரியில் பண்டிதர் அவர்களது நிலையை உயர்த்தி, இத்தகைய வேலைகளின் நின்றும் அவர்களைச் சிறிது இளைப்பாறச் செய்து, பிரஜைகளுக்கும் மாணவர்களுக்கும் அவர்கள் நீடிய ஆயுள் பெற்றுப் பயன் விளைக்குமாறு உதவி செய்வார்க ளென்று நம்புகிறோம்.*

*With Best Compliments*

*from*

# A Well Wisher

உ

*எங்களிடம்*

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடுகள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடுகள் திருப்பனந்தாள் காசி மட வெளியீடுகள் திருப்பராய்த்துறை தபோவன வெளியீடுகள் அண்ணாமலை, தஞ்சை, மதுரை, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடுகளும் பிற தமிழ் நூல்களும் கிடைக்கும்.

**பாரி நிலையம்**

184, பிராட்வே,

சென்னை-600 108.

தொலைபேசி எண் : 515561

# இதற்குத்தானா ஐம்பது ரூபாய்

**வித்துவான் சு. பாலசாரநாதன்**

டாக்டர் ஐயரவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் கிடைத்ததைக் கொண்டு சிக்கனமாகச் செலவு செய்து திருப்தியுடன் இருப்பவர்கள். இவர்கள் திருவாவடுதுறையிலிருந்தபொழுது ஆதீனத்திலிருந்து ஆண்டுக்கு 60 கலம் நெல்லும் செலவிற்காகப் பணமும் ஆதீனத்திலிருந்து கொடுத்து வந்தார்கள். ஐயரவர்கள் காலை ஏழு மணிக்கு மடத்துக்குச் சென்று பதினொன்று மணிக்கு வீட்டிற்கு வருவார்கள். மாலை இரண்டு மணிக்குச் சென்று இரவு பத்து மணிக்குத்தான் வீட்டிற்கு வருவார்கள். இந்த நேரங்களில் பலதரத்தினராகிய மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லுதல், தலைவர்களைப் பார்க்க வந்த பிரபுக்களோடும், வித்துவான்களோடும் அளவளாவுதல், அவர்களுக்குப் பல அரிய விஷயங்களை எடுத்துச் சொல்லி மகிழ்வித்தல். அவர்கள் சொல்லுகிற பல அரிய விஷயங்களைக் கேட்டு மகிழ்தல் முதலான பல வழிகளில் பொழுது சென்று கொண்டிருக்கும். இந்தச் சத்புத்திரைப் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயார் வளர்பிறைச் சந்திரனைப் போல் நாளுக்கு நாள் கல்வி நிரம்பிப் பலராலும் கொண்டாடப்படுதலைக் கேட்டு, 'ஈன்பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' என்ற குறளுக்கு மிகவும் எடுத்துக்காட்டாக மகிழ்ச்சி அடைவார்கள். காலை 7 மணிக்குச் சென்று இரவு 10 மணிவரை மடத்திலிருந்துவிட்டு வருதலைப் பார்த்த தாயார், குடந்தைக் கல்லூரிக்கு வந்தபிறகு, காலை 11 மணிக்குச் சென்று ஒரு மணிக்குத் திரும்பி வந்துவிடுவார்கள். பிறகு இரண்டு மணிக்குச் சென்று மாலை 3 மணிக்கோ அல்லது 4 மணிக்கோ திரும்பி வந்துவிடுவார்கள். கல்லூரியில் வாரத்திற்கு 16 மணி நேரமே வேலை இருக்கும். கல்லூரிக்கு அருகில் வீடு இருந்தமையால் வேலையுள்ளபோது கல்லூரிக்குச் சென்று பாடம் சொல்லிவிட்டு மற்ற நேரங்களில் வீட்டில் நூல்களைப் படித்துக் கொண்டும், ஒப்பிட்டுக் கொண்டும் இருப்பார்கள். திருவாவடுதுறையில் பகல் இரவு நேரங்களில் பெரும்பாலும் மடத்திலேயே இருந்ததைப் பார்த்த ஐயரவர்களின் தாயார் இதனைக் கவனித்து வந்தார்கள். ஒருநாள் ஐயரவர்களுடைய தாயார் அவரிடம் காலேஜுக்குச் சென்று சில நேரம் போய்விட்டு மற்ற நேரங்களில் வீட்டிலேயே இருக்கின்றாயே; காலேஜில் வேலை இராதோ? என்று கேட்டார்கள். அதற்கு ஐயரவர்கள் சில தினங்களில் மூன்று மணி நேரமும் சில தினங்களில் நான்கு மணி நேரமும்தான் வேலை இருக்கும். வேலையுள்ள நேரங்களில் மாத்திரம் கல்லூரியில் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். இதைக் கேட்ட தாயார் **''இதற்குத்தானா ஐம்பது ரூபாய்''** என்று வியந்து கூறினார்கள். இதனால் அவர்களுக்கிருந்த மனத்திருப்தியின் அளவு நன்கு விளங்கும். ஐயரவர்களுடைய தகப்பனார் அவர்களும் பரம திருப்தி அடைவார்கள். ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள் ஐயரவர்கள்.

### தமிழ்த் தாத்தாவின் ஆடம்பரமில்லாத வாழ்க்கை

அடக்கமும் படாடோபமின்மையும் ஐயரவர்களிடம் குடிகொண்டிருப்பவை. அவற்றுக்கு அவர்கள் சரித்திரத்திலிருந்து பல உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். தம்மை அலங்கரித்துக் கொள்வதிலும், பெருமைப்படுத்திக் கொள்வதிலும் சிறிதும் விரும்ப மாட்டார்கள், அது மாத்திரமன்றி அப்படிச் செய்து கொள்வதிலும் நாணமுடையவர்கள். அவர்களுக்கு எத்தனை தோடாக்களும், சாதராக்களும் வந்திருந்த போதிலும் அவைகளை உபயோகிக்க மாட்டார்கள். தமக்கு வந்த சன்மானங்களை மற்றப் புலவர்களுக்குச் சன்மானம் செய்துவிடுவார்கள். திருவையாறு சதுர்சாத்திர பண்டிதர் ப்ரம்மஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் முதலான சம்ஸ்கிருத பண்டிதர்கள், திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர் அவர்கள், இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் முதலான சங்கீத வித்வான்களும், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரவர்கள் முதலான தமிழ்ப் பண்டிதர்களும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குமாரர் சிதம்பரம் பிள்ளையவர்கள் முதலான அன்பர்களும் ஐயரவர்களிடமிருந்து சால்வை பீதாம்பரம் முதலிய சன்மானங்களைப் பெற்றவர்கள். இப்படியாக ஐயரவர்கள் தாம் பெற்ற பரிசில்கள் மற்ற வித்துவான்களுக்கும், அன்பர்களுக்கும் உபயோகப்படும்படியாகக் கொடுத்து விடுவார்கள். தோடா, மோதிரம் முதலியன அணிந்து கொண்டும் சால்வை முதலியவற்றைப் போர்த்திக் கொண்டும் சபைகளுக்கோ, கோயல்களுக்கோ, திருவிழாக்களுக்கோ, கலியாணங்களுக்கோ போக மாட்டார்.

ஐயரவர்கள் சாதாரணமான உடைகளையே உடுத்துக் கொள்வார்கள். இடுப்பில் வெண்மையான மல் வஸ்திரத்தையே உடுத்திக் கொள்வார்கள். கரையுள்ள வஸ்திரம் உடுத்திக் கொள்ளமாட்டார்கள். மெல்லிய அங்கவஸ்திரம் உடுத்திக்கொள்வார்கள்.

உடைகள் படாடோபமின்றி இருக்குமேயல்லாமல் மிகப் பரிசுத்தமாக இருக்கும். சென்னைக்கு மாற்ற லாகி வந்தபிறகு அவரது உடையில் சில மாற்றங் கள் ஏற்பட்டன.

புத்தகங்கள் வைத்துக் கொள்ளவும், படிக்கவும், பாடம் சொல்லவும், வேலை செய்யவும் போதுமான இடம் வேண்டுமென்று விரும்புவாரேயல்லாமல் பெரிய மாளிகைகளும், உப்பரிகைகளும் வேண்டு மென்று விரும்பியதில்லை. இடம் சிறிதாக இருந்தா லும் அதைச் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள். விலையுயர்ந்த ஆசனங்களையோ, விரிப்புக் களையோ உபயோகப்படுத்த மாட்டார்கள். தரை யிலே உட்கார்ந்து ஆராய்ச்சி முதலியன செய்வார் கள். எழுத ஒரு சிறிய மேஜை ஒன்றுதான் அவருக்கு வேண்டும். கும்பகோணத்திலிருந்த காலத்தில் அவரது வீட்டிற்கு முகப்பில் ஒரு கொட்டகை இருக்கும். அதில் உட்கார்ந்து கொண்டு சீவக சிந்தாமணி முதலிய நூல்களை வெளியிட்டார் கள். அந்தக் கொட்டகையில்தான் டிப்டி கலெக்டர் கள், சப்ஜட்ஜுகள், ஜமீன்தார்கள் முதலியவர்களும் வந்து ஐயரவர்களைச் சந்தித்துப் பேசிச் செல்வது வழக்கம். ஐயரவர்கள் தம் வாழ்நாளில் என்றுமே ஆடம்பரத்தை விரும்பியதில்லை.

### ஐயரவர்கள் நெல்லையப்பக் கவிராஜர் மீது பாடிய வெண்பா

*காவலர்கள் மெச்சும் கனவான் திருநெல்லை*
*பாவலர்சி காமணிநன் னட்பாளன் - பாவலர்தம்*
*துன்போடு மாறு துரக்குநெல்லை யப்பனைப்போல்*
*அன்போ(டு) உதவிசெய்வார் ஆர்.*

### தென்றலுடன் பிறந்த பாஷை

29.9.1906-இல் வெளிவந்த இந்தியா பத்திரிகையில்
மகாகவி பாரதியார் எழுதிய குறிப்பு

*பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும்பொழுது நமக்கு வருத்தம் உண்டாகிறது. இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மகாவித்துவான் ஸ்வாமிநாதையர் சொல்லிய வார்த்தையொன்று நமது நெஞ்சை விட்டு ஒருபோதும் அகலமாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச்சங்கத்தில் ஒரு மீட்டிங் நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது ஸ்வாமிநாத ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்: "ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாஷை எனக்குத் தெரியாது. அதனால் அவ்விஷயத்தில் ஒருவிதமான அபிப்ராயமும் என்னால் கொடுக்க முடியாது என்றபோதிலும் மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்விதமான அருமையான விஷயங்கள் கிடையாதென்று சொல்லும்பொழுது உடன் எனக்கு வருத்தம் உண்டாகிறது. இவ்வகுப்பினர்களுடன் நான் எத்தனையோ முறை சம்பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்களில் நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்கள் என்று எனக்குப் புலப்படவில்லை. பழங்காலத்து தமிழ் நூல்களில் பயிற்சி இல்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழிவான அபிப்ராயம் கொடுப்பதுதான் வெறுக்கத்தக்கதாக இருக்கின்றது' என்று அப்பண்டிதர் முறையிட்டார். வாஸ்தவம்தானே? ஆனையையே பார்த்திராத குருடனா அதன் நிறம் முதலியவை பற்றி ஓர் அபிப்ராயம் கொடுக்க முடியும்.*

# லிப்கோவின் வாழ்த்துக்கள்!

## லிப்கோவின் ஆன்மீக நூல்களில் சில:

| | ரூ.காசு |
|---|---|
| விநாயக விஜயம் (விநாயக புராணம்) - 320 பக்கங்கள் | 25.00 |
| ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - ஸ்ரீ சி.ஆர்.எஸ். தமிழ் வசனம் - 2 பாகங்களில் 1800 பக்கங்கள் | 150.00 |
| ஸ்ரீமத் வால்கீமி ராமாயணம் - ஆங்கில வசனம் | 250.00 |
| ஸ்ரீ ஸி.ஆர்.எஸ்.ஸுந்தர காண்டம் - தமிழ் வசனம் | 45.00 |
| ஸகல கார்ய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் | 35.00 |
| ஸுந்தர காண்ட நவரத்ந மந்த்ரமாலா - ஸம்ஸ்க்ருதம் & தமிழ் | 5.00 |
| ஸுந்தர காண்ட நவரத்ந மந்த்ரமாலா - ஸம்ஸ்க்ருதம் & ஆங்கிலம் | 6.00 |
| நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - 2 பாகங்களில் 1670 பக்கங்கள் | 100.00 |
| ஸ்ரீமத் பகவத் கீதை - தமிழில் மூலமும்-உரையும் | 30.00 |
| விரத பூஜா விதாநம் | 18.00 |
| குடும்ப ஜோதிடம் | 18.00 |
| அபயாம்பிகை சதகம் | 8.00 |
| ஸ்ரீ மஹா பக்த விஜயம் | 25.00 |
| ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம் - ஆங்கில தமிழ் உரைகளுடன் | 3.00 |
| ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும் | 15.00 |
| ரகுவம்ச மஹாகாவ்யம் | 75.00 |
| நவக்ரஹ க்ஷேத்ர புராணம் | 10.00 |
| 108 ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேச வைபவம் | 10.00 |
| ஷட்பதீ ஸ்தோத்ரம் | 2.00 |
| ஸ்ரீ ராகவ யாதவீயம் | 6.00 |

### புதிய வெளியீடுகள்:

| | |
|---|---|
| ஸ்ரீமத் பாகவத ரஸாம்ருதம் | 30.00 |
| கீத கோவிந்தம் (அஷ்டபதி) | 20.00 |
| ஸ்ரீ ஸுதர்சந ப்ரபாவம் | 25.00 |
| கந்த புராணம் | 42.00 |
| ஸ்ரீ லக்ஷ்மி ஸஹஸ்ரம் | 60.00 |
| Your Life & Fortune | 20.00 |

உங்களூர் புத்தகக் கடைகளில் கேளுங்கள்:
லிப்கோவின் முழு விலைப் பட்டியலுக்கு எழுதுக:

# தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தி.நகர், சென்னை - 600 017. போன்: 43 41 538

லிப்கோவின் புத்தகங்கள் எப்போதும் படித்திடுவீர்!
தப்பேதும் இல்லாமல் தரணியிலே வாழ்ந்திடுவீர்

*67 ஆண்டுகளாகப் புத்தக உலகில் பெரும் புகழ்!*

# ஐயரவர்களின் கைபட்ட கம்பராமாயணம்

**கி.வா.ஜ.**

"புஸ்தகத்தை எழுத்தெழுத்தாக எண்ணிப் படித்தேன்" என்று பொதுவாகச் சிலர் சொல்வதுண்டு. ஆழ்ந்து படித்து அனுபவித்ததை அப்படிச் சொல்வார்கள். ஆராய்ச்சியாளர்கள் சில புஸ்தகங்களை எழுத்தெழுத்தாக ஆராய்ந்து படிப்பார்கள். தமிழ் ஆராய்ச்சிக்குத் தலை வரம்பாக நின்ற டாக்டர் ஐயரவர்கள் ஒவ்வொரு தமிழ்ப் புஸ்தகத்தையும் எழுத்தெழுத்தாகப் படித்து ஆராய்ந்தார்கள். ஏட்டுப் பிரதியானாலும் சரி, மிகவும் பொறுமையுடன் ஒருமை மனத்தோடு வரிவரியாக எழுத்தெழுத்தாகப் படித்து, அவற்றுள் ஆழ்ந்து அலசிப் பார்த்து உண்மை கண்டுபிடிக்கும் வரையில் ஈடுபட்டு நிற்பார்கள். இந்த ஆராய்ச்சி சில சமயங்களில் வேகமாக நடக்கும். புஸ்தகத்தைப் பொறுத்தது அந்த வேகம். தொட்ட இடங்களிளெல்லாம் பிழையும் மயக்கமும் தரும் கையெழுத்துப் பிரதியாக இருந்தால் சில சமயங்களில் ஓர் எழுத்தை ஆராய்வதிலேயே பல மணிகள் செலவாகிவிடும்.

ஐயரவர்கள் புஸ்தகம் படிப்பதே ஒரு தனிமாதிரி. எப்பொழுது எந்தப் புஸ்தகம் படித்தாலும் கையில் பென்சிலோடுதான் படிப்பார்கள். அவர்களுடன் பழகுகிறவர்களுக்கும் அந்தப் பழக்கம் ஏறியிருக்கும்.. படித்துக் கொண்டிருக்கும்போதே அங்கங்கே அடையாளம் செய்வார்கள். சில சில குறிப்புக்களைப் பக்கங்களின் ஓரத்தில் எழுதுவார்கள். விசேஷமாக ஆராய்ச்சி செய்யவேண்டிய புஸ்தகமானால் ஒவ்வொரு தாளுக்குப் பின்னும் வெறுங் காகிதம் ஒன்று வைத்துப் புஸ்தகத்தைப் பைண்டு செய்யச் செய்து அந்த வெறுந்தாள்களில் குறிப்புக்களை எழுதுவார்கள்.

இதோ அடுத்த பக்கத்தில் இருப்பவை அவர்கள் படித்து ஆராய்ந்த கம்பராமாயணத்தில் ஒரு பக்கமும் அதனை அடுத்துக் குறிப்பெழுதிய பக்கமும். பாலகாண்டத்தில் தாடகை வதைப் படலத்தில் 71-ஆம் பாட்டு முதல் 77-ஆம் பாட்டு முடிய இந்தப் பக்கத்தில் உள்ளன. ஐயரவர்கள் கம்பராமாயணத்தை இளமை முதல் படித்து இன்புற்றார்கள். இறுதிக் காலத்தில் அதைப் பதிப்பிக்க வேண்டுமென்று பேரார்வத்தோடு பல ஏட்டுச் சுவடிகளை வைத்து ஆராய்ந்து குறிப்பெடுத்தும், குறிப்பெழுதியும் வந்தார்கள்.

செய்யுளில் முக்கியமான செய்தியோ, சொல்லாட்சியோ, உவமையோ, நயமோ இருந்தால் அந்த இடத்தை அடிக்கீற்றால் குறித்து ஓரத்தில் அடையாளம் செய்வார்கள். 71-ஆம் பாட்டில் 'அல்லின் மாரி'என்னும் உவமையை அடையாளம் செய்திருக்கின்றார்கள். சுழித்திருக்கும் பாடல்கள் அருமையானவை. மனனம் செய்யத் தக்கவையென்பது அவர்கள் கருத்து. எங்கேனும் சந்தேகம் இருந்தால் இந்த அடையாளம் செய்வார்கள். கவனிக்க வேண்டுமானால் புள்ளியிடுவார்கள்.

குறிப்பெழுதிய பக்கத்தில் ஒரே கருத்துள்ள வேறு நூற்பகுதிகள் அங்கங்கே குறிக்கப்பட்டுள்ளன. 73, 75, 76-ஆம் பாடல்களுக்குரிய குறிப்புக்கள் ஐயரவர்கள் திருக்கரத்தால் எழுதப்பட்டவை. அந்தக் குறிப்புக்களிலே சில சந்தேகங்கள் உண்டு. 77-ஆம் பாட்டில் இராமபிரான் தாடகையோடு செய்த போரைக் கம்பர் 'கன்னிப்போர்' என்று சொல்கிறார். முதலாவதாகச் செய்யப்படுவதைக் கன்னியென்னும் சொல்லால் குறிக்கும். மரபைப் பிற நூல்களிலும் காணலாம். ஐயரவர்கள் தம் கைப்படக் குறித்த குறிப்பில் அங்ஙனம் வந்துள்ள இடங்களைக் குறித்துள்ளார்கள். அவை சீவகசிந்தாமணி 806, 448; பெரியபுராணம், கண்ணப்ப நாயனார் புராணம் 47; இறையனாரகப் பொருள், களவியல், பக்கம் 252; சூளாமணி, அரசியற் சருக்கம். 76; புறநானூறு உரை; வில்லிப்புத்தூரார் பாரதம்.

இவ்வாறே அவர்கள் கண்ணோக்கம் படர்ந்த தமிழ் நூல்களின் ஒவ்வோர் ஏட்டிலும் அவர்கள் இட்ட அடையாளங்களும் குறிப்புக்களும் இருக்கின்றன. அவையே அவர்கள் பதிப்பில் அடிக்குறிப்புக்களாகவும், உரைகளாகவும், முகவுரையாகவும் உருவங் கொண்டு தமிழர்களுக்கு இன்பமூட்டுவதற்குரிய மூலங்கள்.

### அடக்க குணம்

*ஸ்ரீசாமிநாதையரின் கல்வி கடலைப் போன்றது. மெய்வருத்தம் பாரா அவருடைய முயற்சியுடன் எறும்பும் தேனியுமே போட்டி போடலாம். கல்வி முயற்சியிலும் அவருடன் நாம் போட்டி போட முடியாதாயினும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.*

**-சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்**

**(ஆ.வி.)**

| அச்சுப் புஸ்தகம் | திருத்தெழுதும் பக்கம் |
|---|---|
| | |

க. ௧ - பாலகாண்டம்.

அலகின்மாரிபலவு பெய்தவன்
சொல்லின்மாத் திரையிற்கடவாப்பன
கல்லின்மாரியைக்கைவகுத்தானது
வில்லின்மாரியின்வீரன்விலக்கினான். (௭௧)

இந்தப் பாட்டுவேறு பிரதியில் இல்லை

ஏக்கமோடவிமயவரெங்கணும்
வாக்கின்முற்றுறமாவைவளர்ப்பவன்
மூக்குஞ்காதுஞ்செவியும்முறைபோயிடத்
தாக்கும்வள்ளலையவனுக்கரக்கினான். (௭௨)

வேறு.

(பிரதி) சொல்லொக்குங்கடியவேகச்சுடுசரங்கரியசெம்மல்
அல்லொக்குநிறத்தினாண்மேல்விடுதலும்வயிரக்குன்றக்
கல்லொக்குநெஞ்சிற்றங்காதப்புறங்கழன்றுகல்லாப்
புல்லர்க்குநல்லோர்சொன்னபொருளெனப்போயிற்றன்றே. (௭௩)

பொன்வெடுங்குன்றமன்னான்புகர்முகப்பகழியென்னும்
அவ்வெடுங்காலவன்காற்றடித்தலும்மிடித்தயாவில்
கன்னெடுமாரிபெய்யக்கடைபுகத்தெழுந்தமேகம்
மின்னொடுமசனியோடும்வீழ்வதேபோலவீழ்ந்தாள். (௭௪)

பொடியுடைக்கானமெங்குங்குருதிநீர்பொங்கவீழ்ந்த
தடியுடையெயிற்றுப்பேழ்வாய்த்தாடகைதலைகடோறும்
முடியுடையரக்கற்கன்றுமுற்றியுற்பாதமாகப்
படியிடையற்றுவீழ்ந்தவெற்றிபம்பதாகையொக்காள். (௭௫)

கான்றிரிந்தழியாகத்தாடகைக்கடிமார்பத்
தூன்றியபகழிவாயூடொழுகியகுருதிவெள்ளம்
ஆன்றவைக்கானமெல்லாமாயினதந்திரார்த்
தோன்றியசெக்கர்வானந்தொடக்கற்றுவீழ்ந்ததொத்தே. (௭௬)

வாசவன்மலரோனன்னமாமுனிவனிமுந
காசுலாங்கலைகளைப்பூக்காமுதங்கடலிப்பேரில்
கூசவாளரக்கர்தங்கள்குலத்துயிர்குடிக்கவஞ்சி
ஆசையாமுழுதுங்கோற்றுஞ்சயைநிறைந்தன்றே. (௭௭)

78. சிறைமொழி என்பதுபற்றிச் சொல்லொக்குமென்ற கூடுசரத்துக் குவமைகூறினர் கல்வியறிவில்லாத புல்லறிவுடையார்க்கு நல்லோர் கூறிய உறுதிமொழி சிறிதும் பயன்படாமையின் 'நெஞ்சிற்றங்காதப் புறங்கழன் றகல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்' றென்றாரென்பதை முகத்தாற் கூறினர்.

72 விலக்கினான் செய்யுளின் குறிப்பு, அயோமுகி

(௭௨) 71 (பால:78.
மூக்கும் காதும் வெம்முலைக் கண்களும் (3) அ: 1,
ஊர்தேடு 11: 26; கிட்கி: ஐ (3) 7: 142
சூர்ப்பணகை. (சு) 7: 86 சரி திருத்தியது
ஆ - கல். கூ. ௦: ஐ - ஆ.
(மூ)

74 புகர்ப்பகழி ... அதிசியத்தில்;
கல்மாரி பெய்த

சூடு.
சந்தபாதம்: (ஐ) 1: 28

76: 3-4. ந. ரெ 70 மருதிசெல்வனைய

ஏகாதசி சாகல்: 6: 4
உள்ளாரிப் போர்: (448)
வில் 206, பெரிய. கண். 49
தெறு. அனுமன் மம். 252
இராவணன் - அங்கதிவல், 76
யுத்த 12. 22 ௭௧.

1912, கம்பர். (உ) கா 88.

# திருவிளையாடல் வசனம்

கி.வா.ஜ.

தமிழ் வசனம் எழுத வேண்டுமென்ற ஆர்வம் ஐயரவர்களுக்கு இளமையிலேயே இருந்தது. செய்யுளுருவத்திலுள்ள நூல்களின் பொருளை வசனமாக எழுதினால் பலர் படித்து இன்புறுவார்களென்ற எண்ணத்தால் அவர்கள் முதல் முதலில் 'மத்தியார்ச்சுன மான்மியம்' என்ற வசன நூலை எழுதி வெளியிட்டார்கள். பிறகு, மணிமேகலை, பெருங்கதை யென்னும் இரண்டு காவியங்களிலுள்ள கதைகளையும் சுருக்கமாக உரைநடையில் எழுதினார்கள். பத்துப்பாட்டு, பரிபாடல், புறப்பொருள் வெண்பாமாலை என்பவற்றின் வசனங்களை அவர்களுடைய பதிப்புக்களிற் காணலாம். பிற்காலத்திற் பதிப்பித்த பிரபந்தங்களிலும் புராணங்களிலம் நூற் சுருக்கங்களை அவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

அவர்கள் பதிப்பித்துள்ள பழைய திருவிளையாடற் புராணத்தின் சுருக்கத்தை வசனமாக எழுத வேண்டுமென்று ஒரு சமயம் தொடங்கினார்கள். மற்ற வேலைகளால் அது முற்றுப் பெறவில்லை. 11 திருவிளையாடல்களுக்கே எழுத முடிந்தது. அவர்கள் தம் கைப்படவே சில பகுதிகளை எழுதியிருக்கிறார்கள். முன்பக்கத்தில் உள்ளது ஒரு பக்கத்தின் பிரதி; 9-ஆவதாகிய ''மலையத்துவசனை யழைத்த திருவிளையாடல்'' என்பதன் சுருக்கத்தின் முற்பகுதி. பிற்பகுதி இந்தப் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அங்ஙனம் வந்த ஏழுகடல்களைக் கண்டு தடாதகைப் பிராட்டியார் சுந்தர பாண்டியரைத் துதித்தனர். தேவியாரை நோக்கி அவர் ''உன் மாதாவின் இசை தீரும்படி எழுகடலில் மூழ்குவித்து வருவாயாக'' என்றனர். கேட்ட தேவியார் மகிழ்ந்து விரைந்து சென்று தாயையடைந்து, ''அன்னே, நீ ஒரு கடலிலாடுதற்கு நினைத்தாய்; உன் முருகருடைய கட்டளையால் ஏழு கடல்களும் வந்தன; அவற்றில் ஆடுவாயாக'' என்றனள்; கேட்ட காஞ்சனமாலை, ''கருணைக் கடலாகிய சிவபெருமானைக் கணவராகப் பெற்ற செல்வி, கணவனோடாவது, மகனோடாவது, பசுக்கன்றினோடாவது மகளிர் கடலில் ஆட வேண்டும். தனியே சென்று ஆடுதல் விதியன்றென்பர் பெரியோர்; இஃது உனக்குத் தெரியாததன்றே'' என்றாள். கேட்ட தடாதகை தாயின் வார்த்தையை இறைவனுக்கு விண்ணப்பஞ் செய்தனள்; அவர், ''உடனாடுதற்கு உன் தந்தையை அழைத்திடுவேம்; நீ வருந்தாதே; தேவலோகத்திலிருந்து உன் தந்தை வருவார்; வந்தவுடன் அவரோடு சேர்ந்து கடலில் ஆடும்படி தாய்க்குச் சொல்வாயாக'' என்று சொல்லிவிட்டு, உலகத்தார் கண்டு வியப்புறும்படி மாமனை அழைத்தார். அழைத்தவுடன் அப்பாண்டியன் வந்தான். அவன் வந்ததைக் கண்ட மானிடர்களும் தெய்வகணங்களும் திருமாலும் பிரம்மதேவரும் இந்திரனும் ஆச்சரியமடைந்தார்கள்.

மலயத்துவச பாண்டியன் வந்து சுந்தர பாண்டியரைப் போற்றினான்; அதனைக் கண்டு மகிழ்ந்து, தடாதகைப் பிராட்டியார்க்கு அவனைக் காட்டி, ''உன் தந்தையோடு கூடிக் கடலில் ஆடும்படி தாய்க்குச் சொல்'' என்றனர். அவள், ''தந்தையோடு சேர்ந்து கடலில் ஆடுவாயாக'' என்று தாய்க்குச் சொல்ல, அவள் அப்படியே சென்று அந்த எழுகடலில் ஆடி இன்புற்றாள். அப்பால் அவ்விருவரும், ''ஸ்வாமீ, அடியேம் உய்ந்தேம், உய்ந்தேம்'' என்று சொல்லி வணங்கினார்கள். அதனைக் கண்டு தெய்வப் பாண்டியர், தம்முலகத்தை அளிக்க அவர்கள் தேவசரீரம் பெற்று அவ்வுலகை அடைந்து வாழ்ந்தார்கள்.

### ஐம்படைத்தாலி

*காத்தற் கடவுளான திருமாலின் சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைப்பது. இதனைப் பஞ்சாயுதம் என்றும் வழங்குவர். ஐந்தாவது நாளில் பிள்ளைகளுக்கு இதனைத் தாரணம் செய்தல் மரபென்றும் க்ருஹ்யரத்நம் என்னும் வடநூலில் இதற்கு விதியுள்ளதென்றும் கூறுவர். இது தாலி எனவும், தாலியைம்படை எனவும் வழங்கும்.* -ஐயரவர்கள்

### பஞ்சாட்சரம்

*சிந்தாமணி உரையில் ஓரிடத்தில் பஞ்சாட்சரம் உபதேசிக்கப்பட்டதாக எழுதியிருந்தது. சிந்தாமணியோ சைனர்களுடைய நூல். இறக்கும் நிலையில் இருந்த ஒரு நாயின் காதில் மந்திரம் உபதேசிக்கப்பட்டதென்று சந்தர்ப்பம். உரையைப் பிரதி செய்தவர் உரையாசிரியர் எழுதியிருந்த ''பஞ்சநமஸ்காரம்'' என்பதை ''பஞ்சாட்சரம்'' என்று எண்ணிவிட்டாரென்று தோன்றியது. அந்தப் பிரதி, சைவர் ஒருவருடைய பிரதி. பஞ்ச நமஸ்காரம் என்பது சைனர்களுடைய மந்திரம்.* -ஐயரவர்கள்

ஆசைக்கு நீ [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]

உம்பரெலாம் [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] ?

இம்ப ரோர் [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]

பம்பரமும் [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] ? [illegible]

கிளியைப் போலே, இளமையுஞ் [illegible]
[illegible] [illegible]

குயிலைப் போலே, [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] ?

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible]

[illegible]

அன்னியர்கள், [illegible] [illegible]
இன் நெஞ்சை யாம் போற்றுவம்

பண்ணியல் [illegible] [illegible] [illegible].
[illegible] பதினாயிரத்து

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible].

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible]

# மகாமகோபாத்தியாயர் வே.சாமிநாதையர் அவர்கள்

**விவேக பாநு**

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மகா வித்துவான் வே.சாமிநாதையர் அவர்களுக்கு மகாமகோபாத்தியாயர் என்ற புது வருஷப் பட்டம் கவர்ன்மெண்ட்டார் அளித்ததைப் பற்றிப் பேரானந்தமடைந்தோம். இப்பட்டத்தைக் கவர்ன்மெண்டார் இம்மகாவித்வான் அவர்களுக்கு நெடுநாளுக்கு முன்னரே கொடுத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட புத்திமானும் கல்வியபிவிருத்தி பண்ணப்பட்ட வித்வானும் ஐரோப்பா அல்லது அமெரிக்காவிலிருந்தால் அத்தேசத்தார் அவருக்கு எத்துணையோ சிறப்புச் செய்திருப்பார்கள். கவர்ன்மெண்டாரும் பலவிதத்திலும் கௌரவப்படுத்தி இருப்பார்கள். மகாமகோபாத்தியாயர் வே.சாமிநாதையர் அவர்களை அறியாத தமிழ்க் கல்விமான்கள் இல்லை. கிரந்தங்களில் அவர்களுக்குள்ள அளவற்ற பிரியமும் அவைகளைத் தேடித் திரிந்து பரிசோதிப்பதில் அவர்களுக்கு இயற்கையாயுள்ள ஆவலும், செய்தொழில் ஊக்கமும், வித்வான்களிடத்திலும் பாஷாபிமானிகளிடத்திலும் அவர்கள் பாராட்டும் அன்பும் கசடறக்கற்றும் கேட்டும் விஷயங்களின் நுட்பங்களை அறிகிற சாமர்த்தியமும் உலகப் பிரசித்தமானவையே. இவர்களைப் போல் பாஷைக்குழைத்தவர்கள் எவரும் இல்லையென்றே சொன்னாலும் மிகையாகாது. பாஷைக்கென்று தம் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்பவர்களில் இவர்களே முதன்மை பெற்றவர். தம் வருவாயில் குடும்பகாலக்ஷேபத்துக்குப் போக மீதத்தைத் தமிழ்க் கிரந்தங்களை வெளியிடுவதிலே இவர்கள் செலவிட்டு வரும்படியான அந்தரங்கம் சிலரே அறிவார்கள். கொலம்பஸ் அமெரிக்கா தேசத்தைக் கண்டுபிடித்த விதமாகத் தமிழ் ஏடுகளினிருப்பிடங்களைக் கண்டுபிடித்தவர்கள் இவர்களே. இவர்களது ஆழ்ந்த அறிவும் நுட்ப ஆராய்ச்சியும், அடக்கமும், பொறுமையும், சுறுசுறுப்பும், அன்பும், தெய்வபக்தியும், பரிசுத்த குணமும் எவரும் பாராட்டற்பாலன. இப்பட்டப்பெயர் இவர்களுக்கு அளிக்கப்பட்ட சுதினத்தில் நாம் நேரில் இவர்களைக் கண்டு ஆனந்திக்கும்படியான பாக்கியம் பெற்றோம். அக்காலம் இவர்களை நேரில் வந்து பார்த்து ஆனந்தம் பாராட்டியவர் பலர். இவர்களுக்குத் தமிழ்நாட்டின் பற்பல இடங்களிலிருந்து கிடைத்த தந்திகளுக்கும் கடிதங்களுக்கும் அளவில்லை. இப்பேரானந்தத்தைக் கொண்டாடாத புத்திமான்கள் இத்தமிழ் நாட்டில் இல்லை. இம்மதுரை மாநகரில் தமிழ்ச்சங்கத்தாரும் ஜனசமூகத்தாரும் இது விஷயமாகக் கூட்டங் கூடி ஐயர் அவர்களுக்கு ஆனந்தத்தைத் தந்தி மூலமாக வெளிக்காட்டினார்கள். அடுத்து இவ்வூர் மாணவர் தமிழ்ச் சங்கங்கள் மூன்றும் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தவரது நன்முயற்சியினால் ஒன்றுகூடி அவ்வானந்தத்தைக் கொண்டாடி அதனைத் தந்தி மூலமாகவே அவர்களுக்குத் தெரிவித்தார்கள். இப்பட்டம் ஐயரவர்களுக்குக் கிடைத்தானது நம் தமிழ் நாட்டுக்கே கிடைத்ததாக நாம் பாராட்ட வேண்டும். இதுகாறும் இவ்வரிய பட்டத்தை ஸம்ஸ்கிருத வித்வான்களே பெற்று வந்தனர். தமிழ் வித்வான் ஒருவருக்கு இப்பட்டம் முதன்முதல் கொடுத்தது இச்சமயமே. தமிழ்ச் சரித்திரத்தில் இச்சம்பவம் மிகச்சிறந்த விஷயமாகக் கருதப்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒரு நண்பர் ஒரு சபையிற் சொன்னவண்ணம் இச்சம்பவத்தைத் தமிழரசுகள் அனைவரும் ஓர் உற்சவமாகவே கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந் நண்பரே ''இம் மகாமகோபாத்தியாயர் அவர்களை இக்காலத் தமிழ்ச் சக்கரவர்த்தி என்று கூறலாம்'' என்று பாராட்டிப் பேசினதானது சாலவும் பொருத்தமே. இன்றுபோல் என்றும் இம் மகா மகோபாத்தியாயரவர்கள் தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுத் தமிழ்நாடு கல்வியறிவில் ஓங்கும் வண்ணம் செய்ய எல்லாம் வல்ல ஈசுவரன் இவர்களுக்கு நீடித்த ஆயுளையும், தேக ஆரோக்கியத்தையும், ஊக்கத்தையும், ஐசுவரியத்தையும் கொடுத்தருளும்படி பிரார்த்திக்கின்றோம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரும் மகாஜனங்களும் சில தினங்களுக்கு முன் கூடிய சபையில் இம்மகானைப் பற்றி வியந்து பாடிய பாடல்கள் வருமாறு:

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவானும் மதுரை நான்காந் தமிழ்ச் சங்கத்து

**நூற்பரிசோதகருமாகிய ஸ்ரீமத்**
**மு.ரா. அருணாசலக் கவிராயரவர்கள்**
**இயற்றிய கவி.**

**முச்சங்கத் தினுமகாமகோபாத்தியாய**
**ரெனமொழியும் பட்டம்**
**அச்சங்கத்தனை நிகருஞ்சாமிநாதையனைப்**
**போலடைந்தார்யாவர்**
**மெச்சங்கத்தமிழறிஞரிருப்பினுமிப்பெயர்ப்புகழால்**
**விளங்குநான்கா**
**மிச்சங்கத்தினுமிதுநேரெச்சங்கத்தினுமென்று**
**மிருப்பன்மன்னோ.**

2-வது அடி அ சங்கு அத்தனை நிகரும்-
அந்தப் பாஞ்ச சன்னியத்தைக் கையிலுடைய திருமாலைப் போலும்.

3-வது அடி மெச்சு அங்கு அ தமிழறிஞன்- (யாவரும்) புகழாநின்ற அவ்விடமாகிய சென்னையில் அந்தத் தமிழறிவினையுடைய சாமிநாதையரவர்களெனப் பொருள் காண்க. இப்பெயர்ப் புகழ் இந்த மகா மகோபாத்தியாயரென்ற பட்டப் பெயரால் வந்த கீர்த்தி.

**திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனவித்துவானும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய ஸ்ரீமத் சே.ரா.சுப்பிரமணியக் கவிராயரவர்கள் இயற்றிய கவிகள்.**

**நூலுரை போதக மெனுமூன்றினுக்கு மூன்றாசிரியர் நுவன்றார்முன்னோ**
**ரேலுமம் மூவரு மானதாற் சாமிநாதனெனு மிசையோனுக்குச்**
**சீலமிகு நம்மிரா சாங்கத் தாருலக மெலாந்திகழச் சொற்றார்**
**போலு மகா மகோபாத்தியாய ரெனும் பட்ட நன்கு புகழ்ந்துதாமே.**

**பொருத்துறை வாளின் றியறு பகை வெல்லவு பதேசம் புரியு மேலாந்**
**திருத்துறைசைச் சற்குருவின ருளாற் செந்தமிழ் புவிமேற்றிகழும் வண்ணம்**
**பெருந்துறையாலாறாதல் போறபன்னூலாற் கல்விப் பெருக்க மெய்தி**
**மருத் துறை வானும் புகழ வளர்சாமிநாத வள்ளல் வாழ்க மாதோ.**

## ஜி.யு.போப்

*('போப்பையர் இலக்கணம்' தமிழ்நாட்டுக்குப் புதிதல்ல. திருவாசகத்தையும், குறளையும், நாலடியார் முதலியவற்றையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தமிழ் நூல்களை உலகுக்குத் திறந்து காட்டியவர் போப். இவருக்கு ஐயரவர்கள்பாலிருந்த விசுவாசம் இணையற்றது. இவர் எழுதிய கடிதங்களுள் ஒன்றின் மொழிபெயர்ப்பு இது.)*

*அன்புள்ள ஐயா,*

*உயர்ந்த பதிப்பாகிய புறநானூற்றை எனக்குக் கொடுத்தற்கு உங்களுக்கு வந்தனமளித்து முன்னமே எழுதியிருக்க வேண்டியது.*

*உங்கள் உயர்ந்த பதிப்பாகிய சிந்தாமணி என்னிடம் இருக்கிறது. அதை நான் அடிக்கடி பார்ப்பதன்றி அதை என் நாலடியார் பதிப்பின் முகவுரையில் கண்டிருக்கிறேன்.*

*இன்னும் வேறு ஏதாவது பதிப்பித்திருக்கிறீர்களா? சொஸைட்டிக்காக ஒரு பத்திரிகை எழுத உத்தேசித்திருக்கிறேன் இது நிற்க.*

*புறநானூற்றை இன்னம் தெளிவாகத் தெரிந்து கொள்ளும்படிக்குச் செய்ய முடியாதா? எனக்குத் தமிழ் தெரியும் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தாலும் அதிலுள்ள அநேகம் பாடல்களைத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறேன். அப்படியானால் சுருக்கமாயும் சுலபமாயும் வெளிப்படையாயும் இருக்கிற குறிப்புக்கள், விருத்தியுரை ஆகிய இவைகளை நாங்கள் அடையும்படி செய்ய வேண்டும். பண்டிதர்களாக எங்களிடத்தில் இரக்கம் வைக்க வேண்டும்.*

*சரித்திர சம்பந்தமில்லாத கதைகளைத் தள்ளிவிட்டு முச்சங்கத்தின் விருத்தாந்தத்தைப் பற்றி ஏதாவது சரித்திரம் எழுத முடியுமா? கலித்தொகையின் பெரும்பாகமும், சிலப்பதிகாரத்தின் சில பாகமும் நன்றாய் இருக்கின்றன. இன்னும் அநேக கவிகளிலிருந்து நல்ல பாடல்களைத் தெரிந்து கொள்ள ஆசையுண்டு.*

*நான் புஸ்தக விவரணத்தைப் பற்றி எழுதும் புஸ்தகத்தில் நிஜமாயுள்ள பழைய தமிழ்ப் புஸ்தகங்களை எல்லாம் சேர்க்க எண்ணமுண்டு. கூடுமானால் உதவி செய்ய வேண்டும்.*

*புறநாட்டினனாகிய எனது மடமையைப் பார்த்து ஒருகால் நகைக்கலாம். தமிழை உலகத்திலுள்ள தாய்ப் பாஷைகளில் ஒன்றாக உயர்த்துவதன் நிமித்தம் ஏதாவது கொஞ்சம் தொண்டு செய்ய வேண்டுமென்று எண்ணுகிறேன். எனக்குத் தாங்கள் அனுப்பும் எதுவும் உபயோகப்படும்.*

*புறநானூற்றை எவ்விதமாக உபயோகப்படுத்தலாம் என்பதைச் சொல்ல வேண்டும்.*

*பெருந்தேவனாரால் செய்யப்பட்ட முதற்பாட்டு நன்றாயிருக்கிறது. ஆனால் மாணிக்கவாசகர் பாட்டைப் போலிருக்கிறது. அது சரியா?*

**உண்மையுள்ள**
**ஜி.யு.போப்**

# தந்தையாரின் அந்தியகாலம்

எஸ்.கல்யாணசுந்தரையர்
(பாரதமணி)

**('சாந்திநிகேதன'த் தொண்டையும் பொறுப்பையும் 'குருதேவ'ருக்குப் பிறகு அவருடைய புதல்வர் ரவீந்திர நாத்தாகூர் ஏற்றுக் கொண்டதுபோல, மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களுடைய ஸ்தாபனமாகிய 'தியாகராஜ விலாச'த்துத் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து நடத்த ஸ்ரீ கலியாண சுந்தரையரவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய குறிப்பு இது.)**

என் தந்தையாராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் சென்ற ஏப்ரல் மாதம் காலம் சென்ற பிறகு அவர்களுடைய நண்பர்களிடமிருந்தும் அபிமானிகளிடமிருந்தும் அனுதாபக் கடிதங்களும் தந்திகளும் இரங்கற்பாக்களும் கிடைத்தன. நான் அவ்வப்போது அவர்களுக்குத் தெரிவித்த பதில்களில் அறிவிக்க முடியாமற் போன சில முக்கியமான விஷயங்களை இதன் மூலம் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஜனவரி மாதம் பதின்மூன்றாம் தேதி விடியற்காலையில் என் தந்தையார் கீழே விழுந்தமையால் என்பு முறிவு ஏற்பட்டது. தக்க வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்து வந்ததின் பின்னர் என்பு கூடியதாகத் தெரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் நகர முழுவதும் யுத்த பீதியினால் குழப்பமடைந்திருந்தது.

ஏப்ரல் மாதம் ஏழாந் தேதியன்று நகரத்தில் அபாயச் சங்கு ஊதியபிறகு சென்னையிலிருந்து பல குடும்பங்கள் வேகமாக வெளியேறின. என் தந்தையார்பால் அன்புள்ள பலர், ''இந்த நிலையில் ஐயரவர்களை இவ்விடத்தில் வைத்திருப்பது சரியன்று, வேறு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று கூறி வற்புறுத்தினர். என் தந்தையாருக்கு இவ்வூரை விட்டுப் போக மனமேயில்லை. ஆயினும் ஒருவாறு விஷயங்களை எடுத்துச் சொல்லித் திருக்கழுக்குன்றத்திற்குச் சென்று அங்குள்ள திருவாவடுதுறை மடத்தில் இருக்கலாமென்று கூறவே அவர்கள் அரைமனத்துடன் ஒப்புக் கொண்டார்கள்.

பதினோராம் தேதி சனிக்கிழமையன்று காரில் ஏறிய பிறகு அவர்கள் மனநிலை மிக்க சஞ்சலத்தோடிருந்தது. எப்பொழுதும் புஸ்தகங்கள், ஏட்டுச் சுவடிகள், குறிப்புக்கள் ஆகியவற்றினிடையே இருந்துவந்த அவர்களுக்கு அவற்றை விட்டுப் பிரிவது பெரிய துயரத்தைத் தருவதாயிற்று. சிறந்த சிவஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்துக்குச் செல்கிறோமென்ற நினைவு ஒன்றுதான் அவர்களை எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கச் செய்தது.

திருக்கழுக்குன்றத்திற்குப் போனபிறகு அவர்கள் தேகநிலை வரவர அபிவிருத்தியாகவே காணப்பட்டது. அங்குள்ள டாக்டர் ஒவ்வொரு நாளும் கவனித்துக் கொண்டனர். ஆனால் தம்முடைய புஸ்தகங்களைப் பிரிந்துவந்த துயரம் அவர்களுக்கு மாறவில்லை. அதிகமாகி வந்ததென்றே சொல்ல வேண்டும். ஆகவே ஏட்டுச் சுவடிகள், குறிப்புக்கள், கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றைச் சென்னையில் இருந்து கொண்டுவர ஏற்பாடு செய்தேன். எனது குமாரன் எட்டு வண்டிகளில் அவற்றை ஏற்றி அனுப்பினான்! அவற்றையெல்லாம் கண்டபிறகே என் தந்தையாருக்கு ஓரளவு மகிழ்ச்சியும் மனத் தைரியமும் உண்டாயின.

தாம் எழுதிவந்த சுய சரித்திரத்திற்கு வேண்டிய குறிப்புக்களைத் தொகுத்து முழுவதும் எழுதி வைத்துவிட வேண்டுமென்ற விருப்பம் அவருக்கு இருந்தது. அதற்கு வேண்டிய காரியங்களைக் கவனித்து வருகையில் சென்னையில் பின்னும் சில குறிப்புக்கள் உள்ளனவென்றும் அவற்றை வருவிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள்.

''அங்கே மாடித் தாழ்வாரத்தில் பல குறிப்புக்களும் கடிதக் கட்டுக்களும் உள்ளன. நீ போய் இரண்டுநாள் இருந்து பார்த்து எடுத்து வரலாம். எனக்கு இப்போது உடம்பு குணமாகிக் கொண்டு வருகிறது'' என்று ஒருநாள் என்னிடம் சொன்னார்கள். வைத்தியரிடம் கேட்டபொழுது அவர், நான் போய் வரலாமென்று அனுமதிக்கவே ஏப்ரல் மாதம் இருபத்தாறாம் தேதி ஞாயிறன்று இரவு நான் சென்னைக்கு வந்தேன்.

திங்களன்று சென்னையில் கவனிக்க வேண்டியவற்றைக் கவனித்தேன். செவ்வாய்க் கிழமையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அன்று மாலை மூன்று மணிக்கு அபாயத் தந்தி வந்துவிட்டது. அபாயத்திற்கு அஞ்சி இந்த நகரத்தை விட்டுப் போனபோது அங்கேதான் அபாயம் காத்திருந்ததை நான் உணரவில்லை.

உடனே புறப்பட்டேன். எவ்வளவோ முயன்றும் நகரம் இருந்த நிலையில் போதிய வசதியில்லாமையால் இரவு ஏழு மணிக்குத்தான் கழுக்குன்றம் போய்ச் சேர்ந்தேன். சேர்ந்த பிறகுதான் என் தந்தையார் 4.30 மணிக்கே உலக வாழ்வை நீத்து விட்டாரென்ற செய்தி தெரியவந்தது.

போனேன். என் தந்தையாரைக் காணவில்லை. அவர் திருமேனியைப் பார்த்தேன். ''போய்விட்டு வந்தாயா?'' என்று ஆதரவோடு விசாரிக்கும் வார்த்தைகளைக் கேட்கப் பெறும் பாக்கியம் எனக்கு இல்லாமல் போயிற்று. நான் பிரிந்திருந்த இரண்டு நாட்களில் காலம் வெகு வேகமாகப் பல காரியங்களைச் செய்துவிட்டதென்ற றிந்தேன். திங்கட்கிழமை மாலை ஜுரம் கண்டு செவ்வாய்க்கிழமை காலையில் கபம் கட்டியதென்றும் அதற்கு மேல் மனித முயற்சி பயன்படவில்லை என்றும் தெரியவந்தது.

என் மனநிலை இன்னபடி இருந்ததென்பதை எழுதி வெளியிடுதல் முடியாத காரியம். மேலே என் கடமைகளைச் செய்யத் தொடங்கினேன். அபரக்கிரியைகள் நிறைவேறின. அன்பர்களுடைய கடிதங்களும் கட்டுரைகளும் இடையிடையே எனக்கு ஆறுதலளித்தன.

இப்போது என் தந்தையார் விட்டுப்போன வேலைகளை அன்பர்களுடைய உதவியைக் கொண்டு என்னால் இயன்றவரையில் நிறைவேற்றலாமென்று எண்ணியிருக்கிறேன். அவர்கள் எழுதி வந்த சரித்திரத்தின் பிற்பகுதிக்கு வேண்டிய சாதனங்கள் பல உள்ளன. அவற்றைக் கொண்டு சரித்திரத்தைப் பூர்த்தி செய்யலாம் என்பது எனது கருத்து. தந்தையாரவர்கள் நிறைவேற்றக் கருதிய புஸ்தக வேலைகள் பல இருந்தாலும் அவர்களுடைய சரித்திரத்தை முதலில் பூர்த்தி செய்ய வேண்டியது என் முதற் கடமையாகும். அதுவே அவர்களுடைய ஆத்மாவிற்குத் திருப்தியளிக்கும். பல ஆப்தர்களும் அவ்விதமே எழுதி வருகிறார்கள்.

சரித்திரத்திற்குரிய சாதனங்களையெல்லாம் இப்போது சேகரித்து ஒழுங்குபடுத்தி வருகிறேன். விட்ட இடத்திலிருந்து அவர்களுடைய இறுதிக் காலம் வரையில் உள்ள வரலாறுகளை எல்லாம் முற்றும் எழுதி வைத்துக்கொண்டு பிறகு வெளியிடலாமென்று உத்தேசிக்கிறேன். ஆங்காங்குள்ள அவர்களுடைய மாணாக்கர்களும் அபிமானிகளும் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களும் தங்கள் தங்களுக்கு அவர்கள் விஷயமாகத் தெரிந்த செய்திகளைத் தயைசெய்து எனக்கு அனுப்புவித்தால் இச்சமயத்தில் பேருபகாரமாய் இருக்கும்.

ஐயரவர்கள் இயற்றியுள்ள பாடல்கள் ஆயிரக்கணக்காக உள்ளன. அவற்றைப் புஸ்தக வடிவாக வெளியிட வேண்டுமென்ற எண்ணமும் எனக்கு இருக்கிறது. எனக்குத் தெரியாமல் வேறிடங்களிலும் அவர்கள் இயற்றிய பாடல்கள் இருக்கக் கூடும். அவற்றையும் நண்பர்கள் பிரதி செய்து அனுப்பினால் மிக்க நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்வேன்.

அவர்கள் சோதித்து எழுதி வைத்துள்ள நூல்களும் குறிப்புக்களும் பல திறப்பட்டவை. அவற்றையும் தமிழுலகத்துக்குப் பயன்படுத்துவது என் கடமையாகும். இவ்விஷயத்தில் தமிழபிமானிகளுடைய ஆதரவு எனக்கு இன்றியமையாததென்பதை நான் எடுத்துக் கூறுவது மிகை.

சீவகசிந்தாமணியின் நான்காம் பதிப்புப் புதிய முறையில் அவர்களால் அச்சிடப் பெற்று வந்தது. முத்தியிலம்பகம் தொடங்குகையில் அவர்களுடைய மறைவு நேர்ந்தது. இப்போது அந்நூல் முடியும் நிலையில் உள்ளது. இன்னும் சில மாதங்களில் வெளிவருமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாருடைய ஆதரவினால் செவ்வைச்சூடுவார் இயற்றிய பாகவதத்தின் திருத்தமான பதிப்பு குறிப்புரை முதலியவற்றுடன் சென்ற வருஷம் ஐயரவர்களால் ஆரம்பிக்கப் பெற்று நடந்து வந்தது. அவ்வேலை இப்போது தொடர்ச்சியாக நடந்து வருகிறது.

மேற்கூறிய புஸ்தக வேலைகளை நடத்தச் சென்னைப் பட்டணமே அனுகூலமாக இருக்குமென்றெண்ணி இப்போது 'தியாகராஜ விலாச'த்திலேயே இருந்து வருகிறேன்.

**தமிழரசுப் பத்திரிகையின் அபிப்ராயங்கள்**
**சென்னை, திருவல்லிக்கேணி, திருவட்டீஸ்வரன் பேட்டை**
**தியாகராஜவிலாசம் மகாமகோபாத்தியாயர்**
**ப்ரும்மஸ்ரீ**
**வே.சாமிநாதையரவர்கள்**

*தமிழ் நாட்டிற் புகழ்பெற்ற குடும்பத்திற் பிறந்ததாம் அதனை விளக்குதற்குரிய நன்முயற்சித் துறையிலிறங்கித் தமிழரசு என்னும் பத்திரிகை அச்சிட்டு வருதலைத் தெரிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். (21-2-24)*

# தமிழ்த் தாத்தாவுடன் ஒருநாள்

(குமரி மலர்)

ஏ.கே.செட்டியார் (1935)

சென்ற கலைமகள் விழாவன்று சென்னைக்குச் செல்லும்படியான சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. கலைமகள் விழாவானதால் கலைமகளின் அருளுக்குப் பெரிதும் பாத்திரமான தமிழ்ப் பெரியார் ஒருவரைச் சந்திக்க வேண்டுமென்று எண்ணினேன். அவ்வாறு நான் எண்ணியதற்குக் காரணம் என்னுடன் வந்த சிறந்த ரசிகரான ஆருயிர் அன்பரின் கூட்டுறவேயாகும்.

எனது நண்பருடன் காலை ஒன்பது மணிக்கெல்லாம் சென்னை, திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ள 'தியாகராஜ விலாசம்' என்னும் கட்டிடத்திற்குச் சென்றேன். அவ்வீட்டிற்குரிய தாத்தா, வேறொரு வீட்டில் அமைதியாக நூலாராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார் என அறிந்தோம். எங்கள் வருகை அவருக்கு அறிவிக்கப் பெற்றது. அதற்குள்ளாக என் நண்பரும் நானும் வீட்டினுள் சென்று அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தோம்.

அப்பொழுது வெயில் சிறிது அதிகமாய் இருந்தது. எனவே அங்கு விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு 'விசிறி வேண்டும்' என்றார் நண்பர். சொன்னதுதான் தாமதம், உடனே மூத்த பையன் விசிறியை எடுத்துக் கொண்டு வந்து என் நண்பருக்கு வீச ஆரம்பித்தான். என் நண்பர் அவ்விசிறியை தம்மிடம் கொடுக்குமாறு எவ்வளவோ மன்றாடியும் பலிக்கவில்லை. மூத்தவனுக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு இளையவனுக்குச் சகிக்க முடியவில்லை. இளையவன் மூத்தவனை நோக்கி, ''நீ விசிறியை என்னிடம் கொடு; இரண்டு மாமாவுக்கும் விசிறுகிறேன்'' என்றான்.

''அதெல்லாம் முடியாது. நீ இன்னுமொரு விசிறி கொண்டுவந்து அந்த மாமாவுக்கு விசிறு'' என்றான் மூத்தவன்.

அடுத்த நிமிஷத்தில் இளையவன் ஒரு விசிறியுடன் வந்து எனக்கு விசிற ஆரம்பித்தான். இவர்களுடைய போட்டி போட்ட உபசரிப்பில் நாங்கள் தத்தளித்தோம். குழந்தைகளை இவ்வளவு அருமையாகப் பழக்கி வைத்திருக்கும் பெரியவர்பால் எங்களுக்கு உண்டான மதிப்பு அதிகமாயிற்று.

நாங்கள் எதிர்பார்த்திருந்த தாத்தா வந்து சேர்ந்தார், அன்போடு ''வாருங்கள்'' என்று கூறி மிகுந்த உற்சாகத்தோடு மேல் வீட்டிற்குச் சென்றார். நாங்களும் அவரைப் பின்தொடர்ந்தோம்.

மேல் வீட்டில் ஒரு ஹால். கீழே பாய் விரிக்கப் பெற்றிருந்தது. பக்கத்தில் ஒரு சாய்வு நாற்காலி, நாற்புறங்களிலும் கண்ணாடி அலமாரிகளில் ஓலைச் சுவடிகளும் புத்தகங்களும் காணப்பட்டன. சுவரில் பல பெரியார்களின் படங்கள் காணப்பெற்றன. அவர்களெல்லாம் இந்தத் தாத்தாவின் நண்பர்களாம்.

அந்த ஹாலுக்குள் சென்றதும் ஏற்கனவே அங்கிருந்த இரண்டு முஸ்லீம் பெரியார்கள் எழுந்து இத்தாத்தாவை வரவேற்றனர்.

அவர்களின் ஒருவர் சிறந்த மதப்பற்று உடையவரும் பத்திரிகாசிரியருமாவார். மற்றொருவரும் நல்ல தமிழபிமானி. நாங்கள் அனைவரும் கீழே அமர்ந்து தாத்தாவை நோக்கி 'நாற்காலியில் அமருங்கள்' என்று பணிவோடு கூறினோம். 'எனக்கு அது வழக்கமில்லையே' என்று கூறிக்கொண்டே அத்தாத்தா எங்கள் மத்தியில் கீழே உட்கார்ந்தார்.

சில தாத்தாக்களைக் கண்டால் நமக்குப் பிடிக்காது. பல தாத்தாக்கள் அழுக்கு வேஷ்டியுடன் மிளிர்வார்கள். பேசினால் வாய் நாற்றம் தோன்றும். கண்களிலே கோழை வழியும். பக்கத்திலிருக்கவே அருவருப்பாய்த் தோன்றும். ஆனால் இந்தத் தாத்தா அப்படியல்ல. மிகவும் சுத்தமாக இருந்தார். அவரோடு சில மணிநேரம் அமர்ந்திருந்ததையே எனது நண்பரும் நானும் பாக்கியமாகக் கருதினோம்.

இந்தத் தாத்தாவுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனால் நடந்து கொள்ளவேண்டிய மரியாதை முறைகளைப் பற்றி ஆங்கிலேயர்கள் இவரிடம்தான் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். எங்களை முஸ்லீம் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தினார். சிறிது நேரத்திற்கெல்லாம் முஸ்லீம் நண்பர்கள் வந்த வேலையை முடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

என் நண்பர் தாத்தாவை நோக்கி, 'கப்பலில் மயக்கம் அதிகம்; அந்த மயக்கம் இங்கு வந்துதான் தீர்ந்தது' என்றார்.

''ஆம், நானும் கவலைக் கப்பலில்தான் மிதக்கின்றேன். அம்மயக்கமும் தங்களைப் பார்த்தவுடனே தான் தீர்ந்தது'' என்றார் தாத்தா.

தாத்தா பதிப்பித்திருந்த பல அரிய நூல்களை விலைக்கு வாங்கும்பொழுது என் நண்பர், 'இன்று கலைமகள் விழா; இவ்வரிய நூல்களை இன்று வாங்குவது பொருத்தமுடையது' என்றார்.

'ஆம், உண்மைதான். இன்றுதான் உண்மையில் கலைமகள் விழா. இதுவரை மூலையிலடுக்கப் பெற்றிருந்த புத்தகங்கள் இன்றுதான் விற்பனையாகின்றன' என்றார் தாத்தா.

பின்னர் என் நண்பர் 'தனவணிகன்' காங்கிரஸ் மலரொன்றைத் தாத்தாவிடம் சமர்ப்பித்தார். அதில் சர்.மணி ஐயர், ஜீ.சுப்பிரமணிய ஐயர், கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலியோர் படங்களைப் பார்த்ததும், மிகுந்த அன்போடு இவர்களெல்லாம் என் நண்பர் கள், தியாகிகள், பெரியவர்கள்' என்றார். காந்தியடி களின் படமும் ஜவஹர்லால் குடும்பப் படமும் தாத்தாவின் மனத்தைக் கவர்ந்தன.

தாத்தாவுடன் நாங்கள் சம்பாஷித்த இரண்டு மணி நேரமும் மதிப்பிடற்கரியதாகும். கல்விக் களஞ்சிய மென்றால் தாத்தாவுக்கே தகும். எளிய நடையில் ஹாஸ்யம் ததும்ப உயர்ந்த விஷயங்களைக் கூறும் சிறந்த தன்மையைத் தாத்தாவிடந்தான் கண்டோம். இந்தக் கிழவயதில் கண்ணாடியின்றி ஓலைச்சுவடிக ளைப் படிக்கின்றார் தாத்தா.

தாத்தா தமிழ்த்தாயின் தவப் புதல்வர். அவர் புலவர் மட்டுமல்ல; ஆராய்ச்சியாளர். நல்ல உழைப் பாளி. அதோடு சிறந்த ஒழுக்கமுடையவர். அத னாலே தான் சிறந்த நிலைமைக்கு அவர் வந்துள் ளார்.

அவர் பதிப்பித்துள்ள நூல்கள் எண்ணில. பதிப் பிக்கப்பட வேண்டிய நூல்களும் எண்ணில. பொருட்செல்வத்தைப் போலவே நூற்செல்வத்திலும் வறண்டுள்ள தமிழ்த்தாய் தாத்தாவின் தொண்டு களை எதிர்பார்த்து நிற்கிறாள்.

தாத்தாவின் எண்பதாவதாண்டுப் பூர்த்தி விழா வருகின்ற புதன்கிழமையன்று தமிழ் நாட்டிலும் தமிழர் வாழும் வெளிநாட்டிலும் கொண்டாடப் பெறும். தாத்தாவின் படம் சென்னை சர்வகலாசா லையிலும் கம்பை தனவைசியர் கல்வி நிலையத்தி லும் திறந்து வைக்கப் பெறும். நமது தாத்தா, மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக் டர் உ.வே.சாமிநாதையரவர்கள் இன்னும் பல் லாண்டு வாழ்ந்து தமிழ்த் தாய்க்குத் திருப்பணிகள் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்கு வோமாக. வாழ்க சுவாமிநாதையர்! வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மக்கள்.

## *மகாமகோபாத்தியாய சாமிநாதையர்*

### (சக்ரவர்த்தினி)

பலவகைத் தானங்களிலே நல்லறிவுத் தானமே விசேஷமுடையதென்று மேலோர் சொல்வார்கள். அழிந்து போன ஆலயங்களை மறுபடி புதுக்கிக் கட்டிப் பிரதிஷ்டை புரிந்தோர், நெடுங்காலமாக நின்றுபோன அன்னசத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போர், வறண்டு மண்ணேறிப் போய்கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பலவகையாரினும், மங்கி மறைந்துபோய்க் கிடக்கும் புராதனப் பெருங்காவியங்களைப் பெருமுயற்சி செய்து திரும்ப உலகத்துக்கு அளிக்கும் பெரியோர்கள் புண்ணியத்திற் குறைந்தவர்களல்லர். மேலும், புகழ் நிலைக்குந் தன்மையில் மற்றெல்லோரைக் காட்டிலும், இவரே சிறந்தவரா வார்.

பிரமஸ்ரீ உ.வே.சாமிநாத ஐயர் மேற்கூறப்பட்ட பெருந்தருமத்தை நன்கு புரிந்தவர். சிந்தாமணி, சிலப்பதிகா ரம், மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களை இன்று நம்மவர் கற்றுக் களிப்பது சாமிநாத ஐயருடைய கருணை மிகுதியாலல்லவோ? இவருக்குக் கவர்ன்மெண்டார் ''மகா மகோபாத்தியாய''ப் பட்டம் கொடுத்துப் பெருமைப்படுத்தியது மிகவும் பொருத்தமுடைய விஷயமே. இன்னும் நெடுங்காலம் இம்மகாமகோபாத்தியாயர் சீரும் சிறப்பும் பெற்று, தமிழுலகத்தாருக்கு இனியன புரிந்து வாழவேண்டுமென்பதே எமது விருப்பம்.

## சென்னை பிரஸிடென்ஸி காலேஜில்
## ஸி.சுப்பிரமணிய பாரதி

1. செம்பரிதி யொளி பெற்றான், பைந்நறவு சுவை பெற்றுத் திகழ்ந்த, தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென் றெவரே கொல் உவத்தல் செய்வார்?
கும்ப முனி யெனத் தோன்றும் சாமிநா தப்புலவன் குறைவில்சீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல் பேருவகை படைக்கின்றீரே?

2. அன்னியர்கள், தமிழ்ச் செவ்வி யறியாதார் இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மகாமகோ பாத்தியா யப்பதவி பரிவி னீந்து
பொன்னிலவு குடந்தை நகர்ச் சாமிநாதன் றனக்குப் புகழ்செய்வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பி னிவன் பெருமை மொழிய லாமோ?

3. நிதி யறியோம், இவ்வுலகத் தொரு கோடியின் பவகை நித்தந் துய்க்கும்
கதி யறியோம்; என்று மனம் வருந்தற்க குடந்தை நகர்க் கலைஞர் கோவே
பொதிய மலைப் பிறந்தமொழி வாழ்வறியும் காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறி வாய் இறப்பின்றித் துலங்கு வாயே.

## சென்னை பிரசிடென்சி காலேஜ்
## தலைமைத் தமிழ்ப் புலவர் பிர்ம்மஸ்ரீ மகாமகோபாத்தியாயர்
## உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் அபிப்ராயம்.
### (செந்தமிழ்ச் செல்வம்)

*சில மாதங்களாக வெளிவந்து உலாவும் ''செந்தமிழ்ச் செல்வம்'' என்னும் பத்திரிகையைப் பார்த்து வருகிறேன்.*

*சிறந்த வித்வான்களது இருப்பிடமாக விளங்கிய திரிசிரபுரத்தில் இருந்த தமிழ் வித்வான் ஸ்ரீ அமிர்தம் பிள்ளை அவர்கள் குமாரரும், எஸ்.பி.ஜி.காலேஜ் உதவித் தமிழ்ப் பண்டிதருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ அ.சுந்தரநாத பிள்ளையவர்கள் இப்பத்திரிகையை நடத்தி வருவதும் தக்கவர்கள் இதற்கு விஷயதானம் செய்வதும் தெரிந்து மிக்க திருப்தியடைகிறேன்.*

*இத்தகைய பத்திரிகை திரிசிரபுரத்தில் நடைபெற்று வருவது இன்றியமையாததே.*

*இத்தேசத்துக் கனவான்கள் இதனை ஆதரித்து இதன் பத்திராசிரியருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.*

இங்ஙனம்,
**வே.சாமிநாதையன்.**

## விவேக போதினி பத்திரிகை பற்றிச் சில முக்கிய அபிப்ராயங்கள்

*சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ மகாமகோபாத்தியாய உ.வே.சாமிநாதையரவர்கள். மதசம்பந்தமான விஷயங்களும், நீதிகளைக் கற்பிக்கும் சிறுகதைகளும் புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புக்களும், தற்காலத்திற்கேற்ற நாகரிக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்து கொள்ளலாம். தமிழ் பாஷாபிமானிகளாகிய பிரபுக்கள் இதனை ஆதரித்து இதைப் பிரசுரஞ் செய்துவரும் ஜனரல் சப்ளைஸ் கம்பெனியாருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.*

## சில முக்கிய அபிப்ராயங்கள்
### (விவேக போதினி)

*ஸி.பி.வேங்கடராம ஐயர் எம்.ஏ., தமிழில் எழுதியுள்ள ''இளமையும் ஒழுக்கமும்'' என்னும் புத்தகைத்தைப் படித்துப் பார்த்தேன். யாவரும் படித்துத் தெரிந்து கொள்ளும்படி இஃது எளிய நடையிற் பிழையின்றி எழுதப் பெற்றிருக்கிறது. குழந்தைகளுடைய தேக ஆரோக்கியத்திற்காக மருந்துகளைச் சர்க்கரை முதலியவற்றில் கலந்து கொடுப்பது போல நல்லொழுக்கங்களைக் கதைகள் வடிவமாக இப்புத்தகத்தில் தெரிவித்திருப்பது மிகப் பாராட்டத்தக்கது.*

## பைந்தமிழ்-I

*தமிழ்க் கடலில் கரைகண்ட மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள். நமது பைந்தமிழைப் பற்றி எழுதியது:*

*''சென்னை, திருவல்லிக்கேணியிலுள்ள மகா-ள-ள-ஸ்ரீ கே.ஜகதீசையர், B.A., அவர்களால் வெளியிடப் பெற்று வரும் பைந்தமிழென்னும் மாதாந்தப் பத்திரிகையின் முதல் இரண்டு ஸஞ்சிகைகளைப் படித்துப் பார்த்தேன். இதற்கு விஷயதானஞ் செய்ய முன்வந்திருப்பவர்களையும் இதனை ஆதரிக்க முன்வந்துள்ள கனவான்களையும் நோக்கும்போது தன் பெயரைக் காப்பாற்றிக் கொண்டு இது நெடுங்காலம் நடைபெற்று விளங்குமென்று எண்ணுகிறேன். இக்காலத்தவர்கள் தெரிந்து கொள்வதற்கேற்ற பல விஷயங்கள் இதில் எழுதப் பெற்றுள்ளன. யாவரும் வருத்தமின்றிப் படித்துத் தெரிந்து கொள்ளும்படி வசன நடை அமைந்திருக்கிறது. பொதுஜனங்களும், சிறுவர் சிறுமிகளும் ஓய்வு நேரங்களில் இதனைப் படிப்பார்களாயின் பல நீதிகளையும், நவீன சாஸ்திர முறைகளையும், இக்கால நடையையும் செவ்வனே அறிந்து பயனடைவார்கள். தமிழபிமானிகள் யாவரும் இதனை வாங்கி ஆதரித்து இதன் பதிப்பாசிரியருக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.*

இங்ஙனம்,
**வே.சாமிநாதையர்.**

# ஸ்ரீ ஜகத்குரு திவ்யசரித்திரம்

(டாக்டர் ஐயரவர்களைப் பற்றி ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுடைய கட்டுரை)

1924ஆம் வருடத்தில் மகாமகோபாத்தியாய உ.வே.சாமிநாதையர் அவர்கள் ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளைத் தரிசிக்க ஸ்ரீமடத்திற்கு வருவதுண்டு. தமிழில் ஸ்வாமிகளுக்குள்ள ஆர்வத்தைக் கண்டு ஐயர் அவர்கள் பெருமகிழ்ச்சியுற்று, வயதின் காரணமாக ஏற்பட்டுள்ள தமது உடல் தளர்ச்சியையும் பொருட்படுத்தாது ஸ்வாமிகளிடம் இத்துறையில் பலமணி நேரம் பேசிக்கொண்டே இருப்பார். சிறியோர், பெரியோர் எல்லோருடைய மனமும் இன்புறும் வண்ணம் எப்பொழுதும் இனிய சொற்களையே பேசி, சில சமயங்களில் ஒரே மொழியில் பல கருத்துக்களை அடக்கி, ஐயர் அவர்கள் நயமாக உரையாடுவார்கள் என்பதை அவர்களை நேரில் கண்டோர் அறிந்திருப்பர். ஸ்வாமிகளிடம் ஐயர் அவர்கள் உரையாடும்பொழுது ஸ்வாமிகள் பல புதிய கருத்துக்களை வெளியிடுவார்கள். அவைகளைக் கேட்ட ஐயரவர்கள் புளகாங்கிதம் அடைந்து ஸ்வாமிகளைத் தமிழ்த்தெய்வத்தின் அவதாரம் எனப் போற்றுவார் இந்த அவதாரம் தமது வாழ்நாளில் ஏற்பட்டிருப்பதைக் குறித்துப் பெருமையும் கொள்வார். ஸ்வாமிகளைக் காண வரும்பொழுதெல்லாம் ஐயர் அவர்கள் பெரிய மகரகண்டி ருத்திராக்ஷ மாலை அணிந்து வருவார். ஸ்வாமிகள் அன்றாடம் செய்யும் சிவபூஜையை ஐயர் அவர்கள் தரிசித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் தியானத்தில் அமர்ந்திருப்பார். காமகோடி பீடத்தின் 65-வது ஆசாரியர்களான ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சிவபூஜை செய்வதில் மிகச் சிறந்தவர்கள் என்றும் அக்காட்சியைத் தாம் தமது பதினெட்டாவது பிராயத்தில் நேரில் கண்டிருப்பதாகவும் அக்காலத்தில் அவர் கண்ட அந்தச் சிவபூஜையை இப்பொழுது மறுமுறை காணும் பாக்கியத்தைத் தாம் பெற்றிருப்பதாகவும் ஐயர் அவர்கள் கூறுவார்கள். மேலும் அக்காலத்திலேயே தாம் தமிழில் செய்து வந்த புராணப் பிரசங்கத்தைக் கேட்டு மடத்தின் ஆஸ்தான வித்வான்கள் தம்மைப் பாராட்டி இருப்பதைப் பற்றியும், அவர்கள் தமது சுய சரித்திரத்தில் கூறியுள்ளார்கள்.

மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் செய்துள்ள அரிய தொண்டைப் பாராட்டி 1925வது வருடம் ஸ்வாமிகள், அவர்களுக்குத் தாக்ஷிணாத்ய கலாநிதி என்னும் பட்டத்தை வழங்கி மடத்தின் உயரிய கௌரவமான இரட்டை காஷ்மீர் சால்வைகளை அவர்களுக்குப் போர்த்தச் செய்து அவர்களைச் சிறப்பித்தார்கள். அப்பட்டம் வழங்கப் பெற்ற ஸ்வாமிகளது திருமுகமானது அவ்வருடம் ஸர்.ஸி.பி.ராமஸ்வாமி ஐயர் அவர்களது தலைமையில் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் ஐயர் அவர்களுக்கு அளிக்கப் பெற்றது. ஐயர் அவர்களும் அத்திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு, அது தமக்குக் கிடைப்பதற்கரிய ஒரு கௌரவம் என்றும், அதைத் தமக்கு அளித்த மகாபுருஷர்களான ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பல்லாண்டு வாழ்ந்து மக்களை உய்விக்க வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திப்பதாகவும் கூறினார்கள் இவ்வைபவத்தைப் பற்றி மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழ்த் தொகுதி 23 (பக்கம் 311)இல் கூறியிருப்பதை இங்குக் குறிப்போம்.

''ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களுக்குத் தாக்ஷிணாத்ய கலாநிதி என்ற பட்டத்துடன் அளிக்கும்படி அனுப்பிய ஜோடி சால்வையும், தங்கத் தோடாவும் பைம்பொற் பவுண்டன் பேனாவும் மந்த்ராக்ஷதை, விபூதி ப்ரஸாதங்களும் ஸ்ரீமுகமும் வந்தன. ஸ்ரீமுகத்தை மதுரை வக்கீல் மகாராஜராஜ ஸ்ரீ வி.எஸ்.ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் ஸபையில் படித்துக் கொடுக்க ஸபா நாயகரவர்கள்,

**செந்நாப் புலவர் திறம்அறிந்து பொற்கிழிகள்**
**அந்நாள் இக்கூடல் அளித்தமை நம் - தொன்னூல்கள்**
**கற்றறிந்தோம் மற்றதனைக் கண்ணால் கண்டறிந்தோம்**
**இற்றைநாள் இங்கே இனிது.**

என்று புலவர் பாராட்டும் வண்ணம், தமிழ் அபிமானச் செல்வர்கள் வழங்கிய ரூபாய் ஐயாயிரம் அடங்கிய பொற்கிழியையும் ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் வழங்கிய தாக்ஷிணாத்ய கலாநிதி என்ற பட்டத்தையும் சால்வை முதலியவற்றையும் மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுக்கு உவப்புடன் அளித்தார்கள். அதன்பின் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் தம்மைக் கௌரவித்தமைக்கு நன்றி பாராட்டி, 'தமிழ்மொழியைக் கௌரவிக்க வேண்டியே தமக்கு இந்த விசேஷ சன்மானம் செய்யப்பட்டதென்று தாம் கருதுவதாகக் கூறினார்கள்.''

இன்னும் ஸ்ரீ ஐயரவர்கள் அவ்ஆண்டு வெளியிட்ட தம் 'நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரைப்'

பதிப்பின் முகவுரையில் (28-9-25) பின்வருமாறு எழுதியுள்ளமையும் குறிக்கத்தக்கது.

''தரிசிக்கும் காலங்களிலெல்லாம் பழைய தமிழ் நூல்களை ஆராய்ந்து பதிப்பிப்பதில் சிறிதும் தளர்ச்சி அடையாமல் மேன்மேலும் உழைத்து வரவேண்டும் என்று பெருங்கருணையுடன் கட்டளையிட்டருளியதன்றி மதுரைத் தமிழ்ச் சங்கத்து 24-ஆம் வருஷோத்ஸவ காலத்தில் அடியேனுக்குத் திவ்ய ப்ரஸாதங்களையும் ஸ்ரீமுகத்தையும் ஸன்மானங்களையும் அனுப்பி அனுக்கிரஹித்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான கும்பகோணம் ஜகத் குரு ஸ்ரீமத் சங்கராச்சார்ய ஸ்வாமிகளுடைய பரிபூரண கிருபையைச் சிந்தித்து,

**''தாயு நற் றந்தையும் தவமும் அன்பினான்**
**மேயவான் கடவுளும் பிறவும் வேறு நீ''**

(கம்ப.திருஅவதார.)

என்பதையே சொல்லித் துதித்துத் திசைநோக்கி அவர்களை வந்திக்கின்றேன்.''

**''காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணர்ஒக்கல்**
**சீரணி சிந்தா மணிஅணி தில்லைச் சிவன்அடிக்குத்**
**தாரணி கொன்றையன் தக்கோர்தம் சங்கநிதிவிதிசேர்**
**ஊருணி உற்றவர்க்கு ஊரன்மற்று யாவர்க்கும் ஊதியமே''**
**(திருச்சிற்றம்பலக் கோவையார், 400)**

-ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம் பக்கம் 94-96)

## நூல்களால் உண்டாகும் பயன்

*ஒரு தேசத்தின் ஏற்றத்திற்கு அத்தேச மொழியிலுள்ள பழைய காப்பியங்களைப் படித்தறிதலும் ஒரு முக்கியமான சாதனமாகும் என்பது ஆன்றோர் கொள்கை. ஒரு பழைய நூலால் அதனை இயற்றிய கவியின் பாஷா ஞான நிலையும், அம்மொழியினிடத்துள்ள அன்பினால் இயல்பாகவே அவர் அதனை வளர்த்து வந்த விதமும், அவரால் மதிப்புற்ற புலவர்கள் பிரபுக்கள் அரசர்கள் முதலியோருடைய இயல்பும், அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களால் அப்பெரியோர் அடைந்த நன்மதிப்பும், அவர்களுடைய காலப் போக்கும், அக்காலத்திலிருந்த தெய்வ பக்தி இராசபக்தி முதலியனவும், ஒழுக்க வழக்கங்களும், தேச இயற்கையும் படிப்பவர்களுக்குப் புலனாகும். அந்த நூலைப் படித்து அறிந்து அனுபவிப்பவர்களுக்கு அவற்றுள் சில சில நேரில் கண்டாற் போலத் தோன்றியும் இன்புறுத்தும்; அதனால் சிலர் திருத்தமடைந்து ஒழுகவும் கூடும். அதன் உரையினால் அவ்வுரையாசிரியருடைய கல்விப் பரப்பும், நூலாசிரியருடைய உண்மைக் கருத்துக்களும், பல ஆசிரியர்கள் பெயர்களும், இக்காலத்து வழங்காத அரிய விஷயங்களும், பல நூற்பெயர்களும், அக்காலத்து வழங்கிய சொற் பிரயோகங்களும், இவைபோல்வன பிறவும் விளங்கும். சரித்திர ஆராய்ச்சியாளர்கள் முதலியவர்களுள் ஒவ்வொரு வகுப்பினரும் யாதொரு வருத்தமும் இன்றி அவற்றிலிருந்து தத்தமக்குரியவற்றை எளிதில் பெற்றுப் பயனடையவும் கூடும்.*

**-ஐயரவர்கள்**

## நாட்டுக்கு ஆபரணம்

*பிராயம் முதிர முதிர உடலும் செல்வமும் முதிர வேண்டுமென்று கருதி அவற்றிற்குரியவற்றைச் செய்பவர்கள் பெரும்பாலும் மலிந்த இந்த உலகத்தில், நாளுக்கு நாள் பிராயம் முதிர்வதற்கு முன் அறிவு முதிரும் முயற்சிகளை மேற்கொள்ளும் கல்விமான்களே ஒரு நாட்டுக்கு ஆபரணமாகத் திகழ்பவர்கள்.*

**-ஐயரவர்கள்**

## என் நினைவுகள்

*நான் காணும் கனவுகளில், கலாசாலையில் பல மாணாக்கர்களிடையே இருந்து அவர்களுடைய உற்சாகமான செயல்களையும் அவர்கள் பேசும் பேச்சுக்களையும் அறிந்து மகிழும் காட்சிகளே பல. தம்முடைய குடும்பத்தையே மறந்துவிட்டுக் கல்வி கற்றல் ஒன்றேயே நாடிப் பறவைகளைப் போலக் கவலையற்றுப் படித்து வந்த மாணாக்கர்களுடைய கூட்டத்திடையே பழகுவதைப் போன்ற இன்பத்தை வேறு எங்கும் நான் அனுபவித்ததில்லை. அவர்களுடைய அன்பை நினைத்தாலே என் உள்ளத்தில் புதிய ஊக்கம் உண்டாகும். அந்தக் காலம் போய்விட்டதானாலும் அக்காலத்து நிகழ்ச்சிகளின் நினைவு இன்னும் என் மனத்தை விட்டு நீங்கவில்லை. அதனால், நான் நினைக்கும் போதெல்லாம் உள்ளத்தால் மீண்டும் கலாசாலையிலிருந்து பாடம் சொல்லுகிறேன்; இன்புறுகிறேன்.*

**-ஐயரவர்கள்**

# தமிழ்த் தாத்தாவும் மகாகவி ரவீந்திரரும்

***-த.நா.சேனாபதி (இளந்தமிழன் 1990)***

(1983 ஏப்ரல் திங்கள் .'குமரிமலர்' இதழில், அதன் பழைய இதழ் ஒன்றில் வெளியான ஒரு கட்டுரையை மறுமுறை பிரசுரித்திருந்தார்கள். ''மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் இல்லத்துக்கு (1919 வாக்கில்) மகாகவி ரவிந்திரநாதர் வந்திருந்ததைப் பற்றி அந்தத் தமிழ்த் தாத்தாவின் புதல்வர் திரு எஸ்.கலி யாண சுந்தரையர் அவர்கள் எழுதியிருந்த கட்டுரை தான் அது.'' சென்னையில் மயிலைக் கச்சேரி சாலையில் 'சாந்தி நிகேதனம்' என்ற இல்லத்தில் இருந்த முன்னாள் நகராண்மைக் கழகத் தந்தையாக இருந்த டி.எஸ்.ராமசாமி அவர்களின் விருந்தினரா கத் தங்கினார் ரவீந்திரர். அப்போது கவியரசரிடம் நம் தமிழ்த்தாத்தாவைப் பற்றி திரு ராமசாமி தெரிவித்தார். ஏற்கனவே கீதாஞ்சலியில் தெய்வீகப் பாக்களைப் பற்றிக் கேள்வியுற்றிருந்த டாக்டர் ஐயரவர்கள் அவற்றின் பக்திச் சுவையில் ஈடுபட்ட வர் என்பதனால் உடனே அவரைக் காண வேண்டு மென ஆவல் கொண்டார் கவியரசர். அவ்வமயம் டாக்டர் ஐயரவர்கள் திருக்கழுக்குன்றம் வேதகிரீசு வரரைத் தரிசிக்கச் சென்றிருந்தார். ஓர் ஆளை அங்கு அனுப்பி இச்செய்தியை உடனடியாக எட்ட விட்டார் ஐயரவர்கள் புதல்வர் திரு எஸ்.கலியாண சுந்தரையர் அவர்கள். தமிழ்த்தாத்தா இத் தகவ லைக் கேட்டதுமே சென்னை திரும்பி, கவியரசரைத் தம் இல்லத்தில் வரவேற்றார். கவியரசரும் பழைய வங்காளி ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பிப்பதில் ஆர் வம் உள்ளவர். திரு ராமசாமி அவர்களின் மூலம் தமிழ்த்தாத்தாவின் தொண்டையறிந்து பெருவியப் பும் மகிழ்ச்சியும் கொண்டார். டாக்டர் ஐயரவர்க ளைவிட வயதில் சிறியவரான கவியரசர் அன் னாரை மிக்க பணிவுடன் வணங்கி விடைபெற்றார் என்பதுவரை 'குமரிமலர்'க் கட்டுரையில் குறிக்கப் பெற்றிருந்தது.

எனக்கு 'இவ்வளவுக்குத் தமிழ்த்தாத்தாவிடம் மதிப்புக் கொண்ட கவியரசர் அவரைப் பற்றி ஏதாவது எழுதியிருக்கத்தான் வேண்டும்' என்று ஏதோ உள்ளுணர்வு அறிவுறுத்தியது. அதேசமயம் முன்பே எனக்குப் பழக்கமான திரு ராமசாமி அவர்களிடமிருந்து ஓர் அவசரச் செய்தி கிடைத் தது. அப்போது அந்தப் பெரியவர் மரணப் படுக் கையில் இருந்தார் என்பது எனக்குத் தெரியாது. எனினும் அவரை நேரில் கண்டபோது அவர் நினைவுடன் இருந்தார். அவருடைய மேஜை டிராய ரில் இருந்து வெளியே ஓர் உறையை அவருடைய உறவினர் ஒருவர் எடுத்துக் கொடுக்க அதனைப் பிரித்துப் பார்க்கச் சொன்னார் திரு ராமசாமி. அந்தக் காகித உறையில் நாள்பட்டு மஞ்சளாகி இருந்த ஒரு காகிதத்தில் ரவீந்திரர் நம் தமிழ்த்தாத் தாவைப் பாராட்டியிருந்த அழகிய கவிதையைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அதனை ஒரு பிரதி எடுத்துக் கொள்ளுமாறு பலவீனமான குரலில் திரு. ராமசாமி என்னிடம் கூறினார். வெகு அக்கறையுடன் உதிர்ந்து போகும் நிலையில் இருந்த அந்தப் பழைய காகிதத்தில் இருந்து அந்தக் கவிதையைப் பிரதி செய்தபின் பழைய உறையிலிட்டு மேஜைமேல் வைத்தேன். பழையபடி அதனை அவரது மேஜை டிராயரில் உறவினர் வைத்தபின், திரு. ராமசாமி அவர்களை வணங்கிப் பிரியாவிடை பெற்றேன்.

1987 டிசம்பர்த் திங்களில் கல்கத்தா பல்கலைக் கழகத் தமிழ் வங்க இலக்கியக் குழுவினர் வெளி யிட்ட தொகுப்பு ஒன்றில் அதே திங்கள் நான் வாசித்த கட்டுரையில் மேற்படி நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டுக் கல்கத்தா பல்கலைக் கழகத் துணை வேந்தரின் முனனிலையில் தமிழ்த்தாத்தாவைப் பாராட்டிக் கவியரசர் பாடிய செய்யுளையும் படித்த போது அங்கிருந்த அனைவருக்கும் எதிர்பாராத இலக்கிய விருந்தாக அமைந்தது அது. அந்தப் பாடலைத் தமிழ் எழுத்தில் மொழிபெயர்ப்புடன் இதோ தந்துள்ளேன்.

## வங்காளி மூலம்

ஆதிஜுகேர் ஆந்தாரே தாலபத்ரே ச்சிலோ
த்ராவிட தேசேர் புராதன கீர்த்தி,
ஸேஇ மஹத்நிதி, ஹே தேசிகோத்தம
தோமார் த்வாரா நா கி பாஹிர்ஹயில்?
ஸே காலேர் அகஸ்த்யேர் மதஏஸே தோமார்மாகே
ஸிம்ஹாஸனே ரேகே திலே நாகிதுமிஸ ஸம்மானே?
ஆர் பாஞ்ச மஹா காவ்யேர் மாஜ்ஜே
சிந்தாமணி, நூபுரகாதா, மணிமேகலா இத்யாதி
ஸம்சோதன கரே தாஹார் பத ஜுகலே
ஸமர்ப்பணகரிலே நா கிதுமி?
ஸங்கே ஸங்கே ஸங்ககால ஸாஹித்யகே
ஜ்யோத்ஸ்னாய் ஃபுடித நித்ய மல்லிகார்மத
சோபித கரிலே நாகிதுமி? தேமாகரிப்ரணாம்.

## தமிழாக்கம்

''ஆதி (முந்தைய) யுகத்து இருளில் பனையோலைச் சுவடிகளில் இருந்தது திராவிட நாட்டின் புராதன (பழைய) கீர்த்தி - அந்தப் பெருநிதி, பேராசானே உன்னால் அன்றோ வெளிப்பட்டது? அந்தக் காலத்து அகஸ்தியனைப் போல நீயன்றோ வந்து உன் அன்னையினைச் சிம்மாசனத்தில் பெரு மதிப்புடன் வீற்றிருக்க வைத்தாய்? அம்மட்டோ ஐம்பெருங் காப்பியங்களுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலானவற்றை (ஆய்ந்து பதிப்பித்து) அந்த அன்னையின் இணையடியில் சமர்ப்பித்தவன் நீ அன்றோ? அவற்றுடன் சங்க இலக்கியத்தையும் நிலவில் மலர்ந்த முல்லை என ஒளிர வைத்தவனும் நீஅன்றோ? உன்னை வணங்குகிறேன்.''

**த.நா.சேனாபதி**
**(மஞ்சரி முன்னாள் ஆசிரியர்)**

சுப்பிரமணிய பாரதியார் ரவீந்திர நாத் தாகூர் ஆகிய இரு மகாகவிகளும் ஐயரவர்கள் அகத்திய முனிவருக்கு ஒப்பானவர் என்று பாராட்டியது குறிப்பிடத் தக்கது.

## தமிழ்ப் புலவர்களும் தெய்வீகத் தன்மையும்

*எந்தப் புலவர் பாலும் தெய்வீக அம்சத்தை ஏற்றிப் புகழும் நம் நாட்டினரில் ஒரு சாரார் புலவர்களைப் பற்றிக் கூறும் செய்திகளில் சில நடந்தனவாகத் தோன்றவில்லை. அங்ஙனம் கூறுபவர்கள் அப்புலவர்களுக்கு மிக்க பெருமையை உண்டாக்க வேண்டும் என்பது ஒன்றினை மட்டும் கருதுகிறார்களேயல்லாமல் நடந்த விஷயங்களை நடந்தபடியே சொல்வதை விரும்புவதில்லை. கம்பர் முதலிய சில புலவர்களை வரகவிகள் என்றும் கல்லாமலே பாடிவிட்டனர் என்றும் சரஸ்வதி தேவியின் திருவருளால் அங்ஙனமாயினரென்றும் கூறுவதுதான் பெருமை எனவும், அவர்கள் பழம் பிறப்பில் செய்த புண்ணியத்தாலும் திருவருளாலும் கிடைத்த நல்லறிவைத் துணைக்கொண்டு பலநூல்களைப் பயின்று செயற்கை அறிவும் வாய்க்கப் பெற்று நூல் முதலியன இயற்றினார்கள் என்பது சிறுமை எனவும் எண்ணுகிறார்கள்.*

**(மீ.சு.பி.ச.)**

## எவ்வளவோ துறைகள்

*புது இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. பல மொழிகளிலுள்ள விஷயங்களை அறிவதனால் இத்துறைகள் இன்னும் விரிவடையும். நாளடைவில் மனிதர்களுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது; அதற்கேற்பக் கொள்கைகளும் மாறுபடுகின்றன; அக்கொள்கைகளுக்கு ஏற்றபடி இலக்கியங்களும் நல்வழியில் மாற வேண்டியது இயல்பேயாகும்.*

**ஐயரவர்கள்**

## வசன நடை

*பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் வார்த்தைகளையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்வது நல்ல முறையாகும். வழக்கற்ற சொற்களையும், திரிசொற்களையும் வசன நடையில் கூடிய வரையில் விலக்குதல் நன்று. தம் கருத்தை மற்றவர்கள் எளிதில் அறிந்து பயனுற வேண்டுமென்பதை எழுதுபவர்கள் மனத்தில் கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ள வேண்டுமேயன்றிக் கடின நடையைக் கைக்கொள்ளுதல் கூடாது. கொண்டால் 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு உண்டாகிவிடும்.*

**-ஐயரவர்கள்**

*With Best Compliments*

# SRES

## Siddhars' Research Educational Society,

2/2, 2nd East St., Kamaraj Nagar,
Tiruvanmiyur, Madras-600 041.
Phone 4914119

(Astrology, Mantrics, Traditional Medicine, Yoga, and Gnana Consultancy)

---

**With Best Compliments from**

## S. SESHADRI

15, IIIrd Main Road,
R.P.C. Layout
Bangalore - 560 040.

## V. GOPALASWAMY

19/1, Dr.Sanjeevy Street,
Mylapore,
Madras-600 004.

---

**குழ. கதிரேசனின் குழந்தைப் பாடல்கள்**

| | | |
|---|---|---|
| 1. மழலைத்தேன் | - | ரூ.15.00 |
| 2. மழலை அரும்பு | - | 6.50 |
| 3. மழலைப் பூக்கள் | - | 6.50 |
| 4. தொப்பைக்கோழி | - | 11.75 |
| 5. பேசும் கிளியே | - | 14.25 |
| 6. பூச்செண்டு | - | 7.00 |

**ஒளிப்பேழைகள்**

| | |
|---|---|
| மழலைப் பூக்கள் - | ரூ.30/- |
| பேசும் கிளியே - | 30/- |
| தொப்பைக்கோழி - | 30/- |

*கிடைக்குமிடம்:*

**ஐந்திணைப் பதிப்பகம்,**
279 பாரதி சாலை,
திருவல்லிக்கேணி சென்னை-600 005.
Ph: 84 94 10

---

*With the best Compliments of*

## JAYALAKSHMI INDOLOGICAL BOOK HOUSE

6, Appar Swamy Koil Street,
(Upstairs) (Opp. Sanskrit College)
Mylapore, Madras-4.

(All Indological Books Under One Roof)

R. KRISHNAMACHARI
*Proprietor*

Telephone (Res) 840276
(Off) 4990539

# என் நினைவுகள்
# கலாநிதியின் நூற்பதிப்பு முறை

**வித்துவான் ச.கு. கணபதி ஐயர்** பி.ஓ.எல்.

*(டாக்டர் ஐயரவர்களைப் பற்றிய சில நினைவுகளைக் குறித்து எழுதும்படிக் ''கூட்டுறவு'' ஆசிரியர் கேட்டதனால் எளியேன் 7 வருடங்களாக மாணவனாக ஐயரவர்களிடம் பழகிவந்த தொடர்பினால் இக்கட்டுரையை எழுதலானேன்.)*

டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் தம் இல்லத்தில் எப்பொழுதும் ஏதேனும் ஒரு நூலை ஆராய்ந்து கொண்டே இருப்பர். அவர் பக்கலில் எவரேனும் ஒரு மாணவர் இருந்துகொண்டு நூல்களை ஒப்பு நோக்குதல், பிரதிசெய்தல், அச்சுப் பிழைகளைத் திருத்தல், அனுபந்தம் தயாரித்தல் முதலிய தொழில்களில் ஒன்றைச் செய்துவருதல் இயல்பு.

## ஆராய்ச்சிமுறை

ஐயரவர்கள் ஒரு புதிய நூலைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டால் அப்பதிப்பு எவ்வாறு நிறைவேறும் என்பது இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். ஓர் ஏட்டுச்சுவடியை எவரேனும் ஒரு மாணவர் வைத்துக் கொள்வர். அதனை அப்படியே பிரதி செய்த தாளை மற்றொருவர் வைத்துக் கொள்வார். ஏதோ ஒரு காலத்தில் அஃது அவர்களாலேயே பிரதி செய்யப்பட்டதாகும். ஏட்டுச் சுவடிகளில் வேறு பிரதிகள் இருக்குமாயின் வேறொரு மாணவரும் ஆசிரியரும் அவற்றைப் பார்த்து வருவர். ஒரு மாணவர் காகிதமும் பேனாவுமாக ஐயரவர்கள் சொல்வனவற்றைக் குறித்துக் கொள்ளத் தயாராய் இருப்பர். பிறகு காகிதத்தில் எழுதியுள்ளதை ஒரு மாணவர் படித்து வருவார். சாதாரண மக்களுக்கு விளங்காத சொற்களுக்கும், தொடர்களுக்கும் குறிப்புரையை அவ்வப்பொழுது செய்யுளின் எண்ணை இட்டு எழுதும்படி ஐயரவர்கள் கூறிவருவார்கள். மேற்கோள் விளக்கம் காட்ட வேண்டிய இடம் வரும்போது மாணவர்களே அதனைக் காட்டுவர். ஐயரவர்கள் அதுசரி என்றதும் அதுவும் குறிப்பாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

## ஐயங்கள்

நூலில் ஐயம் தோன்றுமிடத்தில் காலத்தை அதிகம் செலவழிக்காமல் ஒரு கோட்டை இழுக்கச் செய்து விட்டு மேலே படிக்கச் சொல்லுவார்கள். மேற்கோள் இடம் அகப்படாவிடில் கால விரயம் செய்யாமல் குறித்துக்கொள்ளச் செய்து மேலே படிக்கத் தூண்டுவர். இதற்குள் பொழுதாய்விடும். மாணவர்கள் தத்தம் வேலைகளைக் குறித்து விடை பெற்றுக் கொண்டு சென்று விடுவார்கள். அப்பொழுது ஐயரவர்கள் முன் குறிக்கப்பட்ட ஐயங்களை சாவகாசமாய் ஆராய்ந்து சரியான பொருளையோ மேற்கோள் விளக்க இடத்தையோ குறிப்புரைத்தாளில் சேர்த்து விடுவார்கள்.

வெளியே சென்ற மாணவர்களுக்கு எண்ணமெல்லாம் அன்றுகாலை எழுந்த ஐயங்களை ஆராய்வதிலேயே இருக்கும். பலருக்கு ஐயம் தீர்ந்த பாடாக இரா. அன்று மாலையிலோ மறுநாளோ ஐயரவர்களை மறுபடியும் சந்திக்குங்கால் ஐயரவர்கள் மலர்ந்த முகத்துடன் 'ஐயங்கள் தீர்ந்துவிட்டன' என்று குறிப்புரையைக் காட்டுவார்கள். சில சமயங்களில் ஓர் ஐயம் தீரப் பல மாதங்களாகும்.

## நூலின் அமைப்பு

குறிப்புரை எழுதுங்கால் சில சொற்களுக்கு மட்டும் 'பொருளை எழுதச் செய்வர். பல தொடர்கள் சொற்களாகப் பிரிக்கப்படுவதனாலேயே பொருள் விளங்கிவிடும். அத்தகைய தொடர்களுக்குப் பதச்சேதம் மட்டும் தரப்படும். வேறு தொடர்கள் அன்வயப்படுத்தலினாலேயே விளக்கமுறும். அருமையான தொடர்களுக்கும் கருத்துக்களுக்கும் பிற நூல்களில் இருந்து மேற்கோள் காட்டப்படும். பிரதியை ஒருவர் படித்துவருங்கால் சுவடிகளை ஒப்புநோக்குவோர் பாடபேதம் இருப்பின் கூறுவர். ஐயரவர்கள் உண்மைப் பாடத்தைத் திட்டம் செய்து கொண்டு மற்ற பேதங்களை அடிக்குறிப்பாக இடுவது வழக்கம்.

குறிப்புரை முதலியவை முடிந்ததும் ஐயரவர்கள் முகவுரை முதலியவற்றைத் தாமாகத் தயாரிப்பது வழக்கம். முகவுரையில் தமக்கு அந்நூல் கிடைத்த வரலாறும், அதன் பதிப்பின் வரலாறும் காட்டப்படும். அந்நூலுக்குத் தொடர்பான கடவுள் வணக்கம் முகவுரையின் தலைப்பில் காட்டப்படும். அதனையடுத்து ஆசிரியர் வரலாறு, நூல் வரலாறு முதலியன குறிக்கப்படும். நூல் ஆராய்ச்சியே ஐயரவர்களின் பதிப்பில் முக்கியமானது. இம்முறை அவர்களாலேயே முதன்முதலில் தமிழில் செவ்விய முறையில் கையாளப்பட்டதாகும்.

## அச்சேற்றல்

இவ்வளவும் தயாரான பிறகு அந்நூல் அச்சுக்குக் கொடுக்கப்படும். பாரங்கள் அச்சாகி வரும்போது குறிப்புரையை அந்த அந்தச் செய்யுள் உள்ளபக்கத்தில் அடிக்குறிப்பாகத் தருவது ஐயரவர்களின் பிற்கால வழக்கமாகும். ஃப்ரூப்புக்களைத் தாமே பலமுறை பார்த்து வருவர். மாணவர்களையும் பார்க்கச் செய்வார்கள். ஃப்ரூப் நிலையிலும் குறிப்புரை முதலியனவற்றில் பல விஷயங்கள் சேர்க்கப்படுவதுண்டு இந்த மாதிரி ஒரு புத்தகம் தயாராவதற்குப் பத்துப் பன்னிரண்டு வருஷமாகும். ஒரே சமயத்தில் அவர்கள் பத்துப் பதினைந்து நூல்களை ஆராய்ந்து வருவதனால் அவர்கள் 60 வருஷ காலம் பதிப்பாசிரியராக இருந்து சுமார் லட்சம் பக்கங்கள் அடக்கம் உள்ள அரிய நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

## புத்தகத்தை அவர்கள் வரவேற்கும் முறை

நூல் அச்சாகிப் புத்தக வடிவில் வந்தவுடன் முதன் முதலாக வந்த பிரதியை வாங்கியதும் தலையில் வைத்துக் கொள்வர். பிறகு அதற்கு நிலம்பட வணக்கத்தைச் சமர்ப்பிப்பார். உடன் உழைத்த மாணவரிடமும் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வார். அது தெய்வ சம்பந்தமான நூலாய் இருப்பின் அத்தெய்வம் எழுந்தருளியுள்ள ஸ்தலத்துக்குச் சென்று அங்குள்ள மூர்த்திக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியவற்றைச் செய்விப்பார்கள்.

பெருங்கதையின் 2-ம் பதிப்பு முடிந்ததும் ஒரு முறை அவர்கள் சென்னையிலிருந்து கோவை வருங்கால் விஜயமங்கலம் ஸ்டேஷனை வண்டி கடக்கும்போது வண்டியில் இருந்தபடி அந்த ஊரை நோக்கி வந்தனம் புரிந்தார்கள். அப்பொழுது 'இந்த ஊரில் ஒருகாலத்தில் எத்தனை பெரியவர்கள் இருந்தார்கள் தெரியுமா? அவர்கள் எல்லாம் தமிழுக்கே தங்கள் வாழ்வை அர்ப்பணம் செய்தவர்கள்! என்று தழுதழுத்த குரலில் சொல்லிக் கண்ணீர் விட்டனர். பெருங்கதையின் ஆசிரியர் கொங்குவேளிர், விஜயமங்கலப் பிராந்தியத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. நூலை ஆராயும் காலத்தில் கூட அதில் மிகுந்த அருமையான கருத்துக் காணப்படில் மனம் உருகிக் கண்ணீர் விடுவது அவர்களது இயல்பாகும்.

பதிப்பித்த புத்தகத்தில் ஒரு பிரதியை ஒவ்வொரு தாளின் இடையில் வெள்ளைத் தாள்களை வைத்து பைண்ட் செய்து வைத்துக் கொள்வர். வேறு நூல்களை ஆராய்ந்து வருங்காலத்தில் தமக்குத் தோன்றும் அரிய கருத்துக்கள் பல முன்பு தாம் பதிப்பித்த நூலோடு தொடர்புடையனவாக இருத்தல் கூடும். அப்பொழுது அவற்றை அந்தப் புத்தகத்தில் அந்தஅந்தச் செய்யுளுக்கு நேரில் குறித்து வைத்துக் கொள்ளுவார்கள். அந்நூலை மறுமுறை பதிப்பிக்குங்கால் அந்த இரண்டாம் பதிப்பு மிகுந்த செவ்விய முறையில் விளங்கும்.

## ஓயா உழைப்பு

சென்ற பத்து வருடங்களாகச் சாதாரணமாக ஐயரவர்கள் ஒருநாளில் 10 மணி நேரத்தை நூற்பதிப்புக்கும் 2 மணி நேரத்தைப் பாடம் சொல்வதற்கும் படிப்பதற்குமாகச் செலவிட்டு வந்தார்கள்.

சில சமயங்களில் அவர்கள் நோயுற்று உடல் நிலை தளர்ந்து வேலைசெய்ய இயலாமல் படுக்கையில் படுத்து விடுவார்கள். அப்பொழுது ஏதேனும் ஒருநூலை மாணவர் ஒருவர் அருகில் இருந்து கொண்டு படித்து வருவார். படிக்குங்கால் அங்கங்கே முக்கியமான செய்திகளைக் காட்டித் தமக்குள் மேற்கொண்டுள்ள சங்கேதக் [illegible]ளை அச் செய்திகளுக்கு நேராக இடச் செய்வார்கள். [illegible]ரேனும் குறுக்கிட்டு, ''உங்களுக்கு இப்பொழுது ஓய்வு வேண்டும்; இப்படி உழைக்கக் கூடாது'' என்றால் இவர்கள் ''எனக்கு இதுதான் நல்ல மருந்து'' என்று சொல்லுவார்கள். இது பெரிதும் உண்மையே. என்றைக்கு நூலாராய்ச்சி இல்லையோ அன்றெல்லாம் அவர்கள் கடுகடுவென்றிருப்பார்கள். ஒருவித வெறுப்பு அவர்கள்பால் காணப்படும். ஒரு நூலில் ஏதோ ஐயம் இருப்பதாகப் பாவித்து அவரைச் சேர்ந்தவர்கள் எவரேனும் அப்பொழுது சென்று பேசினால் அக்கடுகடுப்பு மாயமாய் மறைந்துவிடும்.

இந்த மாதிரி அவர்கள் தம் வாழ்க்கையில் 60 ஆண்டுகளுக்கு மேல் உழைத்து வந்ததனாலேயே தமிழ் உலகம் பல அரிய நூல்களை அவர் மூலமாகப் பெற்றிருக்கிறது. எவராலும் செய்ய முடியாத அபாரத்தொண்டை அவர்கள் தம் வாழ்க்கையில் செய்து காட்டினார்கள்.

### வாழ்க்கைச் சங்கீதத்திற்குச் சுருதி

*பெண்பாலாரைப் பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகள் எல்லாவற்றையும் தொகுத்து வகைப்படுத்தினால் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் தம் ஆற்றலை வெளிப்படுத்திச் சிறப்புற்ற வரலாறுகள் பல தெரியவரும். அவர்களது பெருமை ஆடவர்களது பெருமையோடு சேர்ந்தே காணப்படுகிறது. சங்கீதத்தில் சுருதி எத்தகையதோ அத்தகையதே வாழ்க்கையில் பெண்களுடைய நிலையும். சுருதியில்லாமல் சங்கீதம் நடைபெறாது. ஆனால் சங்கீதத்தில் வாத்திய கோஷங்களும் வாய்ப்பாட்டும் வெளிப்படையாகத் தோன்றி எல்லோராலும் போற்றப்படுகின்றன. சுருதியோ அவ்வளவு பெருமைக்கும் ஆதாரமாகி நின்றும் புலப்படாமல் இருக்கிறது. பெண்களும் எல்லாவற்றையும் கடமையாகச் செய்து பிறர் புகழுக்கு அஸ்திவாரமாக இருந்து அடங்கிச் சுருதியைப் போலக் கலந்து நிற்கின்றனர்.*

**ஐயரவர்கள்**

# இமயமும் பொதியிலும்

***கி.வா. ஜகந்நாதன்***
சுடர்-தில்லித் தமிழ்ச் சங்கம் 1969

''மகாத்மா காந்தியவர்கள் இந்த ஊருக்கு வருகிறார்கள். ஒரு மகாநாட்டில் தலைமை தாங்கப் போகிறார்கள். அதில் தாங்கள் கலந்துகொள்ள வேண்டும். மகாத்மாவைத் தாங்கள் வரவேற்க வேண்டும்'' என்றார் கல்கி கிருஷ்ணமூர்த்தி.

''எங்கள் ஹிந்திப் பிரசார சபையில் அகில இந்திய இலக்கியக் கழகத்தின் முதல் மகாநாடு கூடுகிறது. பாரத தேசத்திலுள்ள எல்லா மொழிகளிலும் உள்ள அறிஞர்கள் சேர்ந்து ஒற்றுமையாக இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும், என்பது இந்தக் கழகத்தின் நோக்கம். இதற்குப் பாரத பாஷா சாகித்திய பரிஷத் என்று பெயர்'' - என்று மேலும் விளக்கினார் ஸ்ரீ ஹரிஹரசர்மா. அவர் அப்போது தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையின் செயலாளராக இருந்தார்.

1937-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஒருநாள் மாலை கல்கி கிருஷ்ணமூர்த்தியும் ஸ்ரீ ஹரிஹரசர்மாவும் திருவேட்டீசுவரன் பேட்டையில் உள்ள தியாகராஜ விலாசத்துக்கு வந்தார்கள். அங்கேதான் ஐயரவர்கள் என்று தமிழுலகம் போற்றும் தமிழ்த்தாத்தா வாழ்ந்து வந்தார்கள். பாரத பாஷா சாகித்திய பரிஷத்தின் முதல் மகாநாடு சென்னையில் கூடுவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். காந்தியடிகளே அந்த மகாநாட்டின் தலைவராக இருக்க வேண்டும் என்று யாவரும் விரும்பினார்கள். மகாத்மா அதற்கு உடம்பட்டார். ஸ்ரீ காகா காவேல்கர் முதலியவர்கள் இந்த மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வந்தார்கள்.

மகாநாடு சென்னையில் கூடுவதனால் அதற்குரிய வரவேற்புக் குழுவைச் சென்னையில் உள்ள மக்களைக் கொண்டே அமைக்க வேண்டும் என்பது அன்பர்களுடைய கருத்து. வரவேற்புக் குழுவுக்குத் தலைவராக யாரை ஏற்பது? இந்தக் கேள்வி எழும்போது, ''அரசியலோடு தொடர்பு இல்லாதவர்களாக இருந்தால் நன்றாக இருக்கும்'' என்று சிலர் யோசனை கூறினார்கள். ஸ்ரீ ராஜாஜியும் அதை ஆதரித்தார். ''அப்படி யார் இருக்கிறார்கள்? மகாத்மா தலைமை தாங்கும் ஒரு மகாநாட்டின் மதிப்புக்கு ஏற்ற சிறப்பும் தகுதியும் உடைய ஒருவர் வேண்டுமே!'' என்று யாவரும் யோசித்தார்கள். ''மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் அவர்களைக் கேட்டுப் பார்க்கலாமே!'' என்று ஒருவர் கூற, ''அவர்கள் சம்மதிப்பதாக இருந்தால் இந்த மகாநாடு எல்லாவகையிலும் சிறப்பாக அமைந்துவிடும்'' என்று பலரும் சொன்னார்கள். ''அவர்கள் ஒப்புக் கொள்வார்களா என்று சிலர் கேட்க, ''நான் முயன்று காரியத்தைச் சாதிக்கப் பார்க்கிறேன்'' என்று கல்கி கூறினார்.

அதன்படியே கல்கியும் ஸ்ரீஹரிஹர சர்மாவும் ஐயரவர்களைக் கண்டு பேசுவதற்காக வந்தார்கள்; செய்தியைச் சொல்லி விளக்கினார்கள்.

''மகாநாட்டில் எந்த மொழியில் மகாத்மா பேசுவார்? மற்றவர்கள் எதில் பேசுவார்கள்?'' என்று தமிழ்த்தாத்தா கேட்டார்.

''காந்தியடிகள் ஹிந்தியில் பேசுவார். மற்றவர்களும் பெரும்பாலும் அந்த மொழியில்தான் பேசுவார்கள்'' என்றார் கல்கி.

''எனக்கு ஹிந்தி தெரியாதே!''

''தாங்கள் தமிழிலே வரவேற்பைப் படியுங்கள். அதுதான் இயற்கையாக இருக்கும். நாங்கள் அதற்கு ஹிந்தி மொழிபெயர்ப்பு ஒன்று அமைக்கச் செய்து அதையும் கூட்டத்தில் படிக்கிறோம். மற்ற மொழி பேசும் அறிஞர்கள் தங்கள் பேச்சின் சிறப்பை உணர்ந்து கொள்வார்கள்'' என்றார் சர்மா.

தமிழ்த் தாத்தா ஒப்புக் கொண்டார். மகாநாட்டின் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையோடு அவ்விருவரும் சென்றார்கள்.

ஐயரவர்கள் வரவேற்புச் சொற்பொழிவை எழுதினார்; தமிழின் தொன்மையையும் சங்க நூல்களின் பெருமையையும் பிற மொழியாளரோடு தமிழர்களுக்கு இருந்த தொடர்பையும் அதில் விரித்தார். மகாத்மாவுக்கு உளங்கனிந்த அஞ்சலி செலுத்தி வரவேற்றார். அந்த வரவேற்புரையை அக்காலத்தில் ஹிந்திப் பிரசார சபையில் பணிபுரிந்து வந்த ஸ்ரீ கா.ஸ்ரீ.ஸ்ரீ மொழிபெயர்த்துத் தந்தார். மூலவரவேற்புரையையும் ஹிந்தியாக்கத்தையும் அச்சிட்டார்கள்.

பாரத பாஷா சாகித்திய பரிஷத் மகாநாடு சென்னையில் தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையைச் சார்ந்த வெளியில் நடைபெற்றது. வெளி முழுதும் பந்தல் போட்டு அலங்கரித்திருந்தார்கள். காந்தியடிகள் வருகை காரணமாகத் திரள் திரளாக மக்கள் கூடியிருந்தார்கள். இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள் வந்திருந்தார்கள். 1937ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 27ஆம் தேதி இந்த மகாநாடு கூடியது.

மகாநாடு நடைபெற்ற அன்று காலையில் ஐயரவர்களை ஹிந்திப் பிரசார சபைக்கு அழைத்துச் சென்றார்கள். முதலில் ஐயரவர்களைக் காந்தியடி

களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டுமல்லவா? அந்த வேலையை ஸ்ரீ ராஜாஜி ஏற்றுக் கொண்டார். ஐயரவர்களைப் பின்தொடர்ந்து நானும் சென்றேன் ஸ்ரீராஜாஜி ஐயரவர்களைச் மெல்ல அழைத்துக்கொண்டு சென்றார். அவருடன் காந்தியடிகளின் காரியதரிசியாக இருந்த மகாதேவ தேசாயும் வந்தார். நெடிய உருவம், தேசுடைய முகம், செக்கச் செவேல் என்ற திருமேனி. அவரைக் கண்ட தமிழ்த்தாத்தா, ''இவர்கள் யார் என்று ராஜாஜியை விசாரித்தார். ''இவருக்கு மகாதேவ தேசாய் என்று பெயர். தங்களுக்கு இவர் எப்படியோ அப்படி மகாத்மாவுக்கு மகாதேவ தேசாய் என்று என்னைச் சுட்டிக் காட்டியபடியே சொன்னார். ராஜாஜியின் வாக்கிலிருந்து வந்த அந்த அமுத மொழியைக் கேட்டு நான் பெருமிதம் அடைந்தேன்; உடல் பூரித்தேன். மகாதேவ தேசாயைப் போன்றவர்கள் என்று சொன்னதற்காக அல்ல; ஐயரவர்களுக்குத் தொண்டன் என்ற கருத்தைச் சொன்னாரே, அதற்காக. ஐயரவர்களுக்கும் இந்த வார்த்தை மகிழ்ச்சியையே தந்தது என்பது அவருடைய முகக்குறிப்புப் புலப்படுத்தியது.

ஐயரவர்களும் மகாத்மாவும் சந்திக்கப் போகும் காட்சியை நான் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்தேன். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இருவரும் சத்திய சோதனை செய்தவர்கள். மகாத்மா தம்முடைய வாழ்க்கையையே சத்திய சோதனையாக்கி, அந்தச் சோதனையில் வரும் அல்லல்களுக்கு மனம் தளராமல் நிமிர்ந்து நின்று வெற்றி பெற்றவர். தமிழ்த் தாத்தாவோ பழந்தமிழ் இலக்கியச் சுவடிகளை ஆராய்ந்து உண்மையைக் கண்டவர் அவருக்கும் எத்தனையோ இன்னல்கள் எதிர்ப்பட்டன. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாக நின்று வெற்றி பெற்றுத் தமிழுலகை வாழ்வித்த பெருமான் அவர். இவ்வாறு உண்மையைச் சோதனை செய்து அறிந்துகொண்ட காந்தித் தாத்தாவும் தமிழ்த் தாத்தாவும் இணையும்போது பாரதத் தாயும் தமிழ்த் தாயும் கூடிக் குலாவும் காட்சியாகவே அது இருக்கும் என்று நான் எண்ணியதில் தவறு இல்லையே!

மற்றொன்று, ஆரம்ப காலத்தில் ஐயரவர்களுக்குக் காந்தியடிகளின் பெருமை மிகுதியாகத் தெரியாது அரசாங்க அதிகாரிகள் காந்தியடிகளைக் குறை கூறினார்கள். அவரால் தேசம் கெட்டுப் போயிற்று என்று சொன்னார்கள். பரம காருணிகரான வெள்ளைக்கார அரசினருக்கு ஒப்பே இல்லை யென்றும் அவர்கள் இல்லாவிட்டால் நாடு அதோகதியாகி விடும் என்றும் பேசிக் கொண்டார்கள். இப்படி உள்ள பேர்வழிகள் பலர் ஐயரவர்களைச் சந்திப்பதுண்டு. தம் கருத்தை அவர்கள் ஐயரவர்களிடம் தூவிவிட்டுச் செல்வார்கள். இதனால் காந்தியடிகளின் பெருமையை நன்கு உணரும் வாய்ப்பு அப்பெரியாருக்குக் கிடைக்காமல் போயிற்று.

ஏதோ சொந்தப் புகழை டமாரம் அடித்துக் கொள்வதாக அன்பர்கள் நினைக்கக் கூடாது. ஐயரவர்கள் திருவடியின் கீழ் இருந்து தமிழ் பயிலும் பாக்கியம் எளியேனுக்குக் கிடைத்தது. நான் காந்தியடிகளைத் தெய்வமாகப் பேணுபவன். எப்போதும் கதர் கட்டுபவன். ஐயரவர்களிடம் வந்த புதிதில் அவர்களைக் காணவரும் கனவான்களில் சிலர் காந்தியடிகளை இழித்துப் பேசுவதைக் கேட்டு என்காதும் நெஞ்சும் புண்ணாயின. ஒருவர் என்னைக் கருணைப் பார்வையுடன் பார்த்து, ''அந்தப் பைத்தியக்காரக் காந்தியின் பேச்சைக் கேட்டு இந்தச் சாக்குத் துணியை ஏன் கட்டிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். காந்தியடிகளை இப்படிச் சொல்கிறாரே என்று என் உள்ளம் துடித்தது.

அதுமுதல் தமிழ்ப் பத்திரிகைகளில் உள்ள காந்தியைப் பற்றிய செய்திகளையும் காந்தியடிகளின் உரைகளையும் ஐயரவர்களுக்குப் படித்துக்காட்டத் தொடங்கினேன். காந்தியடிகளின் பெருமையை எனக்குத் தெரிந்த வகையில் உணர்த்தினேன். உண்மையை எளிதில் உணர்ந்து கொள்ளும் தமிழ்ப் பெரியாருடைய உள்ளத்தில் காந்தியடிகளின் உண்மையான உருவம் குடி கொண்டது. இப்போது அவ்விருவரும் சந்திக்கப் போகிறார்கள் என்றால் நான் களிநடம் புரிவதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

காந்தியடிகளின் திருமுன்னர் வந்துவிட்டோம். அங்கே அமர்ந்திருந்த பெருமானிடம் ராஜாஜி ஐயரவர்களைப் பற்றிச் சொன்னார். உடனே அந்தச் சாந்தமூர்த்தி, ''உட்காருங்கள் ஐயா! என்று தமிழிலே அழுத்தமாகச் சொல்லித் தம் இரண்டு கைகளையும் அமர்த்திக் காட்டினார். வட இமயத்தின் முன் தமிழ்ப் பொதியில் அமர்ந்தது. ராஜாஜி தமிழத் தாத்தாவைப் பற்றி எல்லாம் சொன்னார். அப்போது ஐயரவர்கள், ''சில வருஷங்களுக்குமுன் எளியேன் இல்லத்துக்கு வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். வருவதாகச் சொன்னீர்கள்'' என்றார்.

''அதை நிறைவேற்றினேனா?'' என்று கேட்டார் காந்தியடிகள்.

''இல்லை''

அதைக் கேட்டுச் சிரித்தார் மகாத்மா. ''என்னுடைய வேலை அப்படியாகி விட்டது'' என்றார்.

அப்போது ஐயரவர்களுக்கு 83 வயசு. மகாத்மாவுக்கு 68 வயசு. ஐயரவர்கள் நடையில் தளர்ச்சி இருந்ததே ஒழியப் பேச்சில் சிறிதும் தளர்ச்சி

யில்லை. இரண்டு பெரியவர்களும் சிறிது நேரம் பேசிக் கொண்டார்கள். பிறகு மகாநாட்டுக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

மகாநாடு கூடியது. பாரத நாட்டை அடிமைத் தளையினின்றும் விடுவிக்க அவதரித்த மகாத்மா காந்தியவர்கள் மேடையின் மேல் அமர்ந்திருந்தார். தமிழ்த் தாயைக் கறையான் வாயிலிருந்தும் அறியாமைத் தளையிலிருந்தும் விடுவிக்க அவதரித்த ஐயரவர்கள் அவர் அருகே அமர்ந்திருந்தார்.

ஐயரவர்கள் தம் வரவேற்புச் சொற்பொழிவைப் படிப்பதற்கு முன் சில சொற்களை வாய்மொழியாகக் கூறிவிட்டு, ''தளர்ச்சியினால் இதை முழுவதையும் இங்கே படிக்க முடியாத நிலையில் இருக்கிறேன். இவர் எனக்காகப் படிப்பார்'' என்று எளியேனைப் பணித்தார். அந்த உரையைப் படிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. பிறகு அதன் ஹிந்தி மொழி பெயர்ப்பை படித்தார்கள்.

நெடிதுயர்ந்த திருவுருவமும் அறிவொளி ததும்பும் முகமும் உடைய ஐயரவர்களைக் கண்டவுடனே மதிப்புணர்ச்சியோடு வரவேற்ற காந்தியடிகள் இந்தப் பேச்சைக் கேட்டவுடன் வியப்பில் ஆழ்ந்தார். அவர் பேசுகையில், ''இந்தப் பெரியவரைப் பார்த்து இவருடைய சிறந்த உரையைக் கேட்டபிறகு இவர் அடிநிழலிலிருந்து தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு எழுகிறது'' என்று சொன்னார். காந்தியடிகள் ஐயரவர்களுடைய தமிழ்ப் புலமையை நன்கு மதித்ததற்கு இந்தத் திருவாக்கே சான்று. தம்மைப் போலச் சத்தியத்தைத் தேடிச் செல்லுவதையே தம் வாழ்க்கையாக உடையவர் அப்பெரியார் என்பதை காந்தியடிகள் நன்கு உணர்ந்து கொண்டார்.

கங்கையும் காவிரியும் சேர்ந்தது போலவும், இமயமும் பொதியிலும் இணைந்தது போலவும் பாரதத் தாயும் தமிழ்த்தாயும் கைகோர்த்துக் கொண்டு காட்சியளித்தது போலவும் வாழ்க்கையில் சத்தியசோதனை செய்த மகாத்மாவும் இலக்கியத்தில் சத்தியசோதனை செய்த மகானும் சந்தித்த சந்திப்பு இருந்தது. அதை இப்போது நினைத்தாலும் உடம்பு புல்லரிக்கிறது.

## ஐயரவர்களைப் பற்றிய கவிதைகள்

***தமிழ்முனி***

எவ்வேடு தேடிநீ எந்நாட்டில் எப்பதியில்
எவ்வீடு நோக்கியின் றேகினையோ - அவ்வான்
அமிழ்தம் அமிழ்தமென அள்ளியள்ளிச் சங்கத்
தமிழ்தந்த சாமிநா தா.

கண்ணுஞ் சடையாமல் கையும் தளராமல்
உண்ணப் பசியெழுவ தோராமல் - எண்ணியெண்ணிச்
செந்தமிழ்த் தாய்க்குநீ செய்த திருத்தொண்டுக்கு
இந்தநிலத் துண்டோ இணை.

சித்திரத்திற் பார்ப்போம் சிலைசெய்து கும்பிடுவோம்
புத்தகத்திற் போற்றிப் புகழ்ந்திடுவோம் - இத்தரையில்
சந்தப் பொதிகைத் தமிழ்முனிஎன் றுன்னைநிதம்
சிந்தையிற் கொண்டு தெளிந்து.

***-கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை***
***மலரும் மாலையும், 1082-1084***

## என் வழக்கம்

*எந்த ஊருக்குப் போனாலும் அவ்வூரில் இருந்த புலவர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் வரலாறுகளையும், சரித்திரம், புராணம் என்பவற்றையும் கர்ண பரம்பரைச் செய்திகளையும் விசாரித்துத் தொகுப்பது எனது வழக்கம். இதனால் பலநாளாகத் தெரியாமல் இருந்த பல அரிய விஷயங்கள் மிக எளிதில் விளங்கியதுண்டு.*

***தமிழ்த் தாத்தா***

# ஐயரவர்கள் சேர்த்த அருங்கலைப் பொக்கிஷம்

*ரசிக ரஞ்சன்*

***(சுதேசமித்திரன் — ஏப்ரல் 23, 1967)***

உலகத்தில் தோன்றி ஏதாவது அரிய விஷயத்தைச் சாதித்துவிட்டுச் செல்வோரை அவதார புருஷர்கள் என்கிறோம். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் மஹாமஹோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களையும் அத்தகைய ஓர் அவதார புருஷராகவே கருத வேண்டும். நூறாண்டுகளுக்குமுன் அவர் தோன்றியிராவிட்டால் சங்க இலக்கியங்களும் ஐம்பெருங் காப்பியங்களும் இப்பொழுது இருக்கும் அளவுக்குப் பிரசாரமாகியிருக்குமா என்பது சந்தேகம். எங்கெங்கோ மறைந்து மக்கிக் கொண்டிருந்த தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பிடித்து, விளக்க உரைகளுடன் அச்சிட்டு வெளியிட்டதன் மூலம் தமிழர் நாகரிகத்திற்கே அவர் புத்துயிர் அளித்தார். ஓலைச் சுவடிகளை அவர் சேகரித்த விதத்தைப் பற்றி எழுதப் புகுந்தால் அது ஒரு தனி நூலாகவே ஆகிவிடும். அப்படிச் சேர்த்த சுவடிச் செல்வங்கள் இப்பொழுது எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி மாத்திரம் இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐயரவர்கள் 1942 ஏப்ரல் 28-ம் தேதி காலமான பொழுது, அவர் அவ்வளவு சிரமப்பட்டுச் சேகரித்த சுவடிகளை என்ன செய்வது என்ற பிரச்னை எழுந்தது. அவற்றைச் சர்க்கார் வாங்கி, அவர்களுடைய ஏட்டுச் சுவடி புத்தகசாலையில் சேர்த்து வைக்கலாம் என்று ஒரு யோசனை கூறப்பட்டது. ஆனால் ஐயரவர்களின் குமாரர் ஸ்ரீ கல்யாணசுந்தரய்யர் அதை விரும்பவில்லை. அவர் தந்தையிடம் மிகுந்த பக்தி கொண்டவர். ஆகையால் தந்தையின் பெயர் நிலைத்திருக்க வேறு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நினைத்தார். இப்படி யோசிப்பதிலேயே ஒரு வருஷம் கழிந்துவிட்டது.

பின்னர் ஒருநாள் இதைப்பற்றி ஸ்ரீ கல்யாணசுந்தரய்யர் தம் நண்பர்கள் சிலருடன் யோசித்துக் கொண்டிருந்தபொழுது, ஐயரவர்கள் காலமான சமயத்தில் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அனுப்பியிருந்த அனுதாபச் செய்தி அவருக்கு நினைவு வந்தது. இதுபோன்ற விஷயங்களில் ஸ்ரீமதி ருக்மிணி தேவிக்கு அக்கறை உண்டு என்பதை அந்தக் கடிதத்திலிருந்துதான் ஸ்ரீ கல்யாணசுந்தரய்யர் அறிந்தார். அவரிடம் சென்று யோசனை கேட்டபொழுது, இந்தச் சுவடிகளைக் கொண்டு ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தி, ஐயரவர்கள் செய்து வந்த பதிப்பு வேலையைத் தொடர்ந்து செய்வதானால் அதற்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்வதாக ஸ்ரீமதி ருக்மிணி தேவி கூறினார். உடனே நூல் நிலையம் அமைக்கத் தீர்மானித்து விட்டார் ஸ்ரீ கல்யாணசுந்தரய்யர். சுவடிகளை ஸ்ரீமதி ருக்மிணி தேவியிடம் எவ்வித நிபந்தனையுமின்றி ஒப்படைத்து நூல்நிலையம் ஏற்படுத்தச் சொன்னார். அடையாற்றில், கலாக்ஷேத்திரம் இருந்த இடத்திலேயே நூல்நிலையம் உருவாயிற்று. ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் கணவர் டாக்டர் ஜி.எஸ்.அருண்டேல் அதற்கு ரூ.2000 நன்கொடை அளித்தார். ஸ்ரீமதி ருக்மிணி தேவியே நூல் நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஸ்ரீ கல்யாண சுந்தரய்யர் நூல் நிலையத்தின் காவலராக இருந்து பதிப்பு வேலையைத் துவக்கினார்.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம் ஏற்பட்டபின், அதில் உள்ள சுவடிகளைக் கொண்டு 38 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கம்பராமாயணம் உள்ளிட்ட இலக்கியங்களும், சங்கீதம், நாட்டியம் முதலியவை சம்பந்தமான நூல்களும் வெளிவந்துள்ளன.

புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிடுவது தவிர மற்றும் பலதரப்பட்ட சேவைகளையும் நூல்நிலையம் செய்து வருகிறது. அவற்றில் முக்கியமாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம். முதலாவதாக, தமிழ் ஆராய்ச்சி செய்யும் பல அறிஞர்கள் இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். உள்ளச் சுவடிகள் பழுதாகாமல் காக்கப்படுகின்றன. கெட்டுவிடக்கூடிய நிலையில் உள்ளவற்றைக் காகிதத்தில் புதிய பிரதிகளாக எடுப்பது; ''மைக்ரோ பிலிம்'' மூலம் பதிவு செய்யக்கூடியவற்றை அவ்விதம் பாதுகாப்பது முதலிய வேலைகள் இங்கு நடைபெறுகின்றன.

இங்குக் கலை, இலக்கியம் பற்றிய சுவடிகள் தவிர, சமயம், சரித்திரம் சம்பந்தமான அரிய சுவடிகளும் உண்டு. சைவசித்தாந்தத்தைப் பற்றிய நூல்கள் ஏராளமாக உள்ளன. பல கோயில்களைப் பற்றிய ஸ்தல புராணங்களும் காணப்படுகின்றன. இஸ்லாத்தைப் பற்றிய சில சுவடிகள் கூட இருக்கின்றன. இங்கு உள்ளவற்றுள் மிகப் புராதனமான சுவடி 336 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. விசேஷமாகக் குறிப்பிடத்தக்க மற்றொரு சுவடி ''வில்லைப் புராணம்'' என்பது. ''பாரீஸ் நகரத்து வின்ஸன் எழுதி அனுப்பிய பிரதியைப் பார்த்து எழுதியது''

என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலங்கை யிலிருந்து சேகரித்த ஓலைச் சுவடிகளும் உள்ளன.

இதுபோன்ற நூல் நிலையத்தில் சுவடிகள் மட்டும் இருந்துவிட்டால் போதாது. அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளக் கூடிய நிபுணர்கள் அதை நிர்வ கிக்க வேண்டும். அதற்கு மிகவும் பொருத்தமான வர் தற்சமயம் நூல்நிலையத்தின் பதிப்பாசிரியராக இருக்கிறார். சென்னை மாநிலக் கல்லூரித் தலை மைப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற ஸ்ரீ ஆர்.விசுவநாதய்யரே அவர். ஸ்ரீ விசுவநாதய்யர் 1951, ஜுன் 1-ம் தேதி இப்பொறுப்பை ஏற்று பல சுவடிகளை அச்சிட வசதி செய்திருக்கிறார். டாக்டர் சாமிநாதய்யர் எழுதி வைத்துள்ள குறிப்புக் களைப் புரிந்து கொள்ளக்கூடத் தனிப் பயிற்சியும் திறமையும் தேவை. அவற்றைப் பூரணமாகப் பெற்ற வர் ஸ்ரீ விசுவநாதய்யர்.

இத்தனை நாளாக நூல் நிலையம் தக்க இடவசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் அளித்த நன்கொடை யைக் கொண்டு இப்பொழுது ரூ.1.5 லட்சம் செலவில் திருவான்மியூரில் புதிய கட்டிடம் கட்டப் பட்டுள்ளது. நூல் வெளியீட்டு வேலைகளும் ஆராய்ச்சிகளும் இனித் தீவிரமாக நடைபெறு மென்று எதிர்பார்க்கலாம்.

## ஸ்ரீ கி.வா.ஜகந்நாதையர் அவர்களின் பாடல்கள்

**இவரது 'காவியமும் ஓவியமும்' என்ற நூலின் சமர்ப்பணம்**

பெற்றான் இல்லை அன்னை என,
பிறந்தேன் இல்லை மகவென்ன!
மற்றோ அன்பின் வகைஎல்லாம்
மாணக் காட்டித் தமிழ்பயிற்றிக்
கற்றோர் அவைக்கண் எனைநிறுவும்
கருணை யாளன்; அமரநிலை
உற்றான், சாமி நாதன்அடி
மலர்க்கீழ் இந்நூல் ஒளிருகவே.

## ஆசிரியப் பெருமான் வணக்கம்

நவைஏறும் நெஞ்சினேன் நற்றமிழைக் கற்றே
அவைஏற வைத்தருளும் அண்ணல் - சுவைஏறு
செந்தமிழ்ப்பன் னூல்விளக்கும் சீர்ச்சாமி நாதகுரு
அந்தளிர்த்தாள் சென்னிக்(கு) அணி.

## என் அன்புறை

பார்காத்தார் ஆயிரம்பேர்; பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம்பேர்; பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்
மனங்காத்த தமிழ்த்தாய் ''என் உடைமை எல்லாம்
யார்காத்தார்'' எனக் கேட்க, ஒருவன் அம்மா
யான் காப்பேன் எனஎழுந்தான் சாமி நாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
நிலைகாத்த மலைஇமய நெற்றி மேலான்.
பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற சாமி!
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத!
செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய!
சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்!
எய்யாத திருவடியால் எண்பத் தாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்கும் சென்று
நெய்யாத தொன்னூல்கள் நிலைக்க வைத்த
நீங்காத தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க

***தமிழ்க்காதல் என்னும் நூலில்.***
***வ.சுப.மாணிக்கம்***

# திருமணம் சிறக்க சீதன விருட்சம்

யூனிட் விலை
ரூ.3,000/-




ரூ.1,50,000 பெறுமான
தேக்குப் பத்திரம்

விபத்துக் காப்பீடு
ரூ.1 லட்சம்

சொந்த நிலம்

GROWTH ECOLOGY
SECURITY

6, 12-வது ஆண்டில்
மூன்று மடங்கு பெருகிய
வருமானம் பின்தேதியிட்ட
காசோலைகளாக



மேலும் விபரங்களுக்கு அணுகவும்:

**மதர் எர்த் பிளாண்டேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்**

(Incorporated under Companies Act of 1956) Regd.No.18-29872
7-B, ஸ்பென்சர் பிளாசா (2-வது மாடி) 769, அண்ணா சாலை,
சென்னை-600 002. ஃபோன்: 8521417, 8520109, 8522701,
8522702. ஃபேக்ஸ்: 044-8522148

மதர் எர்த் பிளாண்டேஷன்ஸ் திட்டத்தில் சேருவதற்கு விரும்புகிறேன். அது பற்றிய வெளியீட்டை அனுப்பி வைக்கவும்.

பெயர் : ____________________
முகவரி : ____________________
தொழில் : ____________________
தொலைபேசி: அலுவலகம் __________ வீடு: __________



*Best Wishes*
*from*

## SARVAMANGALA PRINTERS

5, Chandrasekaran Street,
Mandaveli, Madras-600 028.
Telephone: 4938744

# தமிழ்க் கோயில்

*(கல்கி - 2-4-1967)*

ஐம்பெருங் காப்பியங்கள் பெயரளவில் மட்டுமே உலவி வந்த காலம் அது. பத்துப் பாட்டையோ, சங்க இலக்கியங்களையோ கண்ணால்கூட யாரும் பார்த்திராத காலம். அந்தக் காலத்தில் புதிதாக வெளியிடப்பட்ட கம்பராமாயணப் பிரதி ஒன்றைப் பார்த்து விட்டுப் பண்டார சன்னதியொருவர் ''இதைக்கூட ''புக்கு'' (Book) போட்டு விட்டானா? '' என்று ஆச்சரியப்பட்டாராம். தமிழ் நூல்களைப் புத்தக வடிவில் கொண்டு வரலாம் என்ற நினைப்பே வியப்பை அளித்த காலத்தில் தமிழ் நூல்களைப் பதிப்பித்த பெருமை ஐயரவர்களுக்கே உரியது.

கறையான் அரித்த ஓலைச் சுவடிகளில் தெளிவின்றி எழுதியிருந்த எழுத்துக்களைப் படித்து, பாடபேதம் பார்த்து, விளக்கம் எழுதுவது என்பது சாமான்யமான காரியமா? அதுவும் யாராவது ஓலைச்சுவடிகளைக் கொண்டு வந்து கையில் கொடுத்தார்களா? ஊர் ஊராகச் சென்று வீடு வீடாக நுழைந்து யார் யாரிடம் என்னென்ன இருக்கின்றன என்பதைக் கேட்டறிந்து கெஞ்சிக் கூத்தாடி அவற்றை வாங்கி வந்தாக வேண்டும்.

ஐயரவர்கள் எழுதியுள்ள ''என் சரித்திரம்'' என்ற நூலைப் படித்துப் பார்க்கும்போது அவர் எப்படியெல்லாம் சிரமப்பட்டு ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்தார் என்ற விவரம் தெரியவரும். முதலும் இல்லாமல் பிற்பகுதியும் இல்லாமல் கிடைத்த சுவடிகளை வைத்துக் கொண்டு அவர் பட்ட சிரமமும், பூரணமான சுவடிகளைத் தேடித் தேடி அவர் அலைந்ததையும் படிக்கும் போது நம் உள்ளம் உருகி விடுகிறது. ''ஆகா! எத்தனை தமிழ்ப் பற்று இருந்தால் இத்தனை விடாமுயற்சியுடன் இத்தனை பெரிய காரியத்தைத் தனியாக நின்று சாதித்திருக்க முடியும்?'' என்று எண்ணித் தலை வணங்கத் தோன்றுகிறது.

வீர வைஷ்ணவர்கள் சைவ நூல்களை ஒதுக்கியும், சைவர்கள் வைணவ நூல்களை ஒதுக்கியும் குறுகிய மனப்பான்மையோடு நூல்களைப் படித்து வந்த காலத்தில் ஐயரவர்களோ தமிழ் ஒன்றையே மனத்தில் இருத்தி எந்த மதநூலாக இருந்தாலும் அதைப் புதையலாகக் கருதி வெளியிட்டார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி இவையெல்லாம் அவர் பதிப்பித்திருக்காவிட்டால் கறையானுக்கு உணவாகி இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும்.

ஐயர் அவர்கள் தாம் இளம் வயதில் தமிழ் கற்கப் பட்ட சிரமங்களை எண்ணி அந்த மாதிரி வருங்காலத்தில் யாரும் கஷ்டப்படக் கூடாது என்று கருதியிருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் 'உயிரோடு இருக்கும்போது கவிகளையும், பெரியார்களையும் கொண்டாடுவதில்லை. மறைந்த பிறகு மண்டபம் கட்டுவார்கள்.' என்று ஒரு பேச்சு உண்டு. ஆனால் தமிழ்த் தாத்தாவின் விஷயத்தில் அப்படி நடக்கவில்லை என்று நாம் பெருமைப்படலாம்.

அவரைப் புரிந்துகொண்டு பெரியார்கள் எல்லாரும் பாராட்டினார்கள். பத்திரிகைகள் எல்லாம் பாராட்டின. அரசாங்கம் பாராட்டியது. மதத் தலைவர்கள் பாராட்டினார்கள். கல்லூரி மாணவர்கள் கொண்டாடினார்கள். புலவர்கள் பாராட்டினார்கள். ஆசிரியர்கள் பாராட்டினார்கள். அரசர்கள் பாராட்டினார்கள். அயல் நாட்டார் பாராட்டினார்கள். இப்படியெல்லாம் ஏகோபித்த பாராட்டுதலை அடைந்த ஐயரவர்களுடைய வாழ்க்கை நிறைவு பெற்ற பூர்ணமான வாழ்க்கை என்பதில் ஐயமே இல்லை.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஐயரவர்களுக்கு 'மஹா மஹோபாத்தியாய' என்ற பட்டம் அளிக்கப்பட்டபோது ஒரு கவிதை இயற்றி மகிழ்ந்தார். ஐயரவர்களுடைய 80வது ஆண்டு விழாவின் போது கல்கி அவர்கள் ''தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ.வே.சாமிநாதையர் அவர்களுடைய சமூகத்துக்குப் பேரன் பணிவுடன் எழுதிக் கொள்வது' என்று ஆரம்பித்துக் கடிதம் எழுதுவதுபோலக் கட்டுரை ஒன்று எழுதினார். அதுமுதல் 'தமிழ்ப்பாட்டி' என்ற பெயர் ஔவையாரையே குறிப்பிடுவது போல் ''தமிழ்த்தாத்தா'' என்ற பெயர் ஐயரவர்களைக் குறிப்பிடுவதாயிற்று. ''தமிழ்த் தாத்தா! தமிழ் தா! தா!'' என்று பேரன்கள் கேட்பதாக அமைந்திருந்தது கட்டுரை.

தமிழ் கற்ற பண்டிதர்கள் விளங்காத சொற்களையே அரும் பதவுரை அகராதியிலிருந்து தேடி எடுத்துக் கொண்டு ஒருவருக்கும் புரியக் கூடாதென்று தமிழ் எழுதுவார்கள். இதைக் கண்ட பொதுமக்கள், தமிழ் என்றால் பயப்பட ஆரம்பித்தார்கள். ஆங்கிலம் படிப்பவர்களோ, தமிழ் படிப்பது கேவலம் என்று நினைத்தார்கள். இந்த இரண்டு ஆபத்துக்களிலிருந்தும் தமிழை மீட்டுக் கொடுத்தவர் தமிழ்த்தாத்தா தான்.

அவருடைய வசன நடை எளிமையானது. குழந்தைகள் கூடப் புரிந்து கொள்ளும்படியாகத் தம்முடைய கதையை மிகச் சுவையாக எழுதியிருக்கிறார்.

1935ஆம் ஆண்டு தமிழ் மக்கள் அவருடைய சதாபிஷேக விழாவைத் தமிழன்னையின் முடிசூட்டு விழாவாகவே கொண்டாடினார்கள். சென்னை 'ஸெனட்' மண்டபத்தில் நடந்த இந்த வைபவம் முடிந்து வெளியே வந்தவுடன் பிரபல அட்வகேட் ஒருவர், ''மூன்று வருஷங்களுக்கு முன் இப்படி ஒரு வைபவம் நடக்கக் கூடும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது'' என்றாராம். தமிழ் நாட்டில் தமிழ் அபிமானம் அவ்வளவு விரைவாகப் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவர் தமிழ்த்தாத்தா அவர்கள்.

தமிழ்த் தாத்தாவை ராஜாஜி எப்படிப் பாராட்டியிருக்கிறார் பாருங்கள்.

''முற்காலத்தில் வேதங்களையும் இதிகாச புராணங்களையும் வியாசர் எப்படித் தேடித் திரட்டி உருவாக்கித் தந்தாரோ அப்படியே தமிழ் இலக்கிய ரத்தினங்களை ஸ்ரீமான் உ.வே சாமிநாத ஐயர் திரட்டித் தந்தவர். ஆகையால் ஸ்ரீ சாமிநாதையருக்குத் **'தமிழ் வியாசர்'** என்றே நாம் புதுப் பட்டம் இடலாம்...

''தாய் மொழிக்கு இவ்வளவு தொண்டு செய்து பேரும் புகழும் பெற்றிருந்த போதிலும் ஸ்ரீ சாமிநாதையருடைய அடக்கமானது ஒப்பில்லாத அரிய குணம்.

''ஸ்ரீ சாமிநாதையரின் கல்வி, கடலைப் போன்றது. மெய் வருத்தம் பாராத அவருடைய முயற்சியுடன் எறும்பும் தேனீயுமே போட்டி போடலாம்.''

இத்தகைய பெரியார் சேகரித்து வைத்த பெருஞ்செல்வமாகிய ஏட்டுச் சுவடிகள், கலாக்ஷேத்திரத்தில் அமைந்துள்ள டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ளன.

தமிழ்த் தாத்தாவின் ஞாபகச் சின்னமாக விளங்கும் இந்தத் தமிழ்க் கோவிலில் பல நூறு ஏட்டுச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தமிழ் புரக்கும் கைங்கரியத்தை ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் செய்து வந்தார்கள். (குறிப்பு: அவர்களுக்குப் பிறகு திரு.சங்கரமேனன் அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள்.)

## தமிழ்த் தேனடை

**1. ஏட்டுச் சுவடிகள்**

சங்கநூல்கள், பழங்காவியங்கள், மகாபுராணங்கள், தலபுராணங்கள், பிரபந்தங்கள், சங்கீதம், பரதம், சோதிடம், வைத்தியம் சம்பந்தமான நூல்கள், நிகண்டுகள், இலக்கணங்கள் முதலியன. இப்பொழுது அச்சிலுள்ள நூல்களின் ஏட்டுப் பிரதிகளும் பல இருக்கின்றன. அச்சுப் புத்தகங்களிலுள்ள பிழைகளைத் திருத்திக் கொள்ள அவை உதவும். சில சுவடிகளில் அச்சுப் புத்தகங்களிற் காணப்படாத பகுதிகளும் குறிப்புக்களும் இருக்கின்றன. மூலம் மட்டும் அச்சிடப்பட்டுள்ள சில நூல்களுக்குப் பழைய உரைகள் ஏடுகளில் இருக்கின்றன. இவற்றுள் கடிதத்தில் பிரதி செய்யாதவை பல உள்ளன.

**2. காகிதப் பிரதிகள்**

பல ஊர்களில் தேடிச் சேகரித்த பல ஏட்டுச் சுவடிகளிலிருந்து பலருடைய உதவியால் எழுதி ஒப்பிட்டுப் பாடபேதங்கள் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சில அச்சிலுள்ள புத்தகமாக இருந்தாலும் ஏட்டுச் சுவடிகளைப் போலவே நல்ல பாடல்களை நிச்சயிப்பதற்கும் பொருளுணர்வதற்கும் உபயோகமாக இருக்கும்.

**3. குறிப்புக்கள்**

குறிப்புரைகள், விஷய விளக்கங்கள், ஒத்த நூற்பகுதிகள் முதலியன. பதிப்பிக்கும்போது உபயோகப்படுவன. இப்பொழுது அச்சிலுள்ள புத்தகங்களுக்கும் இத்தகைய குறிப்புக்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

**4. புலவர்களைப் பற்றிய குறிப்புக்கள்**

புலவர்கள் காலம், வாழ்க்கை வரலாறு, இயற்றிய நூல்கள், சந்தர்ப்பச் செய்யுட்கள் முதலியன. இவற்றின் உதவியால் புலவர் சரித்திரம் எழுதலாம்.

**5. தனிப் பாடல்கள்**

புலவர்கள் அவ்வப்பொழுது பாடிய செய்யுட்கள் ஆயிரக்கணக்காக உள்ளன. இவற்றிலிருந்து சரித்திர வரலாறுகள் பல அறியலாம்.

**6. ஸ்தல சம்பந்தமான குறிப்புக்கள்**

மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றைப் பற்றிய செய்திகள், அவற்றின் அமைப்பு, இப்பொழுது வழங்கும் பெயர்கள், பழைய சின்னங்களின் விவரம் முதலியன.

### 7. சரித்திர குறிப்புக்கள்

சிற்றரசர், ஜமீந்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களைப் பற்றிய செய்திகள் சிலாசாசனக் குறிப்புக்கள் முதலியன.

### 8. வேறு நூல்களிலிருந்து எடுத்த குறிப்புக்கள்

ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு முதலிய பாஷைகளிலிருந்து தமிழாராய்ச்சிக்கும் பொருள் விளங்குவதற்கும் உபயோகமான குறிப்புக்கள்.

### 9. பாட பேதங்கள்

பல ஏட்டுச் சுவடிகளை வைத்துக் குறித்துக் கொண்ட பாட பேதங்கள்.

### 10. நூல்களின் அரும்பத முதலியவற்றின் அகராதிகள்

அச்சிட்ட நூல்கள், அச்சிடப்படாதவை இவற்றிலுள்ள பதங்கள், தொடர்கள், விஷயங்கள் முதலியவற்றின் அகராதி; பல வருஷங்களாகத் தொகுக்கப்பட்டவை.

### 11. பொருள் விளக்க அகராதிக் குறிப்புக்கள்

மரம், செடி, கொடி, விலங்கு முதலிய இயற்கைப் பொருள்களையும் கப்பல், ஆடை முதலிய செயற்கைப் பொருள்களையும் பற்றிச் சங்க நூல்களிலும் பிறநூல்களிலும் வந்துள்ள செய்திகளின் குறிப்புக்கள். இவற்றின் உதவியால் பொருள் விளக்க அகராதி (Encyclopaedia) ஒன்று எழுதலாம்.

### 12. மேற்கோள் விளக்க அகராதி

இலக்கிய இலக்கணங்களின் பழைய உரைகளில் மேற்கோளாக வந்த செய்யுட்கள், செய்யுட் பகுதிகள் இவற்றின் அகராதி, இன்ன பகுதி இன்ன நூலிலுள்ளது, இன்ன இன்ன இடங்களில் மேற்கோளாக வந்தது என்பதைத் தெரிவிப்பது.

### 13. சொல் அகராதி

சொற்களின் பொருள், மூலம், பிரயோகம், பொருள் மாறி வந்த முறை முதலியவற்றை விளக்குவது, ஆராய்ச்சி முறையில் அமையும் ஓரகராதி வெளியிட இக்குறிப்புக்கள் பயன்படும்.

### 14. சங்கீதக் குறிப்புக்கள்

கீர்த்தனங்கள், சங்கீத வித்வான்களுடைய சரித்திரக் குறிப்புக்கள் சங்கீத இலக்கணங்கள் முதலியன.

## முயற்சி வகை

மேற்கொண்ட காரியத்தைச் சிறிது சிறிதாகப் பலநாள் ஆராய்ந்து ஆராய்ந்து திருத்தமாக நிறைவேற்ற வேண்டும். முயற்சியிடையே யாரேனும் அவமதித்தால் அதனைப் பொருட்படுத்தாமல் காரியத்தைச் செய்து வரவேண்டும். நம்முடைய மனமறிய நற்காரியத்தை மேற்கொண்டு கடமையைச் செய்து வந்தால் இறைவன் அருளால் முடிவில் நன்மையே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. செய்யும் காரியத்தைப் பயனால் தெரிவிக்க வேண்டுமேயன்றி தொடங்கியது முதல், 'இப்படிச் செய்தேன், அப்படிச் செய்தேன்' என்று தாமே பாராட்டிப் பேசுதல் உயர்வன்று.

*-ஐயரவர்கள்*

## *உரிமையுரை*

**விருத்தம்**

உரமலி திரிசி ராமரை யுதித்த ஒருமணி ஆவடு துறையாம்
புரமலி மடத்தில் இயற்றமிழ்க் குரவு புனைமணி பலதமிழ் நூல்செய்
வரமலி புகழ்மீ னாட்சிசுந் தரநா வலர்மணிக் கென்குரு மணிக்குத்
திரமலி சுவைசால் பெருங்கதைப் பதிப்பைத் திகழ்வுற உரிமையாக் குவனே.

### 15. கடிதங்கள்

சென்ற நூற்றாண்டிலிருந்த பல அறிவாளிகள் எழுதிய கடிதங்கள் சென்ற பல வருஷங்களாகத் தமிழ்நாட்டில் நிகழ்ந்த தமிழ்ச் சம்பந்தமான முயற்சிகளையும், பலருடைய ஜீவிய சரித்திரங்களையும் பற்றிய குறிப்புக்களை இவற்றால் தெரிந்து கொள்ளலாம்.

### 16. கேள்வியால் அறிந்த குறிப்புக்கள்

பல வருஷங்களாக பல இடங்களில் பிரயாணம் செய்த காலத்தும் பல அறிஞர்களைச் சந்தித்த காலத்தும் கேட்டு அறிந்து அவ்வப்போது தொகுத்த பல வகையான குறிப்புக்கள்.

உ
ஸ்ரீராமஜெயம்

# புலவராற்றுப்படை

**கல்விக்கடல் S.K.இராமராஜன்**
**''கம்பராமன்''**

## கடவுள் வணக்கம்

*சித்தர் பணியும் திருவேங் கடத்தேனைச்*
*சத்திரத்து மேவும் தவத்தமுதை - முத்தமிழைப்*
*போற்றுவோம்! போற்றுவோம்! பொய்யற்ற ஐயர்புகழ்*
*சாற்றுவோம்! சாற்றுவோம்! சார்ந்து.*

## நூல்

*திங்கள் முகத்துத் திருவின் மணாளனை*
*மங்கலம் வழங்கும் மறைவடி வினனை*
*நிலமெலாம் கடந்த நெடுமுடி யண்ணலை*
*உலகெலாம் தவம்செய் துயர்வீ டெய்தச்*
*சித்தியை மதியாத் திறத்தினில் ஓங்கிய*
*பத்தியை வழங்கிப் பயிலும் வேங்கடம்,*
*மயர்விலா உலகாய் மலர்ந்த பரம்பொருள்*
*உயிரா வணமிருந் துற்று நோக்கி*
*நெஞ்சக் கிழியில் நித்தம் எழுதும்*
*வஞ்சமில் ஓவிய வடிவ மான*
*பான்மொழிக் கன்னி பாரதம் ஒளிபெற*
*வான்புகழ் தவம்புரி வளமுறு பெருமுனை,*
*இவற்றிடை,*
*மண்டிய புகழொடு வானை யளக்கும்*
*தண்டமிழ் கற்றுச் சால்பறி புலவ!*
*தொல்காப் பியத்தில் தோய்ந்தவர் படைத்த*
*பல்காப் பியங்கள் பயின்று தெளிந்தனை!*
*உம்பருக் கெட்டா ஒளியை வழங்கும்*
*கம்ப நாடனின் கவிதையில் கரைந்தனை!*
*பழகுதோ றினிக்கும் பசுந்தமிழ் வடிவாம்*
*அழகர்தம் உரையின் ஆழம் கண்டனை!*
*நச்சினார்க் கினிய நற்கிளி கோதிய*
*எச்சிற் கனிகள் எல்லாம் சுவைத்தனை!!*
*திருக்கிறி யாத சேனா வரையரின்*
*தருக்க உரையின் சால்பை யறிந்தனை!*
*பாக்கிழார் எனச்சிவம் பரிந்து போற்றும்*
*சேக்கிழார் பனுவலின் திட்பத் துயர்ந்தனை!*
*அருள்நூல் கற்றனை ஆற்றல் பெற்றனை!*
*பொருள்நூல் மறந்தனை புன்மை யுற்றனை!*
*ஈதலே வாழ்தலென் றியன்மறை பகர*
*ஊதியம் அனைத்தையும் உலகுக் களித்தனை!*
*போகா றகலப் புண்ணியத் தால்வரும்*
*ஆகா ற:க அயர்ந்தனை விதியால்!*
*உடலுக் கேற்ப உயர்தவம், செல்வத்*
*தடலுக் கேற்ப அருங்கொடை என்று*
*தக்கவர் வரைந்த தகவை மறந்ததால்*
*மிக்கவெந் துயரை விரும்பி யழைத்தனை!!*
*காதல் வடிவாம் கன்னியை மணந்து*
*பேதமில் காதல் பிரசம் மாந்தி*
*ஐங்கணை வேள்வியில் அன்புறு மகார்களை*
*இன்புறப் பெற்றனை இதயம் மலர்ந்தனை!*
*ஆனால்,*
*கல்வியை விற்கும் கலையறி யாமல்*
*மல்கிய வறுமையால் மனமயர் உற்றனை!*
*நஞ்சுபோல் விலைகள் நாடொறும் உயர*
*அஞ்சி யஞ்சி அயர்ந்தனை! ஐய!*
*செறறம் இலாதுநீ செய்தவத் தாலெனை*
*உற்றனை! நின்துயர் ஒழிக! ஒழிக!*
*சித்தர்கள் பணியத் திருவேங் கடத்தமர்*
*உத்தமன் திருவடி யுவந்துபோற் றினையோ?*
*அஞ்சாக் கூற்றத் தாற்றலை ஒடுக்கிய*
*பஞ்சாக் கரத்தைப் பரிந்துபே ணினையோ?*
*சந்ததம் கற்றவர் சால்பை வளர்க்கும்*
*சுந்தர காண்டச் சுவைதெரிந் தனையோ?*
*தேர்த்தட் டினிலே திருமால் பகர்ந்த*
*வார்த்தையின் நுட்ப வளங்கண் டனையோ!*
*பாயிர நான்மறை பரவும் மாயனின்*
*ஆயிர நாமத் தமுதுண் டனையோ?*

வித்தகர் பராவும் வேலூர்ப் பொன்னிச்
சத்திர விநாயகன் தாள்பணிந் தனையோ?
ஆரியன் கச்சி யப்பன் பகர்ந்த
காரிய சித்தியின் கருணை பெற்றனையோ?
கோதையார் வழங்கும் குறைவிலாத் தெய்வப்
பாவையின் ஞானப் பரிசறிந் தனையோ?
வேள்வியின் நலமுணர் வித்தகப் பிள்ளையார்
கோளறு பதிகக் குறிப்பறிந் தனையோ?
சங்கங் கண்ட சால்புறு கேசவர்
துங்கநல் லருளால் தோன்றினை! என்முன்!
அவத்தம் பேணா தன்புடன் நீசெய்
தவத்தால் என்னைச் சார்ந்தனை! வாழிய!
பெற்றிசால் கம்பனைப் பேணிக் கற்பவர்க்
குற்றபே றெல்லாம் உனக்கே யாகுக!
மன்புகழ்க் கண்ணன் மாயா வடிவென
உன்புகழ் செல்வம் உயர்க! உயர்க!
தேள்க ளாகித் தீமை புரிந்த
நாள்கள் கோள்கள் நன்மையே புரிக!
வையகத் துன்போல் வாடினேன் சீரிய
ஐயரைக் கண்டேன் அவலம் தீர்ந்தேன்;
செவ்விய தவத்தால் திகழும் உனக்கே
அவ்வழி காட்டுவேன் அமைவுறக் கேட்டி!
இன்று,
காதுவல் முதலாம் கயவர்கள் வளர்த்த
தீதுகொள் தழலில் தினமும் மகிழ்பவர்,
உயிரே தமிழென் றுயர்பதம் பெற்றபின்
வயிறே பெரிதென வாழும் வருக்கம்,
"பேசுவ தருந்தமிழ் பேணுவ தாங்கிலம்
கூசுவ திந்திநும் கொற்றம் நன்றென"
அருள்வளர் நெஞ்சினர் அறைதலை ஒதுக்கிப்
பொருளில் மதுவில் புரளும் புல்லியர்,
அருமறை முடிவை யமையச் சாற்றும்
திருமுறைத் தேனைத் திறமுறச் சுவைத்து
முப்பொழு திறைவனை முறையாய்த் தீண்டித்
திப்பிய ஞானச் செருக்குறாச் சைவர்,
மண்ணொடு விண்ணும் மாண்பில் ஓங்கிப்
புண்ணியம் எய்தப் பூரண நலந்தரும்
பண்ணமை வாய்மொழிப் பாசுரம் ஓதிக்
கண்ணன் கூத்தினைக் காணா வைணவர்,
எங்கும் உள்ளனர்! ஏதும் அறிந்தலர்!
வெண்கலிக் காட்படும் வித்தகம் பெற்றனர்;
சத்தியம் கண்ட தமிழ்ப்புல வருக்கு
முத்தம் அளந்த முன்னவர் இன்றிலை!
ஏழிசைத் தமிழை இன்புறக் கேட்டு
வேழம் வழங்கும் வேந்தர் இன்றிலை!
நன்னயத் தமிழை நலமுறக் கேட்டுப்
பொன்னிபாய் நிலந்தரும் புண்ணியர் இன்றிலை!
செந்தமிழ்த் தாயின் சிறப்பைப் பேணா
மந்தரே யாண்டும் மலிந்துளர்! மலிந்துளர்!
இவர்களை எண்ணி ஏக்கம் உறாமல்
தவமுறும் ஐயரைச் சாருதி! உயர்குவை!
ஐயர் சரிதம் அருந்தமிழ்ச் சரிதம்!
ஐயர் இதயம் அருந்தமிழ் இதயம்!
சத்திய ஞான சற்குரு தன்னை
உத்தம தானமாய் உலகுக் களித்தலால்
அப்பெயர் பெற்றதென் றறிஞர் புகலும்
ஒப்பிலாப் புகழ்தம் ஊர்பெறத் தந்தவர்;
வடிவால் சைவராய் மனத்தால் சாத்தராய்
நடைமுறை யாலே நல்லவை ணவராய்
மூவாநலம்பெறு முறைமை தேர்ந்த
உ.வே.சுப்புவின் உத்தமப் புதல்வர்;
தாவாப் புகழ்பெறு சரஸ்வதி மைந்தராய்
ஓவா ஞானத் துயர்ந்த புனிதர்;
ஆரியர் மாண்பை அமைவின் வளர்க்கும்
சூரிய முலையில் தோன்றும் சிவச்சுடர்;
வசையறு தந்தையின் மனத்தே ஒளிரும்
இசையினைப் போல இன்புற வளர்ந்தவர்;
பண்ட குலத்துப் படிவமென் றறிஞர்
விண்டசீர் சான்ற விருத்தா சலர்பால்
தண்டமிழ் யாப்பைத் தகவுறத் தெளிந்தவர்;
தழைபரஞ் சோதியின் தமிழ்ப்புரா ணத்தால்
மழையினை வழங்கிய மாசறு தெய்வம்;
பற்பல கம்பர்கள் பாரிலுற் றாலெனப்
பொற்புறு நூல்கள் புகன்ற பிள்ளைவாள்
திருவருள் பெற்றுச் செந்தமிழ் கற்றுப்
பொருவிலாப் புலமையைப் புவியில் பெற்றவர்;
மாசறு சுப்பிர மணிய தேசிகரின்
தேசுறும் அன்பால் செழிப்பைக் கண்டவர்;
வித்தக ஞான விவேகா னந்தரை
உத்தம ஞாலம் உணரச் செய்து
நலம்பெறு பாற்கர நம்பியின் பொருள்கொடு
சிலம்பைப் புவிக்குத் திறம்பெறத் தந்தவர்;

முதலைவாய்க் களிற்றை முன்புரந் ததுபோல்
சிதலைவாய்த் தமிழைச் சிறப்புறக் காக்க
வித்தகம் சான்ற வேங்கட ராமனே
சத்திய சாமி நாதராய் வந்தான்;
தேடியாம் பெற்ற திருமகள் என்று
மாடியாம் செல்வ மதுராம் பிகையை
ஐங்கணை அரும்புமுன் அன்புற மணந்து
மங்கல பாரத மாண்பைப் புரந்தவர்;
பொய்யர் புரட்டர் புளுகர் முரடர்
ஐயர்தம் பெருமை அறிய மாட்டார்;
சிவமுறு தமிழின் சிறப்பைத் தெரிந்தவர்
இவர்தம் புலமையின் ஏற்றம் காண்பார்;
சந்தமார் நான்காம் சங்கம் கண்ட
பந்தமார் ஞானப் பாண்டித் துரைவேள்;
முத்தமிழ் படரும் மூவா யாழ்தரும்
வித்தகம் சான்ற விபுலா னந்தர்,
சீரிய கபிலனே திரும்பிவந் தானெனப்
பாரிவேள் காதையைப் பகர்ந்த அந்தணர்,
சாரதி யாகித் தமிழ்த்தேர் நடாத்தும்
பாரதி யென்னும் பைந்தமிழ்க் கற்பகம்,
மிருதியின் நெறியில் விரும்பிச் சென்று
சுருதியின் பொருளுணர் பரிதிமால் கலைஞர்,
பூத்தொறும் நறாத்தேர் பொற்சுரும் பனையார்
மாத்தமிழ் வல்ல மறைமலை யடிகள்,
ஐயர்தம் உளமாய் ஐயர்தம் விழியாய்
ஐயர்தம் கரமாய் ஐயர்தம் பதமாய்ப்
பற்பல வடிவொடு பணிகள் செய்த
கற்பக வடிவாம் கலைமகள் ஆசான்,
இவர்கள் இவர்கள்போல் இலங்கும் புலவர்கள்
தவமுறும் ஐயர்தம் சால்பை அறிகுவர்;
சீரிய தமிழைத் திறமுறக் கற்றோர்
பேரியல் ஐயர்தம் பெருமை அறிகுவர்;
சிங்கப் பாற்சுவை சிறுநரி அறியுமோ?
சங்கத் தமிழ்ச்சுவை தம்பம் உணருமோ?
இவர்தம் பதிப்பால் ஏற்றம் எய்திச்
சுவையொடு பொலியும் தொன்நூல் பலப்பல;
குன்றின் தீபமாய்க் கொங்குவேள் மாக்கதை
என்றும் எங்கும் இசையொடு பொலிதலும்,
திறமார் தமிழைச் செகத்தில் உயர்த்தும்
புறநா னூறு பொங்கொளி யுற்றதும்,
புத்தமு தத்தால் புனையப் பெற்ற
பத்துப் பாட்டுப் பாரில் திகழ்தலும்,
சற்குரு சாமி நாதரால் என்று
அற்புதத் தமிழுணர் அறிஞரே அறிகுவர்!
கலம்பகத் தமிழ்த்தாய் கலின்கலின் கலினெனச்
சிலம்பொலித் திடநடம் செய்குவ தெவரால்?
நந்தா நலம்பெறு நற்றமிழ் அன்னை
சிந்தா மணியால் சிறப்புறல் எவரால்?
அணிமே கலையார் ஆயம் போற்றும்
மணிமே கலைவளம் மன்னிய தெவரால்?
தமிழ்நலம் கெழுமிய தத்துவ ராயர்
இருபெரும் பரணி ஏற்றம் பெறாததேன்?
பாசப் பரணி மாசைத் துடைத்துத்
தேசம் புகழச் சிறப்பெலாம் பெற்றதேன்?
கண்ணன் கால்படின் கல்லும் பெண்ணாம்;
அண்ணல் கைபடின் அனைத்தும் ஒளியாம்;
பொற்புறு திருமுறை பொலிவுறு கம்பன்
அற்புத நலந்தரும் அகம்கல் லாடம்
இவர்பதிப் பின்மையால் ஏற்றம் பெறாமல்
புவனியில் இருத்தலைப் புலவர் அறிகுவர்;
குமர குருபரர் கோதிலாச் செந்தமிழ்
அமரரும் வியக்கும் அழகைப் பெற்றதேன்?
தேற்றம் மிக்க சிவப்பிர காசர்
ஏற்றம் பெறாமல் இங்கே உலாவலேன்?
சாலத் தளர்ந்த கோலக் கிளிக்குப்
பாலைத் தந்து பருவரல் அகற்றிப்
பிணியைப் போக்கிப் பேரருள் நல்கி,
அணிகள் பூட்டி அழகைப் பெருக்கிச்
சுந்தரன் பக்கல் தூது விடுத்த
மந்திர மாண்பை மறப்பவன் தமிழனா?
கடலின் அலையைக் கணக்கிட் டாலும்
அடலுறும் ஐயர்சீர் அளக்கவொண் ணாதே;
அரையர் நல்லார் அழகர் இனியர்
புரையில் ஐயராய்ப் புவியில் வந்து
நறுந்தொகைக் குள்ளே நலம்மிகப் பெற்ற
குறுந்தொகை என்னும் கோலக் களிற்றைப்
பற்பல அணிகள் பாங்குறப் பூட்டி
அற்புத மாக அலங்கரித் தறிஞர்
ஒப்பிலா நெஞ்சில் உலாவ விட்ட
வித்தகப் புலமை விளம்பல் எளிதோ?
செவ்விய ஐயர்தம் சிறப்புகள் முற்றும்
இவ்வயின் அளக்க எளியேற் கியலுமோ?
சாமி நாதரின் தாள்நிழல் அடைந்து
தோமிலா ஞானச் சுகத்தைப் பெறுக!
மன்னிய வளஞ்சால் சென்னையை அடைக!
நன்னய வசந்தை நகர்ப்புறம் எய்துக!

நாவில் ஊர்க்கு நல்வழி உளதெனப்
பாவலர் புகழும் பழமொழி மறவேல்;
கோலமார் ஐயர் கோவில் யாதெனில்
சீலமாய் எவரும் தெரிந்து காட்டுவர்;
பொருவில் தமிழ்த்தாய் பொலியும் கோவிலின்
திருவெல் லையினைச் சிறப்புறப் பணிக!
கோவில் எல்லை குறுகலும் உந்தன்
பாவமும் வினையும் பாழ்பட் டோடும்!
விதுப்புறல் அரியா விளக்கம் பெற்றுப்
புதுப்பிறப் பெய்துவை! புனிதம் பெறுவை!
புகழ்வட மொழியால் பொலிபசுந் தமிழால்
தகவுகொள் பால சார நாதனும்,
மூலநா யகனின் மோன மொழிதேர்
சால உயர்ந்த சாயி ராமனும்
நடைமெலி உன்னை நலமுற நோக்கி
உடையும் உண்டியும் உவப்புற நல்கித்
தேற்றி ஐயர்பால் செல்கெனப் பணிப்பர்
ஆற்றல்சால் ஐயர் அருளகம் புகுக
ஐயர்,
தாமரை விடுத்த சதுமுகன் போலப்
பூமணத் தவிசில் பொலிவுடன் இருப்பர்;
இடந்தொறும், இடந்தொறும் ஏடுகள் தேடி
நடந்ததும் பதத்தை நயமுற நோக்குக!
செந்தமிழ் ஐயர் திருவடி மலரைச்
சந்தமார் முடியில் தகவுற அணிக!
வேதப் பனுவலின் வித்தக வடிவே!
போதம் பெருக்கும் புண்ணிய! புராதன!
இழந்தசெல் வத்தை எடுத்து வழங்கிய
பழம்பெரும் புலவ! பண்டித நாயக!
தலைநிமிர்ந் தின்று தமிழகம் உயர
கலைநலம் தந்த காரண! பூரண!
உலகியல் நோக்கி உள்ளம் தளர்ந்தேன்
அலகிலா ஞானத் தருளறம் பொழிக!
திருக்குறள் என்னும் தெய்வ மறையைப்
பெருக்குறக் கல்லாப் பேதையர் இங்குளர்;
நாலடி யாரின் நயத்தைக் கண்டோர்
காலடி பேணாக் கயவர் இங்குளர்;
கன்னித் தமிழைக் கனிவுறக் காத்த
நன்னயக் கம்பனை நாடார் இங்குளர்
ஆத்திகக் கோபுர அமைவைக் குலைக்கும்
நாத்திக அரசுகள் நன்கு செழித்தன;
இவற்றால் உள்ளத் திடரினைப் பெற்றேன்
அவற்றைப் போக்கி அருள்எனப் பணிக

ஐயர்,
தமிழையே நோக்கிய சால்புறு கண்ணால்
அமிழ்துற உன்னை அமைவுற நோக்குவர்;
அருள்வடி வாகி யற்புதம் வழங்கும்
திருவடி காட்டுவர் செம்மை மலரும்
"வள்ளுவன் தன்னை மாசறு கம்பனை
உள்ளுவந் தேத்துக ஒளியைப் பெறுவாய்!
உற்ற உபாதி ஒழிந்திடின் நீயே
பெற்றியின் மிக்க பிரமம் ஆகுவை!
ஆசை யறுமுன் அதுநான் என்று
பேசு கின்ற பிழையைப் புரியேல்!
அதுவரை,
வஞ்சகக் கூற்றம் வண்மை குன்றி
அஞ்ச வுதைத்த அஞ்செழுத் தினையும்,
நஞ்சமு தாக்கி நலம்பல வழங்கி
எஞ்சலற் றொளிரும் எட்டெழுத் தினையும்,
நாவிடைப் படாமல் நன்கு செபித்துப்
பூவில் ஞானப் பொலிவைப் பெறுக!
உறங்கும் பரமே உறக்கம் நீங்கி
அரங்கில் மேவி ஆடல் புரியும்;
பதத்தில் கங்கையைப் பரித்த பரமே
சடைக்கண் அதனைத் தாங்கி மகிழும்;
அணிந்த அரவையே அமளி யாக்கித்
துணிந்ததில் பரம்பொருள் துயிலை மேற்கொளும்;
அனைத்தும் ஒன்றே ஆயினும் உன்றன்
மனத்துறு தெய்வ மலரடி மறவேல்;
மற்றைய தெய்வம் மதிக்கத் தக்கது
இட்ட தெய்வமே ஏற்றம் தருவது;
வழிபடு கடவுளை மறந்த சமரசம்
அழிவை வழங்கும் அதன்புறம் செல்லேல்!
என்றே ஞானம் இயல்புற வழங்குவர்;
குன்றா ஞானக் கொழுஞ்சுட ரானவர்;
தமிழ்க்களஞ் சியமாய்க் கலித்தொகை வழங்கிய
அளப்பரும் புகழ்கொள் அனந்த ராமரால்,
மற்றைய மொழிகளை மரபுடன் அறிந்து
வெற்றி கொண்ட வேங்கட ராசரால்,
திருவளர் ஈட்டுரை சிறக்கத் தந்த
பொருவிலா ஆசான் புருடோத் தமரால்,
மதிக்கப் பெற்ற மாண்புறு முனிவர்,;
சுப்பிர மணியத் தோன்றலை நல்கிய
துப்புறு கல்யாண சுந்தரர் தந்தையார்;
பேறு வழங்கும் பிரமம் ஆகிய
மாறிலா ஞான மலைகிழ வோரே.

# தாத்தா தாத்தா தமிழ்த்தாத்தா!

**பவானி தாசன்**

*1. தாத்தா தாத்தா தமிழ்த்தாத்தா*
*தமிழ்த்தாய் மகிழத் தாம்வாழ்ந்து*
*சேர்த்தார் சேர்த்தார் சுவடிகளைத்*
*தேடித் தேடி நாடெல்லாம்!*
*பார்த்துத் திருத்திப் பதிப்பித்துப்*
*பாங்காய் நம்மைப் படிக்கவைத்தார்*
*ஆர்க்கும் கடல்போல் அவர்புகழை*
*அனைவரும் பாடி மகிழ்வோமே!*

*2. உத்தம தான புரத்தினிலே*
*உத்தம மான நற்குடியில்*
*உத்தம ராய்வந் தவதரித்தார்*
*உ.வே. சாமி நாதஐயர்!*
*எத்தனை காலம் மண்வாழும்*
*எத்தனை காலம் விண்வாழும்*
*அத்தனை காலம் புகழ்வடிவில்*
*அவரும் வாழ்வார் வாழியவே!*

*3. திரிசிர புரத்து மகாவித்வான்*
*தேடித் தந்த பெருஞ்செல்வம்*
*குருவைப் போற்றும் தூயநல்ல*
*குணத்துக் கேற்ற இலக்கணத்தின்*
*பொருளாய் வாழ்ந்து புகழ்படைத்தார்*
*பொய்ம்மை நெறியை அவர்வெறுத்தார்*
*அருமைச் செயலால் நம்நெஞ்சில்*
*அமர்ந்தார் வாழி வாழியவே!*

*4. உ.வே. சாபோல் காட்சிதந்து*
*உலகில் என்றும் தமிழ்வளர*
*சேவை செய்யும் நூல்நிலையம்*
*செல்வோர் காண்பர் பெசன்ட்நகரில்*
*சேவை நாமும் அதற்குச்செய்தால்*
*தெரிந்தே மகிழும் அவர்ஆத்மா*
*தேவை அறிந்து நம்தொண்டை*
*செய்வோம் வாழி வாழியவே!*

★ ★ ★

ஒலிபெருக்கி இருக்குமிடமெல்லாம் தவறாது ஒலிக்கும் மேற்கோள் ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே'' என்பது. இந்த மேற்கோள் இன்றும் நம்மிடையே இருப்பதற்குக் காரணம் தமிழ்த் தாத்தா அவர்கள்தான். அவர் பதிப்பித்த புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ளது இந்தச் செய்யுள்.

*பொய்யகல நாளும் புகழ் விளைத்த*
*லென்வியப்பாம்*
*வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்*
*கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு*
*முற்றோன்றி மூத்த குடி.*

**கரந்தைப்படலம், குடிநிலை. 35**

---

**இந்த நூலை முதன் முதலாகத் தமிழ் உலகிற்குத் தந்தவர் டாக்டர் ஐயரவர்கள்.**

# HOMAGE TO A TITAN

**S. Srinivasan** (10.7.95)

The world of scholars owes a deep debt of gratitude to Dr.U.V.Swaminatha Iyer for unearthing and editing the great Tamil Classics, for his depth of knowledge, wealth of learning and beauty of thought and expression. Wherever Tamil is known and spoken and Tamil scholarship is valued, the name of Dr.Swaminatha Iyer is also known. He is one among a few sons of India who made himself immortal by his unparalleled contribution to Tamil literature and learning.

What was the state of Tamil scholarship before the advent of Dr.Swaminatha Iyer on the Tamil stage? When the Tamil land had the misfortune of losing all traces of its great classics called Sangam works, and Major and Minor Kaavyaas, this venerable scholar was able to dig out and discover the lost treasures and to present to the world excellent and authentic editions of these ancient classics.

**The challenge:** A member of a Zameen family. Salem Ramaswami Mudaliar, posted to Kumbakonam as Judicial Officer, met the Tamil Pandit of the local Government College, ridiculed his paltry knowledge of all the medreval and modern poetry, and asked him if he had really read any ancient Tamil writing. He mentioned, for the first time, in that great scholar's hearing, 'Jeevaka Chintaamani', 'Manimekalai', and 'Silappadhikaaram'. He handed him a copy of the first-named work and dared him to master it and teach it to him.

Thus was the ball set rolling. The 'book' was a copy made on paper from a rare palm-leaf copy obtained by fluke from a poet's family in the Tirunelveli district paying thirty-five rupees (equal at least to twenty times that figure in these days). Thus was the scholar, Dr.Iyer challenged and inspired to take up as his life mission the resuscitation, standardization and popularisation of all ancient poetry that lay hidden in the nooks and corners of this country.

Our scholar was just 25 at that time. The rare works he rescued, apart from what he edited indefatigably over six decades, will keep other scholars and researchers busy for many many fruitful years to come.

**The way the works were eased out:** Just as present day students discard their annual accumulation of books and notebooks after the promotion lists are put up, boys got rid of their packs of palm-leaf exercise books by piling them up in toy chariots and in a hilarious mood dumped them in rivers each year, regularly, on the eve of Vijaya Dasami that marked a fresh commencement. To heighten their spirits, the ignorant elders dutifully added handfuls of other such bundles left in the loft which was so much litter in the eyes of those who had missed the family vocation of learning and disseminating knowledge. Others, more pious, chose a day for dipping them in ghee and consigning them to the sacrificial fire which was, for them the proper thing to do to mark their reverence for the Goddess of Learning!

Only what has escaped fire and water and religious taboo remains. Even of this, termites and silver-fish called 'Raama baanam' took a portion. The third element earth had its share.

Dr.Iyer collected many manuscripts. When he lifted a palm-leaf bundle and opened it, the edge would break; when he untied a knot, the leaf would crack; when he turned a leaf, it broke in half; all old manuscripts were falling apart. But to the great master, the collation of copies and the recovery of some real gems in their pristine purity was joy in compensation.

There were slips between the cup and the lip. Dr. Iyer did see a copy of 'Valayaapathi' at the Tiruvavaduthurai Aadheenam Library. When he came back for it later, it could not be seen either there or elsewhere.

**The 'goal' was the thing:** Setting aside all these impediments, Dr.Iyer's mind was set on presenting ancient Tamil classics which are about 20 centuries old. But for him, the bulk of the literature of the Sangam Age might have perished beyond recovery. He was solely responsible for giving the Tamil language a new glow and flame; and because of him, there was a renaissance as it were in the cultural and literary history of India.

Dr.Iyer had edited and published 91 books on different branches of literature. Among these are the great Sangam works, three out of the five Major Kaavyaas, Sthala Puraanas, Prabhandams, etc. He was, really speaking a 'One-Man's-Writers Association' who could produce a hundred books in a life time!

Dr.Iyer was prompted by an insatiable thirst for the discovery of manuscripts of ancient works in Tamil; and he completely devoted himself to the self-imposed task. At the time of his passing away he was able to bequeath to the world of

Tamil scholarship a treasure of immeasurable value - about 3,070 manuscripts - on palm-leaf and paper of literary works of a unique nature. He has, in addition, left valuable notes on the results of his studies on them. Many works he had himself edited with introduction, critical notes, indices, etc. have been greatly appreciated because they blazed an original trail and also because of their exhaustiveness, thoroughness and research value.

**Gratitude to a Benefactor:** We learn with pleasure, how his goodness and gentleness, inherited from a line of ancestors, supplemented by the culture bred by association with great scholars and god-fearing men, shaped him into the man that he became, one who loved God and Tamil and all his fellowmen with an almost equal love and regard.

The Government conferred on him the title of Mahamahopadhyaaya (a great and venerable scholar and teacher). The University of Madras conferred a Doctorate on him; and the Tamil people erected a full-size statue for him at the Presidency College premises where he taught Tamil for years. They endearingly called him 'Thamizh Thaaththa' - the Grand Old Man of Tamil - showing both their regard and affection for him. With an equal solicitute and greatfulness, he had returned all this kindness manyfold by the number of great works, of the first quality he had created and made available to the Tamils now and for ever.

The valuable treasure of works and manuscripts left behind by Dr.Iyer was handed over as a gift by his son Sri Kalyana Sundara Iyer to Srimathi Rukmini Devi, President of the Kalakshetra. She generously agreed to house and maintain them and established the Mahamahopadhyaaya Dr.U.V.Swaminatha Iyer Library on the 5th of July 1943.

The ever grateful and generous Tamil public, in appreciation of the total dedication and the Himalayan labours of this great savant, have again come forward to put up a bust of this Titan in the Library campus. His memory is, thus, again sought to be perpetuated in bronze.

To such a person we bow.

## சிலப்பதிகாரமும் அரும்பதவுரையும்

தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்குச் சிலப்பதிகாரம் செய்யும் உதவி மிகவும், சிறந்தது. கடைச்சங்க காலத்தை அறிவதற்கு முக்கிய காரணமாக இருப்பது அதுவே. இறந்துபட்ட இசைத்தமிழ் நாடகத் தமிழின் சில பகுதிகளை யுடையதாகிப் பழந்தமிழ் வழக்கை வெளிப்படுத்திக் கொண்டு விளங்கும் அந்நூலுக்கு இணையாக வேறொன்றும் இல்லை. அதை நான் முதல் முதலில் ஏட்டுச் சுவடியிலே படித்தபோது பல அற்புதங்கள் நிறைந்த புதிய உலகத்திற்குச் சென்றது போலத் தோன்றியது. மூலத்தைக் காட்டிலும் அடியார்க்கு நல்லார் உரையினால் அறிந்து கொள்ளும் செய்திகள் அளவிறந்தன. இசைத்தமிழ், நாடகத் தமிழ்களைப் பற்றி நாம் இக்காலத்தில் அறிந்துகொள்ளும் செய்திகளில் - பல அடியார்க்கு நல்லார் இட்ட பிச்சை என்றே சொல்ல வேண்டும். எத்தனை நூல்கள்! எத்தனை கலைகள்! எத்தனை மேற்கோள்கள்!

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதின அடியார்க்கு நல்லார் பிற்காலத்தவர். அவர் உரைக்கு முன்பு ஓர் உரை அதற்கு உண்டு. அவ்வுரை அரும்பதவுரை எனப்படும். அடியார்க்கு நல்லார் உரை எழுதுவதற்கு அவ்வரும்பதவுரை பெரிதும் துணை செய்தது. எவ்வாறு எனின் அரும்பதவுரையின் சிறப்பை எப்படி நான் தெரிவிக்க முடியும்? ஆனால் என்னுடைய துரதிருஷ்டம் அரும்பதவுரை யுள்ள ஏட்டுப் பிரதி ஒன்றே எனக்குக் கிடைத்தது. பிற்காலத்தில் தமிழ்போன போக்கையும், அடைந்த அலங்கோலத்தையும் அப்பிரதியும் நிதரிசனமாகக் காட்டியது. பிழைகள் மலிந்தும் முன்பின் மாறியும் இடையிடையே விட்டும் அப்பிரதியில் விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன. அதனை முற்றும் படித்தறிவது கஷ்டமாக இருந்தது. உரைப்பகுதிகள் வெவ்வேறு இடங்களில் 'மாறி மாறிக் கலந்திருந்தமையின் மூலத்தில் எந்தப் பகுதிக்கு எது பொருள்?' என்று தேடிப் பொருத்திப் பார்ப்பதற்குள் சிலப்பதிகாரம் முழுவதற்குமே உரை எழுதிவிடலாம் என்று தோற்றியது. இத்தகைய பிரதியை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது?

*-ஐயரவர்கள்*

# THE MAHAMAHOPADYAYA

**M.Srinivasan**

***(ஒ-ம்.) ச. நடேசபிள்ளை***
யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரி அதிபர்
25-12-1951

ஐயரவர்கள் தேடி வைத்த பொக்கிஷத்தை அழி யாது காத்து வருவது பற்றி இந்நிலையத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டியது கடமை. இங் குள்ள மதிப்பற்ற ஏடுகள் புத்தக ரூபமாக வெளி வருமென எதிர்பார்க்கிறேன்.

***(ஒ-ம்.) சி.சுப்பிரமணியம்***
07-08-1952

நான் இரண்டு நாள் இருந்து ஸ்ரீ ஐயரவர்களின் நூல் நிலையத்தைப் பார்வையிட்டேன். மிக அரு மையான முறையில் அமைத்துக் கலாக்ஷேத்திர நிர்வாகிகளால் நன்கு பேணப்பட்டு வருகிறது.

***(ஒ-ம்.) ஜி.சுப்பிரமணியம்***
Professor of Tamil Research
Annamalai University
01-03-1953

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் நூல் நிலையத்திலுள்ள சைவத்திரு முறையேடுகள் சிலவற்றைப் பார்த்து மகிழ்ந்தேன். சிலமணி நேரத்திலேயே குறிப்பிடத்தக்க சில பாட வேறுபாடுகளைக் கண்டேன். பயன்படத்தக்க இவ் வேடுகளை நல்ல முறையிற் பாதுகாத்து வரும் நூல் நிலையத்தாரது தொண்டு தமிழ் மக்களாற் பாராட் டத்தக்கதாகும்.

***(ஒ-ம்.) வெள்ளைவாரணன்***
விரிவுரையாளர்
அண்ணாமலை பல்கலைக்கழகம்
02-01-1954

நாளது விஜய வருஷம் பங்குனி உத்தரம் சுக்ரவாரத்தன்று இந்த நூல் நிலையத்துக்கு வந்து நூற் களஞ்சியத்தையும் கண்டு நாவலர்களுடன் சல்லாபித்ததையும் என்றென்றும் மறக்கமுடியாது.

***(ஒ-ம்.) ஜி.ராஜகோபால பிள்ளை***
பிக்ஷாண்டார் கோவில்
19-03-1954

திரு. விசுவநாதய்யர் எனது வாழ்நாட்களில் இன்றைய நாளை மிகப்புனிதமானதாக, மறக்க முடியாததாகச் செய்துவிட்டார். வலிய வந்து வருந்தி அழைத்து, மகாமகோபாத்தியாய ஐயரின் உழைப்பைத் தமிழுக்கு அவர் செய்த உதவியை காட்சியாகக் காட்டினார். அறிவுரையாக - பாடபோ தனையாகவும் சிலவற்றை எனக்குக் கூறினார்: ஐயரவர்களின் நூல்கள் தான் தொழிலாளியாகிய என்னை - தமிழ் அறிவுடையவனாகச் செய்தன. ஆனால், ஐயரின் உழைப்பு, அழியவிருந்த நூற்க ளுக்கு அமரத்வம் கொடுத்த அருட்செயலை இன்று உணர்ந்தது போல் முன் எப்போதும் உணர்ந்த தில்லை. திரு. விசுவநாதய்யருக்கு எனது நன்றி.

***(ஒ-ம்.) மா.பொ.சிவஞானம்***
15-07-1955

மிக்க கீர்த்தி வாய்ந்த டாக்டர் பட்டம் பெற்ற ஸ்ரீசுவாமிநாதயரவர்களுடைய நூல்நிலையம் பார் வையிடப் பெற்றது மனத்திற்கு மிகவும் சந்தோஷம் அளித்தது. இந்த நூல்நிலையம் உலகிற்கு மிகுந்த உபகாரமளிக்கக் கூடியது. மிகப் பழமையான நூல்களை வெளியிடுகின்றது. இந்நிலையம் மேல் மேலும் செழிப்புற்று வளரவேண்டுமென ஸ்ரீமந் நாராயண கிருபையை முன்னிட்டு ஆசீர்வதிக்கின் றோம்.

***(ஒ-ம்.) ஸ்ரீமத் உடுபி பண்டாரகேரி மடாதிபதி***
ஸ்ரீ வித்யாமாந்ய தீர்த்தர், 19-07-1956

தமிழ்த்தாத்தா எனப் பாராட்டப்பெறும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள் திருப்பெயரால் அமைந்திருக்கும் நூல் நிலையத்திலே, ஐயரவர்க ளது இமய மலை அனைய பேருழைப்பைக் காணப் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

ஐயரவர்கள் தமது காலத்தில் அரிதின் முயன்று தேடி வைத்திருக்கும் ஏட்டுச் சுவடிகள், எழுதிய குறிப்புரைகள், பதிப்பித்த நூல்கள், வெளிவர வேண்டியவை முதலிய எல்லாவற்றையும் திரு. விசுவநாத ஐயரவர்களும் அவர்களோடு பணி செய்கின்றவர்களும் திறம்பட வைத்திருப்பது மிக வும் பாராட்டுதற்குரியது. திரு. விசுவநாத ஐயரவர் களது பேரார்வம் மகிழ்ச்சி ஊட்டுகின்றது.

ஐயரவர்களது நல்ல கனவுகளெல்லாம் திருவரு ளால் நனவாகுமாக என ஆசீர்வதிக்கின்றோம்.

*(ஒ-ம்.) சோமசுந்தர தேசிகர்*
மதுரை ஆதீனம்
18-07-1956

தமிழ் ஆராய்ச்சியும் பாண்டித்தியமும் குன்றிவ ரும் இக்காலத்தில், பழைய ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாத்து, அவைகளையும், அவற்றிலுள்ள பாட பேதங்களையும் அச்சிட்டு அவை அழிந்து போகா மல் மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதை யர் நூல் நிலையத்தார் செய்துவரும் தொண்டு தமிழிற்குச் செய்யும் ஒரு அரும்பெரும் தொண்டா கும். இத்தொண்டைச் சிலர் தம் சுயநலம் கருதாது செய்து வருகிறார்கள் எனக் கேள்விப்பட்டு மிகவும் ஆச்சரியமும், மகிழ்ச்சியுமுற்றேன். தமிழன்பர்கள் அனைவரும் இத்தொண்டு அழியாவண்ணம் இதில் ஊக்கம் கொண்டு இத்தொண்டு மேன்மேலும் வள ரும் வண்ணம் இதற்கு ஆதரவு கொடுப்பார்களென நம்புகிறேன்.

*(ஒ-ம்.) தி.க.இராஜசேகரன்*
பரமேஸ்வரக் கல்லூரி
யாழ்ப்பாணம்
31-12-1957

தமிழ்த் தாத்தா, உயர்திரு டாக்டர் உ.வே. சாமிநாத அய்யரவர்களின் நூல் நிலையத்தைக் கண்டேன். தமிழ்த்தாய் இந்நூல் நிலையத்திலே குடிகொண்டிருக்கின்றாளென்பதை யான் சொல்ல வும் வேண்டுமோ, பற்பல தமிழ் நூல்களைப் பாதுகாத்து நாட்டிற்கு நற்பணியாற்றி வருகின்றது. இந்நூல் நிலையத்தைத் தமிழ் மக்களெல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது எனது பேரவா.

*(ஒ-ம்.) எம்.எம். தண்டபாணி தேசிகர்*
27-12-1962

ஐயர் என்றால் தமிழ்; தமிழ் என்றால் ஐயர்; இந்தத் தூய்மையான தமிழ்க் கோயிலை வலம் வருவோர் தமிழுணர்வு பெறுவர்! இந்த இன்பத் தமிழ்க்கோயிலை உருவாக்கிய கி.வா.ஜ. அவர்க ளுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது!

*(ஒ-ம்.) தெய்வசிகாமணி*
(குன்றக்குடி அடிகளார்)
04-01-1968

தமிழ்க்கடல் டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலை யத்தை வங்கக் கடற்கரையில் கண்டு பெருமிதமும் பெரும்பயனும் பேருவகையும் கொண்டேன். சிறந்த சூழ்நிலையில் அடையாற்றில் அமைந்துள்ள இக்க லைக் கருவூலம் தமிழ்த் தாத்தா அவர்களுக்குத் தலையாய நினைவுச் சின்னமாய்த் திகழ்கிறது. இங்குப் பணியாற்றும் அன்பர்களின் ஆர்வமும், உழைப்பும், தொண்டும் போற்றத்தக்கன. தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூல் நிலையத்தினை நன்கு போற்றிப் பயன்படுத்திக் கொள்ள தென்னாடுடைய சிவன் அருள்வானாக.

*(ஒ-ம்.) சே.கு. சாந்தமூர்த்தி*
தமிழ்த்துறை, விவேகானந்தர் கல்லூரி
04-08-1971

திரு ஐயர் நூல்நிலையத்தை இன்று நான் கண்டு மிக மகிழ்ச்சியடைந்தேன். சுவடிகளும் பிரதிகளும் மற்றவையும் வெகு சீராக வைக்கப்பட்டிருக்கின் றன. தமிழ்த் தாய்க்கு இன்னும் இந்நூல் நிலையம் செய்ய வேண்டிய தொண்டு பல இருக்கிறது. இறைவனருளாலும், செல்வந்தர்களுடையவும், மத் திய, மாநில அரசுகளுடையவும் உதவியாலும் ஷ பணி நன்றாக நிறைவேறும் என நம்புகிறேன்.

*(ஒ-ம்.) ரா. ராமசுப்பிரமணியம்*
(Retd. Administrative Officer,
Presidents Secretariat,
Rashtrapati Bhavan, New Delhi)
03-05-1972

எதிர்பாராது வருகை புரிந்த எனக்கு இந்த நூல் நிலையம் பெருமகிழ்வைக் கொடுத்தது. உ.வே. சாமநாத அய்யர் அவர்களின் பெயரில் அமைக்கப் பெற்றுள்ள இந்த நூல் நிலையம் அரும்பொருட் காட்சியகமாகத் திகழ்கிறது. டாக்டர் உ.வே. சா. அவர்களின் கையெழுத்துப் பிரதிகளும் அவருக்கு ஏனைய அறிஞர்கள் எழதிய கடிதப் பிரதிகளும் கடந்தகால வரலாற்றை எடுத்துரைத்து எனது இத யத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை உருவாக்கியுள்ளது. வெளியீட்டகமாகவும் விளங்கிவரும் இந்த நூல் நிலையத்தின் சேவை பாராட்டுக்குரியது.

*(ஒ-ம்.) சண்முக சுந்தரம்*
உதவி ஆசிரியர், 'தமிழரசு'
16-11-1972

பொதிகை மலையில் பிறந்து, பொன்னிநதி தீரத் திலே வளர்ந்து, பொங்கு கடல் சூழ்ந்த பல

நாடுகளில் பரவி,மேலையோரும் போற்றும் புகழ் பெற்ற, அன்னை தமிழ், அழியாத்தமிழ், என் அருமைத் தமிழே,

**உலகறிந்த உன்புகழ் உள்ளதில் ஒரு பங்கே**
**உலகறிய வேண்டியன இன்னமும் பல உளவே**
**என்றறிந்தேன் யான் இங்கு வருதலின்.**

மறைந்துள்ள மாணிக்கங்களை வெளிக்கொணர வும், குடத்திலிட்ட விளக்காய் உள்ள பல தமிழ்ப் பெரியோர்களை குன்றிலிட்ட விளக்காய் ஆக்கவும், ஐயர் அவர்களும் மற்றவர்களும் செய்துள்ள/ செய்து வருகின்ற முயற்சிகள் முழு வெற்றியடைய யான் ஈசனைப் பிராத்திக்கின்றேன்.

***(ஒ-ம்.) எஸ். நாகராஜன்***
26-11-1972

**ஆய்ந்தறியும் சாமிநா தையர் புகழ் விளங்க**
**வாய்ந்தபெரு நூல்நிலையம் வாழியவே - தேர்ந்து ஐயர்**
**தொட்டபணி மேலும் தொடர்ந்துசெய்யும் நல்லன்பர்**
**இட்டமுடன் வாழ்க இனிது.**

**பால்கருதிப் பழம்கருதிப் பணம்படைத்தார் பரிதவிப்பர்**
**பாவை மாதர்**
**மால்கருதி வாலிபர்தாம் மனமறுகி மாழ்குவர்இவ்**
**வையம் ஆளும்.**
**கோல்கருதிக் கொற்றவர்தாம் குறைப்பட்டுத் துயில்நீப்பர்**
**குறித்துப் பண்டை**
**நூல்கருதி இவன்போல ஊர்திரிந்தார் யாருண்டு**
**நுவலின் அம்மா!**
**அழிந்துவிட்ட ஒருதிருவாய் மொழிமீள நாதமுனி**
**அளித்தாற் போலப்**
**பழந்தெவிட்டப் பால்தெவிட்டப் படியமைந்த நெடியசுவை**
**பயின்ற பன்னூல்**
**இழந்துவிட்டுத் தமிழன்னை ஏங்கியநாள் இதோ உனதென்**
**றீந்தான் என்றும்**
**கொழுந்துவிட்டுப் படர்கின்ற புகழ்ச்சாமி நாதன்எனும்**
**குணக்குன் றம்மா!**

***(ஒ-ம்.) அரங்க. சீனிவாசன்***
31-12-1972

ஸ்ரீமத் சாமிநாத ஐயர் அவர்களின் நூல்நிலையத் தைக் காணவேண்டும், காணவேண்டும் என்னும் என்னுள்ள வேட்கை இன்றே பூர்த்தியாயிற்று. தெய்வத் தமிழ்க்கோயில் உள்ளே உலவும் பேரின் பமே நானடைந்தது. ஐயர் அவர்களின் பணி சாதாரண மானிடர் செய்யும்படியான பணியாகத் தோன்றவில்லை. தெய்வப் பணியே அது. தமிழ் உள்ளவரை 'தமிழ்த்தாத்தா' பெயர் நின்று நிலவும். இதைச் சொல்லவும் எனக்குச் சிறிதும் தகுதி யில்லை. அவர்களின் பெரும்பணியை சிறிதளவா வது வளர்த்துவிட யாராவது தோன்றுவராயின் அது தமிழுக்கு இனிமேல் கிடைக்கும் பாக்கியம்.

***(ஒ-ம்.) லோக. ஜெயபால்***
***05-03-1973***

**வையம் புகழும் மணியாம் வளர்தமிழின்**
**செய்ய மணியாம் திருநாட்டார் - உய்யவே**
**மால்சாமி நாதனாய் வந்தவர் பேர் கொண்ட**
**நூல்நிலையம் கண்டேன் நுகர்ந்து**

**ஐயர் தொகுத்த அருஞ்சுவடி எத்துணையோ**
**ஐயர் வெளியிட்ட அன்புசேர் - மெய்ய**
**வடிவுநூல் எத்துணையோ மாண்பாம் அவற்றைப்**
**படியோ டுளமகிழ்ந்தேன் பார்த்து**

**தனிமனிதன் இத்தகைய தாளாண்மை கொண்டே**
**இனிப்பிறந்து செய்தல் இயலா - தெனினிங்கு**
**மின்னுருவாம் ஐயரின் மேன்மைச் செயற் கிணை**
**என்னென்பேன் ஏதென்பேன் யான்.**

***(ஒ-ம்.) பண்டித-வித்துவான் சினி நாராயணன்***
தலைமைத் தமிழாசிரியர்,
அரசினர் உயர்நிலைப் பள்ளி, மேலூர்.
03-05-1973

ஸ்ரீ உ.வே.சாமிநாதையர் அவர்கள் தமிழ்த் திருப்பணிச் சிறப்பை உலகத்துக்குத் தெரிவிக்க ஒரு கலங்கரை விளக்கம் போல் அமைந்துள்ள நூல் நிலையத்தை இன்று பார்த்து மனம் உருகும் பேறு பெற்றேன். இருபது ஆண்டுகளுக்குமுன் நான் இந்நூல் நிலையத்திற் பணிபூண்டிருந்த போது இப்பொழுதுள்ள அரும்பெருங் காட்சிகளை நான் கண்டதில்லை. இந்தக் கட்டடம் இப்புத்தகசா லைக்கு என்றே நன்றாக அமைந்திருக்கிறது. எப்பக் கம் திரும்பினாலும் ஐயரவர்கள் தமிழ்ப்பணிக் கோலங்களைப் பல உருவத்தில் காணும் பெரும் பேறு பெற்றேன். நான் அவர்கள் திருவடித் தொண்டு புரியும் பேறு பெற்ற 1914 முதல் இன்றளவும் என் உள்ளத்தில் அம் மகாத்மாவின் உருவம் நிலைத்து ஊன்றியிருக்கிறது. இன்று இந் நூல் நிலையத்தில் நடக்கும் ஆராய்ச்சிமுறை எதிர் காலத்தில் மிக்க சிறப்புக்குரியதாகும். தேவாரப் பதிப்பு ஒன்று வெளிவர வேண்டும் என்பது அன்றே அவர்கள் திருவுள்ளக் கருத்தே. இன்றளவும் இப்ப திப்புக்கு ஊக்கம் கொடுக்கத் தக்க அறவாணர் எவரும் இவ்வுலகிற் பிறக்கவில்லையே என்று நினைத்து வருந்துகிறேன். ஐயரவர்கள் சிலை திறந்த போது நான் சென்னைக்கு வந்தேன். அன்று சிலைக்குமுன் சில பாடல் பாடினேன். இன்று

அவர்கள் ஞாபகச் சின்னமாக விளங்கும் இந் நூல்நிலையம் முழுதும் நடந்து பார்த்த பிறகு இரண்டு செய்யுட்கள் கூற விரும்புகின்றேன்.

**அருந்தமிழ் ஆசான் அருணெறிச் செல்வர்**
**திருந்தமிழ் நூல்நிலையம் தானே - மருந்தனைய**
**தேனின் இனிக்கும் தெளிவை விளக்குமே**
**ஊனின் உளத்தில் உறைந்து**

**வெறுப்பும் விருப்பும் உணராதே**
**மென்மைத் தமிழின் சுவை தெளிக்கும்**
**பொறுப்பும் துணிபும் புவியகத்தே**
**பூணப் பிறந்த நூல்நிலையம்**
**கறுப்பும் சிவப்பும் உருக்காட்டும்**
**கடவுள் அருளால் சிறந்தோங்கி**
**மறுப்பு வளரா நெறியாலே**
**வளர்க்க தமிழ்நற் பயிரினையே**

***(ஒ-ம்.) கனகராஜ ஐயர்***
04-07-1973

டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் அவர்கள் தமிழ்ப் பெருங்கடலில் நீந்தி மூழ்கி முத்துக் குளித்தெடுத்து நமது அரிய மாபெரும் தமிழ் நூல்களையும் இலக்கியங்களையும் தமிழர்களுக்கும் உலகுக்கும் எடுத்துத் தந்திருக்கிற இப்பெரும் பொக்கிஷத்தை யெல்லாம் இந்நூலகத்தில் சேர்த்துக் காத்து வைத்தி ருக்கிறார்கள். ஐயர் அவர்கள் வெளியிட்ட பல நூல்கள் போக அவர்கள் வெளியிடாமல் விட்டுப் போயிருக்கும் பல அரிய சுவடிகளும் கையெழுத் துப் பிரதிகளும் இந்நூலகத்தில் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பது மட்டுமின்றி அவற்றை வெளியிடும் பொறுப்பையும் இந்நூலகம் ஏற்றிருக்கி றது. இந்தப் பெரும்பணி பல்லாண்டுப் பிடிக்கும்; பெரும் பொருட்செலவும் ஆகும். மாநில அரசும், மத்திய அரசும் இப்பெரும் பணிக்கு உதவி இந்நூல கத்தைத் தமிழ்த்தாத்தாவுக்கு ஓர் அழியா நினைவுச் சின்னமாக விளங்க வைக்க வேண்டும்.

***(ஒ-ம்.) நா.பார்த்தசாரதி***
15-02-1974

**சுவாமிநாதையர் என்னும் தனியொரு மனிதர் ஊரூராய், தமிழ்மொழி மேலுற்ற காதலினால், சுவடிகளை தேடிச் சென்று அவற்றைச் சேகரித்துப் படித்து அவற்றிலுள்ள விஷயங்களை அச்சு உருவத்தில் பதிப்பித்தும், பெயர்த்து எழுதியும் செய்திருப்பன யாவும் நம்மை மிக்க ஆச்சர்யத்தில் ஆழ்த்துகிறது. அவர் தம் கையெழுத்துப் பிரதிகள், மற்றும் அவர் அச்சிடக்குறித்தவை யாவும் அடங்கிய நூல் நிலையத்தை மிகவும் போற்றிப் பராமரிப்பது நம்மனைவரின் கடமை. அரசாங்க மானியத்தை மற்றும் சார்ந்திராது, தனிமனிதர்களது ஆதரவு, நூல்நிலையம் வெளியிடும் புத்தகங்களை ஓரளவாவது வாங்குமுகமாகப் பெருக வேண்டும் என்பது என் அவா.**

***(ஒ-ம்.) சு.இராமன்***
Chemical Engg.Divn.
B.A.R.C. Bombay
1974

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் பெய ரால் இயங்கும் இந்நூலகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகி றேன். டாக்டர் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டின் பெருமையை அறிய முடிந்தது. எங்கள் கல்லூரி மாணவிகளும் பெரும் பயனடைந்தனர் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். தமிழ் கற்றோர் அனைவரும் பார்த் துப் பயனுற வேண்டிய இடங்களில் இது ஒன்றாகும்.

***(ஒ-ம்.) கே.சி.சாந்தா***
லேடி வில்லிங்டன் காலேஜ்
12-12-74

நான் இதுவரை சென்னையில் பார்த்த நூல் நிலையங்களிலேயே என்னை மிகவும் கவர்ந்தது உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் தான். இதை நான் முகஸ்துதிக்காகக் கூறவில்லை. இங்குள்ளவர் கள் நூல்நிலையத்தைப் பராமரிக்கும் விதமும், நூல் நிலையத்தைக் காண வருபவரை இன்முகத்துடன் வரவேற்றுத் தேவையான உதவிகளைச் செய்யும் விதமும் என்னுள் மீண்டும் பலமுறை இந்நூலகத் திற்கு வரும் ஆவலைத் தூண்டுகிறது. இந்நூலகம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து உ.வே.சாமிநாதை யரின் ஆசைகளைப் பூர்த்தி செய்யவும், தமிழ் நாட்டின் பெருமைக்குக் கலங்கரை விளக்காக விளங்கவும் வேண்டுமென்று இறைவனை வேண்டு கிறேன்.

***(ஒ-ம்.) கௌசல்யா சாமுவேல்***
Kent State University, U.S.A.
20-03-1975

டாக்டர் உ.வே.சாமிநாதையர் அரிதின் முயன்று சேகரித்து வைத்திருந்த பழந்தமிழ் ஏடுகளை எல் லாம் மிகச் சிறப்பாகப் பாதுகாத்துப் போற்றிவரும் இந்நூலகத்திற்கும், இந்நூலகத்தைத் திறம்பட நடத்தி வரும் குழுவினருக்கும் என் மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்

கொள்கிறேன். வெளிவராத நூல்களை அச்சில் ஏற்றி வெளிக் கொணரும் இவர்கள் முயற்சிக்கு நல்லாதரவு கிடைக்க இறைவனை வணங்குகிறேன்.

**(ஒ-ம்.) டாக்டர் பா.ரா.சுப்பிரமணியன்**
Institute of Indology
University of Koeln, W.Germany
04-08-1975

சுவையோடு சொல்மணக்கும் செந்தமிழ்ச் சோலை கண்டேன். காடெல்லாம், நாடெல்லாம் கடும்பயணம் கொண்டு கன்னித்தமிழ் ஆராய்ச்சியும், ஏடெலாம் தேடியெடுத்து இலக்கியப் பெருமாலை கட்டிய டாக்டர் உ.வே.சா. அவர்கள் புகழ் உலவும் திருக்கோவில் கண்டேன்.

**ஏடெல்லாம் எழுந்து நடமாடும் நன்னாள் எந்நாளோ? இந்நாளில் இல்லையெனில் எந்நாளில் இயலுமோ? தமிழ் மறுமலர்ச்சிக் காலமாம் இக்காலத்தில் நடைபெற விழைகிறேன்.**

*(ஒ-ம்)* M.P. அழகியநம்பி
அவைத் தலைவர், மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம், திருநெல்வேலி
06-01-1976

உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் அரிய நூல்களை சேர்த்து உலகுக்கு அளித்திருப்பது போற்றற்குரியது. பழைய சுவடிகள் புதைந்துள்ள செல்வம். அவற்றைப் பாதுகாப்பது நமது கடமை. இந்நூலகம் இப்பணியைச் சிறப்புறச் செய்து வருவதை நான் பாராட்டுகிறேன்.

**(ஒ-ம்.) ஆர். வெங்கட்டராமன்**
14-09-1976

இன்று (15-10-79) தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் பெயரில், இயங்கும் நூல் நிலையத்தைக் காணுகின்ற வாய்ப்பைப் பெற்றேன். இது ஒரு தமிழ்ப் பொய்கை. ஆராய்ச்சிக் கடல்! எழுத்தால் வடிக்க இயலாத தமிழ்த் தொண்டு பல புரிந்துள்ளார் ஐயர் அவர்கள்.

ஐயர் இல்லா விட்டால், தமிழ் இலக்கண - இலக்கியமே இல்லை என்றுகூடக் கூறலாம்.

அவரின் தொண்டு தமிழ்போல் என்றும் நின்று புகழ் மணக்கும்.

இந்நூல் நிலையத்தின் மூலம் திரு.ஐயரின் கையெழுத்துப் பிரதிகள் புத்தக வடிவில் வெளியிட அரசும் தமிழ்ச் செல்வந்தரும் முன் வரவேண்டும்.

வாழ்க! தமிழ்த்தாத்தாவின் தொண்டு

**(ஒ-ம்.) துரை முருகன்**
எம்.எல்.ஏ.
15-10-1979

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையத்திற்கு வந்து ஏட்டுச் சுவடிகளையும் புத்தகங்களையும் பார்க்கக்கூடிய புண்ணிய வாய்ப்பு இன்று கிட்டியது எனக்கு. வாழ்க்கையில் மிகச் சிறந்த பேறு இது என்றே கருதுகிறேன் டாக்டர் ஐயரவர்கள் தனியொரு மனிதராக, பிறர் துணை அதிகமின்றிப் பழந்தமிழ் இலக்கியத்தைப் பாதுகாத்துத் தந்த பேரருளாளர். தமிழ்த்தாய் அவருக்குத் தரிசனம் ஆகியிருக்கிறாள். தமிழ் காத்த தந்தை டாக்டர் ஐயரவர்களின் நினைவைப் போற்றும் வகையில் இந்நூலகத்திலுள்ள எல்லா நூற்களையும் சுவடிகளையும் அச்சிற் பதிப்பித்தாக வேண்டும். காலம் கடத்தலாகாது. கடந்த காலத்தில் எத்தனையோ தமிழ் நூல்கள் பேணுவாரின்றி ஒழிந்து மறைந்து போயின. இப்பொழுதேனும் நாம் அனைவரும் முயன்று, சுவடி நூல்களைப் பதிப்பித்து அவை காலத்தால் அழியாது காத்திட வேண்டும்.

டாக்டர் ஐயரவர்களின் திருவடிகளை நினைத்துப் பணிகின்றேன்.

**(ஒ-ம்.) ச.கந்தசாமி**
நிலைய இயக்குநர், அகில இந்திய வானொலி நிலையம், சென்னை
25-03-1980

உ.வே.சுவாமிநாதையரவர்களுடைய நூல் நிலையத்தைக் கண்டேன். அவரது பெருநூல்கள் வெளிவர அடிப்படையாயிருந்த ஏடுகளைக் கண்டேன். அவரது கடின உழைப்பு தெளிவாகத் தெரிகிறது. வாழ்க அவரது நினைவு. இந்நூல்கள் நம்நாட்டு நூல்நிலையங்களையும் இல்லங்களையும் அலங்கரிக்கட்டும்.

**(ஒ-ம்.) டாக்டர் C. திலகவதி**
துபாய் பெண்கள் தமிழ்ச் சங்கம்
துபாய். U.A.E.
08-08-1981

**தன்னேரில்லாத் தமிழ்மொழி காத்து,**
**தரணியில் என்றும் நிலைத்திட வேண்டி**
**தன்னாள் அனைத்தும் தமிழாய்ப் பூத்து**
**'தாத்தா' எனும்படி பணியில் கவிந்து**
**இன்னாள் நமக்கெனும் மொழிவாழ்வளித்தோன்**
**எங்கள் 'உ.வே.சா' எனும் தெய்வம்**
**என்னாளும் என் மொழியாய் நின்றான்;**
**இன்னாள், அதையான் நினைக்கின்றேனே!**

**இதை நான் உணர, எனக்கொரு கருவி,**
**இதயம் செழித்தான், இன்னரும் மனிதன்**
**விதையாம், தாத்தா உ.வே.சா. அவர்கள்**
**விளைந்தான் அவர்தம் தனிப்பெரும் மைந்தன்**
**சிதையாப் பணியால், செப்பரும் தமிழன்**
**சீர்மிகு கலியாணசுந்தரம் அய்யர்;**
**உதயம் செய்ய, உதித்தவன் வாழும்**
**உயர்நிறை க.சுப்ரமண்ய அயனே!**

**தமிழே! உன்னை இவ்விடம் கண்டேன்**
**தயவுடன் என்றன் உணர்வினில் வந்தாய்**
**சுமையாய், இதுநாள் வரை என் கனவாய்**
**குட்சுமத் திருந்தாய்; இன்றுயிர் பெற்றாய்!**

அமைவாய், அய்யரின் பணிகளைச் செவியில்
அறிந்தேன்; உணர்ந்தேன்; நெகிழ்ந்தேனின்றே
அமையே, என்னுள் அணுவாய் அமையே,
அதுதான், எனது வேண்டுதல் அறியே!

**(ஒ-ம்.) கிருஷ்ணன் பாலா**
ஜைன இயல் ஆய்வுக் கழகம்
11-09-1986

தமிழ்த்தாத்தா அவர்களின் சரித்திரம், அவர் குரு மகாவித்துவான் இவர்களைப் பற்றியெல்லாம் படித்ததுண்டு. ஆனால் அவரின் கையெழுத்து, அவர் தமிழ்நாடு முழுவதும் அலைந்து திரிந்து சேர்த்த ஏட்டுப் பிரதிகளை அச்சு வாகனம் ஏற்றித் தமிழை வாழவைத்த அவர்களின் வெளியீடுகளை, ஏட்டுப் பிரதிகளை கண்டு பேரானந்தம் அடைந்தோம், மெய்மறந்தோம்.

**(ஒ-ம்.) பொ.சிவப்பிரகாசம்**
10-03-1987

தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் இருக்கும் காலத்தில் நான் பிறக்கவில்லையே என்ற உணர்வு என்னுடன் இருந்தது. அந்த உணர்வு நான் இந்த நூலகத்துள் நுழைந்தபோது என்னை விட்டு விடைபெற்றது. நான் திரைப்பட shooting-க்குப் பல இடங்களுக்குச் சென்றுள்ளேன். ஆனால் அந்த இடங்களைக் காட்டிலும் இந்த இடத்தில் (Library) எனக்குள் ஒரு அமைதி நிலவியதை நான் கண்டேன். இதுபோன்ற சான்றோர் உள்ள பூமியில், தமிழ்ப் பூமியில் நான் பிறந்தது என்னுடைய அதிர்ஷ்டமாகும்.

**(ஒ-ம்.) நிழல்கள் ரவி**
27-07-1988

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன்-
தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள்
ஏட்டுச் சுவடியிலிருந்து இறவாப் புகழுடைய தமிழ் இலக்கண, இலக்கியங்களை உண்மையிலேயே இறந்து போகாமல் காப்பாற்றிய பெருந்தகை தமிழ்த்தாத்தா-

தமிழ் மண்ணிருக்கும்வரை -
தமிழ் மொழியிருக்கும்வரை -
தமிழ்த் தாத்தாவின் பெயரும் இருக்கும்; புகழும் இருக்கும்
வாழ்க தமிழ்-
வாழ்க தமிழ்த் தாத்தாவின் புகழ் -

**(ஒ-ம்.)** A. Jaganathan
Film Director
12-10-1988

தமிழ்த் தாயை மீண்டும் சரியாசனம் ஏற்றிய தமிழ்த்தாத்தா உ.வே.சா. ஐயரவர்களின் நினைவை அரியாசனம் ஏற்றி விளக்கும் உரியாசனம் இந்நூலகம்.

மலேஷிய நாட்டிலும் இப்பெருந்தகையின் புகழ் விளங்கச் செய்வேன்.

**(ஒ-ம்.) டாக்டர்** S. ஜெயபாரதி
Medical Superintendent,
General Hospital, Malaysia
06-12-1988

நான் நிறைய வருடங்களுக்கு முன் இந்த நூலகத்தைப் பற்றிக் கேட்டிருந்தேன். ஆனால் இதுவரை இங்கே வர வாய்ப்பு இல்லை. கடைசியில் இங்கே வந்து புத்தகங்களையும் சுவடிகளையும் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. அதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த நூலகம் மிகவும் முக்கியமானது. மறுபடியும் இங்கே வரலாம் என்பது என் விருப்பம்.

**(ஒ-ம்.)** Norman Cutler
Department of South Asian Languages
& Civilizations,
University of Chicago, Illinois
27-12-1988

இந்த நூல்நிலையம் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையரின் நினைவினைத் தமிழர்களின் நெஞ்சத்தில் நிறுத்த உறுதுணை புரிகின்றது. இந்த நூல் நிலையம் வெளியிட்டுள்ள நூல்கள் ஐயரவர்களின் தமிழ்த் தொண்டினைத் தொடர்ந்து செய்து வருகிறது. இந்நூல் நிலையத்திற்குத் தமிழர்கள் அனைவரும் இங்கு வெளியிட்டுள்ள நூல்களை வாங்கி ஆதரவு தந்து அவர்கள் பணியினை ஊக்குவிக்க வேண்டுமென விழைகிறேன். டாக்டர் உ.வே.சு.வின் தமிழுக்குச் செய்த பணி தமிழன் ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்த வேண்டிய ஒன்று.

**(ஒ-ம்.) தி.சிவசங்கரன்**
பதிவாளர், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்,
மதுரை.
02-08-1990

இறைவனிடமும் இடையனிடமும் தமிழ் பெற்று; நாம் கற்று மகிழ ஏடுகளைப் பதிப்பித்து; தமிழ் வாழும் அளவும் வாழும் தமிழ்த் தாத்தா பெயரில் இலங்கும் நூலகத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. பெரும்பேறு! அரசும்; ஆழ்ந்த புலமை கொண்டோரும் ஆலயம் எனப் போற்ற வேண்டும் ஏற்ற உதவி செய்ய வேண்டும்.

**(ஒ-ம்.) குமரி அனந்தன்**
15-04-1991

தமிழரின் செல்வங்கள் என்று தலைநிமிர்ந்து இன்று பேசுகிறோம்; எழுதுகிறோம். இந்தச்

செல்வங்களைத் தமிழர்களுக்குக் காப்பாற்றி... நமது தொன்மையை, தொலையாத வன்மையை உலகத்திற்கு உணர்த்தியவர்கள் நமது தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள்.

அவர் காப்பாற்றிய பருத்தித் தோட்டத்திலிருந்து பாங்காகப் பலவண்ண ஆடைகளை நெய்கிற நேர்த்தியாளர்கள் நாம். விழுதுகளுக்கு விழா எடுக்கிற நேரத்தில் வேருக்கு நீர் ஊற்றி மகிழ்கிறோம். கும்பகோணத்தில் அவருக்கு, அவரது நினைவுக்கு ஏப்ரல் 28, 1992 அன்று நடைபெறுகிற விழாவில் உரையாற்ற நூல்களை நாடி இவன் நுழைந்தேன்.

'பத்துப்பாட்டு' பற்றி பல நூல்கள் உண்டு. அவற்றில் விலங்கினங்கள், பறவைகள், செடி கொடிகள் பற்றிய குறிப்புக்களே மிகுதி. பத்துப் பாட்டு உலகத்தாருக்கு என்ன உணர்த்துகிறது என்று ஒரு நூல் எழுதிட இன்று உறுதி பூண்டேன். இக்கருவூலத்தைக் காப்பாற்றுகிற கண்ணியர்களுக்கு எனது வாழ்த்து; வணக்கம்.

***(ஒ-ம்.) வலம்புரிஜான்***
21-04-1992

பல வருட ஆசை எனக்கு இன்று நிறைவேறியது. ஏழை இலட்சாதிபதியான சந்தோஷம் அடைந்தேன். நூலகம் மிகச் சிறந்த வகையில் செயல்படுகிறது. நண்பர் பாலசாரநாதன், மற்றும் இனிய நண்பர் நடராஜன் இருவரும் நூலகத்தின் தூண்கள் என்பதில் சந்தேகமில்லை. புத்தகங்கள், ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படுவதில் கடமையை மீறிய அன்பு புலப்படுகிறது. தமிழ்த் தாத்தாவின் கருணையும், ஆசியும் இவர்களுக்கு எப்போதும் உண்டு. இங்குப் பணிபுரிபவர், மற்றும் வருபவர் ஆகியோர் உ.வே.சா. விடம் அன்பு கொண்டவர்களாக இருப்பதுடன், சிறிது தயாள குணமும் கொண்டவர்களாக இருப்பின் நூலகம் வளர்ச்சி பெறுவது உறுதி. மொத்தத்தில் இது ஒரு நூலகம் மட்டுமல்ல! புனிதமான கோயில்.

***(ஒ-ம்.) வேணு சீனுவாசன்***
17-03-1995

பொதியமலைப் பிறந்த தமிழ்மொழியின் வாழ்வறிந்த பிரான் பெயர் தாங்கி நிற்கும் இந்நூலகம், அன்னாரின் தமிழ் ஆர்வமும், ஞானமும், உலகுக்கு, உலகுள்ளவரை தொண்டாற்றும் பணியில் சிறந்து விளங்குதல் கண்டு உவகை கொண்டேன். இங்குப் பணிபுரிவோரின் புலமையும் ஆர்வமும் கடமை உணர்வும், இன்னும் அதிகமான தமிழ்ப் பெருநூல்களைப் பதிப்பிக்க முடியவில்லையே என்ற நியாயமான - உளப்பூர்வமான ஏக்கமும், தமிழின் வளர்ச்சிக்கும் வாழ்வும் கட்டியம் கூறவும் எனக்கு, தமிழின் - தமிழகத்தின் - எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைத் தருவதாகவும் இருக்கிறது.

***(ஒ-ம்.) திலகவதி, இ.கா.ப.***
காவல்துறைத் துணைத்தலைவர்
11-07-1995

## நித்தியத் தமிழால் நிலைத்தவர்

**எஸ்.சாயிராமன்**
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்

**முத்தமிழ் கடலை நோக்கி**
**முத்தமிழ்க் கடலை எண்ணிச்**
**சித்தமே மகிழ்ந்தி ருக்கச்**
**சிலைஎனத் திகழ்கின் றாரே!**
**சித்தமே மகிழ்ந்தி ருக்கச்**
**சிலைஎனத் திகழ்கின் றாரும்**
**நித்தியத் தமிழால் என்றும்**
**நிலையுறு தமிழ்த்தாத் தாவே!**

---

முத்தமிழ்க் கடல் - முத்து அமிழ்கடல்

# OPINIONS

Delighted to see the rare manuscripts so beautifully preserved and so reminiscent of the great savant who spent his whole lifetime in collecting them and unearthed the greatness of Tamil Literature and culture.

**(Sd.) K.R.Applachari**
28-04-1950

India lives in her vedas, shastras, Puranas, in her scriptures. Her culture is enshrined and her glory immortalised in the treasure houses of wisdom such as the Dr.V.Swaminatha Iyer Library. It is heartening to see the deep and "maternal" interest that Dr.Tirumurti & the Library staff take in the preservation of the invaluable manuscripts. The Library has the blessings of saints and sages and of the Mahamahopadhyaya who still lives in the Library.

**(Sd.) Sivananda**
(H.H.H.Swami Sivananda)
Rishikesh
03-10-1950

It gave me great pleasure and satisfaction to visit the library dedicated to the great name and work of Shri V.Swaminatha Ayyar who has done so much, against heavy odds, to resurrect the great Tamil literature and leave behind a varied collection of manuscripts and books besides his own valuable writings for the helping of scholars that follow him. May the library serve the noble purpose for which it has been erected.

**(Sd.) Sri Prakasa**
(Governor of Madras)
20-02-1955

I do not know whom to admire more, the remarkable scholar that is gone leaving a proud people behind him or the loyal and devoted and industrious staff and admirers that maintain this difficult but most worthy mass of momentoes.

**(Sd.) C.Rajagopalachariar**
22-02-1955

Shriman R.Viswanatha Aiyar, the curator, was kind enough to take me round the Institution and showed me the grand collection of manuscripts of Mahamahopadhyaya Swaminatha Aiyar. "I found the manuscripts well preserved and carefully treated. I saw the publications also. As I am personally connected with several Jain institutions of this type, I am in a position to say that everything needed is being done here and it deserves our appreciation for the preservation of our heritage.

**(Sd.) Chotilal Jain**
Calcutta
18-08-1955

Visited the library and was shown round the library and its great treasures of Tamil literature of Swaminatha Iyer. A very illuminating and instructive half hour was spent.

**(Sd.) S.Bragadembal**
Inspectress of Girls Schools,
Madras Circle
30-09-1963

Thank you inmensely for a marvellous introduction to your extraordinary library.

**(Sd.) E.Reid Gilbert**
University of Wisamsin, U.S.A.
15-02-1966

It was very interesting to see this library and get aquainted with very valuable things (manuscripts) preserved in it.

**(Sd.) Isaak Golubev**
Editor, "Soviet Nari", Deputy General Secretary,
Soviet-Indian Cultural Society
08-04-1970

Dr.U.V.Swaminatha Iyer Library is doing splendid research work in Tamil literature. When the Tamil language and literature is studied and fostered in Europe and America, it should be kept up and maintained on a high level in our own country. May God bless the library to flourish and bloom for the benefit of all Tamil knowing people.

**(Sd.) Swami Rama Theertha**
03-05-1972

Had the pleasure of visiting this wonderful library and seeing some of the works of the great tamil savant.

**(Sd.) T.M. Venkataraman**
Director of Cashewnut Development,
Cochin.
08-01-1972

Dr.Swaminatha Iyer library embodies unparalleled dedication of noble minds bent upon preserving real contribution of great souls like Dr.Swaminath Iyer whose contribution to Tamil language will be remembered by grateful generations with pride

and prise. It is a saga of library excellence and will be recognised as an era of brilliant literary achievement in the history of tamil language.

**(Sd.) K.K.Shah**
(His Excellency the Governor of Tamilnadu)
12-03-1973

I am much impressed by the most valuable collection of manuscripts held in this centre and noted that most urgently needed funds for maintaining these are not forthcoming to the extent they should. It is to be hoped that the governments would hlep in maintaining a xeroxing unit to better preserve these valuable materials.

**(Sd.) R.Srinivasan**
Reader, Dept. of Politics,
Bombay University
19-05-1973

It has been a great pleasure for me to see the library housing the treasures of the great čamiñat' Aiyar and to have the opportunity of meeting the scholars present.

**(Sd.) David Shulman**
Israel
23-12-1975

I had the good fortune of visiting Dr.Swaminatha Iyer Library on 25-1-76 and was very much impressed by the way in which old manuscripts of giants and masters have been preserved. I feel it should be the duty of every musician to make endeavour in bringing out the hidden compositions of Ghanam Krishna Iyer and other music composers. I fervently hope that in the immediate future these compositions would come to limelight and would be sung by one and all the Karnatic Musicians.

May Almighty shower his choicest blessings for this great endeavour.

**(Sd.) S.Krishnamurthy**
Programme Executive
All India Radio, Tiruchirappalli
25-01-1976

An inspiring place, worthy of the person whose name it bears.

**(Sd.) N.Narasimhan**
Tata Institute of Fundamental Research
Bombay
31-05-1977

I was greatly pleased to visit the Dr.U.V.Swaminath Aiyer Library about which I had heard long back. Dedicated workers inspire the younger generation to take more interest in the ancient Tamil literature.

**(Sd.) H.M.Pande**
Centre of Russian Studies, J.N.U.
16-12-1977

It has been a wonderful and thrilling experience to have visited Dr.U.V.Swaminatha Iyer library.

**(Sd.) S.Ambirajan**
1977

I have been immensely helped by the staff of the Dr.U.V.Swaminatha Iyer Library in connection with the collation of select verses of Tevaram.

The kindness shown to me by the staff, I shall never forget.

**(Sd.) N.Veezhinathan**
Reader, Dept.of Sanskrit,
University of Madras
21-01-1978

I have visited this library on several occasions in connection with my research work on certain aspects of Tamil history, particularly of the Sangam period and on the religious history of the 7th to 13th centuries A.D. I have found the collection in this library, with original sources as well as secondary sources, very useful and the library authorities and workers very helpful.

It would be worthwhile if this library is expanded by additions in the form of palm-leaf manuscripts, unpublished ones and also with the more recent publications on various aspects of Tamil literature. Further, some projects on the religious literature of saivas and vaishnavas may also be undertaken by the library, in order to provide good and reliable indices on works like the Tevaram on which no good index is now available. There is also need for better facilities for perserving the manuscript collection in this library, which seems to be a valuable one.

**(Sd.) R.Champakalakshmi**
Associate Professor,
Centre for Historical Studies,
Jawaharlal Nehru University,
30-09-1978

I was delighted to visit this Library and was much impressed by the richness of the collection of Tamil manuscripts and rare publications. I am hopeful that the collection will grow fast and the Institute would be able to continue its valuable service to the academic world.

**(Sd.) V.C.Joshi**
Formerly Deputy Director
Nehru Memorial Museum and Library
New Delhi.
07-04-1979

I have just begun to use this fine library. I feel as if I have discovered something rare. I hope to say more as I use the library but already I have been impressed by the kindness and helpfulness of everyone here.

**(Sd.) *Joanne Punyo Waghore***
Study of Religion Program
University of Massachusecta and Boston, U.S.A.
15-06-1979

I am grateful to have been able to visit the library and learn about the traditional methods of conservation. I hope that with cooperation we may finally discover the methods which will stand the best of time. The programme of micro filming is in itself a conservation measure.

**(Sd.) Judith Segal**
Senior Conservator, Bodleian Library
Oxford.
07-12-1979

This is my third visit to the Kalakshetra, but I have come here to this Institute for the first time. Everything strikes me so much. Very impressive! I am also delighted in seeing that so many scholars are working so enthusiastically in full devotion for the cause of Tamil scholarship.

I do hope that the work of your institute will be successful and fruitful in the future and will help us foreigners understand the valuable and precious cultural heritage of Tamil Nadu.

**(Sd.) Hajime Nakamura**
Professor Emeritus, University of Tokyo
Director of the Eastern Institute Inc.
1980

It was a pleasure to see so many manuscripts, to know that so much remains undiscovered, which also pains. Though I came to gather superficial knowledge about the library. I lost myself in the contents and know not what justice I can do to the subject I've chosen to write upon.

**(Sd.) V.Jayanth**
Staff Reporter, The Hindu
14-10-1980

My visit to the Library recalled thoughts of my stay in the Besant Memorial School nearly 45 years ago. It appears to me that this library is a very fitting memorial to one of the greatest and most dedicated writers and scholars in Tamil, and a temple of learning in the truest sense. My best wishes to the library and to those in charge for its continuing service and success.

**(Sd.) S.Venkatesan**
Former Chairman, Central Board of Excise and customs
08-05-1983

I was very gald to come here and be shown round the beautiful campus and the library. I feel, the librarian and his staff are doing a good service to the cause of tamil studies in our country by carefully preserving the valuable collections of the great scholar Dr.Aiyer. My best wishes for the future.

**(Sd.) R.G.Sood, I.A.S.**
Joint Secretary to the H.P.Govt.
1985

I am very much impressed with this library and intend to visit again so that I can spend more time examining the manuscript collection and explore also possibility of microfilming the manuscript collection.

**(Sd.) Usha T.Bhasker**
Head, South Asia Section
Oriental Division, the New York Public Library
16-07-1991

It is a privilege for me to visit the Dr.U.V.Swaminath Iyer Library established in memory of தமிழ் தாத்தா. I cherish this moment.

**(Sd.) P.Sakunthala**
Jt.Secy., Indira Gandhi
National Centre for the Arts
New Delhi.
*02-11-1971*

I had heard about this library. Now I have the privilege to *visit and see it. I must say the* library is one of the unique institutions in India. The management as well as the staff must be congratulated for bringing it up so well. But much more has to be done and that too against all odds. I wish all of you - the management and the staff - all success in such efforts.

**(Sd.) D.Sengupta**
Dy.Secy., Dept. of Culture
Govt.of India
18-09-1992

*With best Compliments from*



# SHRI VIGNESH PRINTS

- **Laser Typesetting of**
  - ENGLISH
  - TAMIL
  - HINDI
  - SANSKRIT
  - TELUGU
- **Toner Refilling**
- **Offset Printing**
- **Screen Printing**

No.158/5, LAKE VIEW ROAD,
WEST MAMBALAM, CHENNAI - 600 033.

☎ **484 84 86**

# டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் திருஉருவச் சிலைத் திறப்பு விழாவிற்கு நன்கொடை அளித்தவர்கள்

| | |
|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் | ரூ. |
| டாக்டர் கலைஞர் திரு.மு. கருணாநிதி அவர்கள் (முதலமைச்சர் பொதுநிவாரண நிதி) | 50,000 |
| Madras Cement | 20,000 |
| India Cement | 20,000 |
| மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் | 10,000 |
| Sri.R. Krishnamurthi, Dinamalar | 10,000 |
| Sri. Kumari Anandan | 10,000 |
| Sri.M. Gopalakrishnan | 10,000 |
| Tirupanandal Mutt | 5,000 |
| Industrial Credit Investment Corpn. India Ltd., Bombay-20 | 5,000 |
| Sri.R.M. Veerappan | 5,000 |
| Madras Stock Exchange Ltd., 2nd Line Beach, Ms-1. | 5,000 |
| Sri.N. Narayanaswami (Editor) Kalaimagal | 5,000 |
| A.M.M. Foundation, Tiam House, Rajaji Salai, Madras-1. | 5,000 |
| G.M. Sakthi Sugars Ltd., 102, Mount Road, Madras 2. | 5,000 |
| G.M. The A.B. Transport Ltd., 102, Mount Road, Madras - 2. | 5,000 |
| ஸ்ரீ கமலா சேவா சங்கம் | 2,500 |
| Sri.T. Dorairajan, Dolar Biscuits | 2,500 |
| Bharathi Tamil Sangam (Calcutta) | 2,001 |
| Tamil Nadu Brahmin Association | 1008 |
| Loga Seva Sangam, Madras-21. | 1002 |
| Sri.H.S. Vaidyanatha Iyer, Madras - 5. | 1001 |
| Shri Vignesh Prints, Madras-33. | 1001 |
| Sri.K.V. Murugesa Mudaliar, Kaveripattinam | 1001 |
| Sri.S. Swaminathan, Kerala | 1001 |
| Sri.T.N. Nagarathinam, Mylapore, Madras-4. | 1001 |
| Sri. Iravadam Mahadevan, Madras-41. | 1001 |
| Sri.K.M. Haja Moideen, Madras-18. | 1001 |
| Dr.C.M. Baladandayudam, Villupuram | 1001 |
| Sri.A. Hariharan, Coimbatore | 1001 |
| Shri S. வேங்கடகிருஷ்ணன் திருவல்லிக்கேணி | 1000 |
| Sri. ம.சே. குழந்தைசாமி, Madras-90. | 1000 |
| Sri.V.S. Sanmuga Vadivel, Tirupur | 1000 |
| Sri.K. Murugaiyan, Tiruvaiyaru | 1000 |
| Sri.V. Subramanian, Vellore | 1000 |
| Sri.N.S. Jagannathan, Madras. | 1000 |
| Sri.M. Ekambaranathan, Madras-41 | 1000 |
| Sri.R. Natarajan, Adyar | 1000 |
| Tiruvavaduthurai Mutt. | 1000 |
| Sri.C.T. Nachiyappan, Kalakshetra Publication, Ms-41. | 1000 |
| Sri.V. Narayanan, Ms-91 | 1000 |
| Sri.K. Chandrasekaran, Ms-1 | 1000 |
| Dr. S.R. Rajavenkatakrishnan | Stone Donation |
| Headmaster & Staff, Raja Muthaiya Higher Secondary School, Ms-28. | 540 |
| Sri.T.V. Ramanathan, Ms-4 | 501 |
| Sri.S. Neelakanda Deekshitar, Ms-50. | 501 |
| Dr.S. Kulasekaran, Ms-90 | 501 |

| | |
|---|---|
| | ரூ |
| Sri.K.V. Ramanathan, Ms-41. | 501 |
| Sri.R. Arjunan, Ms-44 | 501 |
| S. Ananthalakshmi, Ms-41 | 501 |
| Sri.S. Srinivasa Iyer, Ms-41 | 500 |
| Sri.S. Gandhimathinathan, Dindukkal-9 | 500 |
| Foseco India Ltd., Bombay | 500 |
| Sri.K. Krishnan, Ms-18 | 500 |
| Sri. Srinivasan, Bombay | 500 |
| Sri. Balaji, Tirupur-4 | 500 |
| Headmaster, Govt.High School, Dharmapuri | 500 |
| Sri.S.P. Ramaswamy, Coimbatore-2 | 500 |
| Elangoadigal Elakkiya Mandram, Coimbatore | 500 |
| Sri.S. Vedamuthu, Devakottai | 500 |
| Sri. Pallavan, Salem | 500 |
| Dr.S.A. Rajamani, Dharmapuri-5 | 500 |
| Sri.K. Saravanan, Gobichettipalayam | 475 |
| Head of the Tamil Dept., Sri Sarada College for Women, Salem-16 | 375 |
| Headmaster, Govt. High School, Poondiankuppam-5 | 350 |
| Shri. S. Balasaranathan, Madras-78. | 251 |
| Shri K. Baskar, T. Nagar, Madras-17. | 251 |
| Sri.K. Sureshchandar, Ms-90 | 250 |
| The Karnatic Music Book Centre, Ms-14 | 250 |
| Sri.P. Elamaran, Erode-3 | 250 |
| திருமதி. S. முத்துலெட்சுமி Ms-41 | 201 |
| Sri.A.N.S. Maniyan, Ms-5 | 201 |
| Dr. Muthukannappan, Ms-20 | 201 |
| Smt.S. Dhanammal, Ms-78 | 201 |
| Sri.T.S. Balakrishnan, Tirupanandal-4 | 200 |
| Sri.A. Chidambaram, Dharmapuri | 200 |
| Sri.N. Sekar, Ms-41 | 200 |
| Sri.A. Aaja Muhamed, Ms-116 | 200 |
| Udavum Ullangal Amaipu | 200 |
| The H.M. & Teachers, A.J.S. Nidhi Higher Sec.School | 120 |
| Sri.S. Balasubramanian, Ms-4 | 101 |
| Sri.Panchapakesan, Ms-41 | 101 |
| Dr. G. Colas and Dr.U.Colas Chauhan | 101 |
| Sri.S. Viswanathan, Ms-18 | 101 |
| Sri.P. Balasubramanian, Trichy | 101 |
| Sri.S. Kannan, Ms-41 | 101 |
| Sri.G. Ponnu, Ms. | 101 |
| Sri.V. Veeraiyah, Andaman-101 | 101 |
| Sri.K. Nageswaran, Ms-88 | 101 |
| ராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு திட்டக்குடி, Ms-106 | 101 |
| Sri.C. Balarama Coundar, Valavanur-108 | 101 |
| Sri.S. Chudamani, Chengalpattu-1 | 101 |
| Sri.V. Sankar, M.G.R. Dist.-25 | 101 |
| Sri.K. Vasudevan, Erode-3 | 101 |
| திரு.பேரா.து. திருநாவுக்கரசு, விழுப்புரம் | 101 |
| திரு.இரா. இராமமூர்த்தி, விழுப்புரம் | 101 |

| | ரூ. |
|---|---|
| திரு.பொ. சிவலிங்கம், விழுப்புரம் | 101 |
| வித்துவான் அரி கோவிந்தனார், விழுப்புரம் | 101 |
| புலவர் கு. சம்பந்தன், விழுப்புரம் | 101 |
| திரு.வி. வேணுத்தாய், விழுப்புரம் | 101 |
| டாக்டர் க. ராஜாராம், விழுப்புரம் | 101 |
| Sri.T. Shanmuga Velayudam, Trichy | 100 |
| Smt. Rajalakshmi, Vepery-7 | 100 |
| Sri.A.M. Paramasivanandam, Ms-40 | 100 |
| Mother Earth Plantation (P) Ltd., Ms-2 | 100 |
| Sri. Venkatesan, Bombay | 100 |
| Sri.R. Rajalakshmi, Vepery-7 | 100 |
| Smt.V. Meenambigai, Madurai | 100 |
| செயலர், மகாத்மா காந்தி ஆசிரமம், பொள்ளாச்சி | 100 |
| Ms.C.R. Ramadevi, Erode | 100 |
| Sri.R. Venkateswaran, Ms-62 | 100 |
| Sri.A. Adaikan Durairaj, Dindigul-302 | 100 |
| Sri. Govindan, Tennilai-206 | 100 |
| Sri.S. Venkatakrishnan, Ms-5 | 100 |
| Sri.K.E. Ramachandran, Tirunelveli | 51 |
| Sri.V. Marimuthu, Erode-3 | 51 |
| Sri. Rajarathnam, Erode-1 | 51 |
| Sri. Govindaswamy, Ms-41 | 51 |
| Sri.V. Muthaiya, Tuthukudi-8 | 51 |
| Sri.V.S. Venkatasubramaniya Iyer, Tiruvallur | 51 |
| Sri.K. Balasundaram, Dharmapuri-705 | 51 |
| புலவர் சுப்பிரமணியன், திருவலம் | 51 |
| Sri.V.S. Krishnamurthy, Dharmapuri-120 | 51 |
| Ms.M. Lalitha, Kakkalur | 51 |
| Sri.K. Sankaranarayanan, Madurai-7 | 50 |
| Sri. Poornaiyan, Ms-78 | 50 |
| Sri.T. Srinivasan, Ms-41 | 50 |
| Sri.M. Viswanathan, Calcutta | 50 |
| Sri.R. Rajagopal, Trichy | 50 |
| Sri.S. Aapatharanam, Pudukottai | 50 |
| Sri.V. Sundaram, Headmaster | 50 |
| Sri.A.V. Ramasamy, Trichy | 50 |
| Sri.A. Sivakumar, Sankarapuram | 50 |
| Sri.J.V.R, Kamudhi | 50 |
| புலவர் சே. பெரியசாமி, கோவை-20 | 50 |
| Sri.K. Balraj, Coimbatore-401 | 50 |
| Sri.A. Sethuraman, Trichy | 50 |
| Sri.S. Pichai, Trichy-4 | 50 |
| G.R. Kamala, Gobichettipalayam-452 | 50 |

| | ரூ. |
|---|---|
| திரு.பொன்.அம்பலவாணன், திருவண்ணாமலை-603 | 50 |
| Sri.V. Sundaram, Tirunindravur-24 | 50 |
| Sri.V.K. Ramaswamy, Trichy-21 | 50 |
| Sri.S. Angappan, Vellore-7 | 50 |
| Sri.M. Swaminathan, Erode-2 | 50 |
| Sri.K. Sokkanathan, Pondicherry-8 | 50 |
| Sri.R. Padmanaban, Ms-33 | 50 |
| தியாகி ராசு. ரங்கநாதன், புதுசேரி-8 | 50 |
| Sub-Postmaster & Staffs, Tittagudi-106 | 40 |
| Sri.M. Varadhan, Ms-91 | 25 |
| Nandanar Padipagam, Chidambaram | 25 |
| Sri.A. Ramaswamy, Secundrabad-9 | 25 |
| Sri.R. Narayanan, Ms-41 | 25 |
| Prof.S. Sakthivelu, Papanasum | 25 |
| Sri.P.R. Murali, Ms-28 | 25 |
| Sri.T.K. Sivaraman, Thanjavur | 25 |
| Sri.T. Vamanan, Seiyaru | 25 |
| Sri.S. Vimanan, Anandapuram | 25 |
| Sri.A. Rathnavelu, Madurai-16 | 25 |
| Sri.M.T. Vetriyan., Ms-56 | 25 |
| Sri.N. Daivamani, Ms-11 | 25 |
| Sri.T.E. Sivakumar, Vandavasi-408 | 25 |
| Sri.U.A. Solaiyappan, Ms-1 | 25 |
| Sri.A. Vasudevan, Keraichatu-14 | 25 |
| Sri.T.L. Rasan, Salem-402 | 25 |
| Sri.K. Karthik Murali, Tirunindravur-24 | 25 |
| Sri.A. Babuji, Pallipattu-703 | 25 |
| R. Lalitha Bhuvaneshwari, Ms-61 | 25 |
| Sri.N. Ganapathi, Ms-116 | 23 |
| Sri.E.R. Tirukodainayagi, Ms-13 | 20 |
| Sri. Ajoy Ghosh, Thanjavur | 20 |
| Sri.K. Elango, Madurai-535 | 20 |
| Sri.N.J.B. Narendrakumar Jain, Minjur-203 | 20 |
| Sri.V. Elangovan, Tiruvannamalai | 16 |
| Smt.K. Angayarkanni, Cenji-202 | 15 |
| Sri.P. Murugesan, Salem-105 | 10 |
| Sri.U.C.S. Ramalingam, Ms-48 | 10 |
| Sri.S. Viswanadam, Palani-618 | 10 |
| Sri.K. Seetharaman, Aathur-102 | 10 |
| Sri.E. Hariharan, Ms-80 | 10 |
| கலை ஆனந்தன், கோவை-27 | 10 |
| Sri.K.R. Sundaramamani, Sathravadi-592 | 10 |
| Sri.R. Deenadayalan, Tirunelveli-11 | 5 |
| Sri.R. Veerannan, Turaiyur-10 | 1 |



*With Best Compliments from*

# TATA REFRACTORIES LIMITED

**Head Office:**
X.L.R.I. Campus,
Circuit House Area,
Jamshedpur - 831 001.

**Marketing Division:**
11th Floor, Tata Centre,
43, Chowringhe Road,
Calcutta - 700 071.

**Registered Office & Works:**
P.O.Belpahar,
Dist. Sambalpur,
Orissa - 768 218.

*With The Compliments of :*

**T.P. ROY CHOWDHURY & CO.
LIMITED**

53B, Mirza Ghalib Street,
Calcutta-700 016.

Gram: TIPISHIP Phones : 29-4843
Telex: 021-5578-A/B "TIPI' : 29-7123
Fax: 91-33-29-9664 : 29-2317